சீன-அமெரிக்க உறவில் முறுகல் நிலை

உலகலா

ஒக்ரோபர், 1993

பாலஸ்தீனத்தில் சமாதானமே?

உலக உலா

B-75

உலக விவகாரங்கள்

ஆசியா

இரும்புப் பங்கீடு 08
நடுக்கடலில் பேராபத்து 10
சீன – அமெரிக்க நட்பில் விரிசல் 13
ஜகார்த்தாவின் முதல் மொட்டுக்கள் 16
சிரியா அமைதிக்குத் தயாராகின்றது 18
துணிகரம், நம்பிக்கை, சமாதானம் 21
இஸ்ரேலை அழிக்க வேண்டும் 24
மறைந்தும், மறையாத பொற்குவை 25

ஐரோப்பா

இன்னுமோர் செக்கோஸ்லாவாக்கியா 27
மரணத்தின் முத்தம் : பொஸ்னியா 31
கடல் ஒநாயை மீட்டல் 33
வெளியிடங்களிலுள்ள ருஷ்யர்கள் 34

அமெரிக்கா

கென்னடியைச் சுட்டது யார்? 37
வான்வெளியில் அழிவு 40

ஆபிரிக்கா

தளபதிகளின் கதி 42
இராணுவத்தின் பிடி 45
பின் நோக்கிச் செல்லுமா? 46
அமைதியின் ஆற்றல் 47

வாணிகம்

கொலை உருவாக்கம் 49
சைபீரியத் தங்கம் 50
கட்டுக் கடங்காத யென் 51
வியட்நாமுக்கு படையெடுப்பு 52

குற்றவியல்

புகையும் துப்பாக்கிகளும் 55

மனிதவியல் வரலாறு

அரும்பொருட் செல்வங்கள் 56
முதலாவது சாம்ராஜ்ஜியத்தின் அழிவு 58

மருத்துவம்

விற்றமீன் புரட்சி 60

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

மாய உலகில் வாழ்தல் 65
பற்றியொட்டின் பிள்ளைகள் 68
இலத்திரனியல் புரட்சி 73
ஸ்ரீபன் கோக்கிங் 88

விண்வெளி

எரிகல் வெள்ளம் 76
விண்வெளிக்குள் முயற்பாய்ச்சல் 78
வானத்தில் காணாமற் போனது 80

சுற்றுச்சூழல்

அந்த வேட்டை 82

சமூகவியல்

கம்போடியப் பழங்குடிப் பெண்கள் 86

பல்தினைப் பகுதி

செய்திச்சரம் 02
புதிய அழிமுகம் 03
பார்வைகள் 07
நேசப்பூக்கள் 90

உலக உலா
சமூக, அரசியல், விஞ்ஞான, தொழில் நுட்ப மாத இதழ்

உலக உலா, ஒக்ரோபர் 1993

யப்பான்

கூடும் போக்கு

ஹொக்கயிடோவுக்கு வட கிழக்கில் உள்ள நான்கு தீவுகள் தொடர்பான பிரதேசச் சிக்கலில் ஜப்பானுடனான உறவு நிலையில் ருஷ்யாவின் நிலைப்பாடு கடுமையானதாக உள்ளது. இப்போதைய அமைச்சரவை அதிகாரத்திலுள்ளவரை ருஷ்யா தனது பிரதேசத்தில் எதையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என ருஷ்யப் பிரதமர் விக்ரர் ஒச்சர்ணோமிர்டின் கூறியதாகக் கியோடா செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. ருஷ்ய அரசின் அடிப்படைக் கொள்கைகளுக்கு இது முரண்பட்டதாகும் என டோக்கியோவில் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனா

வத்திக்கானுடன் மீள் தொடர்பு?

சீனாவில் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான சின்ஹுவா அறிவித்துள்ளபடி வத்திக்கானுடன் மீளவும் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள அந்த நாடு விரும்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பீக்கிங்கின் இந்த அக்கறையை வரவேற்பதாக வத்திக்கான் அறிவித்துள்ளது. சீனாவின் கத்தோலிக்கர்கள் பாப்பரசரின் அதிகாரத்தின் கீழ் வருவதை பீக்கிங் தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வியட்னாம்

தடையின் முடிவு: ஆரூடம்

ஆகஸ்டு 19–20 இல் வியட்னாமுக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்ட அமெரிக்க செனட்டின் கிழக்காசிய, பசிபிக் விவகார உப-குழுவின் தலைவர் செனட்டர் சார்ல்ஸ் றொப் ''செப்ரெம்பர் 14 இற்கும் வருட முடிவுக்கு மின்டயில்'' ஹனோய்க்கு எதிரான அமெரிக்கத் தடையை ஜனாதிபதி பில் கிளின்ரன் நீக்கி விடுவார் எனத் தான் எதிர்பார்ப்பதாகக் கூறினார். அந்த நாட்களில் அமெரிக்கத் தடை காலாவதியாகிறது. வியட்னாம் போரின் பின் காணாமற் போன உடல்களைத் தேடும் விடயத்தில் தாணப்படும் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு இவர் தடையை நீடிக்கக் கூடும்.

அமெரிக்க இராஜதந்திரியின் வருகை

1975 இல் வியட்னாம் போர் முடிவுக்கு வந்த பின்னர் முதன் முதலாக ஹனோய்க்கு வரும் அமெரிக்க இராஜதந்திரி ஆகஸ்டு 18 இல் வந்து சேர்ந்தார். ஸ்டீகாட் மாசியேல் என்ற அந்த இராஜதந்திரியின் வருகையை அமெரிக்க அதிகாரிகள் முக்கியத்துவம் குறைந்த நிகழ்வாகக் காட்டியுள்ளனர். வியட்னாம் போரின் படையச் சேவையின் போது காணாமற் போன படையினர் பற்றிய தகவல்களைச் சேகரித்து வரும் தூதுக்குழுவினருக்கு உதவுவதே அவரது பிரதான பணியாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குண்டுச் சதி விசாரணை

14 வியட்னாமியர்கள் குண்டுச் சதி முயற்சி மூலம் அரசைக் கவிழ்க்க முயன்றார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஹோசிமின் நகரில் விசாரிக்கப்பட்டு வருவதாக ஆகஸ்டு 24 இல் நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த 14 பேருள் 9 பேரிடம் அமெரிக்க அல்லது பிரான்ஸ் கடவுச் சீட்டு உள்ளது. மார்ச் மாதத்தில் உள்ளூர்த் தயாரிப்பான குண்டுகளைக் ஹோசிமின் நகரிலுள்ள பொது இடங்களில் எறிந்து குழப்பம் விளைவிக்க முனைந்த 18 வெளிநாட்டு வியட்னாமியர்களுக் கெதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஆரம்பத்தில் அறிவித்திருந்தனர்.

இந்தோனேஷியா

கூட்டம் வேண்டும்

தென் சீனக் கடலெல்லையிலுள்ள நாடுகள் மேலும் சம்பிரதாயபூர்வமான அரசேரடு அரசு என்ற நிலையிலான பேச்சுவார்த்தை நடத்தி தென் சீனக் கடலிலுள்ள பிரச்சினைக்குரிய ஸ்பிறட்லி தீவுகள் நிலைமை பற்றிப் பேசித் தீர்க்க வேண்டும் என்று இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர் அலி அலாத்தாஸ் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பான சம்பிரதாய பூர்வமற்ற பணியாய்வுஒன்றில் சுரபாயா நகரில் பங்கு கொள்ளும் சீன அதிகாரி ஒருவர் இந்த யோசனையை நிராகரித்துள்ளார்.

அரசில் அடைக்கலம் கோரப்படுகிறது

தம்மை இந்தோனேசிய பாதுகாப்புப் படையினர் பயமுறுத்தி வருவதாகக் கூறி கிழக்கு திமோர்லிஸ் நிலைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் போர்த்துக்கலில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ளனர். பின்லாந்து தூதரகத்தில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த இந்த நால்வரும் இரண்டு மாதங்களுக்கு முன்னர், ''தொந்தரவளிக்கப்படமாட்டாது'' என்ற உறுதிமொழியோடு அங்கிருந்து வெளியேறினர். ஆகஸ்ட் 24 இல் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் தமக்கு உதவும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும், மனித உரிமை நிறுவனமான சர்வதேச மன்னிப்புச் சபையிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் நால்வரும் இப்போது எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

புதியன அறிமுகம்

பந்தின் வேகத்தைக் கூட்ட வேண்டுமா?

கலிபோனியாவிலுள்ள ''ஈஸ்ரன் ஸ்போடன்'' என்னும் கம்பனி மென்பந்தை வேகமாக அடிப்போருக்கென ஒரு மட்டையை (Bat) உற்பத்தியாக்குகிறது. அடிப்பவர் அதை வேகமாகச் சுழற்றக் கூடியதாக இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் ரைஃபூன். இந்த மட்டையை கூடிய பலமுள்ளதாகச் செய்யும் பொருட்டு விண்வெளிக் கலங்களிற்குப் பாவிக்கும் ரைற்றேனியம் அலோய் (Titanium Alloy) இதில் பெருமளவுக்குப் பாவிக்கப்பட்டுள்ளது. வழமையான மட்டைகள் அலுமினியத்தாற் செய்யப்படுகின்றன. ஆனால் ரைஃபூன் மட்டை மிக மெல்லிய மேற்றோல் வீச்சின் சக்தியைப் பெருக்குவதிற் பெரிதும் உதவுகிறது. விலை 400 டொலர்.

அனைத்தும் கப்பலில்

இங்கிலாந்திலுள்ள ''லாண்ட் அன் மறைன் புறோடக்ஸ் ஒஃப் பேட்டன்'' (Land and Marine Products of Barton) என்னும் கம்பனி, விபத்துக் குட்பட்டோரை இலகுவாகவும், விரைவாகவும் நீரிலிருந்து காப்பாற்ற ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளது. ''ஜேசன்ஸ் கிறேடில்'' என்று அழைக்கப்படும் இக் கருவி பரிசோ



லித்துப் பார்க்கப்பட்ட பொழுது அறிவு நினைவு இழந்த ஒருவரை இக்கருவியின் உதவியுடன் 2 செக்கன்களில் ஓர் உயிர் காக்கும் படகில் ஏற்றி, மூடிய இன்னொரு படகுக்குள் 20 செக்கன்களில் மாற்றிவிடலாம். பிளாஸ்ரிக்காலும் கரையில் உருக்காலும் செய்யப்பட்ட இந்தத் தொட்டில் போன்ற கருவி ஏணி போன்ற மற்றொரு கருவியுடன் சுருக்க முடியாத ஒரு வட்டம் போல் இணைக்கப்பட்டுள்ளது. இந்த வட்டத்தினுள் கையாலோ அல்லது இயந்திரத்தின் உதவியுடனோ காப்பாற்றப்பட வேண்டியவர்கள் வைக்கப்பட்டுக் காப்பாற்றும் கப்பலுக்கு அகற்றப்படுகின்றனர். இந்த வட்ட வடிவமான தொட்டிலின் உருவம் மாறாது பக்குவமாக விபத்துக்குள்ளானவர்களுக்கு மேலும் காயங்கள் ஏற்படாது காப்பாற்றும் தன்மையுடையது என மேற்காணும் கம்பனி கூறுகிறது. மாலுமிகளும் சிறு காயங்களுக்குள்ளானவர்களும் ஏணி வழியாக ஏறிக் காப்பாற்றும் கப்பலை அடையலாம். பிரித்தானிய போக்குவரத்துச் சபை இத் தொட்டிலையும், ஏணியையும் ஓர் உயிர்காக்கும் சாதனமாக ஏற்றுக் கொண்டுள்ளது. அமெரிக்கக் கரையோரப் பாதுகாப்பாளர்களும் இவ் வீரண்டையும் பரீட்சிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல்களில் உயிர்காக்கும் படகுச் சாதனமாக அனுமதித்துள்ளனர். விலை 350 டொலர்.

நீண்ட ஆயுள் உடைய மின்கலம் (Battery)

அதிக இலிதியம் மின்கலங்கள் விசேட அளவுகளில் தான் கிடைக்கின்றன. மிகவும் பரவலாக உபயோகப்படும் 1.5 வோல்ற் AA வகையில் முதலாவது, எவரெடி எனேஜைசர் இலிதியம் AA மின்கலமாகும். காரமின்கலத்திலும் 2½ மடங்கு விலை உயர்ந்த தெனிலும் மூன்று மடங்கு காலம் உபயோகிக்கக் கூடியது. கமராக்கள் CD மற்றும் ரேப்பிளேயர்ஸ், செலுலார் தொலைபேசிகள் மற்றும் வேறு உயர் மின்னோட்ட பாவனை உடைய இலத்திரனியல் சாதனங்களுக்கு இம்மின்கலம் பொருத்தமானதாகும்.

மறைந்து இயங்கும் கல்குலேற்றர்

காசாளர்களே! கல்குலேற்றரைத் தினமும் அலுவலகத்திற்கு கொண்டு செல்வது உங்களிற்குச் சிரமமாக இருக்கிறதா? உங்கள் சிரமத்தைப் போக்க இதோ வந்து விட்டது கைக்கடிகாரத்துடன் இணைக்கப்பட்ட கல்குலேற்றர். எவ். ரி. பி. (FTP) ரக கலியோ மணிக்கூடு ஒன்று இந்தக் கல்குலேற்றரின் மூடியுடன் இணைக்கப் பட்டுள்ளது. இம்மூடியைத் திறந்து பொத்தானை அழுத்தியதும் எட்டு இலக்கங்களைக் கொண்ட ஒரு கல்குலேற்றர் காணப்படுகின்றது. இதன் விலை 50 டொலராகும்.

காற்றின் கதியைக் காட்டுங் கருவி

ஹோல் காற்று மாவியைக் கொண்டு, விளையாட்டுக்காக நீரில் பலகையின் மீது மிதந்து செல்வோரும் தொங்கு கிளைடரில் பறப்போரும் காற்றின் கதியை அறியலாம். கருவியின் அடியில் உள்ள குழாய் ஒன்றின் ஊடாக வளி உள்ளே சென்று மிதக்கும் தட்டொன்றை உயர்த்தி, இத்தட்டு காற்றின் கதியைக் காட்டுகின்றது. பராகிளைடர் ஒன்றிலும் இக்கருவியைப் பொருத்தலாம், மணிக்கு ஒரு மைல் கதி வரைக்குத் திருத்தமாக அளக்கக் கூடிய இக்கருவியின் விலை 24 டொலர் ஆகும். ஹோல் சகோதரர்கள், த.பெ.1010 மோர்கன் UT 84050-1010

புதியன அறிமுகம்

இலகுவாக நடக்க உதவக்கூடியன

வழுகி விளையாடும் பாதணிகளின் அடிப்பாகத்தில் வளையும் தன்மையுடைய பிளாஸ்ரிக்குத் தோல்கள் விளையாடி ஓய்வெடுக்கும் போது நடந்து செல்லக்கூடியவாறு பொருத்தப்படக்கூடியன. பாதணியின் முன்பக்கத்தில் இணைக்கப்பட்டு சில்லுகளின் மீழாகச் சென்று குதிக்கு மேலே செப்பஞ்செய்யப்படக் கூடியன இதன் விலை 20 டொலர் இனோவேஷன்ஸ் அன்லிமிற்ட் 2315E 12 ஆவது அவெனியூ, '901 டென்வர் CO 80206,

சுமந்து செல்லும் இலகுவான கன்ரீன்

குடும்பத்துடன் பயணம் செய்யும்போது தேநீர் அல்லது குளிர் பானத்தைக் கொண்டு செல்ல முடியவில்லையே எனக் கவலைப் படுகிறீர்களா? இனியும் நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. உங்கள் கவலையைப் போக்குவதற்கென்றே பிரத்தியேகமாகத்

தயாரிக்கப்பட்ட கமெல்பாக் (Camel Bag) எனப்படும் சிறிய ரக நீர்த்தாங்கிவிற்பனைக்குவந்து விட்டது இது 70 அவுன்ஸ் நீரை (மூன்றேகால் லீற்றர்) உள்ளடக்கக் கூடியது. தேநீரையோ அல்லது குளிர்பானத்தையோ 4 மணித்தியாலங்களுக்கு அதே நிலையில் வைத்திருக்கக் கூடியது. காவலிடப்பட்ட (Insulated) இச் சிறிய நீர்த்தாங்கியை இலகுவாக முதுகிற் சுமந்து செல்லலாம். இதன் விலை 35 டொலராகும்.

உங்கள் தனிப்பட்ட கணனியுடன் (PC) பேசுங்கள்

நீங்கள் ஒரு பழைய பாணியிலான அதிகாரியாகும். உங்களுக்கு கவலை தருவது: நீங்கள் செய்ய விரும்பாததும், இந்தக் கணனியும் அதில் தட்டச்சு (TYPE) செய்வதுமேயாகும். ஆனால் கணனியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இரண்டு கம்பனிகளின் செயற்றிட்டங்களின் நிலைபரங்களை நீங்கள் அறிய வேண்டியுள்ளது.



பெரும்பாலானோர் தட்டச்சுப் பொறியில் (Key Board) ஓரிரு தடவை தட்டுவதன் மூலமோ அல்லது (Mouse) எனப்படும் சாதனத்தின் தாழ்ப்பாளை அமர்த்துவதன் மூலமோ தேவையான செயற்றிட்டக் கோவைகளைக் கணனித் திரையிற் பார்த்து விடுவர். ஆனால் தற்போது பேச்சை அடையாளம் காணுந் தொகுதி (Speech-recognition System) ஒன்றும் உங்கள் தனிப்பட்ட கணனியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுதியுடன் வரும் கெட் போனை (Head Phone) கொழுவிக் கொண்டு ''செயற்றிட்டம் எக்ஸ் இற்குப் போ'' (Switch to Project X'' என்று சொன்னவுடன் தனிப்பட்ட கணனி இந்த வேண்டுகோளை ஏற்று செயற்றிட்டத்திற் குரிய கோவைகளை கணனித் திரையிற் காட்டும். இப்படி நடந்தவுடன் நான் ஒரு நிறைவேற்றதிகாரி என்று நீங்கள் உங்களுக்குள் சொல்லிக் கொள்வீர்கள்.

தற்போது பேச்சை அடையாளங் காணுந் தொழில் நுட்பமும் தனிப்பட்ட கணனிகளை வந்தடைந்து விட்டது. நெக்ஸ்ட், அப்பிள் (Next and Apple) என்னும் இரு கம்பனிகளும் பேச்சு மொழியைக் கணனிக்கு விளங்கக்கூடிய எண் வரிவடிவக் குறியீட்டிற்கு (Digital Signals) மாற்றக் கூடிய உதிரிப் பாகங்களையும், (Hard Ware) கணனி மொழிகளையும் (Soft Ware தாம் விற்பனை செய்யும் கணனிகளில் இணைத்துள்ளனர். ஏனைய கம்பனிகள் தனிப்பட்ட கணனிகளிற் பொருத்திப் பாவிக்கக் கூடிய பேச்சு மொழியைப் புரிந்து கொள்ளும் அட்டைகளை (Speech-recognition boards) விற்பனை செய்கின்றது. நியு ஜேர்சி என்ற இடத்தின் எடிசன் நகரைச் சேர்ந்த வேர்பக்ஸ் மொழிச் செயற்றிட்ட கம்பனி (Verbex Voice Systems) குறிப்பேட்டுக் கணனிகளுடனும் கைக்கடக்கமான கணனிகளுடனும், பொருத்தக்கூடிய பேச்சு இடையிணைப்புப் பெட்டி Speach Interflace box) ஒன்றை விற்பனை செய்கின்றது. இவை ''ஸ்பீச் கொமாண்டர்'' (Speech Commander) எனப்படுகின்றது. இதன் விலை 2,565 டொலர். இது மைக்ரோ சொவ்ட் விண்டோஸ் (Microsoft Windows) போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ளது.

பேச்சைப் புரிந்து கொள்ளும் தொழில் நுட்பத்தைச் செய்தவர், ''இம் முறையானது நகவல்களைக் கொடுப்பதற்கோ அல்லது திரும்பப் பெற்றுக்கொள்வதற்கோ வேகங் கூடிய முறை என்னும் கணனியைப் பயன்படுத்து பவரின் கைகளை இதன் மூலம் வேறு வேலைகளைக் கவலிக்க வாய்ப்பளிக்கும்'' என்றும் கூறுகின்றார். பேச்சைப் புரிந்து கொள்ளுந் தன்மை மூலம் எழுதப்படிக்கத் தெரியாதவர் கூடப் பயன்படுத்தக் கூடிய கணனிகள் இடமளிப்பதோடு தட்டச்சுப் பொறியைப் பயன்

டுத்த முடியாத ஊனமுற்றவர்களுக்குர்இதுபெரிதும்உதவும். அத்தோடு ஆய்வு வேலைகளில் ஈடுபடும் தொழில் நுட்பவியலாளருக்கும், காசாளர்களுக்கும் இம்முறை பெரிதும் பொருத்தமானதும், பயன்தருவதுமாகும்.

ராஜ மரம்

வேப்பமரம் இன்று உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற ஒரு மரம். இது மகோக்கனி மரப் பரம்பரையைச் சேர்ந்தது. இம்மரத்தின் பயன்பாடு நாட்டு வைத்தியத்தில் பெருமளவு காணப்படுகின்றது. அத்துடன் இதன் சிறு தடியால் (குச்சி) பல் நீட்டினால் பற்சிதைவு, இதரபல்வியாதிகளைப் பெருமளவிற்குக் கட்டுப்படுத்த

லாம். இதன் எண்ணெய் கருத்தடைக்குப் பயன்படுகிறது. தேமல் போன்ற நோயைக் குணப்படுத்தவும் இது உதவுகின்றது. மேலும் ஏற்புவலி ஏற்படாமல் தடுக்கும் சக்தியும் இதற்கு உண்டு. பூச்சிக் கொல்லியாகவும் இது பாவிக்கப் படுகிறது. இதனை அமெரிக்கக் கம்பனியான வி. ஆர். கிறேஸ் என்னும் கம்பனி 'மாரி கோசான்' என்ற பெயரில் சந்தைப்படுத்துகிறது.

ஒரு கனவு சிறிய வடிவத்தில் உருவாக்குவது

சிறிய பிள்ளைகளுக்குப் பொருத்தமற்ற விளையாட்டுப் பொருட்கள்: யுசுப்ஹரி இந்தோனேசியாவில் உள்ள ஒரு பிரபல்யமான மோட்டார் வாகன விற்பனையாளர். இவர் 3235 டொலருக்கு ஒரு மேசிடிஸ் பென்ஸ் காரை விற்பனை செய்கின்றார். இதே வேளையில் 150 டொலரில் இருந்து 750 டொலர் வரைக்கும் சிறிய வடிவத்தில் அமைத்துள்ள பென்ஸ் மற்றும் உலகத்தில் புகழ் பெற்ற கார்களையும் விற்கின்றார். இக் கார்களை வாங்குவோர் இத் துறையில் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள். அதே வேளையில் மற்றும் சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்கும் இவற்றை வாங்கிக் கொடுக்கின்றார்கள். இவற்றை ஹரி விற்பனை செய்வதற்கு முன் இந்தோனேசியாவில் இதில் ஆர்வம் உள்ளவர்கள் வெளி நாடுகளிலிருந்து

வாங்கினார்கள். தற்போது இந்தோனேசியாவில் இது ஒரு மிகவும் இலாபத்தைக் கொண்டு வரும் ஒரு வியாபார முயற்சியாக உள்ளது. இச் சிறிய அமைப்பைக் கொண்ட வாகனங்கள் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஏசியாவீக்,

ஓர் இரத்தப் பரிசோதனை

சூருதியில் கொலஸ்திரோலின் அளவைப்பற்றிக் கவலைப்படுபவர்களுக்காக ஓர் அமெரிக்கக் கம்பனி கையடக்கமான இரத்தப்பரிசோதனைக் கருவியொன்றை உற்பத்தி செய்துள்ளது. ''பாவனையாளர் தாமே தமது சூருதியிலுள்ள மொத்தக் கொலஸ்திரோலின் அளவை இக்கருவியைப் பயன்படுத்தி 15 நிமிடங்களில் அறிந்து கொள்ள முடியும்'' என செம்திரக் எனும் இக்கம்பனியின் தலைவர் கலாநிதி பிரிதிபால் சிங் தெரிவிக்கிறார். ''இம்முறையின் திருத்தம் கிட்டத்தட்ட ஆய்வுகூட உபகரணங்களைப் பயன்படுத்தும் முறையின் திருத்தத்திற்குச் சமனானது'' எனவும் அவர் கூறுகிறார். அக்யூ மீற்றர் (Accumeter) என்று அழைக்கப்படும் இக்கருவி அமெரிக்காவிலும், வேறு நாடுகளிலும் இப்போது வைத்தியரின் பொறுப்பில் கிடைக்கிறது.

முழுமையாக எல்லா கொலஸ்திரோலுக்கான சோதனைகளும் ஆய்வுகூடங்களிலேயே செய்யப்படுகின்றன. அத்துடன் இச்சோதனைகளின் அறிக்கைகள் ஓரிரு தினங்களில் கிடைக்கின்றன, ஆனால் அக்யூ மீற்றர் உடனடியாக வாசிப்பைத் தருவதுடன், செம்திரக் கம்பனியின் கூற்றுப்படி 97 சதவீதமளவிற்கு ஆய்வுகூட இரத்தப் பரிசோதனையின் திருத்தத்தைத் தரக்கூடியது. எனினும் இக்கருவி ஒருதடவை மட்டுமே பயன்படுத்தக்கூடியது. பாவனையாளர் முதலில் இக்கருவியுடன் வழங்கப்படும் ஓர் ஊசியால் விரலைக்குத்தி 3அல்லது 2துளி இரத்தத்தை இக்கருவியின் மேற்பகுதியிலுள்ள குழாயினுள் விட்டு 2 நிமிடம் பொறுத்திருக்கவேண்டும். பின்னர் ஒரு குழாயைத் நிறப்பதன் மூலம் இரசாயனப் பொருட்களுக்கும், சூருதிக்கும் இடையே இடைத்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும் 10-13 நிமிட நேரம் பொறுத்திருந்தபின் அளவிடையில் கொலஸ்திரோலுக்கான வாசிப்பு பெறப்படுகிறது. இவ் அளவிடை லெப்பமாவி அளவிடையைப் போல் தோற்றமளிக்கிறது.

இக்கருவி உயர் அடர்த்தியுடைய லிப்போ புரதங்களுக்கும், தாழ் அடர்த்தியுடைய லிப்போ புரதங்களுக்குமிடையிலான விகிதத்தையோ, அல்லது இப்புரதங்களின் அளவுகளையோ கண்டு பிடிக்க பயன்பட

புதியன அறிமுகம்

மாட்டாது. இவ்வளவீடுகள் சில நோயாளிகளின் உடல் நிலையை நிர்ணயிப்பதில் உபயோகப் படுபவையாகும். எனினும் ''இதுதான் இரத்தப்பரிசோதனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட முதலாவதும், மிகச்சிறந்ததுமான கருவி'' என செம் திரக் கம்பனியின் விற்பனை இயக்குனர் ஜிம்வான்ஸ் கூறுகிறார். ஓர் உபயோகமான குறிப்பு கொலஸ்திரோல் வாசிப்பு 200ஐ விடக் கூடுதலாக இருந்தால் வைத்தியர் ஒருவரிடம் மீண்டும் ஒரு முறை இரத்தப்பரிசோதனை செய்து கொள்வது நல்லது. அக்யூ மீற்றரின் விலை: ஏறத்தாள 15 டொலர்.

சுவர்ப்படங்களில் விளையாட்டு வீரர்

சிறுவர்கள் தமது அபிமான விளையாட்டு வீரரது படங்களைப் படுக்கையறைச் சுவரில் ஒட்டி வைக்க ஆசைப்படுகிறார்கள். அமெரிக்க ஒலிம்பிக் கூடைப் பந்து வீரர்களாகிய மைக்கல் ஜோடான் லாஜிரி போட் முதலியோரதும், ஏனையோரதும் எந்தப் பெரிய சுவரிலும், கதவிலும் ஒட்டக்கூடிய படங்களை இப்பொழுது அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். (Wall stars) வோல் ஸ்ராஸ் என அழைக்கப்படும் இந்த நிழற் படங்கள் விளையாட்டு வீரர்கள் செயற் பட்டுக் கொண்டிருப்பதைக் காட்டுவன. ஒவ்வொரு படமும் 49 அல்லது 62 சென்ரி மீற்றர் உயரமானது. மீண்டும் ஒட்டக்கூடியது. கலிபோனியாவில் இருக்கும் (Deck of Carlsbad) டெக் ஒப் கார்ல்ஸ் பாட் என்னும் கம்பனியே இவற்றை உற்பத்தி செய்கின்றது. இக் கம்பனி அடுத்த படியாகத் தேசிய உதைபந்தாட்ட வீரரின் நிழற் படங்களையும், தேசிய கூடைப் பந்தாட்ட வீரர்களின் நிழற் படங்களையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளது இரு வீரர்களின் விளையாட்டைக் காட்டும் ஒரு படத்தின் தில்லறை விலை 10 டொலர்.

பேசும் புத்தகம்

கட்புலன் குறைந்தவர்களுக்கும், தீக்கிப் பேசுபவர்களுக்கும், வேறு ஏதாவது குறைபாடு உள்ளவர்களுக்கும் உதவும் நோக்குடன் கையில் வைத்திருக்கக்கூடிய பேசும் அகராதி ஒன்று ஃபிறாங்கிளின் இலத்திரனியல் பிரசுர நிறுவனத்தால் சந்தைப் படுத்தப் படுகின்றது. ஒவ்வோர் எழுத்தையும் தட்டச்சில் பொறிக்கும் போது ஓர் ஒலி அறிவிக்கும் கருவி அதை உச்சரித்து மேலும் LCD திரையில் வரும் சொற்களையும், வரைவிலக்கணத்தையும் உச்சரிக்கின்றது. தீக்கிப் பேசுபவர்களுக்கு ஒரே நேரத்தில் 26 செய்திகளைச் சேமித்துப் பேசக்கூடியது. நான்கு AA மின் கலன்களுடனும், A.C இக்கு மாற்றக்கூடிய அடப்ரருடனும் தனிமையாகக் கேட்க உதவும் காதில் அணியும் ஹெட்ஃபோனுடனும் இப் பாஷை ஆரியர் 6000 SE விற்பனைக்கு வருகின்றது. இதன் விலை 495 டொலர்.

நிறையும் நேரமும்

உங்கள் நிறையைப் பற்றிக் கவலை கொள்கிறீர்களா? நேரம் பிந்திக் கடமைக்குச் செல்கிறீர்களா? இஸ்ரேல் நாட்டு மெப்றோ எப்பிலேடி நிறுவனம் ஒரு சிறந்த கருவியை அமைத்துள்ளது. பிரயாணத்திற்குக் கொண்டு செல்லக் கூடிய ஒலி எழுப்பும் மணிக்கூடாகவும் (Alarm Clock) குளிப்பறையில் நிறையளக்கும் கருவியாகவும் தொழிற்படக் கூடியது. மின்கலங்களால் சக்தியூட்டப்படும் மினிஸ்கேல் எனப்படும் இக் கருவி 4½ அங்குல விட்டமும், 13 அவுன்சு நிறையும் உடையது. சுவர் அல்லது கதிரையொன்றை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு ஒரு காலின் நுனி விரல்களால் கருவியின் மீது ஏறி நிற்க ஒரு செக்கனின் பின்னர் உங்களது நிறை பதிவு செய்ததைக் காட்ட ஓர் இலத்திரனியல் பீப் சத்தம் கேட்கும் செயற்பாட்டை மாற்ற ஓர் ஆளியை அமர்த்தும்போது மணி அடித்து ஒலி எழுப்பும் மணிக்கூடாக மாறுகின்றது. விலை 60 டொலர்.

பாதுகாப்பான பற்றறிகள்

A safer Battery

அநேகமாக வீட்டுப் பாவனைக்குரிய மின்கலன்களில் சிறிதளவில் பாதரசமும் கலந்துள்ளது. பாதரசம் ஆபத்தான ஓர் இரசாயனப் பொருளாகும். பாதரசம் நிலத்தினூடாக ஊடறுத்துச் சென்று கீழுள்ள நீர் மட்டத்தை அசுத்தமாக்கக் கூடியது. மின்கலத் (Battery) தயாரிப்பில் முன்னணியிலுள்ள கொனெக்டிக்கட் மெதல்டூரா லெல் இணையத்தினர் பாதரசம் பயன்படுத்தப்படாத காரமின்கலங்களைத் தாம் தயாரித்திருப்பதாக அறிவித்துள்ளனர். இந்த ஆண்டின் இறுதியில் அதனை விற்பனைக்குக் கொண்டுவரவுள்ளனர். இந்த மின்கலங்களும் முன்னர் தயாரிக்கப்பட்டவை போன்று செயற்படக்கூடியவை, அன்றியும் இப் புதிய மின்கலங்களை முன்பு தயாரிக்கப்பட்ட மின்கலங்களின் விலைக்கே பெற்றுக் கொள்ளலாம்

நியூஸ்வீக் மார்ச் 15, 1992

சாயச் சாட்சி

(Dye Witness)

குற்றவாளிகளைக் கண்டுகொள்ளப் பயன்படுத்தும் சாயத் தெளிகருவி

ஒரு கனேடிய வியாபாரத் தாபனம் பச்சை நிறச் சாயத் தெளிகருவி யொன்றை விற்பனை செய்கின்றது. இக் கருவி (நகரக் காவலர்) குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவக்கூடியது. இதனை சாயச் சாட்சி (Dye Witness) என அழைகின்றனர். தம்மைத் தாக்க வரும் குற்றவாளிகளைத் தடுப்பதற்கு இத் தெளி கருவியைக் கொண்டு சென்று பயன்படுத்தலாம். தாக்க வருவோர் மீது இச் சாயத்தைக் கருவி மூலம் தெளித்தவுடன் அதன் சாயக் கறை தெளிக்கப்பட்டோரிடத்து ஏழு நாட்கள் வரை நீடிக்கும். அதனைக் கழுவிவிட முடியாது. வான்கூவர் Pure Life Products International நிறுவனம் இது சம்பந்தமாக மேலும் கூறுவது என்னவெனில்: தெளிக்கப்படும் இச் சாயம் நச்சுத் தன்மையற்றது. அன்றியும் தெளிக்கப்படுவோர் பாதிப்புக்குள்ளாக மாட்டார்கள் என்று. இதன் விலை 30 டொலர்.

நியூஸ்வீக், ஜூலை 1992

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காதில் விழுந்தவை

★ பெப்சி குளிர்பானத்தைச் சிபார்சு செய்யும் மைக் கேல் ஜாக்சன் என்பவர் வேண்டுமென்றே இந்நிறு வனத்திற்கு அபகீர்த்தி உண்டுபண்ணும் நோக்குடன் செயற்பட்டு இருவகையான குளிர்பானங்களையும் தடை செய்ததன் விளைவாக இப்பொழுது பாங் கொக்கில் ''கொக்கா கோலா'' முன்னணியில் நிற் கின்றது என்கிறார்.

★ பிரித்தானிய பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர்க ளினால் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் – அ ந் நாட்டு அலுவலகங்களில் கடமைபுரியும் ஆண் உத்தி யோகஸ்தர்கள் சக பெண் உத்தியோகஸ்தர்களைப் பாலியல் வன்முறைக்குட்படுத்துவது பற்றிய வினா எழுந்தபோது· ''நீங்கள் யூதர்கள் என்று வைத் துக் கொள்வோம் நீங்களே உங்கள் வீட்டு ஜன் னலை உடைத்து விட்டு ஜேர்மன் பொலிஸிடம் கூறுவீர்களா?'' என்று அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரித்தானிய சட்ட ஆலோசகர் டினா மாட்டின் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

★ பேர்லின் நகருக்கு அண்மையிலுள்ள டோல்பென் புறோட் என்ற கிராமத்து மேஜர் பிறிசெல்லர், வெளிநாடுகளில் இருந்து அரசியற் தஞ்சம் கோரி வந்தவர்களுக்கு ஒரு கட்டடத்தைத் திறந்து வைத்த போது இப்பிரச்சினை பற்றி நாம் அதிகம் கவ லையடையவில்லை– ஓரளவு திருப்திப்படக்கூடி ய வகையில் இன்று நாம் இருக்கின்றோம் என்று கூறி னார்.

★ தமது மதப்பிரச்சார ஸ்தாபனங்கள் சிக்கல்களை எதிர்நோக்கும் வேளைகளில், நாசா விஞ்ஞானி கள், அவற்றை இலகுவாக்கும் விதத்தில் சில அழுத்தங்களைக் கொடுப்பது பற்றி ஆராய்ச்சித் திட் டமிடல் அவதான நிலைய முகாமையாளர் இனென் கண்ணிங்காம் குறிப்பிடுகையில், 'வீரிட்டுக் கூச்ச லிடுகின்றார்கள்.'' என்று கூறினார்.

★ 'வங்கியில் கொள்ளையடிப்பது கலபமாக இருக் கும்போது, ஏன் ஆட்கடத்தல் வேலை செய்கிறார் கள் என்று நியூயோர்க் பாதுகாப்பு விசேட அதி காரி ஜோன் ஹோன் கூறினார்.

★ உலகத்தில் மிக உயரமான மலையில் பொது மலசலகூடம் அமைப்பது பற்றி பிரித்தானிய எவ ரஸ்ட் மருத்துவ பீடம் கருத்து வெளியிட்ட போது, இப்பீடத்தின் அங்கத்தவர் கென்னத் ஸ்டு வேட் கூறியதாவது ''அதற்கு மக்கள் போய்வ ரக்கூடிய வசதியையும் ஏற்படுத்த வேண்டும்'' என்றார்.

★ ஆபிரிக்க தேசிய இளைஞர் காங்கிரஸ் தலைவர் பீற்றர் மொக்காபார், ஆபிரிக்க நகர்ப்புறங்களில் வாழும் கறுப்பினத்தவர்களுக்கு அளித்த பேட்டி யில் தென் ஆபிரிக்கத் தலைவர் எப். டபிள்யூ. டீ கிளார்க்கிற்கு உங்கள் தோட்டாக்களைப்பயன்படுத்தி படுத்தி வையுங்கள் என்று கூறினார். அவர் மேலும் கூறியபோது தனிநபர்கள் ஆயுதமின்றிச் சண்டை பிடிப்பதற்குத் தம்மைத் தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கூற்றை நான் வெறுக்கிறேன் என்றும் கூறினார்.

இரும்புப் பங்கீடு

பணமுடக்கம் - இராணுவங்கள் சிக்கலுக்கு முகம் கொடுக்கின்றன

1991 பெப்ரவரியில் நாசகாரிக் கப்பலான டெல்லி வெள்ளோட்டம் விடப்பட்டபோது அது இந்தியக் கடற்படையின் பெருமைக்குரியது என்ற கருத்தே நிலவியது. 5900 தொன் எடையுள்ள அது இரண்டாவது உலகப் போரின் போது பாவனையிலிருந்த வேகப் போர்க் கப்பலின் அளவையுடையதாகும். ஆனால் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டது. எரிவாயு நீர்வலுவைக் கொண்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அந்தக் கப்பலின் வேகம் மணிக்கு 28 கடல் மைல்களாகும். அதன் பின் தளத்தில் இரண்டு பாரிய நீர்மூழ்கி எதிர்ப்பு உலங்கு வானூர்திகளை இயக்குவதற்கான அறையொன்றுண்டு.

இந்து சமுத்திரத்தின் எந்த மூலையிலும் செயற்படத் தக்க விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நாசகாரியைப்போல, சீனா உட்பட எந்த மூன்றாம் உலக நாட்டிலும் போர்க் கப்பல் கிடையாது என்பது மட்டுமல்ல, சக்தி வாய்ந்த கப்பலொன்றைக் கட்டுவதென்பதும் அவைகளால் இயலாத காரியமாகும்.

சமீப காலத்தில் பம்பாயிலுள்ள டீசகாவோன் கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்றவர்கள் அதிசயமொன்றைக் கவனிக்கக் கூடியதாக இருந்திருக்கும்: டெல்லியின் சகோதரக் கப்பலான ஐமசுர், ஜூன் மாதத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டு மூன்றாவது நாசகாரிக் கப்பலுக்கான பணியும் தொடக்கப்பட்டு விட்டதாயினும், வெள்ளோட்டம் விடப்பட்டு 2½ ஆண்டுகளின் பின்னரும் பகுதிகள் கழற்றப்பட்ட வெற்றுடலாக அதில் இணைக்கப்பட விருந்த போர்க் கருவிகள், எதிர்ப்பாயுதங்கள் என்பன அற்ற நிலையிலேயே இருந்து வருவதை.

பாதுகாப்பு நிபுணர்களின் கருத்துப்படி, டெல்லி வகுப்பு நாசகாரிகளில் இணைக்க வேண்டியவை பற்றிய திட்டங்கள் தொடர்பாகக் கடற்படையினர் மீள் யோசனை செய்ய வேண்டியதாய் விட்டது. முந்தைய சோவியத்தின் கஷின் வகுப்பு நாசகாரிகளைப் போன்ற நாசகாரிகளுக்குச் சோவியத் நாட்டிலே செய்யப்பட்ட கருவிகளும், ஆயுதங்களுமே பொருத்தப்படல் வேண்டும். அவ்வாறானவற்றை ஐரோப்பிய நாடுகளில் கொள்வனவு செய்வதை விட மிகவும் குறைந்த விலையில் இந்தியர் சோவியத்திடமிருந்து பெறக்கூடியதாக இருந்தது.

முந்தைய சோவியத் பாதுகாப்புத் தொழிற்சாலைகள் இப்போது ருஷ்ய உக்ரேனிய பைலோ ருஷ்ய முகவர்களாலேயே நடாத்தப்படுகின்றன. அவர்கள் பனக் கொடுப்பனவுக்கே பொருள் விற்பவர்களாகவும், தமது வர்த்தகத்தின் எந்தக் கொடுக்கல் வாங்கலிலும் இலாபம் சம்பாதிக்கும் நோக்குடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வளவுக்குப் பின்னரும் விநியோகம் நிச்சயமற்றதாயுள்ளது.

புதிய நாசகாரிகள் தொடர்பான கடற்படையின் குழப்பநிலை இராணுவத்தினுள் புதுமையான ஒன்றல்ல. உண்மையாகச் சொல்வதானால், கடற்படையே மிகக் குறைந்த அளவில் பாதிக்கப்பட்ட ஒன்றாகும். வான்படையின் முன்னணி மிக் 29 போர் விமானங்கள் பல, விசேட எரிபொருள் விநியோகம் எப்போதும் ருஷ்யாவால் செய்யப்பட்டமையால் தரைதட்டி நிற்பதை உதாரணமாகக் கூறலாம்.

1986 ஆம் ஆண்டில் சுவீடனிலுள்ள போபோர்ஸ் நிறுவனத்திடமிருந்து 130 கோடி அமெரிக்க டொலருக்கு வாங்கிய 155 மி.மீ. தூரம் ஹொவிற்சர் பீரங்கிகளுக்குப் பெரியவெடிமருந்துத் தட்டுப்பாடு நிலவுவதால் இராணுவம் கனரகக்கவசவாகனங்களையும், எறிகணைகளையும் உபயோகப்படுத்த முடியாமல் திணறுகிறது.

காலஞ்சென்ற ராஜீவ் காந்தி பிரதமராகவிருந்த 1984—89 இன் காலத்தில் இராணுவ இயந்திரம் அகண்ட ஆயிய அளவில் விரிந்து பரந்து கொண்டிருந்தது. இப்போது அது நின்ற இடத்திலேயே தரித்து விட்டது. வெளிநாட்டுச் செலாவணி விடயத்திலும், உள்நாட்டு வரவு செலவுத் திட்டத்திலும் இரட்டைப் பற்றாக்குறையை நிரவமுயலும் அரசு எடுத்த எடுப்பில் அமெரிக்க ஐரோப்பிய ஆயுத விநியோகஸ்தர்களை நாட முடியாது.

ஆகஸ்ட் 4ஆம் நாள் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்ட 110 கோடி அமெரிக்க டொலருக்கு 80 வரையிலான புதிய முன்னேற்றகரமான போர்ப் பயிற்சி ஜெற் விமானக் கொள்வனவே இந்தியாவுக்கு வெளியே வாக்கூடிய பாரிய பாதுகாப்புக் கட்டளையாக இருக்கும்.

போட்டி விமானமான பிஜாங்கோ — ஜெர்மன் அல்பா ஜெட்டிலும் பார்க்க இந்திய விமானப்படை விரும்பும் பிரித்தானியத் தயாரிப்பான ஹோக் வகையில் இரண்டு விமானங்களை வாங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இத்தகவிடயத்தில் விநியோகஸ்தரின் கடன் வசதி முக்கிய இடத்தினை வகிக்கும். இந்தியர்கள் நீண்ட கடினமான பேரம் பேசுவார்கள். ''இந்தப் பேச்சுவார்த்தையை ஒராண்டுக்குள் முடித்து விடுவார்களானால் அது ஓர் அதிசயமாகும்'' என்கிறார் புதுடில்லியின்

பாதுகாப்பு மூலோபாயப் பகுப் பாய்வுக் கழகத்தின் இயக்குனரும், ஓய்வுபெற்ற எயர் கொமடோரு மான ஜஸ்ஜித் சிங்.

புதிய வெளிநாட்டுக் கருவிகள் கைக்கெட்டாத நிலையில் உள்நாட் டுப் பொருட்களைப் பாதுகாப்புச் சேவைகள் நாடி நிற் கின் றன. 1993 / 94 வரவு செலவுத் திட்டத் தில் (ஏப்ரல் - மார்ச்) பாதுகாப் புச் சேவைகளுக்கான ஒதுக்கீடு 7 வீதம் மட்டுமே அதிகரித்து 5500 கோடி ரூபா அல்லது புதிய பணவீக்க விகிதத்திலும் சிறிது குறைந்த அளவு என்ற நிலையி லுள்ளது. இந்த ஒதுக்கீட்டினுள் ளேயே பாதுகாப்பு ஆய்வுக்கும், அபிவிருத்திக்குமான ஒதுக்கீடு இரட்டிப்பாகி 410 கோடி ரூபாவை எட்டிப் பிடித்துள்ளது.

அரசின் பிரதம பாதுகாப்பு விஞ்ஞானியான ஏ. ஜே. பி. அப்துல் கலாம், பிரதமர் பீ. வீ. நரசிம்ம ராவைப் போலவே சிந்திப்பவர். ஆனால் விஞ்ஞான நிறுவனத்தால் அதன் கடமையைச் சரிவர நிறை வேற்ற முடியுமா? என்பதுபற்றி மூப்படையினரும் ஐயுறவோடேயே உள்ளனர்.

புதிதாக உள்நாட்டில் தயார்செய் யப்பட்ட இலகுச் சண்டை விமா னம் 30 ஆண்டு காலமாக இருந்து வரும் மிக் 21 இன் இடத்திற்காக உருவாக்கப்பட்டதாகும். அவை இப்போது உயிரிழக்கச் செய்யப் பட்டு ''தொழில் நுட்பச் செய்கை யாளராக'' மட்டும் இருந்து வருகி றது என்கிறார் மூலோபாயப் பகுப்பாய்வாளர் சிங். விமானப் படையினர் இப்போது மிக் 21ற்கு மீளமைப்புச் செய்வது தொடர் பாக அமெரிக்க இஸ்ரேலிய நிறுவ னங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

உள்நாட்டிலே தயாரிக்கப்பட்ட அர்ஜுன் பிரதான போர்க்கவச வாகனம் சுடுவதிலும் சக்தி வெளிப் பாட்டிலும் தரக்குறைவாகவேயுள் ளதாம். இந்துப்பத்திரிகையில் வெளிக்கொணரப்பட்டதும், இது வரை மறுக்கப்படாததுமான செய்தி, பாகிஸ்தானுடன் கவச வாகனப் போரில் ஈடுபடும் சாத்திய முள்ள இராஜஸ்தானின் 50பாகை சீ வெப்பம் காட்டும் கோடை காலத்தில் அர்ஜுனின் இயந்திரம் அதிகப்படியான வெப்ப மேறாமல் தடுப்பதற்கு அதித வேகம் மணிக்கு 8 கிலோ மீற்றர் என்ற அளவில் வைக்கப்படவேண்டும். அரச இரா ணுவ ஆயுத உற்பத்தித் தொழிற் சாலைகளில் செய்யப்படும் 5.56 மில்லிமீற்றர் சிறிய ஆயுதங்களின் சுடும் தொலைவு பற்றியும் படை யினரிடையே அதிருப்தி நிலவுவ தாகப் பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகிறார்கள். அதனால் முந்திய சோவியத் ஒன்றிய நாடுகளிடமி ருந்து கலாஷ்னிக்கோவ் தாக்கு தல் துப்பாக்கிகளுக்குக் கொள்வ னவுக் கோரிக்கைகள் அனுப்புகி றார்கள். இதனால்தொழில்நுட்பப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

அதிர்ஷ்டவசமாக நாட்டுக்கான வெளிநாட்டிலிருந்தான உடனடிப் பாதுகாப்பு அபாயங்களும் குறைந் துள்ளன. உள்நாட்டுப் பாதுகாப் புச் செயற்பாடுகளிலேயே அதிகப் படியான இராணுவம் ஈடுபட வேண் டியுள்ளது. சென்ற ஆண்டில் சிக்கிய தீவிரவாதிகளின் பிரிவினை வாதத்தை ஒடுக்குவதற்குப் பாரிய அளவில் படை நடவடிக்கை மேற் கொண்டபின்னர் இப்போது காஷ் மீர் எழுச்சியை ஒடுக்க மேலதிக நடவடிக்கையிலிறங்கியுள்ளனர். வெளிநாட்டுப் பங்குப் பணிகளை கம்போடியாவிலும், அதிசிக்கிரம் சோமாலியாவிலும் ஐ. நா. பார் வையில் இடம் பெறும். சென்ற மார்ச்சில் நடந்த பம்பாய்க்குண்டு வெடிப்பின் பின் கடற்படையின ரின் கூடிய கவனம் கள்ளக் கடத் தலுக்கெதிரான மேற்குக் கரை யோர ரோந்து நடவடிக்கையிலே செலுத்தப்படுவதோடு மாலுமிகள் வாடகைக்கமர்த்தப்படும் மீன்பிடி வள்ளங்களிலும் காவலில் ஈடுபடு கின்றனர்.

முன்னேற்றகரமான படைத்திற மைகளைப் பெற்றுக்கொள்ளவேண் டும் என்ற முப்படைத் தளபதிக ளின் நீண்ட நாள் ஆசைகள் கை விடப்படவில்லை. தம்மிடமுள்ள பழைய பிரித்தானிய விமானந் தாங்கிக் கப்பல்களையே கடற் படை இப்போதும் தயாரித்துக் கொண்டு வருகிறது. பொருளாதா ரம் வலுவடையும் போது 40 வய தைத் தாண்டி விட்ட விமானந் தாங்கிக் கப்பலான விக்ரத்தினவின் இடத்தை நிரப்பப் புதிய கப்பலை வாங்கிவிட முடியும் என்று அவர் கள் நம்புகிறார்கள். அதேவேளை அணுச்சக்தியால் இயங்கும் நீர் மூழ் கிக் கப்பல்களை உற்பத்திசெய்து அபிவிருத்தி காண்பதில் தமது பணிகளைத் தொடர்கிறார்கள். விமானப் படையினர் வானில் மீள வும் எரிபொருள் நிரப்பும் கவச விமானங்களையும், வான்ரேடார் களையும், மின்னியல் போர் விமா னங்களையும் பெற்றுக் கொள்ள முனைகிறார்கள்.

சோவியத் யூனியன் மீளவும் வல் லரசுத் தன்மையைப் பெற்று, வல் லாதிக்க மேலாண்மைச் சமநிலை பேணும் நிலை ஏற்படும் என்றும் அதனால் இந்தியப்படையத்தின் தேவைகள் முன்னரைப்போலவே



அல்பா ஜெட்: போருக்கான ஒருநிலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிறைவற வழியேற்படும் என்றும் சில அதிகாரிகள் நம்புகிறார்கள். அதேவேளை மேற்குலக நாடுகளோடு இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதையே மூப்படைத் தளபதிகள் விரும்புகிறார்கள்.

கடற்படை இவ்விடயத்தில் முன்னுதாரணத்தோடு நடந்துகொள்கிறது. அமெரிக்காவின் தலைமையிலான சோமாலியத் தலையீட்டில் உதவி விநியோகக் கப்பலைச்சென்ற டிசம்பரில் அனுப்பியதன் மூலமும், பெப்ரவரியில் அந்தமான் தீவுகளுக்கருகில் சிங்கப்பூர் போர்க்கப்பல்களுடனிணைந்து பயிற்சியில் ஈடுபட்டதன் மூலமும் இது வெளிக்காட்டப்பட்டுள்ளது. துறைமுகங்களுக்குப் போர்க்கப்பல்களின் வருகையும், மேற்கத்தைய கடற்படையினருடனான கூட்டுப்பயிற்சியும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வரை வாதப் பிரதிவாதங்களுக்குரிய ஒன்றாக இருந்த நிலை மாறி இப்போது சிரமமானநிலையை அடைந்துள்ளமை சுறிப்பிடத்தக்கதாகும்.

புதுடில்லியிலிருந்து
ஆமீன் மக்டொனால்

(F)வார் ஈஸ்ற்ரேன் எக்கனமிக் றிவியு, செப்ரெம்பர் 2, 1993

நடுக்கடலில் பேராபத்து

கடலில் செல்லும் கப்பல்கள் மீது ஏன் சீனா தாக்குதல் நடத்துகிறது?

கடந்த மே மாதம் வரை தென் சீனக் கடலில் ஒரு சூட்டுச் சம்பவமும் நடை பெறவில்லை. கப்பலோட்டிகளும், பிரயாணிகளும் ஆறுதல் அடைந்தனர். ஹொங்கொங் தீவுகள், ஹனான் தீவு. பிலிப்பைன்சின் லூசன் என்ற முக்கோணக் கடலில் ஆயுதம் தாங்கிய வேகக் கப்பல்களைத் துரத்திச் சுடுதலும், தாச்குதலும் முடிவுக்கு வந்துவிட்டதாகப் பலரும் நினைத்தனர். ஆனால் ஜூலை மத்தியில் இந்தப்பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த சரக்குக் கப்பல் தாக்கப்பட்டது டன் மீண்டும் பயங்கர நிலை ஆரம்பமாகியுள்ளது.

கோமல்சான் என்ற 2,226 தொன் எடையுள்ள இந்த வட கொரியக் கப்பல் ஹொங்கொங் தீவுப் பிரதேச நீரிற் சென்று கொண்டிருக்கும் போது 14 ஆயுதம் தரித்தவர்கள் இக்கப்பலில் ஏறிக்கொண்டனர். இந்தக் கப்பலில் இருந்த 36 மாலுமிகளும் கடும்போர் புரிந்தனர். இந்த யுத்தம் 19 மணித்தியாலங்கள் நடந்ததாக வடகொரியர்கள் தெரிவிக்கின்றனர், தமது கப்பல் நூற்றுக்கணக்கான சுற்று ரவைகளால் காயம் பட்டதாகவும், இறுதியில் தாம் வெற்றிகரமாகத் தாக்கியவர்களைத் துரத்திவிட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தில் இது போன்ற 15 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இதை நடத்துபவர்கள் யார்? இதற்குப் பதில் சொல்ல அரசுகளும், கப்பல் அதிகாரிகளும் தயங்குகின்றனர். குற்றஞ் சாட்ட ஒருவரும் முன்வராத நிலையிலும் ஒரு சில தாக்குதற் சம்பவங்களுக்குச் சீனாவின் பாதுகாப்புப் படையினர் பொறுப்பு எடுப்பது துணிபு. இதற்கு என்ன காரணம்? தான் கடத்தற்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை மாத்திரம் சீனா ஒத்துக்கொண்டுள்ளது. தாக்குதல்கள் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. தமது வருவாயைப் பெருக்கும் நோக்குடன் சீனப் படையினர் இதைச் செய்கின்றனர் என்று சொல்லப்படுகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டுக் கடற் கொள்ளைக்காரர்கள், சீனப் படையினரின் சீருடை அணிந்து இதில் ஈடுபடுவதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் ஜப்பானியப் பேராசிரியரொருவர் கூறும் காரணம் பலராலும் கவிக்கப்படுகிறது. தென் சீனக் கடலிலும், மேற்குச் சீனக் கடலிலும் சீனா தனது ஆதிக்கத்தை நாட்டும் முயற்சியே இந்தப் பலாத்காரம் என்பதே அந்த அபிப்பிராயம்.

கடற் கொள்ளைக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை ஓர் அளவிற்கு உண்மை. ஆனால் அதுதான் முழுவதும் அல்ல. தாக்குதல் நடத்துவோர் சரக்கைச் சோதிப்பார்கள். ஆனால் கவர்ந்து செல்லுவதில்லை. ஏப்பிரல் 17ஆம் திகதி சுன்குங் இலக்கம் 8 என்ற பனாமா நாட்

டுப் பதிவு உள்ள கப்பல் மீது வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. பின்பு முன்னெச்சரிக்கை ஒன்று மில்லாமல் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கப்பல் நிற்க மறுத்தபோது 15 நிமிடங்களாகத் துரத்தப்பட்டது. பின்பு கப்பல் நின்றதும் இரண்டு சீருடை அணிந்தோர் கப்பலில் ஏறி, சரக்கைச் சோதனை செய்த பின் இறங்கிச் சென்று விட்டனர். இவ்விருவரும் வந்த விசைப் படகின் அடையாளத்தைக் கொண்டு இவர்கள் சீனப் பொலிசார் என்று அனுமானிக்க முடிகின்றது. சீனா உண்மையில் கடத்தற் காரர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்கிறதென்றாலும் ஏன் தகட்டு மேனிக்குச் சுட்டுத்தள்ளுகிறார்கள் என்பதுதான் பெரும் புதிர். நிறுத்தச் சொல்லும் குரல் சீன அதிகாரிகளுடையது என்று எப்படித் தீர்மானிப்பது? கொள்ளைக்காரர்களும் நடமாடும் பிரதேசம் அல்லவா இது? அடையாளமோ குறியீடோ இல்லாத படகுகளையும் சீன அதிகாரிகள் சிலசமயம் பாவிப்பதால் நிலைமை இன்னும் மோசமாகின்றது.

எப்படி இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பது என்பதற்குரிய புத்திமதிகளை ஹொங் கொங் நாட்டுக் கப்பற் சொந்தக் காரர்கள் கழகம் தமது கப்பல் தலைவர்களுக்கு வழங்கி வருகின்றது. மாலுமிகள் சூடுபடாமல் பதுங்க வேண்டுமென்பதும், ஆகக் கூடிய வேகத்தில் கப்பல் ஓடித் தப்ப வேண்டும் என்பதுமே அறிவுரை. ஒரு கப்பல் ஆபத்துக் காலத்தில் உதவிகோரும் வெடிகளைச் சுட்டபடி வளைந்து வளைந்து ஓடித் தப்பியுள்ளது. இந்த ஒட்டம் இரண்டு மணித்தியாலம் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. "எங்களிடம் நிரந்தரமான பாதுகாப்பு ஒழுங்குகள் ஒன்றும் இல்லை. கப்பற்படை அண்மையில் இருந்தால் அது உதவும்" என்கிறார் ஒரு கடற்படை உயரதிகாரி. சில கப்பல்கள் அப்படிச் செய்தாலும் சரக்குக் கப்பல்களுக்கு ஆயுதம்



எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது நீரெல்லைக்குள் எந்தக் கப்பலையும் [illegible] சட்ட உரிமை சீனாவுக்கு உண்டு. ஆனால் சில சம்பவங்கள் நீரெல்லைக்கப்பாலும் நடந்துள்ளன. ஹொங்கொங் தீவின் தோலோ முனைமுகத்தில் சீனாவின் விசைப்படகொன்று ஒரு கப்பலின் மீது சுட்டுள்ளது. ஜப்பானிய நீரெல்லைக்குள் இது போன்ற மூன்று நிகழ்வுகள் நடந்துள்ளன. ஜப்பான் சீனாவுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. சீனா மன்னிப்புக் கோரியுள்ளது. ஆனால் தாங்கள் இந்தக் கப்பல்கள் கொள்ளைக்காரருடையதென்று நினைத்ததாகக் காரணம் கூறியுள்ளது.

கப்பல்களை மறிப்பதற்கும் ஏற்றிச் செல்லும் சரக்கைப் பறிமுதல் செய்வதற்கும் சீன அதிகாரிகளுக்குப் பலவிதமான வழக்கு விப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. பிடிக்கப்பட்டதில் 10வீதம் பரிசாக அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன. மாலுமிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு அவர்கள் விடுதலைக்காகப் பணம் பெற்றுக் கொண்ட சம்பவங்கள் நிறைய உள்ளன. ஹொங்கொங் தீவிலிருந்து சீனாவுக்கு வாகனங்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு இது கிரமமாக நடப்பதுண்டு. மே மாதம் சீன அதிகாரிகள் ஹொங்கொங் நாட்டின் பதிவொரு மாலுமிகளைப் பிடித்தனர், இவர்களில் எட்டுப்பேர் மூன்று இலட்சம் டொலர் கொடுக்கப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வியற்னாம் கப்பல்களிலும் இவ்வாறு பணம் கறக்கப்பட்டுள்ளன. மாலுமிகளைப் பிடித்து வைத்திருப்பதற்கு ஹொங்கொங் நீதிமற்கு அப்பால் உள்ள துறைமுகம் ஒன்றைச் சீன அதிகாரிகள் பாவிப்பது யாவரும் அறிந்ததொன்றே.

பாதிக்கப்பட்ட நாடுகளின் அதிகாரிகள் இந்த விடயத்தை மிகவும் அவதானமாகக் கையாளுகின்றனர். ஜப்பான் மௌனம் சாதிக்கின்றது. ரஷ்யக் கப்பல்கள் தாக்கப்பட்டுள்ளன. தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணைக்கு ரஷ்யா சீனாவிடமிருந்து பதிலை எதிர்பார்த்தபடி இருக்கின்றது. இதை ஒரு சர்வதேச விவகாரமாக்க ரஷ்யா விரும்பவில்லை. உண்மையென்னவென்றால் சீனாவுக்கு நெருக்குதல் கொடுக்க ஒரு நாட்டிற்கும் இதுவரை தலை வில்லை. ஹொங்கொங் நாட்டுக் கப்பல்கள் சொந்தக்காரர் கழகம் இதையோர் சர்வதேச விவகாரமாக்க அறிக்கைகள் தயாரித்து வெளிநாட்டு அமைச்சுக்குக் கொடுத்தபோது அந்த இலாகா சீனாவை நேரடியாகச் சம்பந்தப்படுத்த மறுத்துள்ளது. சர்வதேச கடற்போக்குவரத்து ஒன்றியத்திற்கு ஹொங்கொங் நாட்டு வெளிவிவகார அமைச்சு கொடுத்த அறிக்கையில் சீனாவின் நடவடிக்கைகள் பற்றி குறிப்பொன்றுமில்லை. கப்பற் சொந்தக்காரர்கள் இதனால் கலவரம் அடைந்துள்ளனர்.

இந்தக் கடற்பிரதேசத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலை நாட்ட சீனா பல தசாப்தங்களாக முயன்று வருகின்றது. கடற் கொள்ளைக்காரர்களுக்கு எதி

ரான நடவடிக்கை என்ற போர் வையில் சீனா இதைச் செய்து வருகின்றது. இந்தப் பிரதேசத் தில் கடற் கொள்ளைக்காரர் களின் அட்டகாசம் காலங் கால மாக நடைபெறுவதும் உண்மை தான். சீனா இந்த நீர்ப்பிரதேசத் தில் இருபது இடங்களில் எண் ணெய்க் கிணறுகளைத் தோண்டி யுள்ளது. இத்துடன் ஜப்பானுக் குச் சொந்தமான மக்கள் குடியி ருப்பற்ற சென்காக்கு தீவுத் தொட ரையும் தனதாக்கிக் கொள்ளச் சீனா நடவடிக்கை எடுத்துள்ளது. தான் ஒரு வல்லரசு, தென்-கிழக் காசியாவில் பலம் மிக்க நாடு என்பதைச் சீனக் கடலிலும் காட்டி வருகின்றது. சீன ஆட்சி யாளர்கள் வெளிப்படையாகக் கொள்கை விளக்கம் அளிக்காவிட் டாலும் கூர்ந்து கவனிப்போருக்கு இது புலப்படுகின்றது

ஏசியா வீக், ஒகஸ்ட் 18, 1993

அதிபயங்கரம் நடந்த இடம்

யுத்த காலத்தில் தான் செய்த குரூரச் செயல்களை ஜப்பான் ஏற்றுக்கொள்கிறது.

வட-கிழக்கு சீனாவில் கார்பின் (Harbin) நக ரில் இரண்டாவது யுத்த காலத்தில் ஜப்பா னிய இராணுவத்தின் 731 ஆம் அணி தங்கி யிருந்த கட்டடத் தொகுதி இன்றும் நிலை யாக உள்ளது. நெடுங் காலமாக இப்படியான தோர் இராணுவ அணி இருந்ததாக ஜப்பானிய அரசு ஒத்துக்கொள்ள வில்லை. ஆனால் இந் தக் கட்டடங்களில் இவர்களால் செய்யப் பட்ட குரூரச் செயல் கள் பல தசாப்தங்க ளாக ஜப்பானிய சரித் திர ஆசிரியர்களால் ஆதார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுமைகள் இரண்டாவது உலக யுத் தத்திற்கு முன்பும், யுத் தம் நடந்து கொண் டிருக்கும் போதும் நடந் ததாக இவர்கள் தெரி விக்கின்றார்கள். இந் தக் கட்டடத் தொகுதிக் குள் கொண்டு செல் லப்பட்ட சீனர், கொரிய, ருஷ்ய, மொங் கோலிய கைதிகள் உயிருடன் வெளியே வருவது அரிது. உட லியல் ஆராய்ச்சி என் றும், இராணுவத் தேவைக்கான ஆராய்ச்சி என்றும் இவர்கள் சித் திரவதைக் குட்படுத்தப் பட்டு இறுதியில் கொல் லப்படுகின்றனர். ஜப்பா னிய ஒவியர்கள் இங்கு நடந்தவற்றைத் தங்கள் சித்திரங்கள் மூலம் வெளியரங்கப் படுத்தி யுள்ளனர். ஜூலை மாதத்தில் இந்தச் சித் திரங்கள் ஜப்பானிய நாடு முழுவதும் பார்வைக்காக பார் வைக்காகக் கொண்டு செல்லப்பட் டுள்ளன. தான் யுத்த காலத்தில் செய்த அடா வடித் தனங்களையும், கொடுமைகளையும் மூடி மறைக்காமல் ஏற்றுக் கொள்ளும் புதிய மாற் றத்தை இவைஉணர்த்து கின்றன. சென்ற வாரம் ஜப்பானியப் பிரதமர் கொசக்காவா மொறி கிறோ தனது பாராளு மன்றப் பேச்சில் ஜப் பானிய யுத்த மீறல் களால் துயரடைந்தோ ரிடம் பகிரங்க மன்னிப் புக் கோரினார். மேலும் பள்ளிக்கூடங் களில் பாவனையிலுள்ள புத்தகங்களில் 731 ஆம் அணியைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''மனித இன ஆராய்ச்சி'' என்ற சொற்றொட ரையும் சேர்ப்பதற்கு அரசு முதன் முறை யாக அனுமதி வழங்கி யுள்ளது.

ஏசியாவீக், செப்ரெம்பர், 1993

வெறும் காகித விளையாட்டு

தாய்வான் நாட்டின் சர்வகலாசாலைப் பி ரவேசத் தேர்வில் நடந்த வற்றை அவதானித்த அந்த நாட்டின் பத்திரி கையொன்று சர்வகலா சாலைச் சரித்திரத்தில் நடந்த ''மிகவும் பார தூரமான அதிர்ச்சியூட் டும் சம்பவம்'' என விப ரித்துள்ளது. பிரவேசத் தேர்வில் தோற்றிய 98 உயர்தர்ள்ளி மாணவர் களுடைய கணித விடை களை அதிகாரிகள் மீளப் பெறமுடியாவண்ணம் தொலைத்து விட்டனர். மாணவர்களை மீண்டும் ஒரு தேர்வுக்குட்படுத்த விரும்பாத அவ்வதிகாரி கள் எல்லா மாணவர் களுக்கும் ஒட்டு மொத் தமாக உயர் சித்தி அதாவது'' ஏ'' என்ற புள்ளி கொடுக்கத் தீர்மா னித்தனர். வருடா வரு ட தாய்வான் நாட்டு உயர் பள்ளி மாணவர் களில் 40 வீதத்தினர் தான் சர்வகலாசாலை யில் இடம் பெறுவர். உட்புகுவதற்கு பெரும் போட்டி நிகழும். இந்த ''ஏ''கொடுக்கும் தீர்மா னம் இந்த மாணவர்களு டைய உட்புகும் வாய்ப் பை நிச்சயமாகக் கூட் டும். இதனால் அந்த நாட்டு மாணவர்களின் பெற்றோர் பலர் அதிர்ச் சியும், கோபமும் அடை வர்.

தேர்வுக் காகிதங்கள் போல அந்த நாட்டில் வேறு ஆவணங்களும் தவறத் தொடங்கினால் நடக்கும் விபரீதங்களைக் கற்பனைபண்ணிப்பாருங் கள். தாய்வான் பங்குச் சந்தை சம்பந்தமான ஆவணங்கள் தொலைந் தால் பங்குதாரர் எல் லோருக்கும் பத்திரங்கள் கொடுக்க வேண்டிவரும். இதனால் குறைந்தபெறு மதியுள்ள பத்திரத்திற் குரியவர்கள் ஆதாயம் பெறும் போது கூடுதல் பெறுமதிக் குரியவர்கள் நட்டம் அடைவார்கள். இதுபோன்று வாக்குச் சாவடியில் தொலைந்த வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை யாரு டன் சேர்ப்பது? சர்வாதி காரியொருவன் தனது வாக்குகளைக் கூட்ட சீட்டுக்களைத் தொலைக் கும் வழியைப் பார்ப் பான். இன்னுமோர் உதாரணம்: ஜப்பான் நாட்டில் அரிசி இறக்கு மதித் தடையை நீக்க வாக்களிப்பு நடைபெற் றது. இதில் கலந்து கொண்டோரின் வாக்க ளிப்புப் பாத்திரங்களைச் சபாநாயகர் தவறவிட் டால் தீர்மானம் என்ன வாகும்? இதனால் குழப் பம் தான் வரும். தாய் வான் நாட்டுச் சர்வகலா சாலையில் முன்மாதிரி யும் இதைத் தான் செய்யும்.

ஏசியாவீக், செப்ரெம்பர், 1 1993.

சீன - அமெரிக்க நட்பில் விரிசல்

ஒரு காலத்தில் தென் சீனக் கடலில் இரு நாடுகளின் கடற் படைகளும் கூட்டாக ஒத்திகை பார்த்துள்ளன. இருவரும் பொது எதிரி ருஷ்யாவினால் ஒன்றாகிய வர்கள். இப்போது இரு நாட்டுக் கடற்படைகளும் இன்னுமொரு விதமான ஒத்திகை பார்க்கின்றன. இச்சமயம் கோபங் கொண்ட சீனா, அமெரிக்காவை மறைந்த சோவியத் ருஷ்யாவுக்கு அடுத்த ஏகாதிபத்தியம் என்று திட்டியுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான முறிவுக்குக் காரணம் யின்ஹோ என்ற சீனக் கப்பல் என்று சொல்லலாம். இதில் இரசாயன யுத்தப் பொருட்களை எடுத்துச் செல்வதாகச் சந்தேகப்படும் அமெரிக்கா, அவை ஈரானுக்குப் போகாமல் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் இக்கப்பல் ஹோர் முஸ் ஜலசந்தியின் துறையில் மூன்று வாரமாக நங்கூரம் பாய்ச்சியுள்ளது. அமெரிக்க யுத்தக் கப்பல்கள் அதைக் கண்காணிக்கின்றன. அமெரிக்க உளவு விமானங்கள் பறந்தபடி இருக்கின்றன. சீனா திட்டிக்கொண்டிருக்கும் இவ் வேளையில் சீனா தங்கு தடையின்றி நடத்தும் ஆயுத ஏற்றுமதியைத் தடுக்கும்படி அமெரிக்க நிர்வாகத்தின் மீது அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ஆகையால் மேற்சொன்ன சீனக் கப்பல் புதிய பனிப்போரின் சின்னமாவதோடு சீனாபோன்ற மூன்றாம் உலக நாடுகள் நடத்தும் ஆயுத விற்பனையால் அமெரிக்காவுக்கு வரும் பிரச்சினையையும் வெளிப்படுத்துகின்றது.

ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி யளவில் இந்தக் கப்பல் விஷயம் முதன் முறையாக வெளி உலகிற்கு எட்டியது. தங்கள் கப்பற் போக்கு வரத்திற்கு அமெரிக்கா தொல்லை கொடுப்பதாகச் சீன அறிக்கையுடன் இது வெளியாகியது. அமெரிக்கா இக்கப்பல் தடை செய்யப்பட்ட இரசாயனப் பொருட்களைக் கொண்டு செல்கின்றது என்ற தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வரமறுத்தது. ஜூலை மாதமளவில் அமெரிக்க உளவுத் துறையினர் இக்கப்பலில் ஏற்றப் படும் பொருட்களை அவதானித்து தமது நிர்வாகத்தை உசார்ப்படுத்தியுள்ளனர். நரம்புத்தளர்ச்சியும். உடல் நெகிழ்வும், மனக்கலக்கமும், இறுதியில் மரணமும் தரவல்ல நச்சு வாயு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் இக்கப்பலில் உண்டு என்று அமெரிக்கா சாதித்தது. ''எத்தனை பீப்பாக்களில் இவை அடைக்கப் பட்டுள்ளன, கப்பலில் எந்தப் பக்கத்தில் இவை அடுக்கப்பட்டுள்ளன என்பதெல்லாம் எமக்கு ஆதாரபூர்வமாகத் தெரியும்'' என்று ஓர் அதிகாரி தெரிவித்தார்.

பின்பு கீழ் இறங்கி வந்த சீனா அமெரிக்காவின் குற்றச்சாட்டை விசாரிக்க ஒத்துக் கொண்டது தாங்கள்இதன் பிரகாரம் விசாரித்ததாகவும் கப்பலில் இருக்கும் பொருட்கள், காகிதாதிகளும், சில இரும்பு வகைகளுமேயன்றி இரசாயனவகைகள் ஒன்றும் இடையாதென்றும் சீனா அமெரிக்காவுக்கு விளக்கம் கொடுத்தது. இதை ஏற்க மறுத்த அமெரிக்கா சீனா மூன்றாம் நாட்டவர் முன்னிலையில் கப்பலில் உள்ளவற்றைச் சோதனை செய்ய ஒத்துக்கொண்டதாகத் தெரிவித்ததது. இந்த மூன்றாம் நாட்டவர் ஈரானியர் ஆக இருக்கக்கூடாதென்றும் அமெரிக்கா மேலும் தெரிவித்தது.

இப்போது கப்பல் மத்திய கிழக்கை நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டது. அது ஈரான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சீனக் கப்பலொன்று ஈரான் நாட்டுக்கு எடுத்துச்சென்ற பொருட்கள் பற்றிய சந்தேகம் இரு நாடுகளுக்கிடையிலுள்ள அண்மைக்கால விரிசலை எடுத்துக்காட்டுகிறது. இந்தக்கப்பல் தடைசெய்யப்பட்ட இரசாயனப் பொருட்களைக் கொண்டு செல்வதாக அமெரிக்கா சீனாவைக் குற்றம் சாட்டியுள்ளது. சீனா இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது. இரு நாடுகளின் தேசிய நலன்வித்தியாசப்பட்ட அவர்களுக்கிடையில் இது போன்ற கருத்து மோதல்கள் நிகழ்கின்றன.

நாட்டுத்துறை ஆகிய பந்தர் அபாஸ் சென்றடையக்கூடாதென்பதில் அமெரிக்கா கவனமாக இருந்தது. இந்தக் கப்பலில் உள்ள அபாயகரமான பொருட்களை மனதிற் கொண்டு மத்திய கிழக்கு நாடுகள் இக்கப்பலுக்குப் புகலிடம் கொடுக்க மறுத்தன. ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஈரானுக்குச் செல்லும் பொருட்கள் இறக்குமிடமாகிய டுபாய் நாடு இந்தக் கப்பல் தனது நாட்டுக்கு வரக்கூடாதென்று பகிரங்கமாகத் தெரிவித்தது. இதன்பின்தான் சிற்றம் கொண்ட சீனா அமெரிக்காவுடன் சொற்போர் தொடுக்கச் சித்தமாகியது. டுபாய் அனுமதி மறுத்த கப்பல் இப்போது ஈரானின் பந்தர் அபாஸ் துறைமுகத்திற்கு அண்மையில் நங்கூரம் இட்டுள்ளது. இரண்டு அமெரிக்க யுத்தக்கப்பல்கள் அதைக் கண்காணிக்கின்றன. அமெரிக்க விமானங்கள் பதிவாகப் பறந்து கப்பலை எந்நேரமும் பார்வையிடுகின்றன.

முதல் மூன்றாம் நாட்டவரின் முன்னிலையில் பரிசோதனைக்கு ஒத்துக் கொண்ட சீனா பின்பு கப்பலைக் கடலில் செல்ல அனுமதித்த செயல் அமெரிக்கர்களுக்கு ஒரு புதிராக உள்ளது. பரிசோதனைக்கு ஒத்துக்கொண்டமை ஒரு வேளை அமெரிக்க உளவுத்துறையின் தகவல் பிழையாக இருக்குமோவென்று அமெரிக்கா ஐயம் கொண்டாலும் சீனா உண்மை பேசவில்லையென்று பெரும்பான்மையான அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர். சோதனைக்கு மத்திய கிழக்கு நாடுகளொன்றும் ஒத்துழைக்க மாட்டாதென்று சீனாவுக்குத் தெரியும். அதனால் எங்களை மட்டந் தட்டும் நோக்குடன் அவர்கள் அறிக்கைகள் விடுகிறார்கள் என்பது அமெரிக்காவின் அபிப்பிராயம். சீனத் தலைமைப் பீடத்திற்குக் கப்பலில் ஏற்றிச் செல்லப்படும் பொருட்களின் விபரம் தெரியாமல் இருக்கலாம். அதனால் தான் அவர்கள் இவ்வளவு கடும்போக்கு எடுக்கிறார்கள் என்றும் சில அமெரிக்க நிர்வாக அதிகாரிகள் எண்ணுகின்றனர்.

பந்தர் அபாஸ்துறைமுகத்திற்குள் நுழையாமல் கடலில் நங்கூரமிட்டிருக்கும் செயல் அமெரிக்காவுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றது. அவர்கள் ஈரானின் துறைமுகத்திற்குள் செல்வதற்கு ஒரு தடையும் இல்லை. ஓர் அமெரிக்க அதிகாரி ஒத்துக் கொண்டது போல அந்தக் கப்பலைத் தடைசெய்ய அமெரிக்காவுக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. பாகிஸ்தானிற்கு ஏவுகணை விற்று அமெரிக்காவுடன் சீனா மோதிக் கொண்டது போல இம்முறையும் அது அமெரிக்காவுடன் மோதத் தயாராயில்லை என்பது தான் அமெரிக்கர்களின் கணிப்பு.



விழ்ச்சியுறும் சீனாவின் ஆயுத விற்பனை
(யூ. எஸ். டாலர் மில்லியனின் விபரம்)

இந்தச் சீனக் கப்பல் விவகாரம் ஆயுதக் கட்டுப்பாட்டை அமுல் செய்வதில் கிளின்ரன் நிர்வாகம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கோர் உதாரணமாகும். ஆயுதக் கட்டுப்பாடு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் பிரதான இடம் வகிக்கின்றது. இரசாயன ஆயுதங்கள் அல்லது அவை செய்ய உபயோகப்படுத்தும் மூலப் பொருட்களை விநியோகிப்பது சட்டத்திற்கு மாறான செயல். இரசாயன ஆயுதம், இரசாயனப் பண்டங்கள் சம்பந்தமான மாநாட்டின் தீர்மானம் இதுவாகும். இத் தீர்மானத்தில் சீனாவும் ஒப்பமிட்ட ஒரு நாடாகும். ஆனால் இந்தத் தீர்மானம் இன்னும் சகல ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, அமெரிக்கா உட்பட, ஒப்புதல் பெறவில்லை. மேலும் இந்தத் தீர்மானத்தை முறைப்படி அமுல் செய்ய ஒழுங்குகள் ஒன்றும் செய்யப்படவில்லை. ஐ. நா. ஒழுங்குகள் செய்ய உத்தேசித்துள்ளது. ஆனால் அது நடைமுறைக்கு வர 1995 ஆம் ஆண்டு வரை செல்லும். அதுவரை தடையை அமுல் செய்யும் பெரும் பொறுப்பு அமெரிக்காவினுடையதாகும்.

இந்தக் கப்பல் விவகாரம் நல்லபடியாக முடிவுற்றாலும் ஆயுதங்கள் சம்பந்தமான சீன–அமெரிக்க முரண்பாடுகள் வளர இடமுண்டு. தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை மாத்திரமல்ல பெருமளவில் ஏவுகணைகளையும், அணு ஆயுத உற்பத்தித் தொழில் நுட்பத்தையும் சீனா ஏற்றுமதி செய்ய முன்வருவது அமெரிக்க நிர்வாகத்திற்கு கவலையளித்துள்ளது. அதுவும் பயங்கரவாதத்தை வளர்க்கும் நாடுகளுக்கு இவை போய்ச் சேர்வதை அமெரிக்கா அறவே விரும்பவில்லை. சீனாவைப் பொறுத்தளவில் இது போன்ற விற்பனைகள் அவர்களுக்கு அத்தியாவியமானதொன்று. மூன்றாம் மண்டல நாடுகளும், மத்திய கிழக்கு நாடுகளும் சீனா தனது ஆயுதங்களுக்குகந்த சந்தையெல எண்ணுகின்றன. என்றாலும் சீனாவின் ஆயுத விற்பனை அண்மைக் காலத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது. 1992 ஆம் ஆண்டில் மூன்றாம் உலக நாடுகளுக்கும், மத்திய

கிழக்கு நாடுகளுக்கும் 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மாத்திரம் விற்பனையாகியுள்ளன. ஆனால் 1987 ஆம் ஆண்டில் இந்த நாடுகளுக்கு ஆயுதம் விற்பதால் சீனா, 4.7 மில்லியன் அமெரிக்க டொலரைப்பெற்றுள்ளது. சில வருடங்களுக்கு முன்பாக ஆயுத விற்பனையில் உலகில் ஐந்தாவது இடத்தை வைத்திருந்தது சீனா. சென்ற வருடம் பத்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க நிர்வாகத்தின் பாதுகாப்புக் குழுவின் ஆலோசகரும், பாதுகாப்பு விஷயங்களின் ஆய்வாளருமாகிய றிச்சாட் கிறிமெற் இதற்கு விளக்கம் தருகிறார்: ''வளைகுடா யுத்தத்தின் பின் தனது மத்திய கிழக்கு வாடிக்கையாளர்களைச் சீனா இழந்துள்ளது. ஈராக் ஆயுதம் வாங்குவதை நிறுத்திவிட்டது. ஈரான் ருஷ்யாவிடம் வாங்குவதையேவிரும்புகிறது''என.ஈரான்-ஈராக் யுத்தத்தின் பின் ருஷ்யாவின் வியாபாரத்தில் வியக்கத்தகு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டில் பூஜ்யமாக இருந்த விற்பனை 1992 இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலராக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தக் கால கட்டத்தில் சீனாவின் வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. 1989 இல் 3.6 பில்லியன் டொலருக்கு நடந்த விற்பனை 1992 இல் 1.1 பில்லியனாக வீழ்ந்துள்ளது. சீனாவினால் கொடுக்க முடியாத வெகு முன்னேற்றகரமான சண்டை விமானங்களையும், கவச வாகனங்களையும், யுத்தக் கப்பல்களையும் ருஷ்யா கொடுத்ததால் இது நிகழ்ந்தது என்கிறார் கிறிமெற்.

அநேகமாகச் சீனாவுக்கு ஏவுகணை வியாபாரந்தான் இப்போது கைகொடுக்கின்றது. இங்கேதான் பிரச்சினை ஆரம்பம் என்கிறார் கிறிமெற். ஆயுத விற்பனைக் கட்டுப்பாடு பற்றி யார் பேசினாலும் சீனாவுக்குக் கோபம் வரும். வியாபாரம் குறைந்த காலத்தில் கட்டுப்பாடு உருவத்தில் இன்னும் வீழ்ச்சியா? அண்மையில் ஏவுகணைத் தொழில் நுட்பக் கட்டுப்பாட்டை மீறியதற்காகச் சீனா கண்டனத்துக்குள்ளாகியது. சீனா பாகிஸ்தானுக்குத் தரையிலிருந்து தரைக்குப் பாயும் 40, எம் 11 (M 11) ரக ஏவுகணைகளை விற்றுள்ளது இந்த ஏவுகணைகளில் அணு ஆயுதம் பொருத்தலாம். அண்மையில் அமெரிக்க நிர்வாகப் பாதுகாப்பு ஆராய்ச்சிக் குழு, பாகிஸ்தான் என்று பெயர் குறிப்பிடாமல் சீனா ஓர் ஆசிய நாட்டிற்கு இந்த ரக ஏவுகணைகளை விற்றதாகக் குறிப்பிடுகின்றது. இது 1989-92 இன் காலகட்டத்தில் நடந்ததாகவும் அந்தக் குறிப்புச் சொல்லுகிறது. கிறிமெற்றிடம் அது எந்த ஆசிய நாடு என்றுவினவியபோது; ''பாகிஸ்தான் உள்ளிட்ட எல்லா ஆசிய நாடுகளும்'' என்று பதில் கூறினார். இந்த ரக ஏவுகணையைப் பாகிஸ்தானை விட வேறு ஓர் ஆசிய நாடும் வாங்கவில்லை என்பது நிதர்சனம்.

இப்படியான அல்லைப்பிட்டி தகவல்கள், அமெரிக்காவிடமிருந்து சீனாவாங்கிருந்த உயர்ரகக் கணனி விற்பனையைத் தாமதமாக்கியுள்ளது. ஏவுகணைத் தொழில் நுட்பக் கட்டுப்பாட்டை மீறியதற்கான ஆதாரங்கள் மேலும் வந்தவுடன் அமெரிக்கா சீனா மீது தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதிக்கும் வாய்ப்புண்டு. இந்த விதிகள் அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாட்டு ஏற்றுமதிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆயுத விற்பனையிலும், இராணுவத் தளபாட ஏற்றுமதியிலும் சீனா வீழ்ச்சியடைந்தாலும், ஏவுகணைப் பாகங்களையும், அணு ஆயுதத் தொழில் நுட்பத்தையும் ஈரானுக்குத் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டேயிருக்கின்றது. இதற்குப் பிரதியுபகாரமாகச் சீனா ஈரானின் எண்ணெயை எதிர்பார்க்கின்றது. இந்தத் தசாப்த முடிவில் நாளொன்றுக்கு 600,000 இல் இருந்து 1 பில்லியன் பீப்பா வரை மத்திய கிழக்கிலிருந்து சீனா தனது தேவைக்கு இறக்குமதி செய்யவேண்டுமென ஆய்வாளர்கள் கணக்கிடுகின்றனர். சீனாவுக்கு இது நன்கு தெரியும். ஈரான், சீனா பக்கமென்றால் தடையில்லாமல்எண்ணெய் இறக்குமதியாகுமென்றும் அவர்களுக்குத் தெரியும்.

கிழக்காசியாவுக்கும், பசுபிக் பிராந்தியத்திற்கும் முன்பு பொறுப்பாகவிருந்த அரச உப-செயலாளர் றிச்சாட் சொலமன் சீனா ஈரானுடன் நெருங்கி வருவது ஒரு வித யுத்த தந்திரமே என்கிறார் வளைகுடா யுத்தத்தின் பின் ஈராவின் ஆதிக்கத்தை உயர்த்த உதவுவதால் தனக்குப் பெரு நன்மைகள் விளையுமெனச் சீனா கணக்குப் போட்டுள்ளது. மத்திய கிழக்கில் ஈராவின் வல்லாதிக்கம் மேலெழும்ப அமெரிக்கா கிழக்காசியாவிலிருந்து தனது படைகளை மத்திய கிழக்கு நோக்கி மாற்றவேண்டும். இதன் பின் கிழக்காசியா சீனாவின் கட்டுப்பாட்டில் என்றெல்லாம் இந்தக் கணக்கில் போய்க்கொண்டிருக்கின்றது என்கிறார் சொலமன்.

மத்திய ஆசியப் பக்கமாக இருக்கும் சீனாவின் சின்ஜியாங் மாகாணம் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் இடமாகும். இவர்கள் துருக்கியப் பழங்குடிகள் ஆவார்கள் இவர்கள் மத்தியில் தனிநாட்டுக் கோரிக்கையொன்று வளர்ச்சி பெறுகின்றது. மூன்று வருடங்களுக்கு முன்பாக இவர்களுடைய கிளர்ச்சியைச் சீனா அடக்கியுள்ளது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் தாயகமான ஈராவின் நற் கருணையைத் தன் பக்கம் வைத்திருப்பது சீனாவின் எதிர்காலத்திற்கு நல்லது. இந்த விதத்தில் ஈராவின் நல்லெண்ணம் சீனாவின் ஒருமைப் பாட்டிற்கு ஒரு காப்புறுதியாகும்.

ஏசியாவீக், ஒகஸ்ட் 26, 1993

ஜகார்த்தாவின் இளவேனிலின் முதல் மொட்டுக்கள்

இந்த ஆண்டின் முற்பகுதியில் தேசியப் பேரவையைத் தொடக்கி வைத்து உரையாற்றிய ஜனாதிபதி சுகார்ட்டோ, இந்தோனேசியா மீது தான் இதுகாறும் அழுத்தியிருந்த ''இரும்புப் பிடியை''த் தளர்த்துவ தாகச் சாடை காட்டினார். இன்று எல்லா இடங்களிலும் மாற்றத்தின் அறிகுறி தென்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களிலும் ஜகார்த் தாவின் புதினத்தாள்கள் எதிர்க் கட்சிகள் மீதான தடைகள் நீக்கப் படவேண்டும் என்றும், அரசியல் யாப்பு ரீதியில் இராணுவத்துக்கு வழங்க வேண்டுமென்றும் கோரிக் கைகளை முன்வைக்கத் தொடங்கி விட்டன. மனு 50 என்ற பெயர் கொண்ட தடை செய்யப்பட்ட மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர்கள் மெதுவாகப் பொதுவாழ்வில் இயங்க விடப்பட் டுள்ளனர். அவர்களுள் நால்வர் இந்த மாதம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். திணிக்கப் பட்ட அமைதி முன்னரும் உடைக் கப்பட்டிருப்பினும் 25 ஆண்டு களுக்கு முன்னர் சுகார்ட்டோ ஆட்சிக்கு வந்தபின்னர் அரசியல் இளவேனிலுக்கு அண்மையில் ஜகார்த்தா வந்துள்ளமை இதுவே முதற்றடவையாகும்.

இப்போது இந்த மாற்றம் பற்றிச் சிந்திக்கும் கட்டாயம் சுகார்ட்டோவுக்கு ஏற்பட்டதற்கான காரணம் புரியவில்லை. ஐந்து மாதங்களுக்கு முன்னர் தான் மேலும் ஐந்து ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் உரிமை எதிர்ப்பு இல் லாமலே அவருக்கு வழங்கப்பட் டது. அப்படியிருந்தும் 72 வயதின ரான இந்த அரசியற்பலம் வாய்ந்த மனிதர் புதிய நண்பர்களை உப யோகிக்கக் கூடியதாகவே இருந் தது. தென் கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இராணுவச் செல்வாக்குச் சரிந்து வருவது சதிமுயற்சி மூலந் தோன்றி இரா ணுவ அதிகாரிகளின் ஆதிக்கத்தி லியங்கும் இந்தோனேசியாவை ஆசியாவில் தனிமைப் படுத்துவதா யுள்ளது. வெகுவிரைவாக நவீன மயப்படுத்தப்பட்டு வரும் பொரு ளாதாரத்துக்கும், நடைமுறையி லிருக்கும் அரசியல் முறைக்கும் முரண்பாடுகள் உள்ளன என்பதை சுகார்ட்டோவே அங்கீகரித்துள்ளார். ஜகார்த்தாவின் மனித உரிமைப் பதிவுகள் அனைத்துலகத் தொடர் அழுத்தங்களுக்குள்ளாகி வந்திருக் கிறது. வெகு சமீபத்தில் எவ்-5 ஜெட் விமான விற்பனையை அமெரிக்கா நிறுத்தியுள்ளதோடு இந்தோனேசியாவுக்கெதிராக பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப் போவதாகவும் எச்சரித்துள்ளது.

இந்தோனேஷியா: தனது தளபதிகளிடமிருந்து சுஹார்ட்டோ அப்புறப்படுகிறார்

உள்நாட்டில் 1991 ஆம் ஆண் டின் கிழக்கு திமோர் மனித உரிமைகளுக்கான ஆர்ப்பாட்டங் களை இரத்தக் கறையோடு அடக்கியபின் சுகார்ட்டோ இராணு வத்தின் மீது ஆட்சி செலுத்த முனைந்தார். அரசியல் யாப்பின் படி அரசியல் படையப் பங்கினை யாற்றும் ''இரட்டைப் பொறுப்பு'' இராணுவத்துக்கு உண்டு. 500 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 100 ஆசனங் கள் அதற்கு உறுதி செய்யப்பட் டுள்ளன. உள்ளூர், உயர் அரசியல் உத்தியோகத்தர் அதிகாரிகளேயா வர். காலவித்துவச் சட்டங்களை மையமாகக் கொண்டு டச்சு மொழி யிலே எழுதப்பட்ட தனது நலனுக் குகந்த குழப்பம் நிறைந்த சட்ட முறைமையைப் பல்லாண்டுகாலமாக இராணுவம் தனக்கேற்றாற்போல் கையாண்டு வந்திருக்கிறது. இவ் வாறான தவறான உபயோகங் களைத் தடுத்து நிறுத்தும் வகை யில், இப்போது பாராளுமன்றம் முதலாவது சீரான இந்தோனேசிய சட்டத் தொகுப்பு ஒன்றை யாத்து வருகிறது. ஆட்சியிலுள்ள கொல்கார கட்சியின் அதிகாரிகள் அன்றாட அரசியலிலிருந்து இராணு வத்தை அகற்றிவிடப் போவதாகச் சூளுரைத்துள்ளனர். ஆனால் ஏற்பட்டுள்ள மாற்றமோ மிகச் சிறிது. டிறைசுட்றிஸ்னோ என்ற புதிய உப-ஜனாதிபதி யும், ஆட்சித்தலைவரும் இராணுவத்தினரேயாவர்.

சென்ற ஜூலையில் சுகார்ட்டோ ஆட்சியாளர் மாற்றுக் கருத்துடை யோரைச் சந்தித்தனர். அப்போது உயர் அதிகாரிகள், இளைப்பாறிய இராணுவத் தளபதிகளையும், அரசியலாளர்களையும் உறுப்பின ராகக் கொண்ட மனு 50 இன் தலைவர் அலி சதிச்சினைக் கண்டு உரையாடினர். இரண்டு வாரங் களுக்கு முன்னர் இளைப்பாறிய இராணுவத் தளபதி அப்துல் ஹரிஸ் நசுசனை, சுகார்ட்டோ

அழைத்துப் பேசினார். நசூசன் படைய அதிகாரியாக இருந்து பின்னர் மாற்றுக் கருத்துடையவராக மாறியவர். இராணுவத்தின் ''இரட்டைப் பங்களிப்பை''க் கண்டனம் செய்தார் என்ற காரணத்திற்காக 1973 இல் இவர் வேண்டத் தகாதவர் பட்டியலில் இடம் பெற்றவர். அவர் மீளவும் தலையெடுத்திருப்பது இராணுவத்திற்கு நேரடிச் சவாலாகும். சுகாட்டோ ''சனநாயக மயப்படுத்தவும், மனித உரிமைகள் சட்டம், ஒழுங்கு என்பனவற்றை நிலைப்படுத்தவும், தனக்குள்ள ஆவலை மறுசீரமைப்பாக்கவும் முயலுகிறார்'' என்று மனித உரிமைகள் சட்டத்தரணியான அட்நான் பையுங் நசூசன் கூறியுள்ளார்.

விசாரணையில் :

அரசியல் வெளிப்பாடுகள் எப்போதுமே அரைமட்டத்தில் தான் வருவதுண்டு. ஏறத்தாழ 500 அரசியல்வாதிகள் இன்னமும் கிறைக் கூடங்களிலே வாடுகிறார்கள். சுகாட்டோவின் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட வர்த்தக உரிமைகள் பற்றிய பொதுக் கருத்தரங்குகள் தடை செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களுக்கு மேலும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற அறிவுஜீவிகளின் கோரிக்கை ஒருபுறமிருக்க, விவசாயிகளை ஒடுக்கும் சுகாட்டோவின் கேலிச் சித்திரம் வரைந்து விநியோகித்த மாணவர்கள் பலர் ஜாவாவில் சிறையிலடைப்பட்டுள்ளனர். சுதந்திரமான தொழிற்சங்க அமைப்புக்களுக்கான கோரிக்கையை ஆட்சியாளர்கள் நிராகரித்துள்ளனர். படையத்தினரால் கொல்லப்பட்டார் என மாற்றுக் கருத்தினர் குற்றஞ் சாட்டும் ஒரு தொழிற் சங்கவாதியின் ஞாபகார்த்தமாகச் சென்றவாரம் நடத்தப்படவிருந்த ஒவியக் கண்காட்சியைத் தடை செய்துவிட்டது அரசு. பதிவுகள் ''அடியிலிருந்து மாற்றங்கள் வருவதைக்காட்டுகின்றன. ஆட்சி முறையின் எல்லைகளைச் சோதிக்கும் விதத்தில் குடி மக்களின்

சதிச்சின்: மாற்றுக்கருத்துடையோர் வேண்டத்தகாதோர் பட்டியலிலிருந்து பொதுமக்களின் பார்வைக்கு வருகிறார்கள்.

அமைப்புக்கள் திரண்டெழுகின்றன. சுகாட்டோ முதியவராகி விட்டார். தாக்குத்துக்குள்ளாகக் கூடியவர் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் சுகாட்டோ விட்டுக் கொடுப்பார் என்று நான் நம்பவில்லை'' என்கிறார் ஏசியா வொச்சின் நிர்வாக இயக்குனரான சிட்னி ஜோன்ஸ்.

இவ்வாறிருந்தும், சுகாட்டோ இன, மத மாற்றுக் கருத்துக்கள் தொடர்பாக மென்மைப் போக்கைக் கையாண்டு வருகிறார். இன, மத பேதங்கள் அந்த நாட்டின் உணர்வு பூர்வமான விடயங்களாகும். 25 மொழிகளும், 5 பெரிய மதப் பிரிவுகளும் இந்தோனேசியாவில் உள்ளன. ஒரு யூகோஸ்லாவியாவாகும் சாத்தியப்பாடுள்ள நாடு அது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிழக்கு திமோரின் எதிர்க்கட்சித் தலைவரான ஜொசேகுஸ்மாவோவுக்கு விதிக்கப் பட்டிருந்த ஆயுட்தண்டனையைச் சுகாட்டோ 20 ஆண்டுகளாகக் குறைத்து விட்டார். இஸ்லாமிய அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையோடு முஸ்லிம் மதத்தலைவரான அண்டி மப்பெட்டவறாவ் பத்வா அரசியல் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இது கொல்சார் கட்சியின் பிரிவின்மைக் கொள்கைக்கு ஒரு சவாலாகும். மூன்று மூத்த தளபதிகள் புடைசூழ்ந்து நிற்க, பத்வா உலகளாவிய முஸ்லிம்கள் சனநாயகம் வேண்டி நிற்கிறார்கள் என அறிவித்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன் இதே வசனம் பத்வாவை மீண்டும் சிறைக்குள் தள்ளியிருக்கும். ஜகார்த்தாவின் இளவேனில் மெதுவாக வருவதாயினும் சனநாயகத்துக்காகப் பேசும் பரவலான உரிமை வரப் போகும் மாற்றங்களுக்கான அறிகுறியாகக் கொள்ளப்படலாம்.

ஜகார்த்தாவில் மசிபோட் உடன் ரோனி எம்பசன்

நியூஸ்வீக், செப்டம்பர் 6, 1993.

சிரியா - அமைதிக்குத் தயாராகின்றது

இஸ்லாமிய அடிப்படை வாதிகள் தலைதூக்கியுள்ளனர். ஜனாதிபதி ஹபேஸ் அசாத் மாறிவரும் உலக நிலைக்கு முகம் கொடுக்கிறார்.

1967ஆம் ஆண்டு இஸ்ரேலியத் துருப்புக்கள் சிரியாவின் இராணுவத்தை விரட்டிவிட்டு கோலான் மலைத் தொடரைக் கைப்பற்றிய போது ஜமால் சலேம் பதினெட்டு வயதுடையவராக இருந்தார். அச் சமயத்தில் அவருடைய குடும்பத்தினரும், இன்னும் பலரும் கோலானிலிருந்து துரத்தப்பட்டுள்ளனர். இப்போது ஜமாலுக்கு வயது 44. அவர் ஒரு பள்ளி ஆசிரியர். தனது மொழியில் அவர் ஒரு புலவருமாவார். இஸ்ரேலும், சிரியாவும் பேச்சுக்கள் ஆரம்பித்து இருபத்தியொரு மாதங்கள் ஆகின்றன. தான் பிறந்த இடத்திற்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கை ஜமால் மனதில் துளிர்விடத் தொடங்கியுள்ளது. ''நான் ஜெருசலேம், ஜபா, கைபா போன்ற நகரங்களைப் பார்க்க விரும்புகிறேன். ஜோர்மனியும், இங்லொந்தும் நண்பர்களாக வில்லையா? இரு நாட்டவர்களும் ஒருவர் நாட்டை ஒருவர் என்ன சுதந்திரமாகப் பார்வையிடுகிறார்கள்'' என்றெல்லாம் ஜமால் சலேம் அங்கலாய்க்கிறார்.

ஒரு சில காலத்திற்கு முன் இப்படியான வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட ஆசைகள் அவரை இரகசியப் பொலிஸாரின் கைதியாக்கி இருக்கும். இப்போது இது போன்ற அபிப்பிராயங்கள் தண்டிக்கப்படுவதில்லை. சிரியா ஒரு காலத்தில் மிகவும் கடும் போக்குள்ள அரேபிய நாடுகளில் ஒன்றாகும். தற்சமயம் இது மாறிவிட்டது. சிரிய இஸ்ரேலியப் பேச்சுக்கள் பத்துச் சுற்றுக்கு மேல் நடந்தேறிவிட்டன. ஒரு நன்மையும் விளையாவிட்டாலும் ஜமால் போன்றோர் மனத்தில் நம்பிக்கை வேர்விடத் தொடங்கியுள்ளது வெளிப்படை. இஸ்ரேலில் கோலான் மலைத் தொடரிலிருந்து முற்றாக வெளியேற வேண்டுமென்பது சிரியாவின் நிலைப்பாடு. இத்துடன் மேற்குக் கரையிலும், காசாவிலும் குடியிருக்கும் பாலஸ்தீனியர்களின் உரிமைகள் மீட்கப்பட வேண்டுமென்பதும் சிரியாவின் இன்னுமொரு கோரிக்கை. மேலும் ''முழுச் சமாதானம்'' என்ற சொற்றொடருக்கு என்ன விளக்கம் கொடுப்பது என்பதில் இரு நாடுகளுக்கும் இடையே பெருத்த இழுபறி. தென் லெபனானில் இருக்கும் இஸ்ரேலியப் படைகளுக்கெதிராக கிஸ்பல்லா கெரில்லாக்கள் போராடுகிறார்கள். இவர்களுக்குத் தனது ஆதரவைச் சிரியா தெரிவித்துள்ளது. இதனால் இரு நாடுகளுக்கிடையில் முறுகல் நிலை தோன்றியது. ஆனால் சிரியாவும், இஸ்ரேலும் பேச்சுக்களை முறித்துக் கொள்ளவில்லை. இது வரவேற்கக்கூடிய அம்சம் என்று மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களுக்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரி டெனிஸ் றொஸ் தெரிவித்துள்ளார்.

கடும் போக்காளரான அசாத் இப்படி மனம் மாறுவதற்குப் பல காரணிகள் உள்ளன. இவர் மத்திய கிழக்கில் பன்னெடுங் காலமாகப் பதவியில் நிலைத்திருப்பதற்கு இவரின் அரசியல் உண்மைகளை விளங்கிக் கொள்ளும் தன்மையும்; கால, தேச, வர்த்தமானங்களுக் கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும் பண்பும் தான் காரணம்.

புதிய பொருளாதார அபிவிருத்தி தரமான உள்நாட்டுத் தயாரிப்புக்களையும், சிறான போக்குவரத்துச் சாதனங்களையும், அதிக அளவில் உணவு வகைகளையும், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்களையும் கழிவுப்பொருட்களை அகற்றும் சூழாய்களையும் பெற்றுக்கொடுத்துள்ளது.

ரஷ்யாவின் வீழ்ச்சி இவருடைய சிந்தனையை மாற்றியுள்ளது எனலாம். சிரியாவின் பிரதான ஆயுத விற்பனையாளர் ரஷ்யா தான். ரஷ்யாவின் ஆதரவு தனக்கு என்றும் உண்டு என இவர் மலை போல் நம்பி இருந்தார். ஆனால் 1991ஆம் ஆண்டு நடந்தேறிய வளைகுடா யுத்தத்தின் பின் நடந்ததோ வேறு. இன்று மத்திய கிழக்கில் பெரும் சக்தி அமெரிக்கா என்பது உண்மை. இத்து

டன் இஸ்லாமிய அடிப்படைவாதமும் சிரியாவுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியுள்ளது.

என்றாலும் ''தேசியப் பாதுகாப்புக்கும் பொது நலனுக்கும்'' பங்கம் விளைவிக்கும் எவரும் கைதாகிக்காலவரையின்றிஅடைக்கப்படுவர். இது சிரியாவின் நிலைபரம். ஆனால் வளைகுடா யுத்தத்தின் பின் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிர்ப்பந்தத்தால் 6,000 அரசியற் கைதிகள் சிரியாவில் விடுதலை ஆகியுள்ளனர். சென்றமாதம் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் மறியலில் இருந்த உயர்மட்ட அரசியல் எதிரிகள் அசாத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் விடுத்து இஸ்ரேலுடன் சமாதானம் பற்றிப் பேசத் தொடங்கியுள்ளன. இதை ஓர் உயர் இராணுவ அதிகாரி இப்படிச் சொல்கிறார்: ''எமக்கு உதவ ருஷ்யா இல்லாத போது போரைப் பற்றிய சிந்தனையை விடவேண்டியுள்ளது''.

இதுகாறும் பொது எதிரிகளாக அமெரிக்காவும், இஸ்ரேலும் சிரிய மக்களுக்குப்போதிக்கப்பட்டு வந்தது சரித்திர உண்மை. சடுதியில் இவர்கள் உறவு நாட்டுக்கு நல்லது என்று சொன்னால் மக்கள் நம்புவார்களா? சிரியாவை நெடுங்காலமாக அவதானித்து வந்த சேர்கி மெத்வெத்கோ என்ற ருஷ்யர் பின்வருமாறு சொல்கிறார்: ''மக்களைவிட அரசியல்வாதிகள் இந்த நாட்டில் முற்போக்காக இருக்கிறார்கள். தலைமைப்பீடம் சமாதானத்தில் மனம் வைத்துள்ளது. இதை அவர்கள் மக்களுக்கு மெதுவாகத்தான் தெரிவிப்பார்கள். சிரியா ரைம்ஸ் என்ற பத்திரிகையின் ஆசிரியர் வாலித் ஷௌகேட சொல்வதைக் கவனியுங்கள்: ''எமக்கு அண்மையிலுள்ள எதிர்காலத்தில் இஸ்ரேலிய தூதுவராலயம் டமாஸ்கஸ் மாநகரில் திறக்கப்படுமென்று நான் நினைக்கவில்லை.'' மேலும் அவரின் கூற்று என்னவென்றால், ''இந்தத் தலைமுறை அந்த நிகழ்வை ஏற்கவே மாட்டாது. சிலவேளை எங்கள் பேரப்பிள்ளைகள் அதை ஏற்கலாம்'' என்பதே.

டமாஸ்கஸ் மாநகரில் அசாத்தின் இராட்சத சுவர்ச் சித்திரம். ''சியோனிசச் சூழ்ச்சி'' என்ற பேச்சுக்கு இனி இடமில்லை.

நால்வர் முன்னாள் அமைச்சர்கள். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் சிறையில் இருக்கின்றனர். முதன்முறையாக சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் சிரியாவில் நடக்கும் அரசியற் கைதிகள் சம்பந்தமான வழக்குகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்று பிறநாட்டவர்களுடன் பேசுவதற்கு சிரியப் பொது மக்கள் தயக்கம் காட்டுவதில்லை. சில அரசியற் கேலிகளையும் அவர்கள் உதிர்க்கிறார்கள். எல்லாவற்றிலும் பார்க்க அவர்களுடைய செய்தித்தாள்கள் ஹியோனிச வாதிகளுக்கெதிராக நெடுங்காலமாகநடத்திய பிரச்சாரத்தை

நிலைமைக் கேற்றவாறு தம்மை மாற்றிக் கொள்வதில் தமது தலைவருக்கு நிகரானவர்கள் சிரிய இளைய தலைமுறையினர். சிரியா, ருஷ்யாவுக்கு ஆயுதக் கொள்வனவு செய்த கடன் 15 மில்லியன் டொலரைக் கொடுக்க முடியாது தவித்த போது இளைய தலைமுறையினர் மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ள விரும்பினார்கள். சிரியா, ஈரான் நட்பும் கசக்கத்தொடங்கியுள்ளது. இலவசமாகக் கொடுத்துதவிய எண்ணெயை ஈரான் நிறுத்திக் கொண்டதே இதன் காரணம். இதை ஈடு செய்ய நிலத்தடியிலிருந்து சிரியா பெருந்தொகையான மசகு எண்ணெயை வெளியே கொண்டுவந்துள்ளது. வளைகுடா யுத்தத்தில் ஈராக்கின் சதாம் ஹுசையினுக்கெதிரான அணியில் சேர்ந்த படியால் சிரியாவுக்குப் பெருந்தொகையான பண உதவி பிறஅரேபிய நாடுகளிடமிருந்து கிடைத்துள்ளது. இந்த யுத்தத்தில் சிரியாவின் நிலைப்பாடு மேற்குலகை மகிழ்வித்துள்ளது. ஐந்து வருட இடைவெளிக்குப் பின் இங்கிலாந்து, சிரியாவுடனான இராஜதந்திர உறவைப் புதுப்பித்துள்ளது. ''பயங்கரவாதிகளுக்கு'' உதவும் நாடுகளின் பட்டியலில் சிரியாவின் பெயர் இருந்தாலும் அமெரிக்காவின் எரிபொருள் நிபுணர்களும், ஸ்தாபனங்களும் சிரியாவுக்கு வந்து பேருதவி செய்கின்றார்கள். உணவு பதனிடுதல், வாகனங்கள் தயாரித்தல் போன்ற செயற்பாட்டிலும் இவ்வாறான அமெரிக்க உதவிகள் கிடைக்கின்றன.

இதன் பலனாக நாடு செழிப்புற்றிருக்கின்றது. மேல் மட்டத்தினருக்கு அமெரிக்க, ஐரோப்பிய ஆடம்பரப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. பெரும்பான்மையான சிரிய மக்களுக்கு இப் பொருட்களை வாங்கும் வசதி இல்லாவிட்டாலும் அவர்களுக்கும் பல நன்மை

கள் விளைகின்றன. தரமான வீட்டுப் பாவனைப் பொருட்கள், உணவு வகைகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசித் தொடர்பு என்றெல்லாம் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. குவைத் நாடு சிரியாவுக்கு நன்றிக் கடன் செலுத்தும் முகமாகப் பல இலவச சேவைகளைச் செய்து கொடுத்துள்ளது.

சிரிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களாக அவர்கள் பட்ட துயரங்களை மறக்க இவை உதவுகின்றன. சீனாவில் டெங்சியோ பிங் கடைப்பிடிக்கும் உள்நாட்டுக் கொள்கையை அசாத் பின்பற்றுவது போல் தெரிகின்றது. பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னுரிமை; அதே சமயத்தில் அரசியற் சுதந்திரம் பின்போடப்பட்டுள்ளது. நாணயமாற்று விதிகளின் இறுக்கம் தளர்த்தப்பட்டதால் உல்லாசப் பிரயாணிகளின் வருகை கூடியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் அந்நியச் செலாவணி தடிக் கொடுக்கிறார்கள். இறக்குமதி விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன. தனியார் துறை வளர்வதற்கு அனுமதி தாராளமாகக் கிடைக்கின்றது. இதனால் அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகளில் சிரியாவுக்கு நல்ல பெயர் கிடைத்துள்ளது.

சிரியத் தலைவர் அசாத் தனது இராணுவத்தைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. சிரிய இராணுவம் இஸ்ரேலுடன் நான்கு யுத்தங்களில் பங்கேற்றுள்ளது. இஸ்ரேலுடன் சமாதானம் ஏற்பட்டவுடன் இராணுவத்தினருக்குச் செலவிடப்படும் பெருந் தொகைப் பணத்தைக் குறைக்க வேண்டும். இத்துடன் இராணுவத்தினரின் தொகையையும் குறைத்தல் அவசியம். வருடமொன்றுக்கு சிரியா தனது இராணுவத்திற்கு 1.5 மில்லியன் டொலர் செலவிடுகின்றது. சிரிய இராணுவத்தில் 500,000 வீரர்கள் இருக்கிறார்கள். சமாதானத்தின் பின் பிரமாண்டமானதோர் இராணுவம் நாட்டுக்குத் தேவையில்லை.

அசாத்தின் ஆட்சிக்கு மிகப் பெரிய சவால் இஸ்லாமிய அடிப்படைவாதமென்றே சொல்ல வேண்டும். இந்த இயக்கத்தின் சவாலை சிரிய இராணுவம் 1982 ஆம் ஆண்டு எதிர்கொண்டுள்ளது. இவர்களின் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர ஹாமா [Hama] என்ற நகரில் மாத்திரம் இராணுவம் 15,000 கிளர்ச்சியாளர்களைக் கொன்றுள்ளது. இந்தக் கொடூரமான நடவடிக்கைதான் சிரியாவைக் காப்பாற்றிற்று என்கிறது சிரிய இராணுவம். அசாத் நாடு பூராவும் பல மசூதிகளைக் கட்டும்படி உத்தரவிட்டுள்ளார். முஸ்லிம் மிதவாதத்தை வளர்க்கப் பெருமுயற்சி எடுக்கின்றார். றமதான் பூட்டி என்ற இஸ்லாமிய மதப் பேராசிரியரை தொலைக்காட்சி மூலம் மிதவாதத்தைப் பரப்ப அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இவருடைய பேச்சுக்களுக்கு நாட்டில் நல்ல வரவேற்பு உண்டு.

முஸ்லிம் அடிப்படைவாதத்தை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாலும், செழிப்பான பொருளாதார வளர்ச்சியைக் காண்பதாலும் மழுங்கடிக்கலாம் என்பது அசாத்தின் கணிப்பு. இஸ்ரேலுடனான சமாதானம் இதற்குத் துணை போகும். இராணுவச் செலவைக் குறைப்பதால், அப்பணம் நாட்டு வளம் பெருக்க உதவும். சிரியாவின் பொருட்கள் மேற்கு நாட்டுச் சந்தைகளில் விலைபோகும். சிரிய வியாபாரிகள் வியாபார நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதால் தொடர்புகள் பெருகும். இவ்வாறெல்லாம் சிரிய நாட்டு வியாபாரிகள் சங்கச் செயலாளர் நாயகம் அப்துல் றஹ்மான் அத்தார் தெரிவிக்கிறார். இஸ்ரேலுடன் உடனடியாக வியாபாரத் தொடர்பு ஏற்படுமெனத் தாம் நினைக்கவில்லையென்றும் அவர் குறிப்பிடுகின்றார். நம்பிக்கை வளரப் பல வருடங்கள் ஆகும். எங்கள் குறி மேற்குலக வியாபாரமே என்று அவர் கூறியுள்ளார்.

டமாஸ்கஸ் மாநகரிலிருந்து
லாரா மார்லோவ்,
ரைம், ஒகஸ்ட் 2, 1993.

தென் கொரியா கடத்தல் விசாரணை

தம்முடைய முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரான கிம்டாஜீங்கை 1973 இல் கடத்தியது தொடர்பாக எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி ஒரு விசாரணையைத் தொடக்கியுள்ளது. இந்த விசாரணையில் இணைந்து உதவி புரியத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கிம் யங்சாமின் புதிய அரசு அறிவித்துள்ளது.

ஜனநாயகக் கட்சியிலிருந்து (எஸ்டீபி) எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான கியாம் டீ ரொங் ஆகஸ்ட் 20 இல் நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதனால் பாராளுமன்றத்தில் அவரது அந்தஸ்து சந்தேகத்துக் குரியதாகவுள்ளது. கியாம் இந்த நடவடிக்கையை ஊர்ஜிதம் செய்த பின்னரே அவரது பாராளுமன்ற ஸ்தானம் பற்றி முடிவெடுக்கப்படும் என்று பாராளுமன்ற சபாநாயகர் ரன் சூகூன் கூறியதாக ஸ்றெயிற்ஸ் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. எஸ்டீபியின் முன்னாள் செயல் அதிபராக கியாம் வெளியேற்றத்தைத் தான் எதிர்க்கப் போவதாகக் கூறியுள்ளார்.

துணிகரம், நம்பிக்கை, சமாதானம்

உலக அரங்கில், சுடந்த சில வருடங்களில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. எமது கனவுகள் பல நனவாகியுள்ளன. உதாரணமாக ஜேர்மன் தலைநகர் பேர்லினைச் சுற்றியிருந்த சுவர் இடிந்ததையும், கிழக்கு, மேற்கு ஜேர்மன் ஒன்றாகியதையும், சோவியத் ருஷ்யா பல துண்டுகளாகப் பிரிந்ததையும் கூறலாம். தென் ஆபிரிக்காவில் நெல்சன் மன்டேலா விடுதலை ஆகியதால் அந்த நாட்டுக்கு ஜனநாயக ஆட்சி வரும் என்ற நம்பிக்கையும் இதில் சேரும். ஆனால் இவையாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போன்றது அண்மையில் நடந்தேறிய இஸ்ரேலிய–பாலஸ்தீன உடன்படிக்கையாகும். காலங் காலமாக ஆடும், புலியும் போல ஜென்ம விரோதிகளாக இருந்தவர்கள் யாவற்றையும் ஒதுக்கி விட்டு நட்புறவு பாராட்டு மளவுக்கு வந்துள்ளனர். இதைத் தான் இஸ்ரேலின் பிதாமகர் பென் கூறியன் (BEN GURION) 1956 ஆம் ஆண்டில் பின்வருமாறு கூறியுள்ளார்: ''உண்மைகளை எதிர் கொள்ள அற்புதங்களில் நம்பிக்கை வேண்டும்'' என்று.

ஒப்பந்தத்தில் வெளியரங்கப் படுத்தப்பட்ட விடயங்கள் மிகச் சிறியவை. ஆனால் இருபகுதியினரும் பரஸ்பரம் மறுபேரின் உரிமைகளை ஏற்றுக் கொண்டார்களே அது தான் மிகப் பெரியது. காசாப் பிரதேச 770,000 பாலஸ்தீனியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி கொடுக்கப்படுகின்றது. ஜெரிக்கோவின் பாலைவனச் சோலையில் ஆரம்பித்து மேற்குக் கரையோரம் வரைவாழ 1மில்லியன் அராபியர்களுக்கும் இந்த சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்தப் பல்லாண்டுகள் எடுக்கலாம். தேர்தல் வியூகன்று தான் இந்த ஒப்பந்தத்தைச் சீர் குலைக்கும். இந்த உடன்பாட்டில் வென்றது சமாதானம் மட்டுந் தான். அதற்காக இருபகுதியினரின் துணிகரத்தைப் பாராட்டியே ஆக வேண்டும்.

மூன்று மதங்களுக்குப் பொதுவான இப்பிரதேசத்தில் சரித்திர காலந் தொட்டுப் புராண வைரிகள் எனத் தம்மைக் காட்டிக் கொண்ட இஸ்ரேலியரும், பாலஸ்தீனியரும் பிரச்சினைக்குரிய நிலத்தைப் பங்கு போட எடுக்கும் இந்த முயற்சி உலகம் எதிர்பாராத திகழ்வு எனலாம். எழுதப்பட்ட ஒப்பந்தம் பூரணமானதொன்றல்ல; அதில் அராபி இனத்தின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் கொடுபடவில்லை. என்றாலும் இரு இனத்தவரின் புதிய சகாப்தத்தின் தொடக்கம் என்று இந்த உடன்படிக்கையை வர்ணிக்கலாம். யாரும் அறியாவண்ணம் நோர்வே நாட்டில் இருபகுதியினர் சந்தித்துப் பல மாதங்கள் பேசி ஒப்பந்தமளவுக்கு வந்ததே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திய பழைய சரித்திரத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டுள்ளார்கள் என்றே சொல்லலாம். இன்று ஒரளவில் இருபகுதிக்கும் பொதுவான விடுதலை என்றே சொல்ல வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும் என்ற சாதாரண மனநிலையில் இருந்து தம்மைப் பிரித்துக் கொண்டு சமாதானத்தையும், நிர்மாணத்தையும் சுபீட்சத்தையும் தேடிச் செல்கின்றனர். ஒன்றாகிய ஜேர்மனியின் பல்லாயிரம் வேதனைகள், துண்டுகளாகிய ருஷ்யா படும் தொல்லைகள் இவர்களுக்குத் தகுந்த பாடமாக எதிர்காலத்தில் அமையும். ஒப்பந்தத்தின் குறிக்கோள் வெற்றி பெற அமெரிக்கா முதற்கொண்டு சகல உலக நாடுகளின் ஆதரவுகள் நிறைய உள்ளன.

அயல் நாடுகள் மீது வைத்திருக்கும் சந்தேகங்களை இஸ்ரேலியர் ஒரு புறம் தள்ள வேண்டும். பாலஸ்தீனியர்கள் அரசியல் முதிர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் பெற வேண்டும். இருபகுதியினரும் தம் மத்தியில் செயலாற்றும் அரசியல், மற்றும் மதத்தீவிரவாதிகளை அடக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்றும் ஒன்று உண்டு. அரசியற் கடும் போக்கும் மத அடிப்படைவாதமும் இரு நாடுகளின் பொது எதிரிகளாகும். கடந்த காலச் சரித்திரத்தை ஒருவர் மீது மற்றவர் கொண்ட விரோதத்தை வளர்க்கும் வகையில் இருபகுதியினரும் பயன்படுத்தியுள்ளனர். இந்த மனப்பான்மையிலிருந்து மீள்வது எளிதல்ல. இந்த மனநிலைக்கு இந்தப் பிரதேசத்தில் உதித்த மதங்களும் துணைப் போகின்றன. சமாதானத்திற்கு அடித்தளமான மனமாற்றமே மிகப் பெரிய அற்புதமாகும்.

இஸ்ரேலியப் பிரதமர் இற்சாக் றாபின் ஒப்பந்தத்தைத் தனது சகாக்களுக்கு விளக்கிக் கூறும் போது, ''இறந்த காலம் எமக்கு ஒரு பொருட்டல்ல'' என்றுள்ளார். இது ஒரு வியப்பான வாக்கியம். இஸ்ரேலியர்கள் தமது நெடிய சரித்திரத்தை மறவாதவர்கள். தமக்குக் காலங் காலமாக பல இனங்களால் இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைத்துக் கண்ணீர் சிந்துபவர்

கள். அம்படியென்றால் ஆறு மில்லியன் யூதர்களை ஜேர்மனி கொன்ற கொடூரத்தையும் மன்னிக்கத் துணிந்து விட்டார்களா? இதற்குக் காலந்தான் பதில் சொல்லும்.

இரு நாடுகளும் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டிய காலகட்டமிது. கொலைப் பயமுறுத்தல்களையும், அதிகாரக் கவிழ்ப்புக்களையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை, அதுவும் யாசீர் அரபாத்தின் உயிருக்கு மிகப்பெரிய அபாயம் உண்டு. எகிப்தின் அன்வர் சதாத்தின் துணிச்சலுக்குக் கிடைத்த பரிசு இவருக்கும் கிடைக்கலாம். கடும் போக்காளர்களும், அடிப்படை வாதிகளும் இவரைக் கொல்வதால் ஒப்பந்தத்தை உடைக்கலாம் என்று நம்புகின்றனர். அரபு இளைஞர்கள் மத்தியில் மத அடிப்படை வாதம் பெருகுவதைப் பீ. எல். ஒ. நன்கு அறியும். இதுவும் ருஷ்யாவின் வீழ்ச்சியும் யாசீர் அரபாத் மனம்மாறிச் சமாதானத்தை நாட உதவின என்றால் மிகையாகாது. வளைகுடா யுத்தத்தில் ஈராக்கின் சதாம்ஹுசைன் பக்கம் நின்றபடியால் மத்திய கிழக்கில் இவருக்குக் கிடைத்த நிதி உதவி நின்று விட்டது. இந்த நெருக்கடி சிறியதல்ல. இந்த மூன்று பிரதான காரணிகளும் யாசீர் அரபாத்தையும், அவருடைய பீ.எல்.ஒ ஸ்தாபனத்தையும் இல்லாமற் செய்யும் சக்தி வாய்ந்தவையாகும். இதுவரைகாலமும் விட்டுக் கொடுக்காது எட்டத்தில் நின்றவர் சடுதியில் மட்டுப்படுத்தப்பட்டதே இப்போது போதும் என்று இறங்கி வரக் காரணம்.

மறுபக்கத்தில் காசாப் பிரதேசப் பரிபாலனம் இஸ்ரேலுக்குப் பெருஞ் சுமை என்பது வெளிப்படை. காசா ஒருவரும் வேண்டாத அநாதை. இங்கு அமைதியின்மை,

நவம்பர் 29, 1947

பாலஸ்தீன நிலத்தை இரு நாடுகளாகப்பிரித்து ஒன்றை யூதர்களுக்கும், மற்றையதை அரபுக்களுக்கும் ஐ. நா தனது வாக்களிப்பால் கொடுக்கின்றது. மே 14, 1948 இல் இஸ்ரேல் நாடு பிரகடனம் செய்யப்படுகின்றது. இதைத் தொடர்ந்து அரபு மக்களுக்கும் யூதர்களுக்கு மிடையில் 7½ மாதகால யுத்தம் ஆரம்பம்.

ஜூன் 2, 1964

ஜெருசலத்தில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் அங்குரார்ப்பணம்,

ஜூன் 5.

ஆறுநாள் யுத்தம் எகிப்து, சிரியா, ஜோர்தான் நாடுகளைத்தாக்கி இஸ்ரேல் கோலான் மலைத்தொடர், சினாய் தீபகற்பம், காசா, மேற்குக்கரைப் பிரதேசம், கிழக்கு ஜெருசலம் ஆகியவற்றைக் கைப்பற்றுகின்றது. ஐ. நாவின் 242ஆம் தீர்மானம் இவ்விடங்களிலிருந்து இஸ்ரேலை விலகுமாறும், அதன் காரணமாகச் சமாதானத்தை ஏற்குமாறும் பணித்தது.

செப்ரெம்பர் 5,1972

ஜேர்மன், மியுனிச் நகரில் நடந்த கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்குபற்றிய 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பாலஸ்தீனிய பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இரண்டு தசாப்தங்களாக இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் எதிராக பாலஸ்தீனிய பயங்கர வாதம் செயற்படுகின்றது.

ஒக்ரோபர் 6, 1973

யொம்கிப்பூர் விழாக் காலத்தில் எகிப்தும், சிரியாவும் இஸ்ரேலைத் தாக்கின. இஸ்ரேல் சுயஸ் கால்வாயைக் கைப்பற்றுகின்றது. அரபு- இஸ்ரேல் சமாதானப் பேச்சுக்கள் நடக்கின்றன. இராஜதந்திரி கீசிங்கர் உதவுகின்றார். இதன் காரணமாக சுயஸ் கால்வாயிலிருந்து இஸ்ரேல் வாபஸ் பெறுகின்றது.

நவம்பர் 19, 1977

இஸ்ரேல் தலைநகருக்கு அன்வர் சதாத் வருகை தருகின்றார்.

செப்ரெம்பர் 5-17.1978

அமெரிக்க ஜனாதிபதி காட்டர், எகிப்து ஜனாதிபதி அன்வர் சதாத், இஸ்ரேலியப் பிரதமர் மெனாச்சிம் பேகன் ஆகியோர் காம்ப் டேவிற் தொடர் பேச்சுக்கள் நடத்துகின்றனர். இதன் அடிப்படையில் 1979 இல் எகிப்து இஸ்ரேல் சமாதான உடன்படிக்கையும் 1982இல் எகிப்துக்கு சினாய் தீபகற்பம் திருப்பிக் கையளித்தலும் நிகழ்கின்றன.

தீவிரவாதம், மதவெறி போன்றவை செழிப்புற்றிருக்கின்றன. தாமே வெட்கப்படுமளவுக்கு இஸ்ரேலில் பலாத்கார ஆட்சி செய்தும் நிலைமை சீராகவேயில்லை. பலரைக் கொன்றும், சிறைச்சாலைகளில் தள்ளியும், நாடுகடத்தியும் இஸ்ரேலில் செய்த முயற்சிகள் யாவும் பலன்தர மறுத்தன. இந்த நேரத்தில் தனது உயிரைப் பணயம் வைத்துச் சுமையை ஏற்க அரபாத் வரும் போது இஸ்ரேல் அவரை வரவேற்றதில் வியப்பென்ன! இஸ்ரேலிய இராணுவத்தினர் அகன்றபின், பிறநாடுகளின் நிதியுதவியுடன் தனது ஆட்சியை நிறுவி மத அடிப்படை வாதத்தை ஒரு புறம் தள்ளிவிடலாம் என்பது பி.எல்.ஒவின் எண்ணம்.

கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் சொல்லப்பட்டவை யாவும் வேகமாக அமுலாக்கப்படல் வேண்டியது அவசியம். ஒப்பந்தம் ஏளனத்திற்குட்படுவது ஒரு புறமிருக்க, தீவிரவாதிகளின் கையோங்கிவிடுமென்பதே மிகப் பெரிய பயம். அத்துடன் பாலஸ்தீனப் பிரச்சினை தங்கள் உள் வீட்டுப் பிரச்சினை, அதில் வெளியார் தலையீடு தேவையில்லை என்ற மனப்பான்மையை அரபு நாடுகள் கை விடவேண்டும். சமாதானத் திட்டத்தில் இவர்களும் நெருக்கமாகத் தொடர்புபடுவது மிகவும் அவசியம். மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் சொந்த நன்மை கருதியாவது, தீவிரவாதமும், மத அடிப்படைவாதமும் தலை தூக்காமல், பி.எல்.ஒவின் முயற்சி வெற்றி அடைய உதவ வேண்டும்.

எழுதியவர்கள்:-

ஜெருசலத்திலிருந்து
லிசா பேயர்
வோஷிங்ரனிலிருந்து
மெக் அலிஸ்ரர்.

ஜூன் 6, 1982

பாலஸ்தீன கெரில்லாக்களின் முகாங்களை அழிப்பதற்காக இஸ்ரேலிய இராணுவம்லெபனானுக்குள் நுழைகின்றது. அமெரிக்காவின் தலையீட்டால் பி. எல். ஒவின் படைகள் சிரியஸ் நாட்டிற்கு மாற்றப்படுகின்றன. செப்ரெம்பர் மாதத்தில் ஷப்ரா, ஷற்றிலா முகாங்களிலுள்ள அகதிகள் இஸ்ரேலினால் படுகொலை செய்யப்படுகின்றனர்.

டிசெம்பர் 9, 1987

காசாப் பிரதேசப் பாலஸ்தீனியர்கள் ஒத்துழையாமையும், கடும் எதிர்ப்பும் கலந்த இஸ்ரேலியர்களுக்கெதிரான அரேபிய மொழியில் இன்ரிபாடே (INTIFADEA) என்ற இயக்கத்தை ஆரம்பிக்கின்றனர். இதன் நோக்கம் இஸ்ரேலை வெளியேற்றுவது.

டிசெம்பர் 1988

இஸ்ரேல் என்ற நாடு உண்டு, அந்த நாட்டை ஏற்பதாக யாசீர் அரபாத் பகிரங்கமாக ஏற்றபின் அமெரிக்கா பி. எல். ஒ இயக்கத்துடன் தொடர்பு கொள்கின்றது.

ஆகஸ்ற் 2 1990

வளைகுடாப்போர் ஆரம்பம் பி. எல்.ஒ ஈராக்கை ஆதரிக்கின்றது.

ஒக்ரோபர் 30 1991

முதன் முதலாக இஸ்பெயின் நாட்டுத் தலைநகர் மட்டிறீற் பேச்சுக்கள் பி. எல். ஒ வுக்கும், இஸ்ரேலுக்கும் ஆரம்பம்.

ஜூன் 1992

இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ராபின் பாலஸ்தீனியர்களுக்குச்சுயாட்சி கொடுத்துச் சமாதானத்தை அடைவதாகப் பிரச்சாரம் செய்து பதவிக்கு வருகின்றார்.

ஆகஸ்ட் 29,1993

காசாவுக்கும், மேற்குக் கரைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி ஒப்பந்தம் பி. எல். ஒவுக்கும், இஸ்ரேலுக்குமிடையில் கைச்சாத்தாகின்றது.

உயிரைக் கொடுத்தும் இஸ்ரேலை அழிக்க வேண்டும்

காசாப் பிரதேசத்தில் 'சாட்டி அகதி முகாமில் இருந்தபடி தனது நண்பர்களுக்கு அட்நான் என்ற பாலஸ்தீனியர் பின்வருமாறு கூறுகின்றார்: ''யாசிர் அரபாத் என்றால் எனக்குப் பெரியவனில்லை. எனக்கு முழு பாலஸ்தீனமும் வேண்டும்.'' எங்கே இஸ்ரேல் இராணுவம் தன்னைக் கைது செய்யலாம் என்ற பயத்தில் தனது முழுப் பெயரையுங் கொடுக்க மறுக்கும் அட்நான், இஸ்ரேலை அழிக்க வேண்டும் என்று தனது ஹாமாஸ் இயக்கத்தின் கொள்கையை வலியுறுத்துகிறார். காசாவில் பலாத்காரம் முற்றியபோது அது அரேபிய தொழிலாளர்களுக்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசமாகியது. இதனால் அட்நான் வேலை இழந்தார். இப்போது அவருக்கு வயது இருபத்தைந்து. 1948 இல் அவருடைய பெற்றோர் தமது நகரை விட்டுத்துரத்தப்பட்ட போது இவரும் அகதியானார். ''நான் பிறந்த இடத்தில் எந்த யூதனும் குடியேறலாம், எனக்கு அங்கு இடமில்லை'' என்று அவர் மனம் வெதும்புகிறார்.

இந்தச் சமாதான ஒப்பந்தத்தை எமது இயக்கம் ஏற்கமாட்டாது. நாம் போராடித் தியாகியாக இறக்கத் தயார் என்று அட்நான் போன்றோர் சபதம் செய்துள்ளனர். ஹாமாஸ் என்பது இந்த இயக்கத்தின் சுருக்கமான பெயர். இஸ்லாமியரின் எதிர்ப்பு இயக்கம் என்பதே இதன் உண்மை விளாசம். அண்மையில் நடந்த ஒப்பந்தத்தை எதிர்ப்போரில் மிகவும் கடும்போக்குள்ளவர்கள் ஹாமாஸ் இயக்கத்தினர். இவர்கள் இஸ்லாமிய அடிப்படை வாதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இவர்களின் குறிக்கோள் இஸ்லாமியப் பாலஸ்தீனம். அடுத்தது மத்திய கிழக்கு முழுவதும் பரந்த இஸ்லாம்.

இன்றியாடா எதிர்ப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது மாதம் அதாவது ஐந்து வருடங்களுக்கு முன்பாக இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. காசாவில் நெருங்கி வாழும் அராபி அகதிகள் மத்தியில் இது அமோக வளர்ச்சி கண்டுள்ளது. இதன் தொடக்க காலத்தில் பி. எல். ஒ. இயக்கத்தின் பலத்தைக் குறைக்க இவர்களுக்கு இஸ்ரேலியர் தங்கள் ஆதரவு நல்கினர். மூன்று வருடங்களுக்கு முன்பு ஆபத்தை உணர்ந்து நசுக்கத் தலைப்பட்டனர். ஹாமாஸ் இயக்கம் தம் மக்களின் சமுதாய அரசியல் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டுள்ளது. ஈரானும், வேறு மத்திய கிழக்கு நாடுகளும், தனிப்பட்ட செல்வந்தர்களும் நிதி உதவி செய்கின்றனர். இவர்கள் சிறுவர் பள்ளிக் கூடங்களும், வைத்தியசாலைகளும் நடத்துகின்றனர். வர்த்தகத்திலும் ஈடுபடுகின்றனர். தங்கள் வணக்கஸ்தலங்களிலிருந்து இயக்கப் பிரச்சாரமும் செய்கிறார்கள். பி. எல். ஒ. வின் தோல்விகள் இவர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. தற்சமயம் காசாவில் இவர்கள் தான் மிகப் பெரிய சக்தியாகத் திகழ்கின்றனர். மேற்குக் கரைப் பிரதேசத்திலும் மக்களின் 40 வீத ஆதரவு இவர்களுக்கு உண்டு.

இந்த இயக்கத்தின் வன்முறையும், மூர்க்கத்தனமான இஸ்ரேலிய எதிர்ப்பும் இஸ்ரேலின் காசா பிரதேச ஆட்சியை ஆட்டம் காணச் செய்துள்ளது. இஸ்ரேலிய இராணுவத்தினரைக் கல்லால் அடித்தும், கத்தியால் வெட்டியும், துவக்கால் சுட்டும் இவர்கள் தங்கள் வெறுப்

இது ஹாமாஸ் இயக்கத்தின் கொள்கை

பைக் காட்டுகின்றனர். இஸ்ரேலியக் குடிமக்களும் தாக்கப்படுகின்றனர். அண்மையில் மூன்று யூதப் பொது மக்கள் குடல் வெளியேறும் வகையில் கத்தியால் வெட்டப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய அரசு நூற்றுக் கணக்கான இயக்கத்தினரைக் கைது செய்துள்ளது. மூன்று இயக்கத் தலைவர்கள் நாடு கடத்தப் பட்டுள்ளனர். இதன்பின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதன் பயனாக இஸ்ரேலிய அரசு 415 தலைவர்களை பனிப்பிரதேசமாகிய தென் லெபனானுக்கு நாடு கடத்தியுள்ளது. இது நிலைமையை மோசமாக்கியுள்ளது. இவ்விவகாரம் சர்வதேச அரங்கிற்குச் சென்று விட்டது.

காசா - ஜெரிக்கோ ஒப்பந்தத்தை வேண்டாம்! வேண்டாம்!! வேண்டாம்!!! என எதிர்க்கும் ஹாமாஸ் போராளிகள்

காசாப் பிரதேசத்திற்குத் தன்னாட்சி வழங்குவதில் உள்ள ஆபத்தை இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகள் உணர்ந்துள்ளன. யூதக் குடியிருப்பாளர்களையும், பதவியிலிருக்கும் அராபியர்களையும் ஹாமாஸ் இயக்கம் தாக்குவது நிச்சயம். இதனால் பதில் தாக்குதல் நடக்கும் -இரத்தம் பெருகும். காசா வாயிலாக இஸ்ரேலைத் தாக்குவது சுலபம். தன்னாட்சி வழங்குவதால் காசாத் துறைமுகம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டை விட்டுச் சென்றுவிடும். இந்தத் துறைமுகம் இஸ்ரேல் மீது பெருந் தாக்குதல் நடத்தலாம். காசாப் பிரதேசத்திற்குள் ஏவுகணைகளைக் கொண்டு வந்து அஷ்கிலோன் போன்ற இஸ்ரேலிய நகரங்களைத் தாக்கலாம். இந்த நகரம் காசாவிலிருந்து பதின்மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. இவ்வாறு ஹாமாஸ் இஸ்ரேலுக்குப் பெரும் சவாலாக இருக்கின்றது.

காசாவிலிருந்து லாறா மார்லோவ் மற்றும் மாக்றிற்றா மைக்கேல்ஸ்:

ரைம், செப்ரெம்பர் 13, 1993

மறைந்தும் மறையாத பொற்குவை

சென்ற ஜூன் 30 ஆந் திகதி மொன்கோலியத் தலைநகர் உலன் பாடரில் ஒரு நீதிமன்றத்தில், வழக்கொன்று சட்டத்தில் முட்டிவிட்டுத் தள்ளுபடியானது. பதினெட்டு மாதகால புலன் விசாரணைக்குப் பின்பு நீதிமன்றுக்கு வந்து, அங்கே 3 வாரங்களாகத் தொடர்ந்து விசாரிக்கப்பட்ட பின்பு அது ஒரு வகையாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த நாட்டின் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்கள் இருவரும், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர் மூவரும் அந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தனர். அவர்கள் மீது ஐந்து குற்றங்கள் சாட்டப்பட்டு இருந்தன. அவர்கள் தங்களுடைய அதிகார வரம்பை மீறி இரண்டு ஆண்டுகளாக உலக அந்நியச் செலாவணிச் சந்தையில் மோசடித்தனமாக ஈடுபட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டனர்.

1990, 1991 ஆம் ஆண்டுகளில் அந்நியச் செலாவணிச்சந்தை விடயத்தில் அனுபவம் போதாத அவர்கள் 90 மில்லியன் டொலரை இழந்ததாகக் குற்றஞ் சுமத்தப் பட்டிருந்தது. அத்தத் தொகையானது அந்த வருமை நாட்டின் முழு அந்நியச் செலாவணிக் கையிருப்பின் அளவினதாகும்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி, அந்தக் குற்றச்சாட்டுக்கள் போதிய அளவு ஆதாரம் அற்றவை எனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார். ஆனால் அவர், ''இந்தக் கையாடல் செய்தவர்கள் எப்படியோ ஒரு விதத்தில் ஏதோ மோசடி செய்துள்ளார்கள்'' என்று கூறியதுடன், அவர்களின் மீது தற்பொழுது கண்டுள்ள சான்றுகளின் படி குற்றத்தை நிரூபிக்க முடியாது இருப்பதால் அந்த வழக்கை மேலும் புலன் விசாரணைக்கு உட்படுத்தும்படி உரிய நீதவான்களுக்குக் கட்டளை இட்டுள்ளார்.

கம்யூனிசத்தில் இருந்து விடுபட்டு மொன்கோலியாவில் ஜனநாயகமும், இறந்த சந்தைப் பொருளாதார முறையும் ஏற்படுவதற்கு முன்பு அந்த நாட்டின் அந்நியச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளுக்குச் செய்தி பரிமாற ஒரேயொரு வெளிநாட்டு

ரெலெக்ஸ் தொடர்பு மட்டுமே இருந்தது. மொஸ்கோவில் உள்ள கொமிகொன் வங்கியுடன் மட்டுமே தொடர்பு கொள்ள முடிந்ததாகும்.

ஆரம்பத்தில் அந்த வெளி நாட்டுச் செலாவணிச் சந்தைப் பேரம் இலாபகரமாகத் தான் இருந்தது. அது அவர்களை அந்தப் பேரங்களில் மேலும் பெருந் தொகைப் பணத்தைப் பணயம் வைக்கத் தூண்டியது. இடைக் கிடை அங்கு ஏற்பட்ட மின்சாரத் தடைகளும், தொலைபேசித் தொடர்பு பெற நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டதும், பேரத்தினால் வந்த இலாபத்தில் அரைவாசியை அந்த நாட்டின் மத்திய வங்கியை நவீன மயப்படுத்தச் செலவு செய்யத் தூண்டின. 1990 முதல் லண்டனில் இயங்கும் சில ஐரோப்பிய வங்கிகளைச் சார்ந்த நம்பிக்கைக் குரியனவாகாத வெளி நாட்டுச் செலாவணி வியாபார நிலையங்களின் உதவியுடன் மொங்கோலியர்கள் செயற்பட்டனர். அதனால் மொங்கோலியாவின் தினசரி நிதி வியாபாரத் தொகை சில வேளைகளில் 1 பில்லியன் டொலருக்கும் கூடியதாக இருந்ததும் உண்டு. இத் தொகை மொங்கோலியர்வின் ஒராண்டு அந்நியச் செலாவணி உழைப்பிலும் பார்க்கக் கூடியதாகும்.

குற்றஞ் சாட்டப்பட்ட மத்திய வங்கி ஆளுநர் ஒருவருக்கு தன் விருப்பப்படி 50 மில்லியன் டொலர் வரையான பேரத்தில் ஈடுபட அதிகாரம் இருந்தது. ஆனால் அவருக்கு அந்த விடயத்தில் வழிகாட்டியாக இருந்தவை சில வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைச் சொற் பிரயோகப் பதங்கள் மட்டுந்தானாகும். வங்கியால் வெளியிடப்பட்ட அறிக்கையில், 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் 1.3 மில்லியன் டொலர் தான் என்றாலும் உண்மையில் அந்த நட்டம் 60 மில்லியன் டொலர் அளவாக இருந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான வங்கியின் கணக்காளர் அதற்குக் காரணம் கூறுகையில், அப்பொழுது சோஷலிஸத்திற்கு உட்பட்டிருந்த அந்த நாட்டின் கணக்கு வைப்பு முறை சரியாக ஈடுகொடுத்து நிற்கத் தவறிவிட்டதால் தான் நட்டத்தைச் சரிவரக் கண்டு கொள்ள முடியாமற் போனதாக வாதித்தார்.

ஐந்து எதிரிகளும் நீதிமன்றில் இவ்விடயம் பற்றி உற்சாகத்துடன் உரையாற்றியுங் கூட, அந்தப் பேரத்தின் திருகுதாளத் தன்மைகள், வழக்கை விசாரித்த நீதிபதிக்குப் புரியாதனவாகவே இருந்தன. முந்திய புலன் விசாரணைகளில் அநேகமான சாட்சிக் காரர்கள் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்குப் பாதகமாகச் சொன்னவற்றில் இருந்தும், மாறுபட்டு நீதிபதியின் முன்னால் சான்றுகள் சொல்லியுங் கூட அவை நீதிபதியின் கவனத்தில் எடுபடவில்லை. எதிராளிகள் வழக்கு விசாரணை முடிவில் மன்றுக்குச் சமர்ப்பித்த தற்காப்புக் கூற்றுக்களும், அப்பொழுது அந்த நீதிமன்றின் முதலியார் உட்பட அங்கு கூடியிருந்த சில பார்வையாளர்கள் அவற்றைக் கேட்டுக் கண்கலங்கியதும் ஒரு வேளை நீதிபதியை மனமிளகவைத்திருக்கலாம்.

அந்த வழக்கு இனி மெதுவாகக் கைவிடப்பட்டு விடுமா? அந்த வழக்குப் பற்றிய அரசியல் முக்கியத்துவமும் தற்பொழுது அற்றுப் போய்விட்டது. 1992 இல் முன்னாள் கம்யூனிஸ்டுக்களால் ஆன மொங்கோலிய மக்கள் புரட்சிகரக் கட்சித்தேர்தலில் பெரும் பான்மை வெற்றி பெறக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் துணைத் தலைவராக இருக்க ஒரு சனநாயகக் கட்சியும் உதவியது. ஆகவே மொங்கோலிய முதலாளித்துவ முறைக்கு மாற்றப்பட்ட வரலாற்றில் ஒரு சிறிய குறிப்பாகப் பொறிக்கப்படுவதற்காகப் போலும், தற்பொழுது உற்சாகங் குன்றிய நிலையில் உள்ள, சான்றுகள் சரிவரப் பெற முடியாத அந்தத் ''தங்கமும் அதனைக் கையாடியவர்களும்'' பற்றிய வழக்குத் தீர்ப்பெதுவுமின்றி முடிவடைந்து விட்டது.

தெ எக்கனமிஸ்ட், ஜூலை 10, 1993

●

மலேசியா: கடவுச்சீட்டில்லாத கவிஞன்

இந்த மாதம் லண்டனில் தொடராகப் பல இடங்களில் தன் கவிதைகளை வாசிக்க இருந்த சிகில் ராஜேந்திரா என்ற கவிஞனின் கடவுச் சீட்டை அதிகாரிகள் செல்லுபடியற்ற தாக்கியுள்ளனர். இந்த நடவடிக்கையையும், அந்த ஆவணத்தைப் பறிமுதல் செய்ய அரசு முன்வைத்த காரணங்களையும் மலேசிய சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளது. தன்னுடைய கவிதைகள் மூலம் அரசதை நடவடிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தார் என்பதே குற்றச் சாட்டாகும்.

இன்னுமொரு செக்கோசிலாவாக்கியா

"ஸ் லேபே பெல்ஜியேன்" என்று முதலில் மன்னர் பிரகடனம் செய்தார். அது ஜெர்மனிய மொழியைத் தொடர்ந்து பிரெஞ்சு மொழியில் 'வீவேலா பெல்ஜிக்கே' என்று அறிவித்தார். 'லேவே பெல்ஜியே' என்று இறுதியாக ஒல்லாந்து மொழியில் அவர் மொழிந்தபோது உறுதிமொழி வைபவத்தில் கலந்து கொள்ள அங்கு சமுகமளித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், பேராளர்களும் பலத்த கரவொலி எழுப்பி ஆரவாரித்தனர். பெல்ஜியத்தின் ஆறாவது மன்னராக முடிசூட்டப்பட்ட 2ஆவது அல்பேட்டின் பதவிப் பிரமாண வைபவத்தின் போதே இது நடந்தது. புதிய மன்னரின் மும்மொழிப் பிரகடனமும், மிகச் சிறிய எண்ணிக்கையினரான ஜெர்மனிய இனத்தவருக்கான தலையசைப்பும் அந்த நாட்டின் மிகவும் சிக்கலான முரண்பாடொன்றைச் சரணடையச் செய்ய முடியாது. இது மன்னர் முகம் கொடுக்க வேண்டிய பாரிய இன வேறுபாடாகும், 168 ஆண்டுகால மன்னர் ஆட்சியையே ஆட்டம் காணச் செய்யும் அளவிலான மிகவும் ஆழமாகப் போய்விட்ட, அந்த நாட்டின் பிரான்சிய, ஒல்லாந்த இனத்தவர்களுக்கிடையிலான பகைமையுணர்வு நாட்டையே இரண்டாகப் பிளந்து விடக் கூடியதுஎனஎண்ணில்மிகையாகாது 2ஆவது அல்பேட் மன்னரின் மூத்த சகோதரரும், அவருக்கு நேரே முந்தைய அரசருமான பவோடொயின் மன்னர் கடந்த 42 ஆண்டு காலமாகப் பெல்ஜிய நாட்டை ஒன்றிணைத்து வைத்திருந்தார். ஆனால் அவரின் இடத்திற்கு வந்துள்ள முன்னாள் உல்லாசப் பிரியரான அல்பேட்டினால் அது முடியுமா என்பது சந்தேகமே.

பெல்ஜியம் பொஸ்னியாவு மல்ல, அது அயர்லாந்துமாகாது. ஒல்லாந்து மொழி பேசும் பிளெமிங் இனத்தவருக்கும், பிறாங்கோபோன் எனப்படும் பிரான்சிய மொழிபேசும் வல்லூன்களுக்குமிடையில் கடந்த 25 ஆண்டுகளாகப் பிரிவினைவாதக் கிளர்ச்சிகளும், ஒற்றுமையின்மையும் நிலவிவந்தபோதும் ஒரு துளி இரத்தந் தானும் சிந்தப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். செக் இனத்தவருக்கும் சிலோவாக் இனத்தவருக்குமிடையில் "மீருதுவான பிரிவினை" ஏற்படுவதற்கு முன்பிருந்த செக்கோசிலாவாக்கியாவுக்கும், பெல்ஜிய இராச்சியத்திற்கும் பாரிய ஒற்றுமையுண்டு. அந்த நாட்டின் தேசிய ஆகாரமான பிரெஞ்சு வறுவல் போலவே அங்கு

பெல்ஜியம்: வளம் நிறைந்த பிளெமிங் இனத்தை சுகவாசிகளான வல்லூன் இனத்த வரிடமிருந்து பிரிக்கும், பிரிவினை உணர்ச்சிகளை 2வது அல்பேட் மன்னர் அடக்கியாள்வது என்பது கடினமாகும்

செல்லும் ஒருவருக்குப் பெல்ஜியம் நாடு, ஒரு சுத்தமான அதிக சந்தடியற்ற அமைதியான உணர்ச்சிகளைத் தூண்டவல்ல நாடு தான். இந்தக் களங்கமற்ற அடித்தளத்தின் கீழ் பெல்ஜியத்தில் வாழும் 60 லட்சம் பிளெமிங்குகளுக்கும், 35 லட்சம் வல்லூன்களுக்குமிடையிலான ஆத்திரங்களும், பகைமையுணர்வும் இருந்து வருகின்றன. கடந்த 20 ஆண்டு காலத்துள் மத்திய அரசு படிப்படியாகப் பிளான்டேஸ், வலோனியா, பிறசல்ஸ் என்றமூன்று பிரதேசங்களுக்கும் அதிகாரங்களை வழங்கிப் பாதுகாப்பு, வெளியுறவு என்பவற்றுக்குச் சற்று அதிகமாக நடுவண் அதிகாரத்தை வைத்துக் கொண்டுள்ளது.

பிரிவினை வாதத்தின் சுழற்சிச் சக்தியைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பொறுப்பு மன்னர் அல்பேட்டுக் குள்ளது. இதில் தனது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி வெற்றி பெற அவரால் முடியுமா என்பது தெளிவாக இல்லை. உண்மையில் அநேகமான பெல்ஜியர்கள் பவோடொயினின் பின்னர் அவரின் இடத்திற்குத் தனது 33 வயது நிரம்பிய இளவரசர் பிலிப்பை அரசபீட மேற்ற 59 வயதான அல்பேட் வழிவிலகுவார் என்றே எதிர்பார்த்தனர். கேளிக்கைப் பிரியரான அல்பேட்டின் கடந்த காலச் செயற்பாடுகள் இராஜதந்திரம்மிக்க வரும், ஆண்மீகப்பலம் வாய்ந்தவருமான மூத்த சகோதரரின் மட்டத்திற்கு இவர் வருவது கடினம் என்றே பறைசாற்றுகின்றன. ஆனால் அல்பேட்டிற்குத் தேவைப்படுவது அந்தத் திறமை மட்டுமே. 1830 இல் நெதர்லாந்தில் இருந்து பிரிந்து முதலாவது மன்னராக ஜெர்மனிய சக்சே — கோபேக் — கொத்தாவின் கோமகன் லியோம் போல்டை ஏற்றுக் கொண்ட காலந் தொட்டு பிளெமிங் இனத்தவர்க்கும், வல்லூனியர்க்கும் இடையிலான சண்டை சச்சரவுகள் ஆரம்பமாகி விட்டன. இன உற்பத்தி, பொருளாதார அபிவிருத்திகள் காரணமாக பெல்ஜியத்தில் பிரான்சிய மொழி பேசுவோருக்கும், ஒல்லாந்து மொழி பேசுவோருக்கு மிடையிலான உறவில் படிப்படியான விரி

சல் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இறந்த மன்னர் பவோடொயின் தனது நிறைவான இராஜதந்திரத்தாலும், இடையிடையிலான திறமையான செயற்பாடுகள் காரணமாகவும் நாட்டை ஒன்றாக வைத்திருக்க முடிந்தது. அப்படியிருந்தும் பவோடொயினும் ஒரு விலை கொடுக்க வேண்டியேற்பட்டது. அவருடைய ஆட்சியின் போது மாறிமாறி வந்த அரசுகள் சண்டைக்கு நின்ற பிரதேசங்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்கின. இந்த ஆண்டின் முற்பகுதியில் பாராளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தின் மூலம் பெல்ஜியம் ஒரு இணைப்பாட்சி நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பிரதேச நிர்வாகஸ்தர்களும், சட்டசபைகளும் விவசாயம், கல்வி, வர்த்தகம், சுகாதாரம், சுற்றுச்சூழல், கொள்கை வகுப்பு என்பவற்றைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். வெளிநாடுகளோடு உடன்படிக்கை செய்து கொள்ளவும் அவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய அமைச்சரவைக் கூட்டங்களில் உறுப்பினர்கள் தத்தமது தாய் மொழிகளிலேயே உரை நிகழ்த்துகிறார்கள். அவர்களது சிலகுறிப்புக்கள் மிக்க மனத்துயரோடு மொழியாக்கம் செய்யப்படுகின்றன. பெல்ஜிய பத்திரிகைகளுக்கான செவ்விகள் சில வேளைகளில் மொழிச் சாகச விளையாட்டுக் களங்களாக மாறுவதுமுண்டு. பேசிக் கொண்டிருக்கும் போது நடு வசனத்திலேயே அதிகாரிகள் தெரிந்து கொண்டே ஒல்லாந்து மொழியிலிருந்து பிரேஞ்சு மொழிக்குத் தாவி விடுகிறார்கள்.

அமைதியான பெரும்பான்மையினர்

இணைப்பாட்சி முறைக்கு ஏற்பட்ட மாற்றம் நன்மையும், தீமையும் பயப்பதாயுள்ளது. ஒல்லாந்து மொழி பேசும் பிரதேசத்தின் பிரெஞ்சு மொழி பேசும் ஜனாதிபதியான கய் ஸ்பிற்றோல், ''இணைப்பாட்சி ஏற்பட்டபின்னர் பிளெமிங்குகளுக்கும், வல்லூன்களுக்குமிடையே தலைமைத்துவ மாவட்டத்தில் மிக்க கூட்டுறவுஏற்பட்டுள்ளது'' என்கிறார். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டதாலுள்ள தீமைகளுமுண்டு. ஐரோப்பிய அதிவேக புகையிரதத் தொடரின் பெல்ஜிய இணைப்பு சமுகங்களுக்கிடையிலான கருத்து வேற்றுமைகளாலும், அதிகாரச் சதிவேலைகளாலும் தாமதப்படலாம். இது ஒரு பாரிய பொதுவேலைக் கருத்திட்டமாகும். என்பதும் அவரது கருத்து

சாதாரணமாகவே அமைதிகாக்கும் பெரும்பான்மையினரான பெல்ஜியர்கள் தாம் பிறந்த மண் ஒரே நாடாக இருப்பதையே விரும்புவார்கள். பாவோடொயின் இவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார். அவர்களுக்கு மீளுறுதியும் வழங்கியிருந்தார். ''அவர் எங்கள் தந்தையைப் போலிருந்தார்'' என்கிறார் ஆய்வுமைய இயக்குனரான சேவியர் மேமில். ''பெல்ஜிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே நபர் அவர்தான்'' என்றும் மேமில் கூறுகிறார். அவர் இனமத பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு துறவியாக வாழ்ந்தார். தானுண்டு, தன் வேலையுண்டென்றிருந்தவர். உலகை நோய்ந்தவர். மிக ஆழமான பக்திமானாகவும் திகழ்ந்தார். கருத்தடையைச் சட்டமாக்கும் சட்டமூலத்தில் கையொப்பமிட விரும்பாத காரணத்தால் 1990ஆம் ஆண்டில் 2 நாட்களுக்கு முடியையே துறக்க நேர்ந்தது. பல்லாண்டுகாலமாகத்தனது செயலகத்தைப் பெல்ஜிய பொது வாழ்வின் செயற்பாடுள்ள ஒரு சக்தியாக மாற்றியிருந்தார். இரண்டாவது உலகப்போரின் போது நாஜிகளின் பெல்ஜிய ஆக்கிரமிப்பிலிருந்து அந்த நாட்டைத் தற்காத்துக் கொள்ள முடியாத்தன்மையால் செல்வாக்கிழந்திருந்த தனது தந்தை 3ஆவது லியோபோல்ட் மன்னரால் ஏற்பட்ட வடுவைப்பாவோடொயின் மாற்றினார். பாவோடொயினின் இறுதிக்காலத்தில் ஆழமான பிரிவினைவாதிகளாக இருந்த கூட்டரசினரை தமது வேறுபாடுகளைவிட்டொழிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு, அவர்கள் பணித்து போகும் அளவிற்கு வலுப்பெற்றிருந்தார். சென்ற மார்ச்சில் பிரதம மந்திரி ஜீன் லுக்டெஹெனேயின் அரசு வரி அதிகரிப்பாலும், வரவு செலவுத்திட்ட வெட்டுக்களாலும் செயலற்றபோதும், அவர் தன் செல்வாக்கைப் பிரயோகித்து நிலைமையைச் சீர்ப்படுத்தினார்.

இருமொழி பேசும் பெல்ஜியம்

பிளண்டேஸ்
மொழி: ஒல்லாந்து
சனத்தொகை– 5,756,925
தனிநபர்வருவாய் 20,908 டொலர்.

வலோனியா
மொழி: பிரெஞ்சு
சனத்தொகை– 3,255,711
தனிநபர்வருவாய் 15,184 டொலர்.

பிறஸ்ஸல்ஸ்
மொழி: ஒல்லாந்து –பிரெஞ்சு
சனத்தொகை– 954,045
தனிநபர்வருவாய் 29,016டொலர்.

மொழிச் சமரசம்

பாவோடொயினாலுங் கூட அத்தனை திறமையும், புகழுமிருந்தும் பெல்ஜியத்தின் மிகப்பிரதானமான சிக்கலைத் தீர்க்க முடியவில்லை. அந்தச்சிறிய நாட்டில் பிளெமிங்குகளும், வல்லூன்களும் மனோபாவத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள் என்பதோடு வரலாற்று ரீதியில் அவையிரண்டிலும்அமிழ்ந்து விட்டவர்கள். வடக்கு பெல்ஜியத்திலுள்ள சுறுசுறுப்பும், கடின உழைப்பும் மிக்க ஒல்லாந்து மொழி பேசுவோர் தம்மை ஒல்லாந்திலும், ஜேர்மனியிலும் வாழுகின்ற தம்மினத்தவரோடு அடையாளங் காட்டிக் கொள்வதோடல்லாமல் வல்லூன்களைச் சோம்பேறிகளாகவும், பகட்டுக்காரர்களாகவும்!கணக்கிடுகிறார்கள். பிரெஞ்சுமொழி பேசுவோர் தம்மைக் கற்பனைவாதிகளாகவும், நகரவாசிகளாகவும் உருவகப்படுத்திக்கொள்வதோடு,பாரீஸ் நகரையே தமது சமய பீடமாகக் கருதி வரும் அதேவேளை பிளெமிங்குகளைத் தேவையில்லாத பிரயாசிகளாகக் கணிப்பிடுகின்றனர். சுயாட்சிப்பிரதேசமாகக் கணிக்கப்படும் பெல்ஜியத் தலைநகரான பிறஸ்ஸல்சில் வாழும் 954,000 மக்களும் மொழி வாரித்தொகுதிகளாக வாழ்ந்துவரும் அதேவேளை நாட்டின் தலைநகரம் என்ற ரீதியிலும்,நேட்டோவின்தலைமைச் செயலகம் அமைந்துள்ள இடம் என்ற அளவிலும், ஐரோப்பிய சமூகத்தின் நிர்வாகக்கிளை அலுவலகத்தின் இருப்பிடம் என்பதாலும் பெருமைகொள்கிறார்கள். இரண்டு பக்கமொழிக்குழுக்களையும் நாட்டுப் பூசணிக்காய்களாகவே அவர்கள் மதிக்கிறார்கள்.

சென்ற நூற்றாண்டில் வாலோனியாவே நாட்டைத் தன்கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அதன் பாரிய நிலக்கரி உருக்குத் தொழில்கள் செழிப்புற்றிருந்தன. வல்லூன்களே அரசியல் ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் பெல்ஜியத்தை ஆண்டனர். எதிரிடையாக பிளண்டேஸ்கள் கிராமியப் பின்புறத்தவராகவே யிருந்தனர். இரண்டாவது உலகப்போரின் பின் நிலைமை தலைகீழாகி விட்டது. வல்லூன்களின் புகைசூழ்ந்த கைத்தொழில்கள் துருப்பிடித்து விட்டன. பிளண்டேஸ்கள் செழிப்படைந்து வருகின்றனர். ஐரோப்பிய சமூகத்தால் மாணியம் வழங்கப்படும் செல்வம் கொழிக்கும் விவசாயம். சுறுசுறுப்பாக இயங்கும் நவீன அன்ற்வேப் துறைமுகம், அன்ற்வேப்பின் இரத்தினக்கல் வர்த்தகம், புதிதாக மலரும் உயர் தொழில் நுட்ப, சீர் செய்யும் கைத்தொழில்கள் என்பன பிளண்டேஸ்சை ஐரோப்பாவின் மிகவும் செல்வங் கொழிக்கும் பிரதேசங்களிலொன்றாக மாற்றியுள்ளன. தாம் திரும்பப்பெறுவதைவிட அதிகமாகவே அந்த நாட்டின் சமூகப் பாதுகாப்பு நிதியத்துக்குக் கொடுத்துவருவதாகக் கூறும் பிளெமிங்குகள், வல்லூன்களைச் சோம்பேறிகளாக வருணிக்கிறார்கள்.

''நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு பிளெமிங் குடும்பமும் ஒவ்வொரு வல்லூன் குடும்பத்திற்காக ஒரு காரை வாங்குகிறது'' என்று பிளெமிங் தீவிரவாதிகள் மீது ஒருTamil Eelam Archiveவர் கூறிக்கொள்வார்கள். கருத்து ரீதியில் இது சரியாக இல்லாதிருக்கலாம். சுறுசுறுப்பில்லாத வல்லூன்களால் தாம் இப்படி எள்ளி நகையாடப்படுவதாக ஒல்லாந்து மொழிபேசும் வாக்காளர்கள் எண்ணிக் கவலைப்படுகிறார்கள். கடந்த ஒன்பது ஆண்டுகளில் வலது சாரி மீதவாதிகளையும், மிகத்தீவிரவாத தேசியவாதிகளையும் கொண்ட விளாம் புளொக் கட்சி துரித வளர்ச்சி கண்டுள்ளது. 1991இல் அன்ற்வேப் நகரசபைத் தேர்தலில் அந்தக் கட்சி காற்பங்கு வாக்குகளைப்பெற்றுள்ளன. சோஷலிச கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சிகளின் பிளெமிஸ் கிளைகள் பின் தள்ளப்பட்டன. அடுத்த நகரசபைத் தேர்தலில் தாம் 40 வீதம் வாக்குகளைப் பெறமுடியும் என்று கூறுகிறார்கள் புளொக்கட்சியினர். அது நடக்கக்கூடும் என்கிறார்கள் அரசியல் விஞ்ஞானிகள்.

முன்னைய காலங்களில் வளம் மிக்க வல்லூன்கள் மொழி விடயத்தை விலை கொடுத்து வாங்கியிருப்பார்கள். இப்போது அது முடியாது. ஐரோப்பாவின் பணமுடக்கம் பெல்ஜியத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. அங்குள்ள பத்துப் பேருள் ஒருவர் வேலையில்லாமலிருக்கும் நிலை. தேசிய வருவாய் இவ்வாண்டு மேலும் வீழ்ச்சியுறும். நாட்டின் தேசியக் கடன் தொகையான 19200 கோடி டொலரைச் சரி செய்ய முடியாமல் திணறுகிறது. அந்த நாடு தன்னால் முடியாத அளவு சேம நலத் திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது. முழு அளவிலான இலவச சுகாதார சேவை, வேலையில்லாதோருக்கான முடிவில்லாத கொடுப்பனவுகள், ஆயுட் காப்புறுதி, குழந்தைக் கவனிப்பு உதவிகள் என்பன வரவு செலவுத் திட்டத்தில் பாரிய பற்றாக்குறையை ஏற்படுத்திவருகின்றன. கடந்த வருடப் பற்றாக் குறையைத் தேசிய வருமானத்தின் 7 வீதத்திலும் பார்க்கச் சிறிதளவே குறைவாகும். பற்றாக் குறையை வெட்டுவதற்குச் சேம நலத் திட்டங்களில் வெட்டுவிழவேண்டும். இதனால் ஏற்படும் தவிர்க்கமுடியாத கஷ்டங்கள் பிளெமிங்-வல்லூன் பூசலுக்கு இரை போடுவது போலாகும். ''காலப் போக்கில் ஏற்படக்கூடிய நல்ல பொருளாதாரத் திருப்பம் பிரிவினைவாதிகளை அமைதியடையச் செய்யும்'' என்று கூறுகிறார் தேசிய முதலாளிமார் சம்மேளனத்தைச் சேர்ந்த பொருளியலாளரான ஜன் ஹேர்மன்ஸ்.

ஆனால் குறுகிய கால ஒட்டம் மிகவும் கரடு முரடானதாக உள்ளது. பிரிவினைவாதத்தை எதிர்க்கும் ஏனையவர்கள் போலவே ஹேர்மன்சும் இராட்சியம் பிரிக்கப்படுவது ''பொருளாதாரத் தற்கொலைக்கு'' ஒப்பான செயலாகும் எனமேலும்கூறுகிறார்பிரிவினையின் கொள்முதல் பல நூறு கோடி பெல்ஜிய பிராங்காக இருக்கும் என்பதும் அவர் கருத்து.'' பிரிவினைவாத வினாம்ஸ் புளொக் பிளண்டேஸ் மத்தியிலுள்ள முளைக் கோளாறு படைத்த சிறுபான்மையினராகும்'' என்பது பிரெஞ்ச மொழி பேசும் சோஷலிஸ்டுகளின் தலைவரான பற்றிக் மொழியாஷவின் கருத்தாகும். ''அவர்கள் உரக்கப் பேசுகிறார்கள்'' என்பதை அவர் ஏற்

லுக் கொள்ளுகிறார். இந்தத் தேசிய அரசமைப்பு உடையுமாயின் தான் சார்ந்த வயோனியா ''மூன்றாவது உலகின் பகுதியாகி விடும் என்பது அவரது ஆதங்கம். சுதந்திர பிளண்டேசை விட இரண்டு பங்கு வேலையின்மை தனது பகுதியில் ஏற்படும் என்றும் அஞ்சுகிறார். அவர் பவோடொயினின் மரணம் ஐக்கிய பெல்ஜியத்துக்கு ஏற்பட்டுள்ள துன்பமாகும் என்று சொல்லுகிறார். பிளமிஸ் தினசரியான டீஸ்ரான் பர்ட்டின் அரசியல் ஆசிரியரான ஜோன் றஸ்கிங், ''மன்னர் இறந்தபோது ஏற்பட்ட துயரம் அவருக்கான தேயன்றிக் கடந்த கால ஐக்கிய நாடான பெல்ஜியத்துக்கல்ல'' என்பது அவரது கூற்று.

சென்ற வாரம் ஐக்கியத்தின் ஆதரவாளர்கள் பிரிவினைவாதத்தைக் களைந்தெறிவர் என்ற நம்பிக்கையில் புதிய மன்னருக்குத் தம் பேராதரவைத் தெரிவித்தார்கள். வல்லூன்களிற் பெரும்பாலோரும் இவர்களுள் அடங்குவர். சாதாரணமாகச் சளிச்சுரத்தைப் போன்றவர்களான பெல்ஜிய நாட்டவர் நாட்டின் சகல பாகங்களிலும் கறுப்பு, மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர். (கொடிகள் விற்பனை செய்யும் கடைகளில் வியாபாரம் 20 வீதம் அதிகரித்திருந்ததாம், தலைநகரத்தில் சென்ற வாரம் பவோடொயினின் துக்கங் கொண்டாடிய பல்லாயிரக்கணக்கான மக்கள் ''ஐக்கியமே பலம்'' என்று எழுதப்பட்ட பதாகைகளை எடுத்துச் சென்றமை அவர்களது பிரிவினைவாதத்துக் கெதிரான உணர்வினை வெளிப்படுத்துவதாயமைந்திருந்தது. பவோடொயினின் மரணத்தால் எழுந்த அபரிமிதமான துயரமும், மன்னர் அல்பேட்டுக்குக் காட்டப்படும் திட்டமிடப்பட்ட ஆதரவும் சில வாரங்களுக்கோ,மாதங்களுக்கோ நிலைத்து நிற்கும் தேசிய ஐக்கிய அணையொன்றைப் புதிய அரசருக்கு வழங்கக்கூடும்.

நடுங்கும் மன்னர்

இந்தத் தேன்நிலவு தவிர்க்கமுடியாத விதத்தில் முடிவுக்கு வரும் செயற்கை அரசமைப்புக்கான எதிர்ப்பு பெல்ஜிய நாட்டில் வாழ்வு முறையாகும். வேறு நாடுகளில் போலவே இங்கேயும் அது பரவுகிறது. இப்போதுள்ள அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாக ஐக்கியத்தின் ஆதரவு பெல்ஜியர்கள் அஞ்சுகிறார்கள் அப்படியானால் தேசியக் கட்சித் தலைவர்கள் ஒரு கூட்டரசை நிறுவத் தவறுமிடத்து பிளண்டேசின் பிரதேச அரசு சுதந்திரப் பிரகடனம் செய்வதோடு, பிரதேச அரசுக்கு இதுவரை வழங்கப்படாத அதிகாரங்களையும் அது தன்வசப் படுத்திவிடும் அந்த நிலையில் ஒரு வலுமிக்க மன்னரே நாட்டைக் கட்டிக் காக்க முடியும். அல்பேட்டுக்கு இந்தப் பலம் இருக்கும். ஆனால் பதவியேற்பின்போது அவரது செயற்பாடு அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை. அவருடைய குறுகிய பிரசங்கத்தின்போது ஏனையோர் காணக்கூடியதாக நடுங்கிய தோடு அசைந்தசைந்து தனது ஆசனத்துக்குத் திரும்பினார். அங்கே அவருடைய உடைவாளும் கீழே விழுந்தது.

எதிர்பார்த்திராத மன்னர், காத்திருக்கும் இளவரசன்

2ஆவது அல்பேட்: தயங்கும் அரச பெருந்தகை

அவர் அரசாள்வார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. அவருங்கூட அதை நினைத்திருக்க மாட்டார். தனது மூத்த சகோதரர் மரணிக்கும் வரை அல்பேட் பீலிக்ஸ் ஹம்பெட் தியொடோர் கிறிஸ்ரியன் யுஜீன் மாரி ஓர் உல்லாசப் பிரியராகவே வாழ்ந்து வந்தார். பெல்ஜியப் பாணியில் அவர் ஒரு போதும் சிங்காசனத்துக்குரியவராக நடந்துகொண்டதேயில்லை. அவருடைய தீவிர உணர்வுகளெல்லாம் அவருடைய மோட்டார் சைக்கிளையும், பகட்டும், அழகும் மிக்க பவோலோ றவ்வோடி கலாப்றியா என்ற இயற் பெயர் கொண்ட இத்தாலிய மனைவியையுமே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. 30 வருடங்களுக்கு முன்னர் அவர் பவோலோவோடு காதல் வயப் பட்டிருந்தபோது தெற்கு இத்தாலியிலுள்ள அவனது வீட்டுக் கண்மையில் ஒரு போதுமே இருந்திராத தொல்பொருள் ஆய்வினை மேற்கொள்வதாகக் கூறிப் பெல்ஜியத்தின் குகுகுப்பு ஆலைகளை மூடிவிட்டார். அரச பாரம் பரியங்களையெல்லாம் உதறிவிட்டு அவர் தனது புதிய மனைவியை பாரிசின் காதற் சாகசவிடுதிக்கு இட்டுச் சென்றார். அல்பேட்டின் செயற்பாடுகள் எதுவும் அவமானத்துக் குரியனவாயிருக்கவில்லை. எனினும் சன்மார்க்க நெறி பிறழாத அவரது கண்ணனின் நடைமுறைகளுக்கு முரண் பட்டவையாகவே இருந்தன.

இப்போது பெல்ஜியப் பின்னல் ''டாக்டர்கள்'' மும்முரப் பணியிலிறங்கியுள்ளார்கள். அல்பேட் எப்போதுமே மன்னராகும் விருப்பத்துடனேயே இருந்திருக்கிறார் என்கிறார்கள் அவர்கள். பெல்ஜியத்தின் பிறான்கோபோன் தினசரியான லோசொயர், 2 ஆவது அல்பேட்டின் பொதுவாழ்வு அனுபவம் அவருக்குக் கைகொடுக்கும் என்று எழுதியுள்ளது. தனது பெயரைப் பதிவு செய்யும் அளவுக்கு இல்லாது போகலாம், அரச வைத்தி

யர்கள் மறுத்துள்ள போதும் புதிய மன்னர் ''பாக்கின்சன்'' வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளார் என்ற வதந்தி காட்டுத் தீயாகப் பரவுகிறது.

பிலிப்பே: பயிற்சிபெறும் மன்னர்

இங்கிலாந்தின் வேல்ஸ் இள வரசரைப் போலவே பிலிப்பே லியோப் போல்ட் லூயிமாரி, தான் இன்னமும் அமரத் சிங்காசனத் துக்காக வாழ்வு பூராவும் பயிற்சி பெற்று வருகிறார். பவோடொயி னின் பின்னர் ஆட்சிப்பீடமேறுவது தந்தையான அல்பேட் அல் லாது மகன் பிலிப்பேயாகவே இருக்கும் என்று பெல்ஜிய மக்கள் நம்பி வந்தனர். பல பத்தாண்டுக ளாகப் பழைய மன்னர் தன் பெறா மகனைக் குடும்பத் தொழிலுக்கா கப் பயிற்றி வந்தார். பவோடொ யின் வாழ்ந்திருந்தால் 1996 ஆம் ஆண்டளவில் நிச்சயமாகப் பிலிப் பேயுக்காக முடி துறந்திருப்பார்.

பவோடொயினின் மரணத்தின் பின்னர், அல்பேட்டின் ஆலோசகர் கள் அவருடைய மகன் முடி சூடு வதற்கு வயது போதாதவராக உள் ளார் என்று ஆலோசனை வழங்கி னர். பிலிப்பே மேலும் சிறிது பயிற்சி பெறுதல் நலம் என்றும் கூறினர். 33 வயது மிகச் சிறிய வயது என்பது அவர்கள்தம் கருத்தா கும். அல்பேட் முடியேற்பதைப் பெல்ஜியர்கள் அதிர்ச்சியோடு அறிய வேண்டியிருந்தது. தனிமை விரும்பியாக இருந்தாலும், செல் வாக்கும் அடிகும் மிக்க இளவய தினரான பிலிப்பே முடிசூடிப் பெரிய தந்தையைப்போல் நல்லாட்சி புரிய வேண்டும் என்றே அவர்கள் விரும் பினார்கள். இப்போது அவர்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. பிலிப்பேயும் அவ்வாறே. தற்போது அவர் ஊக்கம் அதிகமற்ற பெல்ஜிய வர்த்தகத்தூதுக்குழுவின் கௌரவத் தலைவராக உள்ளார். உண்மை யில் பிரமச்சாரியான இளவரசரின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடமாய் தனக்குகந்த ஒரு அரச குடும்பப் பெண்ணை மனைவியாகத் தேர்ந் தெடுப்பது தான்.

நியூஸ்வீக், ஓகஸ்ட் 23, 1993

பொஸ்னியா: மரணத்தின் முத்தம்

சென்ற ஜூன் மாதம் பொஸ் னிய ஜனாதிபதி அலிஜா இசெற் பேகோவிக் தனது குடியரசின் தெற்குப் பாகம், மத்திய பாகங் களிலிருந்து குறோசிய மற்றும் சேர்பியப் படைகளை விரட்டி யுள்ளார். இந்த நடவடிக்கையின் பிரதிபலன் அவருடைய முஸ்லிம் இனத்தவர்களுக்கு இப்போது கிடைக்கத் தொடங்கி விட்டது. எச்.வீ.ஒ என்று சுருக்கமாகக் கூறப்படும் குறோசியப் படைகள் வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சராயேவோ நகரின் மீது போட்ட பிடி தளர்ந்தாலும், வேறு பகுதிகளிலும் முஸ்லிம்கள் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார்கள்

மொஸ்ரார் நகரை அண்மித்து அதைச் சுற்றி வளைக்கவும் தொடங்கி விட்டார்கள். எச்.வீ.ஒப் படையினர் வெறியுடன் தாக்கிப் போர்க் கைதிகளாகப் பிடிப்பவர் களை மிருகத்தனமாக நடத்து கிறார்கள். யோசுப் வயது 20, பொறியியல் மாணவன்-1 முஸ்லிம். இவன் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களுடன் கைதாகியுள்ளான். இவனையும், இன்னும் இரு மாண வர்களையும் குறோசிய நாட்டுப் படைகள் ஒருமுத்தமிடும்படி பணித்தனர். இவர்களுடைய முத்தம் அவர்களுக்கு திருப்தி கொடுக்கவில்லை. மாணவர்கள் அடித்து நொருக்கப்பட்டனர். யோசுப்பின் தோள் எலும்பு முறிந்தது. பின்பு காற்றுப்புகாத கட்டடம் ஒன்றில் இவனும், இன் னும் பலரும் அடைக்கப்பட்டனர். இங்கு சிறைவைக்கப்பட்ட பெண் கள் பலர் ''இனச் சுத்திகரிப்புச்'' செய்யப்பட்ட பரிதாபத்திற்குரிய வர்கள். இந்த சிறைச்சாலையைச் சுற்றிய வெளி நிலத்தில் 18 இலி ருந்து 60 வயதிலான 6,000 முஸ் லிம்கள் தடுத்து வைக்கப்பட்டிருந் தனர். இது போன்ற நான்கு தடுப்பு முகாங்கள் மொஸ்ரார் நகரைச் சுற்றி இருக்கின்றன. இட நெருக்கடி, வசதிக்குறைவு, உணவுத்தட்டுப்பாடு என்ற பல இன்னல்கள் தடுப்பு முகாங்கள் யாவற்றிற்கும் பொதுவான அம்சங் கள். பட்டினிச் சாவுணவே இவர் களுக்கு வழங்கப்படுகின்றது. இவர்களுடைய சொத்துக்கள் யாவற்றையும் தங்கள் பேரில் எச்.வீ.ஒ இராணுவத்தினர் கட் டாயப்படுத்தி மாற்றிக் கொண் டுள்ளனர். விடுதலையை விரும்பு வோர் ஜனாதிபதி அலிஜா இசெற்பேகோவிக் கடைப்பிடிக்கும் கொள்கைகளை எதிர்ப்பதாக எச்.வீ.ஒப்படைக்கு எழுத்து மூலம்

தெரிவிக்க வேண்டும். சர்வதேச யுத்த மரபுகள் ஒன்றும் இங்கு காணப்படவில்லை. கைதிகள் போரின் முன்னணியில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இருபகுதியும் ரவைகளைப் பரிமாறிக் கொள்ள நடுவில் கைதிகள் பதுங்கு குழிகள் வெட்டியும், மண்மூடை நிரப்பியும் வேலை செய்கிறார்கள். உயிர் தப்புவோர் மிகக்குறைவு.

சென்ற வாரம் யோசுப் எப்படியோ தனது விடுதலையைப் பெற்றுள்ளான். இத்தாலியில் அகதியாக இருக்கும் தனது சகோதரனிடம் தஞ்சமடைவது தான் இவன் திட்டம். மொஸ்ரார் நகரிலிருந்து தப்புவது பெரும் அதிர்ஷ்டம். அதை முற்றாகக் கைப்பற்ற முன்பாகவே எச்.வீ.ஓ படையினர் அது குறோசிய இனத்தின் நகரமென்று பிரகடனம் செய்துள்ளனர். உணவும், உடுப்பும், மருந்துமின்றி வெளி உலகத் தொடர்பற்றுக் கிழக்கு மொஸ்ராரில் மாத்திரம் 35,000 முஸ்லிம்கள் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர். அகதிகளுக்கான ஐ.நா.ஆணைக்குழு கண்ணீர் விடுவதன்றி வேறொன்றும் செய்வதாகக் காணோம். ஓர் அதிகாரி சொல்கிறார்: ''முன்பு நான் அறிய நிலைமை மிகமோசம். இப்போது எப்படியென்று என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை'' என்று. இங்குஇப்போதுதண்ணீர்ப்பஞ்சமும் நிலவுகின்றது. குறோசியப் படைகளுடன் பேச்சுக்கள் நடத்திச் சென்ற வாரம் சில மருந்து வகைகளை அகதிகளுக்கான ஐ. நா. ஆணையாளர் கிழக்கு மொஸ்ராருக்கு அனுப்பியுள்ளார். இன்னும் வேறு உதவிகளையும் அவர் அனுப்ப உத்தேசித்துள்ளார். ஆனால் எச். வீ. ஓ படையினரின் பிடியிலுள்ளவர்களின் விதியை யாரும் அறியமாட்டார்கள்.

மே மாதம் மொஸ்ரார் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேறும் எச். வீ. ஓ. படையினர்

ஐ.நா. அல்லது செஞ்சிலுவைச் சங்கம் இவர்களுடன் தொடர்பு கொள்வதை எச்.வீ.ஓ.தடுத்து வருகின்றது. முதலில் முஸ்லிம்களிடம் அகப்பட்டிருக்கும் குறோசிய இனத்தவர்களின் நலனைக் கவனியுங்கள். இது தான் அவர்களின் ஆணை. பொஸ்னியாவில் உள்ள சிறிய தீவுகளில் குறோசிய,சேர்பிய இனத்தவர் மத்தியில் முஸ்லிம்கள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களைப் பற்றிய செய்திகள் வெளி உலகிற்கு எட்டுவதில்லை. ஐ. நா. இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கிடையில் இவர்கள் மடிந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. நிலைமை அத்தலை வருத்தத்திற்குரியதாகும்.

ஐ. நா. எல்லா இனத்தவர்களுடனும் பேசி முஸ்லிம்மக்களின் பாதுகாப்பு விஷயமாக ஓர் உடன் பாட்டிற்கு வரக்கூடிய சந்தர்ப்பம் மிகக்குறைவு. எல்லா இனங்களும் கூடிய நிலப்பரப்பைத் தங்கள் பிடியிற் கொண்டு வருவதையே குறியாக உள்ளன. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் சனத்தொகையில் 44 வீதமாயிருந்த முஸ்லிம்கள் நிலப்பரப்பில் 10 வீதத்தைத்தான் தமது பிடியில் வைத்திருக்கின்றனர். இதற்கிடையில் 40 வீத நிலப்பரப்பு தங்களுக்கு வர வேண்டும் என்பது அவர்களின் அவா. சமாதானப் பேச்சுக்களுக்குப் பொறுப்பான ஒவென் பிரபு, ''யாவருக்கும் கூடுதல் நிலமே குறியாயிருக்க, சமாதானப் பேச்சுக்கள் பின் தள்ளப்படுகின்றன'' என்று பிரலாபிக்கிறார். ஆனால் கிழக்கு மொஸ்ரார் வாதிகளுக்கு நிலமும் வேண்டாம்; ஆட்சி உரிமையும் வேண்டாம் என்றளவுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது.

சரம் , ஒகஸ்ட் 30, 1993



வரலாறு மீட்டெடுக்கப்படுகிறது. 48 வருடங்களுக்குப் பின்னர் கடல் மேற்பரப்பிற்கு யூ–534 வருகிறது.

கடல் ஓநாய் ஒன்றை நீரிலிருந்து உயர்த்தல்

நாஜி இரகசியங்களையும், பொக்கிஷங்களையும் வைத்திருந்ததாகக் கருதப்பட்ட இரண்டாம் உலக மகா யுத்த நீர்மூழ்கிக் கப்பல் நீரின் அடியில் இருந்து மீட்கப்படுகின்றது.

1945 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆந் திகதி கீல் துறைமுகத்திலிருந்து ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் யூ–534 புறப்படும் போது வழமையிலும் பார்க்க 5 தொன் கூடுதலான பொருட்களை அதாவது, உச்ச நிறையான 17 தொன் பொருட்களை எடுத்துச் சென்றது. உருக்குலையும் மூன்றாவது றைக், ஜேர்மன் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் நாஜிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலிருந்து கொள்ளையடித்த பொக்கிஷங்களுடனும், இரகசிய ஆவணங்களுடனும் 20 நீர்மூழ்கிக் கப்பல்களில் நாட்டைவிட்டு வெளியேறுவதாகப் பிரித்தானியப் புலனாய்வுக்குச்செய்திகள் கிடைத்தன. இரு நாட்களுக்குப் பின்னர் நேசநாட்டு விமானங்கள் குண்டுகள் வீசி, டென்மார்க்கிற்கு அண்மையில் உள்ள கட்டெகட் கடலில் அந்த நீர்மூழ்கிக் கப்பலை மூழ்கடித்தன.

ஆழ்கடலின் அடிக்கு யூ – 534 கொண்டு சென்ற இரகசியங்கள் யாவை? பல வருடங்களாக டென்மார்க் நாட்டு நீரில் மூழ்குபவரான ஆகே ஜென்சனுக்கு இக் கேள்வி பிரச்சினையாகவே இருந்து வந்தது. 1986 ஆம் ஆண்டு டென்மார்க்கின் அன்ஹோல்ஸ் நகரத்திற்கு 25 கிலோ மீற்றர் வடகிழக்கில் கப்பல் அமிழ்ந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்ட பின் கப்பலை மீட்கப் பணம் சேகரிப்பதில் ஜென்சன் ஈடுபட்டார். இக் கப்பலில் இருந்து பெறப்படும் பொருட்களை ஓர் அரும் பொருள் காட்சியகத்தில் வைக்கும் நோக்குடன் கார்சென் றீ என்னும் டென்மார்க் நாட்டுக் கோடீஸ்வரர் பணம் செலவிட்டார். சென்ற வாரம் சிமிற் ராக் என்ற டச்சு நாட்டுக் கடல் சம்பந்தமான மீட்டெடுப்பு நிறுவனத்தின் தொழிற் குழுவினர் யூ – 534 ஐக் கடலின் மேற்பரப்பிற்குக் கொண்டு வந்தனர்.

உள்ளே இருக்கும் பொருட்களை வெவ்வேறாக ஒழுங்குபடுத்தப் பல மாதங்கள் செல்லும். உடன் ஆராய்வில் பல பொருட்கள் பழுதடையாமல் இருப்பது காணப் பட்டது. உயர் நாஜிகள் கப்பலில் சென்றார்களா என்பதற்கு ஒரு ஆதாரமும் தற்போது இல்லை. கடலில் தாழும் பொழுது தப்பிய மாலுமிகள் கப்பலில் சாதாரண பொருட்களே கொண்டு செல்லப் பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் மீட்புப் பணியில் ஈடுபடுபவர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இத் திட்டத்தில் வேலை செய்யும் விவி ஒடர் கூறுகிறார்: '' இறைச்சி, மரக்கறி வகைகள் சேர்ந்த கூழான கூலாஷ் பேணிகளில் கூலாஷ் இல்லாமலும் இருக்கலாம்'' என்று.

இந்த நீர்மூழ்கியை மீட்கும் பணியில் டானிஸ் குழுவினர் இது வரை 3 மில்லியன் டொலரைச் செலவழித்துள்ளனர். இதுவரையும் 100 போத்தல் வைன், அழுகிய வெண்ணெய்க் கட்டிகள், பைனாகுலர், 175 கர்ப்பத்தடை உறைகள் ஆகியனவே மீட்கப்பட்டுள்ளன.

ரைம், செப்டெம்பர் 6, 1993.

யூ - 534ன் விபரங்கள்

IXC / 40 யூ-போற் (அ–து நீர்மூழ்கிக்கப்பல்)
நிறை - 1140 தொன்.
நீளம் - 76.8 மீற்றர்.
கொண்டுசெல்வது:- 52 மாலுமிகள் (அ–து -கடற் படைக் குழுவினர்)
15 ரோப்பிடோஸ் (அ–து நீரினூடாகச் செலுத்தப்படும் குண்டு)
3 விமான எதிர்ப்புத் துவக்குகள்

வெளியிடங்களிலுள்ள ருஷ்யர்கள் பணயப் பொருட்களா?

அல்லது கௌரவம் பெற்ற இராணுவ வீரர்களா?

சோவியத் ருஷ்யக் கூட்டமைப்பு சிதறியதுடன், தாம் இருபத்தைந்து மில்லியன் நாட்டுத் தோழரை விட்டு வந்ததாக சேர்ஜி ஸ்ரான் கோவிச் கூறியுள்ளார். இவர் ருஷ்யத் தலைவர் பொரிஸ் யெல்சினுடைய உன்னதமான அரசியல் ஆலோசகர்களில் ஒருவர். அவர்கள் அனைவருக்கும் ருஷ்யாவில் உறவினருண்டு. இதனால் அவர்களைச் சூழ்ந்த பகுதிகளில் தகராறுகள் ஏற்படும் போதெல்லாம் இந்த குடும்பப் பிணைப்பின் பயனாகத் திடீரென உணர்ச்சிகரமான நிலை பிரதிபலிக்கலாம்.

மிகவும் அண்மையில் இப்படிப்பட்ட உணர்ச்சியைத் தூண்டும் நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணம் எஸ்தோனியாவில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பங்கினரான ருஷ்ய மொழி பேசுவோருடைய தலைவிதியைத் தீர்மானிப்பதைப் பற்றியதாகும். தம்முட்பலர் பிறந்த மண்ணிலேயே தம்மை அந்நியர் போன்ற நிலையை ஜூன் மத்திய பகுதியில் எஸ்தோனியன் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஏற்படுத்திருள்ளது என்பதனாலாகும். இச்சட்டத்தின்படி அவர்கட்கு எஸ்தோனியன் பிரஜா உரிமையைப் பெறவோ, அல்லது வதிவிட அனுமதியைப் பெறவோ இரண்டு ஆண்டுகள் அவகாசமே அளிக்கப்பட்டுள்ளது. இரண்டில் ஒன்றை யாவது அவர்கள் செய்யாவிடில் அவர்கள் நாட்டைவிட்டு உதைத்துத் தள்ளப்படுவார்கள். பிரஜா உரிமையைப் பெறுவதற்கு அவர்கள் ஒரு மொழிப் பரீட்சையில் தேர்ச்சியுற வேண்டும். ஆனால் இப் பரீட்சையில் தற்போது பல ருஷ்யர்கள்தோல்வி அடைவார்கள். இதற்கிடையில் எஸ்தோனியருக்கு மாத்திரம் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இதனால் எஸ்தோனியாவின் இரண்டாவது பெரிய நகரமாகிய நார்வா போன்ற பட்டிவங்களில் வாழ்கின்ற சனத்தொகையில் 95 வீதத்திற்குக் கூடுதலான ருஷ்யர்கள் வாக்குரிமையற்றவர்களாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

(நாட்டிற்கு வெளியே உள்ள 25 கோடி ரஷ்யர்கள் அவர்களுடைய விருந்தாளிகட்கும் ருஷியாவுக்கும் பெரும் பிரச்சனையாக உள்ளனர். இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் வியாகூல மடையக் கூடியதாக தீங்கிழைக்கின்றது.)

இச்சட்டம் சம்பந்தமாக எஸ்தோனிய பாராளுமன்றத்தின் வாக்களிப்பு திரு. யெல்சின் தனது மூன்றாண்டுகால ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் மிகவுங் கடுமையான வெளிவிவகாரக் கொள்கைக் கூற்றை வெளியிடத் தூண்டியுள்ளது. ''எல்லா எண்ணங்களுக்கும், நோக்கங்களுக்கும் நாங்கள் இனச் சுத்திகரிப்பு நடைமுறைபற்றியும், எஸ்தோனியன் விபர முறையான இனத் துவேஷக் கொள்கையைப் (Apartheid) புகுத்துவதையிட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம்''என்று ஜூன் 24 இல் திரு. யெல்சின் கூறியுள்ளார். அவர் அத்துடன் சேர்த்துக் கூறியது என்னவெனில், ''எஸ்தோனிய அரசாங்கம் சில பூகோளம் சார்ந்த அரசியலையும், குடிகள் சம்பந்தமான வாழ்க்கை நிலை விபரங்களையும் மறந்துவிட்டதென்பதாகும். ருஷ்யா அவர்கட்கு இதனை ஞாபகப்படுத்தும் நிலை உண்டு'' என்பதுமாகும்.

இக்கூற்று அங்கு இராணுவத்தலையீடு ஏற்படும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்தபோதிலும் உண்மையில் பொருளாதாரத் தலையீட்டினையே ருஷ்யா கையாண்டது. சில நாட்களுக்கு எஸ்தோனியாவுக்கு வாயு விநியோகத்தை ருஷ்யா

துண்டிக்க முற்பட்டது. அதே நேரத்தில் ஐரோப்பாவில் பாதுகாப்பும், கூட்டுறவும் பற்றியமாநாடும், ஐரோப்பிய சபையும் இச்செயலை ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கோபப் பார்வையைச் செலுத்த முற்பட்டனர். அவர்கள் எஸ்தோனியரின் சட்டம் மனித உரிமையை மீறவில்லை என்று தெரிவித்ததோடு அதன் பலாபலனைப் பற்றி மனம் வருந்தினர். இதனால் எஸ்தோனியர் மீண்டும் சிந்திக்கக் கூடப் பாடுடையவர்களானார்கள். எஸ்தோனிய ஜனாதிபதி அந்தச் சட்டத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டார். திரும்பவும் அதனை மீள் பரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பி விட்டார்.

அங்கு சமாதான நிலையைத் தோற்றுவிக்க அனுகூலமாக இருந்த காரணி ருஷ்யாவுடன் பிணக்குறுவதால் எஸ்தோனியா பெரிழப்புக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படும். முன்னைய ருஷ்யக்கூட்டமைப்பில் எஸ்தோனியாவின் பொருளாதாரச் சீர் திருத்தங்கள் மிகவும் கடுமையானதாகவும், மிகவும் வெற்றிகரமானதாகவும் இருந்துள்ளன. ஏனைய பகுதிகளில் முழுமனதுடன் செய்யப்படாத சீர்திருத்தங்கள் பொருளாதாரத்திற்காக ருஷ்யாவின் அனுசரணை அவ்வளவு தேவைப்படவில்லை. தீவிர தேசிய வாதத்துடன் பொருளாதாரத் தோல்வியை மறைத்து ஆதாயத்தைப் பெறக் கூட அவர்கள் எதிர் பார்க்கலாம்.

முன்னைய குடியரசுகளில் இராணுவம் அங்கிருந்ததால் விடயங்கள் சிக்கலாகுவதற்கு ஏதுவாகியது. இதற்கு உதாரணம் மோல்டோவாவாகும். மோல்டோவாவில் பொருளாதாரம் சீர்குலைந்து காணப்பட்டது. அந்த நாட்டின் பிரதிப் பிரதமர் ஜூன் மாத இறுதியில் தமது நாட்டுப் பொருளாதாரம் முழுவீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றது எனத் தெரிவித்தார். அங்கு அதிகப்படியான ருஷ்யத் துருப்பினரும் இருந்தனர். எதிர்பார்க்கப்படும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் போது நீஸ்டர் நதிக்கு மேற்கிலுள்ள குடியரசின் பிரதான பகுதிக்கும், நதியின் கிழக்குக் கரையில் உள்ள

தமக்கு தாமே நீஸ்டர் குடியரசு என்று பெயர் சூடிக் கொண்டுள்ள பகுதிக்கும் இடையில் பகைமைத் தீ பற்றி எரியலாம். கடந்த வருடம் இந்த இரு பகுதிகட்கும் இடையில் சண்டை மூண்டபோது நூற்றுக் கணக்கானோர் மடிய நேரிட்டது.

தளபதி அலெக்ஸாண்டர் லேபெட் ஓர் அனுபவம் வாய்ந்த ஆப்கான் போராளி. இவர் ருஷ்யத் துருப்புக்களை நீஸ்டர் குடியரசுக்கு ஆதரவாக மோல்டேவியருக்கு எதிராகப் போரிட அனுப்பிய போது போர் நிறுத்தப்பட்டது. அந்த ருஷ்யத் துருப்புக்கள் தளபதி லேபெட்டினால் தலைமை தாங்கப் பட்டன. 1945 இலிருந்து நீஸ்டர் குடியரசின் தலைநகராகிய திராஸ் போலில் நிலைகொண்டுள்ளன. சோவியத் யூனியனின் தென்மேற்குப் பகுதியைக் காவல் புரிவதற்குப் பொறுப்புள்ளவை. தனது இராணுவத்தைத் திரும்பவும் ருஷ்யாவுக்குக் கொண்டுவருவது பற்றி ஜூன் மாதத்தில் ருஷ்யாவிற்கும், மோல்டேவியாவுக்கு மிடையில் நடைபெற்ற ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முழுமையாகப் பயனளிக்கவில்லை எனத் தளபதி லேபெட் கூறுகின்றார். திராஸ் போலில் நீண்டகாலம் தங்க நேரிடுமெனத் தளபதி லேபெட் எதிர் பார்க்கிறார். அதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒரு காரணம் அவர் செல்வதற்கு வேறு இடமில்லை என்பதாலும், இரண்டாவது காரணம் அப் பகுதியில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்குத் தனது இராணுவம் அங்கிருத்தல் இன்னும் அவசியம் என்றும் கூறுகிறார்.

மோல்டோவாவிலிருந்து பிரிந்து சென்றுள்ள பகுதியுடன் ருஷ்யா தொடர்ந்து இராணுவ, அரசியல் தொடர்புகளை வைத்துக்கொள்ளுதல் சர்வதேச சட்ட விதிகளை மீறும் செயல் என்று மோல்டோவா பாராளுமன்றத்தின் தலைவர் பீற்ரூலுசிஞ்சி கூறுகிறார். லேபெட்டின் 14 ஆவது இராணுவம் ருஷ்ய இனத்தினரைப் பாதுகாக்க நீஸ்டர் குடியரசில் தேவை என்னும் நொண்டிச்சாட்டை பீற்ரூலுஞ்சி நிராகரிக்கிறார். அவரின் பிரகாரம் நீஸ்டர் குடியரசில் மோல்டோவா இனத்தையும், உக்கிரேவியன் இனத்தையும் தொடர்ந்து மூன்றாவது பெரிய இனமாகவே ருஷ்ய இனம் காணப்படுகின்றது என்பதாகும். அன்றியும் முக்காற் பங்கு ருஷ்யரும் நீஸ்டர் நதியின் மேற்குக் கரையிலேயே உள்ளனர்.

ஆனால் அங்கு தளபதி லேபெட்டின் 14 ஆவது இராணுவப் பிரிவு இருக்கும் வரை பழைய முறைகளைத் தழுவியுள்ள நீஸ்டர் குடியரசின் பொதுவுடைமைக்

கொள்கையாளரான அநேக தலைவர்கட்கு ஒரு சக்தி வாய்ந்த இராணுவப்படையினரின் ஆதரவு கிடைக்கும். அத்துடன் அவர்கட்குப் பால்டிக் அரசுகளின் மாஜி அதிகாரிகளது உதவியும் உண்டு. அவர்கள் தற்போது நீஸ்டர் குடியரசின் சொந்தப் பாதுகாப்புப் படைகளின் சிரேஷ்ட பதவிகளை வகிப்பதோடு எல்லைப் புறப் படைகளிலும் இடம் பெற்றுள்ளனர்.

நீஸ்டர் குடியரசின் தலைவர்கள் ருஷ்யாவுடன் இணையமுடியாது. ஏனெனில் அவர்களுக்கு மிகவும் அண்மையில் உள்ள ருஷ்யப் பகுதி 600 கி. மீ. (375 மைல்) க்கு அப்பால் உள்ளதாகும். ஆனால் அவர்கள் இனவாரியான ருஷ்யருடன் மூன்றுஉக்கிரேன் பகுதிகளாகச் சிநேகக் கூட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்பகுதிகளாவன: ஒடெஸ்ஸா, கிரிமியா, டொனெட்ஸ்க் பகுதியைச் சூழ்ந்துள்ள டொன்பாஸ் நிலக்கரிச் சுரங்கப் பகுதி ஆகியன.

இங்கெல்லாம் ருஷ்ய மொழி பேசுவோர் உக்கிரேனியர்களிலும் கூடுதலாக உள்ளனர். அவ்வாறே அவர்கள் நடந்து கொள்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு என்னவெனில், இப்பகுதிகள் உக்கிரேனிலிருந்து பிரிந்து நீஸ்டர் குடியரசுடன் சேர்ந்து தனி அரசை அமைத்துக் கொள்ளும் என்பதாகும். அப்புதிய அரசு நொவோ ரஷ்யா (புதிய ருஷ்யா) என அழைக்கப்படும். சென்ற மாதம் இடம் பெற்ற உக்கிரேன் நிலக்கரிச் சுரங்கத்தினரின் வேலை நிறுத்தம் மேலே கூறப்பட்ட எதிர்பார்ப்புச் சிறிதளவில் கைகூடாத நிலையை எய்தி உள்ளது. ஏனெனில் இந்த நிலக்கரிச் சுரங்க வேலை நிறுத்தம் மேற்கு உக்கிரேனிற்கும், கிழக்கு உக்கிரேனிற்கும் இடையில் முதன்முறையாக முரண்பாடான கருத்துக்கட்கு இடமளித்துள்ளது.

நாட்டுக்கு வெளியில் உள்ள ருஷ்யர்கள் ஏற்படுத்தியுள்ள தொந்தரவு ருஷ்ய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டதாகும். இத் தொந்தரவுகளில் உட்படுத்தப்பட்டால் சிறு தகராறுகள் சர்வதேசத் தகராறுகளாக மாறிவிடக்கூடும். இதுவரை முக்கிய பிரச்சினை என்னவெனில், ருஷ்யாவின் வெளி எல்லைப் புறங்களில் உள்ள கொந்தளிப்புள்ள, ருஷ்யர், கிரெம்ளின் உடையஆதரவைப் பெற்றுள்ளனரா என்பதாகும். அவ்வாறு அவர்கள் ஆதரவைப் பெற்றிருப்பின் எந்த அளவுக்கு அதனை மொஸ்கோ கட்டுப்படுத்த முடியும் என்பதுமாகும். புதிய நோக்கு என்னவெனில், ருஷ்ய அரசாங்கம் ஒரு குழப்பத்திற்கு வெளியில் உள்ள ருஷ்யருக்கு உதவி அளிக்காவிட்டாலும் அல்லது அதனைக் கட்டுப்படுத்த முற்படாவிட்டாலுங் கூட அவற்றால் உறிஞ்சப்பட்டு (ஈர்க்கப்பட்டு) பாதிப்புக் குள்ளாகலாம்.

தளபதி லேபெட் மோல்டோவாவில் ஏறக்குறைய முழுமையான குழப்ப நிலை உள்ளதாக விபரிக்கிறார். அங்கு ஒரு போர் வேண்டுமெனப் போருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிஉண்டென்பதாகக் கூறுகிறார். அதற்கு அவர் கூறும் காரணம்: போரின் போது "அரசியல் விளையாட்டுக்களில்" ஈடுபடும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. கட்டுப்படுத்தப்படாத மனிதாபிமான பரோபகார உதவிகளைக்கொள்ளையடிக்கலாம் என்ற மனப்பாங்கு போருக்கு ஆதரவு தெரிவிக்கின்ற கட்சியினரிடம் காணப்படுகின்றது. இக் குழப்பநிலை முன்னர் ஒருகாலத்தில் மிகவும் கட்டுப்பாட்டுடன் இயங்கிய கருங்கடல் கடற்படைக்குக் கூடப் பரவியுள்ளது.

எல்லைப்புறங்களில் காணப்படும் கொடூரமான செயல்கள் அதிகரிக்கும் இவ்வேளையில் ருஷ்யத் தலைவர் யெல்சின் முன்னொரு காலத்தில் ருஷ்யாவின் எல்லைப் புறங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய கொலாக்ஸ் முறையை மீண்டும் தாபிக்கக் கட்டளையிட்டுள்ளார். இருபத்து நான்கு இராணுவ மாவட்டங்களாகப் பிரித்து இராணுவத்தைச் செயற்படவைக்க முயற்சிகளை ஆரம்பித்துள்ளார். தளபதி லேபெட் தன்னையும் இவர்களுள் ஒரு கொலாக்காய் விபரிக்கின்றார். அத்துடன் நிருயெல்சினுடைய இம்முடிவு பழங்கால நீதி நன்னடத்தைக்கு இட்டுச் செல்கின்றது என்றும், அதன்படி கௌரவம், கடமை, தாயக மண்ணிற்காக தனது உயிரை அர்ப்பணிக்கும் தயார் நிலை, நீதி என்பனவற்றை நன்னடத்தையின்முக்கியகுறிக்கோளாகவும் குறிப்பிடுகிறார். அதனால் ருஷ்யாவின் அயலவர்கள்' கொலாக்ஸ மூலம் மீண்டும் பழைய ருஷ்யப் பேரரசை 25 மில்லியன் ருஷ்யருடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்ற போலிக் காரணத்தின் பேரில் மேற்கொள்ளப்படுமோ என்று அதிசயித்த வண்ணம் உள்ளனர்.

த எக்கனமிக் ஜூலை 10, 1993

ருஷ்யாவுக்கு வெளியேயுள்ள ருஷ்யர்கள் - 1992 சனத்தொகையின் நூற்று விதம்

கஸகிஸ்தான்	-38
லாட்வியா	-34
எஸ்தோனியா	-30
உக்ரேன்	-22
கிர்ஷிஸ்தான்	-22
பைலோரஷ்யா	-13
துர்க்மெனிஸ்தான்	-10
லிதுவேனியா	-9
உஸ்பெக்கிஸ்தான்	-8
தஜிகிஸ்தான்	-8
அசர்பைஜான்	-6
ஜோர்ஜியா	-6
மூர்மேனியா	-2

அமெரிக்கா

கென்னடியைச் சுட்டது யார்?

இந்த வருடம் அடுத்த மாதத்துடன் (நவம்பர்) அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி கொல்லப்பட்டு முப்பது (30) ஆண்டுகள் முடிகின்றன. வருடங்கள் உருண்டோடினாலும் இது வரை கென்னடியின் கொலையாளி யாரென்பது ஐயந்திரிபறத் தெரிய வரவில்லை. நூற்றுக்கணக்கான நூல்கள் இக்கொலை பற்றி எழுதப்பட்டுள்ளன. நிழற் படங்களும், தொலைக்காட்சிச் சித்திரங்களும் வெளிவந்துள்ளன. அமெரிக்க அரசு உயர் நீதிமன்ற நீதியரசர் வாறன் (WARREN) என்பவர் தலைமை தாங்கும் ஆணைக்குழுவை நியமித்து விசாரணையும் செய்துள்ளது. ஆனால் மர்மம் துலங்குவதற்குப் பதிலாகச் சந்தேகங்களும், வாதப்பிரதி வாதங்களும் கூடுதலாக வளர்ந்துள்ளன.

சென்ற வாரம் ஜனாதிபதி கென்னடியின் கொலை சம்பந்தமாகத் தன்னிடமுள்ள ஆவணங்கள், நிழற்படங்கள், செய்திகள் யாவற்றையும் பொதுமக்கள் பார்வைக்கு அரசு திறந்து விட்டுள்ளது. சி.ஐ.ஏ உளவு ஸ்தாபனத்தின் காப்பகத்தில் மாத்திரம் 160,000 ஆவணங்களும், குறிப்புகளும் இருக்கின்றன. தேசியக் காப்பகத்தின் கிழக்கு ஆய்வு கூடத்தில் புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும், பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் இத்தினத்தில் குழுமியிருந்தனர். இந்த ஜனக்கும்பலைப் படத்தில் பதிவு செய்யப் பல படப்பிடிப்பாளர்கள் அங்கு பிரசன்னமாயிருந்தனர். இந்தக் கும்பலில் ஒரு குரல் மிகவும் பலமாகக் கேட்டது: ''ஜனாதிபதியைக் கொன்றது பிடல் கஸ்ரோ தான்'' என்று. இதில் உண்மை உண்டா இல்லையா என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. இது ஒரு தனிப்பட்ட அபிப்பிராயம். அவ்வளவு தான்.

இளம் ஜனாதிபதி கென்னடி

Tamileelam Archive

கொலையின் காரணகர்த்தா யார்? ''ஜே எப் கே'' (JFK) என்ற சினிமாப் படம் சொல்வதில் உண்மை உண்டா? இந்தப் படத்தின் முடிவு என்னவென்றால் உப-ஜனாதிபதியாகக் கென்னடியுடன் பதவியிலிருந்த ஜோன்சனின் ஏவலில் இராணுவ உயர் அதிகாரிகளும், உளவுப்படை அதிகாரிகளும் கூட்டாக இந்தக் கொலையைச் செய்துள்ளனர். இந்தப் படம் எழுப்பிய சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக அமெரிக்கப் பேராயர் மன்றம் (காங்கிரஸ்-Congress) 1992 இல் முயன்றுள்ளது. சி.ஐ.ஏ,எப்.பி.ஐ.போன்ற ஸ்தாபனங்களும், பென்ரகன் எனப்படும் அதிஉயர் இராணுவத் தலைமைப்பீடமும் 300 நாட்களுக்குள் தம்வசம் உள்ள சகல ஆவணங்களையும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்டளை இட்டுள்ளது. சென்றவாரம் 301 ஆம் நாளில் 800.000 பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் வெளியரங்கப்படுத்தப் பட்டுள்ளன.

ஆனால் ஆவணங்கள் பல வெளிவந்தாலும் உண்மை வெளிவர இன்னும் பல வருடங்கள் செல்லும் போல் தோன்றுகின்றது. அதுவரை ஒவ்வொரு ஆர்வலரும் தனது இஷ்டம் போலக் குற்றவாளி யாரென்பதை நிரூபிக்கலாம். தற்சமயம் இன்னுமொரு திசையில் ஆய்வுகள் நடக்கின்றன. கொலை நடந்த ஒருவாரத்திற்குள் அமெரிக்க அரசு எவ்வாறு நடந்து கொண்டது என்பதை அறிய நியூஸ்வீக் சஞ்சிகை உட்பட பல அமெரிக்க முன்னணிப் பத்திரிகைகள் ஆர்வங் காட்டுகின்றன. இந்தச் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் நடத்திய ஆய்வுகள் ஜே.எப்.கே என்ற சினிமாப் படத்தின் முடிவுடன் ஒத்திருக்கவில்லை. இது ஒரு பெரிய விஷயம்! இந்தப் பத்திரிகைகளின் கூட்டான ஆய்வுகளின் முடிவு குறிப்பிட்ட அமெரிக்க உளவு ஸ்தாபனங்கள் கொலையில் ஈடுபடவில்லை; கொலையாளியை மறைக்க எத்தனிக்கவில்லை என்பதே. ஜனாதிபதியைப் பாதுகாப்பதிலும் அவரைக் கொலை செய்யக் கூடிய சந்தேக நபர்களைக் கைது செய்வதிலும் தாம் விட்ட நடைமுறைப் பிழைகளைத் தான் இவர்கள் வெட்கங் காரணமாக மறைத்துள்ளார்கள் என்பதும் அந்தப் பத்திரிகைகளின் முடிவு.

கென்னடியைக் கொலை செய்ததாக நம்பப்படும் லீ ஹார்வே ஒஸ்வால்ட் (Lee Harvey Oswald) சம்பந்தமான பல சிஐஏ யும் எவ்பிஐ யும் விட்ட பல நடைமுறைப் பிழைகளை இவ்விடத்தில் ஆராயலாம். ஒஸ்வால்ட் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்றும், சோவியத்

ருஷ்யா, கியூபா போன்ற நாடுகளின் நண்பன் என்றும் இனங் காட்டி யுள்ளார். பல தடவை ருஷ்யத் தூதரகத்திற்கும் கியூபாத்தூதரகத் திற்கும் இவர் போய் வருவதை சி.ஐ.ஏயினர் படம் பிடித்துள்ளார் கள். இது பின்பு ருஷ்யர்கள் தான் ஒஸ்வால்ட் மூலம் கென்ன டியைக் கொலை செய்வித்தார்கள் என்ற வாதத்திற்கு இடம் கொடுத் துள்ளது. ஆனால் தாம் இதன் காரணமாக மூன்றாவது உலக மகா யுத்தத்தைத் தொடக்கி வைக்க விரும்பவில்லையென்று ருஷ்யா ஒஸ்வால்ட் தொடர்பை மறுத்துள்ளது.

கென்னடி கொல்லப்பட்ட சில மணி நேரத்தின் பின் ஜனா திபதியாகப் பதவியேற்ற லின்டன் ஜோன்சனும், அவருடைய நிர்வாக மும் கொலையாளி ஒஸ்வால்ட் தனித்து இயங்கினான் என்றும் அவனை ஒருவரும் இயக்கவில்லை யென்றும் சாதித்து வந்துள்ளனர். இதற்கமைய ஆய்வுகளை நடத்தும் படி உளவு ஸ்தாபனங்கள் பணிக் கப்பட்டுள்ளன. இந்த இடத்தில் ஒஸ்வால்டைத் தடுக்கக்கூடிய சந் தர்ப்பம் கிடைத்தும் அதைப் பயன்படுத்தத் தவறிய எவ்பிஐ யின் செயற்பாட்டை நினைவு கூரவேண்டும். கொலை நடப்ப தற்குச் சில நாட்களுக்கு முன் ஒஸ்வால்ட் ஓர் அச்சுறுத்தல் கடிதத்தை எவ்பிஐ யினருக்கு அனுப்பியுள்ளான். அதில் நட வடிக்கை எடுக்க இந்த ஸ்தாபனம் தவறி விட்டது மாத்திரமல்ல அதை மறைக்கவும் தலைப் பட்டுள்ளது.

கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோவைக் கொல்வதற்காகப் பல சதிகளில் அமெரிக்க சி.ஐ.ஏ. யினர் ஈடுபட்டுள்ளனர். இதற் காக அமெரிக்காவில் நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வந்த மாபியா எனப்படும் குற்றவாளிகள் கும்பலு டன் சிஐஏ நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. இந்தச் செய்தி கென்னடியின் கொலையுடன் தொடர்புடையது. தன்னைக் கொல்லத் தூண்டும் நாட்டின்

கொலைகாரன்
லீ ஹார்வே ஒஸ்வால்ட்

தலைவரை ஏன் கஸ்ரோ கொலை செய்விக்கக் கூடாது என்ற கேள்வி இங்கு கேட்கத் தோன்றுகிறது. இந்தக் கொலை முயற்சிகளை சி.ஐ.ஏ வெளியிடாமல் மறைத் துள்ளது. கென்னடியின் கொலை நடந்த காலத்தில் தட்டிக் கேட்க ஒருவருமில்லை என்ற நிலையில் சி.ஐ.ஏ தான்தோன்றித் தனமாக நடந்துள்ளது. பெயரளவில் இந்த ஸ்தாபனம் அமெரிக்க ஜனாதிபதி யின் கட்டுப்பாட்டில் இயங்கும் தன்மையுள்ளது. ஆனால் நடை முறையில் ஜனாதிபதியையே ஆட்டிப்படைக்கும் வல்லமை இதற்கு உண்டு என்பது வெளிப் படை. இதனால் கென்னடியின் கொலை சி.ஐ.ஏயின் வேலை என்ற செய்தி பலராலும் நம்பப் படுகின்றது. ஒரு குற்றச் செயலை யும் விட்டுவைக்காத மாபியா கும்பலைக் கொண்டு கஸ்ரோவைக் கொல்லச் சதித்திட்டந் தீட்டிய சி.ஐ.ஏயினர் ஏன் இதே கும்பலைக் கொண்டு கென்னடியையும் கொல்லத் திட்டம் வகுத்திருக்கக் கூடாதென்ற கேள்வியைப் பலரும் கேட்கிறார்கள். சி.ஐ.ஏ கென்னடி மீது கோபங் கொள்ளக் காரண மென்ன? அமெரிக்காவில் அகதி களாகத் தங்கியிருக்கும் கஸ்ரோ வின் பரமவிரோதிகளான வலது சாரிகளையும், இன்னுமொரு அமெரிக்கக் கோஷ்டியையும் சேர்த்து கியூபா மீது ஒரு படை யெடுப்பைக் கென்னடி நடத்தினார் இது தோல்வியில் முடிந்தது.

இந்தத் தோல்வி சீஐஏ யின் சுயனக்குறைவால் நிகழ்ந்ததென்று கென்னடி குற்றஞ் சாட்டத் தொடங்கியுள்ளார். மேலும் வியட் நாம் யுத்தத்திலிருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் வாங்கும் திட் டத்தையும் கென்னடி வைத்திருந் தார். இப்படியெல்லாம் கென்னடி சுயாதீனமாக இயங்குவது சிஐஏ யினர் விரும்பாததொன்று. இன்று போலில்லாமல் அக்காலத்தில் பல உலகத் தலைவர்களைக் கொல்லும் காண்டுமிராண்டித் திட்டங்களைச் சிஐஏ வைத்திருந்தது என்பது ஒரு மறைக்கமுடியாத உண்மை. அதி உயர் நீதிபதி வாறன் தலை மையில் இயங்கிய ஆணைக்குழு முன்னிலையில் வாக்கு மூலங் கொடுத்த சிஐஏ பிரதிநிதிகள் தாம் கஸ்ரோவைக் கொல்வதற் காக மாபியாவினருடன் தொடர்பு கொண்டதையும், கியூபா மீதான படையெடுப்பின் தோல்விக்கு கென் னடி சிஐஏ யினரைக் குற்றஞ் சாட்டியதையும் மறைத்து விட்ட னர். மாபியாக்குற்றவாளிக்கும் பல்களைக் கென்னடி ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்காகப் பயன்படுத்தினார் என்ற செய்தி இப்போது வெளிவந்துள்ளது. ஜனாதிபதியாகப் பதவிக்குவந்தபின் மாபியாக் கும்பல்களுக் கெதிரான சட்டநடவடிக்கையிலும் கென்னடி இறங்கி விட்டார். இதனால் பெருங் கோபங் கொண்ட மாபியர்கள் இக்கொலையைத் தூண்டியிருக்கக் கூடும் என்ற வாதமும் பரவலாக அடிபடுகின்றது. ஆனால் மாபியத் தலைவர் சாம் கியன் கானா (Sam Giancana) வின் தொலை பேசி சிஐஏ யினரால் ஒற்றுக் கேட்கப்பட்ட செய்தியும், இதன் மூலம் மாபியாக்களுக்கும் கென்னடி யின் கொலைக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்ற விபரமும் இப்போது வெளிவந்துள்ளன. அத்துடன் ஒஸ்வால்ட் ஒருபோதும் மாபியாக் களுடன் எக்காலத்திலும் தொடர்பு வைக்கவில்லை என்று புலனாய்வு கள் தெரிவிக்கின்றன. கென்னடி கொல்லப்படுவதற்கு ஏழரை மாதங் களுக்கு முன்பாக ஒஸ்வால்ட் ஓர் இளைப்பாறிய வலதுசாரி இரா ணுவ ஜெனரலைக் கொல்ல முயற் சித்திருக்கிறான். இந்த அதிகாரி

யைத் தாக்கப் பயன்படுத்திய றைபிள் கென்னடியின்கொலைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது காவல்துறையையும், அமெரிக்க உளவு ஸ்தாபனங்களையும் ஏளனம் செய்வது போன்ற உண்மையாகும். மேலும் அசாதாரண தாய்ப்பாசங் கொண்ட மனநோயாளியென்றும், தனது மனைவியை அடித்துத் துன் புறுத்துபவனென்றும் ஒஸ்வால்ட் பற்றிய செய்திகள் வெளிவந்துள் ளன. கென்னடியைக் கொலை செய்வதற்கு இவன் தனி ஆளாக இயங்கி இருப்பானா? அல்லது இவனை யாரோ பயன்படுத்திக் கென்னடியின்கொலையைச்செய்வித் தார்களா? என்ற கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. சென்றவாரம் வெளியிடப்பட்ட பெருந் தொகையான ஆவணங் களைப் படித்தவர்களின் தீர்ப்பும் இது தான்.

எழுதியவர் – வோசிங்ரனிலிருந்து ஜவான் தோமஸ்.

நியூஸ்வீக், செப்ரெம்பர், 1993

கென்னடி கொலையும் சந்தேக நபர்களும்

இது பற்றி இருநூறுக்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. முப்பதாவது வருட நினைவுகளை ஒட்டி இன்னும் பல வெளிவர இருக்கின்றன. இந் நூல்களிலெல்லாம் பலர் சந்தேகிக்கப்படுகின்றனர். ஒரு சிலரையும் அவர்கள் செய்திருப்பார்களா என்ற விபரத்தையும் இதன் கீழ்த் தருகின்றோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1. ஜனாதிபதி ஜோன்சன்

பதவி ஆசையினால் உளவு ஸ்தாபன, இராணுவ உயர் அதிகாரிகளுடன் இணைந்து கென்னடியின் கொலையைச் செய்வித்தார். இதுவன்றி சந்தேகத்திற்கு அப்பாற் பட்ட வேறு ஆதாரம் இன்னும் கிடைக்கவில்லை.

2. மாபியக் குழுத் தலைவர் சாம் கியான் கானா

இவரைப் பலரும் சந்தேகிக்கின்றனர். இவருடைய இரகசியப் பேச்சுக்கள்தொலைபேசிப்பதிவுகளிலிருந்து வெளிவந்துள்ளன. கென்னடியின் கொலையுடன் தொடர்பு படுத்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

3 கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோ

இவரைக் கொல்ல ஆறுக்கு மேற்பட்ட முயற்சிகளை சிஐஏ எடுத்துள்ளது. இவர் கோபங் கொண்டு திருப்பித்தாக்க காரணமுண்டு. ஆனால் கென்னடியின் கொலையைச் செய்வித்தால் கியூபாவை நிர்மூலமாக்க அமெரிக்காவால் முடியுமென்ற உண்மையை கஸ்ரோ நன்றாக உணர்ந்திருந்தார். இது அவரைத் தடுத்து வந்துள்ளது என்பது ஆதார பூர்வமாகத் தெரிய வருகின்றது.

4. ருஷ்ய உளவு ஸ்தாபனம் கே ஜீ பி:

சிஐஏ போன்று இவர்களும் பிறநாட்டுத் தலையீட்டிலும், பெருந் தலைவர்களைக் கொல்லுவதிலும் அக்கறை காட்டினார்கள். கென்னடியின் கொலை நிகழ்ந்த காலம் பனிப்போரின் உச்சக் கட்டமான நேரம். ஒஸ்வால்ட் அமெரிக்காவிலிருந்து போய் ருஷ்யாவில் சிலகாலம் தங்கியவர். அக்காலத்தில் கே. ஜீ. பி – ஒஸ்வால்ட் உறவுகள் ஏற்பட்டிருக்கலாம். இந்த ஸ்தாபனத்தின் அதிகாரி யூரி நொசென்கோ, ''நிலையான மனப் போக்கற்ற ஒஸ்வால்ட் உடன் தாம் ஒருவிதமான தொடர்பையும் வைக்க விரும்பவில்லையென்றும் கென்னடியின் கொலையால் மூன்றாவது உலக யுத்தம் தொடங்குமென்றும், இதற்கு ருஷ்யா தயாரில்லை யென்றும்'' சொல்லி வைத்துள்ளார்.

அமெரிக்கா

வான்வெளியில் பில்லியன் டொலர் அழிவு

சென்ற வாரந் தெற்குக் கலிபோர்னியாவில் இடம் பெற்ற வானவேடிக்கை மத்திய உளவு நிறுவனத்திற்கு (CIA) என்றுமில்லாத பெரிய பாதிப்பை உண்டாக்கியது. அமெரிக்கன் கொங்கிறஸ் 1994 ஆம் ஆண்டிற்கான உளவு இலாகாவிற்குரிய நிதி ஒதுக்கீடு பற்றி விவாதித்துக் கொண்டிருந்த போது ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான உளவு சாதனப் பொருட்கள் வான்டென் பேக் விமானத் தளத்தின் மேல் இமைப் பொழுதில் மறைந்தன. 1986 இல் சலெஞ்சர் விபத்தின் பின் நடை பெற்ற மிகப் பெரிய வான் அழிவு இதுவாகும். பல இரகசிய உளவு சாதனங்கள் அடங்கிய செய்மதியைச் சுமந்து சென்ற ஒரு சிற்ரான் றொக்கட் புறப்பட்டு 2 நிமிட நேரத்தினுள் வான் வெளியில் வெடித்துச் சிதறியது. இது உளவு நிறுவனத்திற்குப் பாரிய இழப்பு என வர்ணிக்கிறார் வான் வெளி உளவு நிபுணர் யெவ்றெ றிச்செலீசன்.

வான்வெளி ஆராய்ச்சி சம்பந்தமாக ஏற்பட்ட நிதிக் குறைப்பு இவ்வசம்பாவிதத்தினால் தெளிவாக்கப்படுகிறது. உளவு வேலைகளுக்குப் பொறுப்பான செனற் தெரிவுக் குழுத் தலைவர் டெனிஸ் டெக் கொன் இவ் வருடத்திற்கான வேலைகளுக்குரிய நிதியைக் கொங்கிரஸ் 1.3 பில்லியனால் வெட்டியதைக் கொடூரமாகச் சாடுவதுடன் இத் தொகை ஏற்பட்ட விபத்தினால் இழக்கப்பட்டு விட்டது எனவும் கூறுகிறார். இவ்வழிவு ஏற்பட முன்னர் சி.ஐ.ஏ பணிப்பாளர் நாயகம் ஜிம்வூல் சேர் 1994 ஆம் ஆண்டு உளவு வேலைக் கொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடாகிய 27.5 பில்லியன் டொலரை 1 பில்லியன் டொலரால் உயர்த்து மாறு விண்ணப்பித்திருந்தார். ஆனால் இப்போது [அந்த மேலதிக

> ஒரு பயங்கர வெடிவிபத்து என்பது வானவெளியில் குறைந்த அளவான உளவுச் சாதனங்களும் உளவு பார்த்தலுக்கான ரீதியில் பாரிய இழப்பும் என்று அர்த்தமாகும்

புறப்பட்டு இரண்டு நிமிடங்களின் பின்பு சிற்ரான வெடித்துச் சிதறியது

நிதி வான் வெளி ஆராய்ச்சிச் சாதனங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. சிற்ரான் 3 செய்மதிகளை அடக்கிய பேசியா எனப் பெயர் கொண்ட சாதனம், உளவு வேலைகளுக்கு இன்றியமையாத தொன்றல்ல. ஒவ்வொன்றும் ஒரு நடுத்தர மோட்டார் வண்டியின் பருமன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் செய்மதிகள். கிளாசிக் விச்சாட் என அழைக்கப்படும் தொடர்ச்சியான உளவு வேலைகளுக்கு உதவுகின்றன. இவை கடலிலுள்ள கப்பல்களை, விசேடமாகக் கிழக்கு ஐரோப்பிய, ருஷ்யக் கப்பல்களைக் கண்காணிக்கின்றன. இந்த 3 செய்மதிகளும் திட்டமிட்ட படி முக்கோண வடிவில் ஒழுங்கு படுத்தப் பட்டிருப்பின் அவை கப்பல்கள் நிற்குமிடங்களை ராடார் கருவிகள் மூலம் சரியாகக் கணித்திருக்கும். அமெரிக்கா இன்று இத் தகைய 2 கருவிகளை வான வெளியிலும், ஒன்று தேவைப்படுமிடத்து உபயோகிக்கவும் வைத்திருக்கிறது.

புதிதாக அமைக்கப்பட்ட செய்மதிகளை மேல் உயர்த்தும் சிற்ரான் iv பூஸ்ரர்கள் நம்பகரமானவையா என்ற ஐயப்பாட்டை இப் பேரழிவு உண்டாக்கியுள்ளது. இந்த மேற்காவும் கருவிகளிலேயே அமெரிக்க விமானப் பிரிவும் சி.ஐ.ஏ. யும் பெருமளவு தங்கியுள்ளன. ஒரு முழு அளவிலான உளவுச் சாதனக் கருவியை உயர்த்தும் சக்தி 12 அடுக்குள்ள உயர்ந்த பூஸ்ரருக்கே உண்டு. மாட்டின் மாறி ஏற்ற இந்த சிற்ரான் iv சாதனங்களைத் தயாரிக்கிறது. சிற்ரான் iv திட்டத் திற்குப் பொறுப்பான பணிப்பாளர் கேணல் பிறாங்க் ஸ்ரேலின், செய்மதிகளை மேல் உயர்த்துவதற்காக வைக்கப்பட்ட வேறு இரண்டு மேலுயர்த்துங் கருவிகளை நிலத்தில் இறக்கியுள்ளது மட்டுமன்றி அவற்றை உபயோகிக்கும் காலம் ஒரு வருடத்திற்கு மேல் தாமதமாகும் என்றும் கூறியுள்ளார்.

வான் வெளிக்கு அனுப்பப்பட விருக்கும் விண்வெளிச் சாதனங்களுள் மேல் வருவன அடங்கும்.

ஓர் அணுவாயுதத்தின் பொழுது இராணுவத் தொடர்புகளை ஆக்கக்கூடிய புதிய தில்ஸ்ரார் தொடர்புச் செய்மதிகள், பாதுகாப்புத் திட்டத்தில் அடங்கிய வெப்பக் கிரகிப்புள்ள செய்மதிகள்:

இவை எதிரிகளின் ஏவுகணைகள் பற்றி அறிவிக்கும் தன்மையுள்ளன. ராகுறெசே செய்மதிகள் முகிற் கூட்டங்களுக்கு ஊடாகவும், இருளிலும் நிலத்திலுள்ள வற்றைப் படம் பிடிக்கக் கூடியவை. இதே ராகுறெசே செய்மதிகள் இரண்டு இப்போது 4 வருடங்களாக வான வெளியிலுள்ளன. அவை பூமிக்குக் கொண்டு வரப்பட வேண்டியவை. ''நீண்டகாலம் நிற்கான் திட்டத்தைத் தாமதப்படுத்துவது அமெரிக்க உளவுத் துறைக்குக் கேடு விளைவிக்கும்'' என்கிறார், நிச்செல்சன்.

சென்ற வாரம் அழிந்த பேசியா செய்மதிகள் என்றும் பழுதடையாதவை. சோவியத் யூனியன் சிதைய முன்னர் அவற்றை வான் வெளியிற் செலுத்துவதற்கு விமானப் படை முயற்சித்தது ''பனிப் போர்க் காலத்திற் போல ருஷ்யக் கப்பல்களை வேவு பார்ப்பது இப்



லோங்லியில் சிஐஏ இன் தலைமைச் செயலகம்

போது அவ்வளவு முக்கியமல்ல. ருஷ்யக் கப்பல்கள் எங்குள்ளன என்பது எமக்குத் தெரியும். அவை துறைமுகங்களில் நின்று துருப்பிடிக்கின்றன'' எனச் சொல்கிறார் வான்வெளி ஆய்வு நிபுணர் ஜோன் பைக்.

வோஷிங்டனிலிருந்து
புரூஸ்ட்வான் லூஸ்ட்
ரைம், ஒகஸ்ட் 16, 1993

மனோ விளையாட்டுக்கள்

ஆனந்தத்தின் அடிவரிசை ஆதாயங்கள்:

அது ஒரு பயிற்சித் தொடர் நிகழ்ச்சியின் எடுத்துக் காட்டல்ல: வேலைக்கு அமர்த்தப்பட்டோர் ஓர் அறையில் ஒன்று கூடுகின்றனர். கண்ணை மூடிக் கொண்டு அமைதியாகத் தியானத்தில் ஈடுபடுகின்றனர். ஆயினும் தென்கொரிய கூட்டமைப்பு சாம்ஸுங் அதன் உதயமாகும் தாரகைகளின் நற்பயனளிப்பைத் தியான வகுப்புக்கள் விருத்தி பெறச் செய்யுமெனப் பந்தயம் பிடிக்கிறது. அந்த வர்த்தக நிறுவனம் சியோலுக்கு தெற்கில் உள்ள அதன் 17 ஏக்கர் நிலையத்தில் ஒரு தியான அறையையும் சேர்த்துக் கொண்டுள்ளது. அந்த நிலையத்தின் முகாமையாளர் கிம்வூக்ஸியோங் தியானம் ஒன்றில் சிந்தனைப் புலனைக் கூர்மையாகச் செலுத்துவதை விருத்தி பெறச் செய்கிறது எனக் கூறுகிறார். தியானத்தில் ஈடுபடுவோர் அதிகாலையில் தரையில் அமர்ந்து கொண்டு தமது வர்த்தக நிலையத்தையிட்டுச் சிந்தனைப் புலனைச் செலுத்த முடியும் என்கிறார்.

தியானத்தை முன்வைப்பவர்கள் அதன் வியாதிகளைக் குணப்படுத்துந் தன்மையைப் பற்றி ஒன்று திரட்டிக் காட்டியுள்ளனர். மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும், உடல் நலனை விருத்தி செய்வதற்கும் தியானம் உதவுகிறது. சிங்கப்பூர் பிரதிப் பிரதமர் வீஸியன் லூங்கின் தியான ஆசிரியை பாரதி இராமக்கிருஷ்ணனின் அறிக்கையின்படி பிரதிப் பிரதமர் தனது புற்று நோய் குணமடையச் செய்யுந் திட்டத்தில் தியானத்தை ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொண்டமையால் அங்கு உணர்ச்சிகரமான ஆர்வந் தியானத்தைப் பற்றித் தூண்டி விட்டது என்பதாகும். தியானத்தால் அடிவரிசை ஆதாயங்களும் உண்டு. உறாங்கொங் நாட்டைச் சார்ந்த நவநாகரிக உடை சம்பந்தப்பட்ட சில்லறை விற்பனையாளர் ஜொய்ஸிமா ஐக்கிய அமெரிக்காவை அடித்தளமாகக் கொண்ட குருமாயி சிட்வில்லாஸானந்தாவின் போதனைகளைப் பின்பற்றியபடியால் தற்போது தனது தொழிலில் முன்னேற்றங் கண்டுள்ளதாகக் கூறுகிறார்.

''ஒருமுறை நீங்கள் உங்கள் உள்ளத்துடன் தொடர்பு கொண்டவுடன் மற்றவர்களுடன் சிறந்த முறையில் தொடர்பு கொள்ள முடியும்'' என்று ஜொய்சிமா கூறுகிறார். ''வியாபாரத்தில் அடிக்கடி ஒவ்வொரு விடயமும் தொடர்பு கொள்வதோடு சம்பந்தப்பட்டுள்ளது'' என்பது குறிப்பிடத்தக்கது.

ஏசியாவீக், ஒகஸ்ட் 18, 1993

தென் ஆபிரிக்கா

தளபதிகளின் கதி

பாதுகாப்புப் படை மீளமைப்புச் செய்யப்படவேண்டும் - பொலிசும் படைத்துறையும் சம்மதிக்குமா?

தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையினர் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். அங்கும் இங்கும் நடந்த 13 ஆண்டு காலப் போரில் பதப்படுத்தப்பட்டவர்கள்.

பிரிற் டோரியாவிலுள்ள ஜனாதிபதி எவ், டபிள்யூ. டீ. கிளார்க்கின் செயலகம், ஆபிரிக்க தேசியக்காங்கிரசின் தலைமைப்பணியகம், நாடு பூராவிலுமுள்ள முக்கிய தொலை தொடர்பு மையங்கள் என்பனவற்றை ஆயுதம் தாங்கிய வலதுசாரி வெள்ளையர்கள் திடீரென்று தாக்கிய போது சதிப்புரட்சி ஆரம்பமாகியது. வலதுசாரிப் பொலிஸ் தளபதிகளும் இந்தச் சதியில் ஈடுபடவே பரந்த அளவில் கறுப்பின மக்களிடையே கலவரங்கள் வெடித்தன. குழப்பத்தைத் தடுப்பது தமது கடமை என்று தெரிவித்த தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படைகளின் தளபதிகள் ஆபிரிக்காக் கண்டத்தின் பலம் வாய்ந்த இராணுவக் கட்டுப்பாட்டைத் தம்வசம் வைத்திருப்பவர்கள் என்பதால் தலையிட்டுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிறவேற்றுமையை முடிவுக்குக் கொண்டுவரப் போவதாக டீ கிளார்க் அறிவித்தபோதே தென்னாபிரிக்காவெங்கிலும் சதிப்புரட்சி பற்றிய வதந்திகள் உலாவத் தொடங்கின. பயமுறுத்தும் புதிய கதைகள் அக்கதையை அதிகரிப்பதற்கான சைகையாகவுள்ளது. காரணம் இந்தக் கதைகளைப் பரவவிட்டிருப்பவர்கள் இவ்விதநிலையை விரும்புகின்ற வெள்ளை நிறத்தவர்களல்ல உயர்மட்ட ஆபிரிக்கதேசியக் காங்கிரசின் அதிகாரிகளாவர்.

தாங்கள் முன்னெப்போதும் இவ்வளவு அச்ச உணர்வு கொண்டிருந்த தில்லை என்று மனந்திறந்து சொல்கிறார்கள். தங்களது அச்சம் உண்மையான முயற்சி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்தும், பல சந்தர்ப்பங்களிலிருந்தும் எழுந்ததாகும் என்கிறார் ஆ. தே. கா. வின் பேச்சாளர் கார்ல் நிக்கவுஸ். தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையின் (எஸ். ஏ. டீ. எவ்.) முன்னாள் ஜெனரலான கொன்ஸ்ரண்ட் வில்ஜோன் ஆபிரிக்கவோக்ஸ்புறொன்ற் எனப்படும் வலதுசாரிக் கூட்டணிக்குத் தலைவராகியிருந்தும் அவரது நீவிர வலதுசாரிக் கூட்டாளிகளான 2,000 பேர் புதிய அரசியல் மாற்றம்பற்றிக் கலந்துரையாடிய 26 அரசியற் கட்சிகள் கூடியிருந்த கட்டடத்தைத் தற்காலிகமாக முற்றுகையிட்டிருந்தபோது அதற்கு பொலிசாரின் ஆதரவு இருந்ததையும் பார்க்கின்றபோது அச்சம் அதிகரிக்கிறது என்று தெரிவிக்கிறார் அவர்.

பலவினத்தவரும் பங்குகொள்ளும் முதலாவது தேர்தல் எதிர்வரும் ஏப்பிரலில் நடைபெறவுள்ள தருணத்தில் கேட்கின்ற வலதுசாரி உறுமல்கள் அரசியல் மேசையில் இரண்டு கொடிய சீட்டுக்களைக் காட்டி நிற்கின்றவ. 707,000 எண்ணிக்கையைக் கொண்ட தென்னாபிரிக்கப் படையினரில் 10 வீதமான படையினர் எந்த வேளையிலும் சுறுசுறுப்பாக இயங்கும் நிலையிலுள்ளனர். பொலிஸ் படையினரின் எண்ணிக்கை 114,000 ஆகும். வெள்ளையரது மேலாதிக்க ஆட்சிகளின் விருப்பத்தை இரக்கமற்ற முறையில் நடைமுறைப்படுத்தியவர்கள் இவர்கள். தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையின் பகுதிநேர ஊர்காவற் படை அதிரடியணியினரில் பெரும் பாலானோர் வோக்ஸ் புறொன்ற்

ஏனப்படும் முன்னணியின் ஆதரவாளர்களாவர். இவர்களெல்லோரும்ஒன்றிணைந்தேஆபிரிக்கத்தேசிய காங்கிரசின் அச்சத்திற்கு வழிகோலியுள்ளனர். பெரும்பாலான அரசியல் நிபுணர்கள் சதிப்புரட்சிக் கதைகளை உதாசீனம் செய்தே வருகிறார்கள்,ஆனால் இந்தப் பாதுகாப்புப்படையினர் ஏப்ரல் 27 தேர்தலுக்குப் பின்னர் ஏற்படப்போகும் கறுப்பினபெரும்பான்மை அரசுக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொள்வார்களா? என்பது வினாவுக்குரியதாயுள்ளது. ''புதிதாகத் தோற்றமெடுக்கும் ஒரு சனநாயக அரசைச் சீர்குலைக்கும் சக்தி அவர்களிடம் மிக அதிகமாகவே உண்டு என்று எச்சரிக்கிறார் ஜோசியோலோ என்றஆபிரிக்கத்தேசியக்காங்கிரசின் அலுவலர். உம்வொன்ரோ வீசிஷ்வே அல்லது நாட்டின் ஈட்டி என்ற படைப்பிரிவு மாற்றுப்பாதுகாப்பு அமைப்பாக உருவாக்கப்படுமாயின் ஆ. தே. காங்கிரசார் இவ்வளவு கலவரமடைய மாட்டார்கள். இந்த இராணுவம் 1967 இல் அரம்பிக்கப்பட்டது. உம்கொன்ரோவில் 12,000 வீரர்களேயுள்ளனர். 13 ஆண்டுகளாக அங்கிங்கென்று சோவியத்தின் ஆதரவுடனான கியூபாப் படையினருடன் அங்கோலாவில் போரிட்ட அனுபவம் வாய்ந்த தெ. ஆ. பா. படைக்கு இது ஈடாக முடியாது.

பாதுகாப்பு விடயத்தில் ஓர் இணக்கமான அணுகுமுறையைக் கையாள்வதென ஆ. தே. காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. படைவீரர்களதும், பொலிசாரினதும் மனக்கிலேசத்தைத் தவிர்க்குமுகமாகத் தொழிற்பாதுகாப்பு, தாராள ஒய்வுதிய வசதிகள், இன ஒடுக்கலின் பெயரால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்குவதென அது அறிவித்துள்ளது. இதுவரை படையத்திலும், பொலிசிலும் உள்ள மூத்த அதிகாரிகள் அரசியல் மாற்றம் அவசியம் என்ற கருத்தோடு ஒன்றித்தே இருக்கிறார்கள். பலகட்சிப் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்வோர் படையத்தின் எதிர்காலம் பற்றித் நீர்மானிக்கும் போது படைத்தலைவர்கள் கடும் போக்கைக் கையாளவுங் கூடும். தற்போதைய தெ. ஆ. படைத்தளபதியான ஜெனரல் ஏ. ஜே. (கற்) லி பென்பேக், ''நிச்சயமாக இறுதி முடிவு எம்முடையதாகவே இருக்கும்'' என்று கூறியுள்ளார். அவருக்கு வயது 55.

தேர்தலுக்கு முந்திய காலமே கவலைக்குரிய காலப் பகுதியாகும். பிரச்சாரத்தில்செல்வாக்குப்பிரயோகிக்கவோ அல்லது குழப்பமேற்படுத்தவோ முடியாமல் பாதுகாப்புப் படையைத் தடுப்பதற்குப் பலகட்சி அரசியல் மாற்ற சபையொன்று அமைக்கப்படவேண்டும் என்பதில் பங்குபற்றுவோரில் அனேகர் ஒருமித்த கருத்துடையவராயுள்ளனர், சென்ற மாதம் ரைம் சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் அரசியல் மாற்றச் சபைக்கு இறுக்கமான கூட்டுப்பாட்டதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற ஆபிரிக்கத்தேசியக் காங்கிரசின் விருப்பத்தை விபெனபேக் நிராகரித்தார். ''அவர்கள் என்னை மேற்பார்வையிடலாம். அன்றாடச் செயற்பாடுகள் - என்ன செய்வது எப்படிச் செய்வதென்பதெல்லாம், எனது கட்டளைப்படியே நடக்கும் பொலிசாருக் குதவுவதற்கு எனக்குச் சுதந்திரமிருக்க வேண்டும். அதிகாரமற்ற சபை இந்த நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கமுடியாது'' என்று மேலும் அவர் கூறுகிறார்.

இன்னமும் இணக்கந் தோன்ற வழியுண்டு. 10,000 உறுப்பினர்களைக் கொண்ட ''அமைதிப்படை'' பற்றி ஒருமித்த கருத்து நிலவுகிறது. தெரிவு செய்யப்பட்ட படையினர் பொலிசார் உம்கொன்ரோப் போராளிகளைக் கொண்டதாக இது அமையும். நேட்டால் மாநிலத்திலும். ஜொகனஸ்பேக் பிரதேசப்பட்டினங்களிலும் தெ. பா. படையினரின் இடத்தை ஐ. நா. அதிகாரிகள் மேற்பார்வையிலியங்கும் அமைதிப்படை எடுத்துக் கொள்ளும். இந்த இடங்களில் தான் ஆபிரிக்க தேசிய காங்கிரசினருக்கும், பெரும்பான்மையாகவுள்ள சூலு இன்கத்தா சுதந்திரக் கட்சிக்கு மிடையில் கடுமையான வன்முறைகள் இடம்பெறுவது வழக்கம்.

தேர்தல் என்பது முதலாவது தடைதாண்டும் நிகழ்வு மட்டுமே. வாக்களிப்பு முடிவடைந்தவுடன் தெ. பாதுகாப்புப்படையையும்,உம்கொன்ரோப் போராளிகளையும் இணைக்கும் மிகவும் சிக்கலான பொறுப்புமிக்க இராணுவ மீளமைப்பு இடம்பெறவேண்டும். நாலு மாதங்களுக்கு முன்னர்தான் சட்ட ஒழுங்கு அமைச்சரான ஹென்ரூல் கிறியேல் உம்கொன்ரோ, ''குற்றவியலாளர்களை மட்டுமே கொண்ட அமைப்பு'' என்று கூறியிருந்தார். கரந்தடிப் படையினர் தகுதிவாய்ந்தவர்களானால் ஒருங்கிணைத்துக் கொள்வதில் தெ. பா. படையினரின் அதிகாரிகள் தடையாக இருக்கப்போவதில்லை. தமது ஆட்களைத் தட்டிக்கழிப்பதற்கு உபயோகப்படும் சொற்பிரயோகமே இதுவாகும் என்பது ஆ. தே. காங்கிரசின் அங்கலாய்ப்பு. '' ஏனைய இராணுவங்களைத் தெ. பா. படை உள்வாங்குவது பற்றிக் கதைக்கிறார்கள். ஆனால் மக்களோ புதிய இராணுவம் ஒன்றையே விரும்புகிறார்கள்'' என்று கூறுகிறார் உம்கொன்ரோவின் பொது ஊழியர்களில் ஒருவரான அபூபக்கர் இஸ்மேயில்.

அத்தகைய அமைப்பு உருவாகும்போது மூத்த உம்கொன்ரோ அதிகாரிகளைப் பாதுகாப்புப் படையின் அதியுயர் இடங்களில் நியமனஞ் செய்ய வேண்டும். இது ஒரு மிக முக்கியத்துவம் வாய்ந்த மாற்றமாக அமையும். '' மக்களின் கண்களில் மிக உயர்வான சட்ட பூர்வத் தோற்றத்தை உம்கொன்ரோப் படைத்துறைக்குக் கொண்டு வரும்'' இது படைப் பகுப்பாய்வாளரான றொக்லின் வில்லியம்சின் கருத்தாகும். வெள்ளையர்கள் மட்டும் என்ற நிலை மாற்றப்படுவதும், இன ரீதியான தொகுதிகள் அகற்றப்படுவதும், கறுப்பினத்தவருக்குப் பதவியுயர்வு வழங்குவதும் புதிய அரசின் பணிகளாக இருக்க வேண்டும். 1974 ஆம் ஆண்டிலிருந்து தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையில் தொண்டரணியினராகவே கறுப்பின மக்கள் இருந்து வருகிறார்கள்.

படையப் புலனாய்வுத் துறை போன்ற தொகுதிகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். கறுப்பினக் குழுக்களுக்கும், தலைவர்களுக்கும் எதிரான ''மூன்றாவது அணி'' ச் செயற்பாடுகளில் அத்துறை ஈடுபட்டுவருவதாக ஆ. தே. காங்கிரஸ்காரர் நம்புகிறார்கள். ஆ.தே.கா.தலைவர் நெல்சன் மண்டேலாவுடன் டீ கிளார்க் பேச்சுவார்த்தை ஆரம்பித்து ஓர் ஆண்டுக்குப் பின்னர் அதாவது 1991 இல் ஆ.தே.காங்கிரசிற்கு எதிராக மறைமுகமான சீர்குலைவு நடவடிக்கையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த, தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவன் மூலமாக விபசாரிகள் போதைமருந்து விற்போர் தன்னினச் சேர்க்கையாளர் என்போரை உபயோகித்துச் செயற்பட்டுள்ளது புலனாய்வுத்துறை.

அநேகமான படையப்பொலிஸ் மேலாளர்கள் மிக்க மரியாதைக் குரிய தொழில்சார் அலுவலர்களாவர். இவர்கள் தத்தமது பதவிகளில் இருப்பர். ஆனால் ஆ. தே. காங்கிரஸ் படையப் புலனாய்வுத் துறைத்தலைவர் ஜெனரல் கிறிஸ் தோபல் வான் டேர் வெஸ்துயிசன் என்பவரை விட்டு வைக்கப்போவதில்லை. 1985 ஆம் ஆண்டில் கறுப்பினச் செயற்பாட்டாளர்கள் பலரை ''மிக அவசரமாக இவர்கள் சமூகத்திலிருந்து நிரந்தரமாக அகற்றப்பட வேண்டும்''என்ற கட்டளைக்கு இவர் அதிகாரம் வழங்கிய குற்றச்சாட்டுப் பற்றி விசாரணை நடைபெறுகிறது. குறிப்பிட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டிருந்தமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. அளவுக்குமிகமான உரிமை மீறல்களை எடுத்துக்கொண்டால் உம்கொன்ரோவின் கையும் அவ்வளவு பரிசுத்தமானதல்ல. நம்பிக்கைத் துரோகம் என்ற குற்றச்சாட்டின் பேரில் உம்கொன்ரோ இயக்கத்தினர் கொன்றும், சித்திரவதை செய்துமுள்ளனர் என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்யவென ஓர் ஆளணிக்குழு ஆபிரிக்கத் தேசிய காங்கிரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரை டீ கிளார்க் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியுமா? டீ கிளார்க்கின் அணியினுள்ளேயே ஒரு வலதுசாரிக் குழு தோற்றமெடுத்துள்ளதாகவும், அது கிறியெல்லின் தலைமையிலியங்குவதாகவும் சந்தேகமுறும் ஆ. தே. காங்கிரஸ்காரர் அது பற்றிப் பேசத் தொடங்கியுள்ளனர். சென்ற மாதம் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த சமயம் அந்த இடத்தை முற்றுகையிட்ட வலது சாரிகளின் செயல் பெரிய குமுறலை ஏற்படுத்தியிருந்தும் கூட கிறியெல்லைத் தடை செய்யாமல் விட்டமை ஒரு புறமிருக்க அவரையோ, அல்லது, கவனயினமாக இருந்த பொலிஸ் ஆணையாளரையோ, அன்றேல் ஏனைய அதிகாரிகளையோ டீ கிளார்க் கண்டனம் செய்யத் தவறிவிட்டார். தென்னாபிரிக்காவில் மையப்பகுதியில் ஆபிரிக்கா அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற வோக்ஸ் முன்னணியின் கோரிக்கையைக் காலப் போக்கில் ஜெனரல்கள் ஆதரிக்கக் கூடும் என்ற அச்சம் ஆ. தே. கா. விடம் இருந்து வருகிறது. புரட்சிச் சதிபற்றிச் சிந்திப்பீர்களா? என்று கேட்கப்பட்ட வினாவிற்கு, ''அரசியல் யாப்பை மாற்றுவதோ அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதோ படையத்தின் பணியல்ல; ஜனநாயக நீதியில் ஏற்படும் மாற்றத்தைக் காப்பாற்றுவதே அதன் கடமையாகும்'' என்றே லிபென்பேக் பதிலளித்திருந்தார்.

விவாதங்கள் சூடுபிடிக்கப் பிடிக்க புதிய ஒழுங்கின் சொற்களும் அணியினரிடையே வடிகட்டப்பட்டுக் கொண்டே போகிறது.சூரிய வெப்பம் மலிந்த ஒறேஞ்சு பிறீ மாநிலத்தில் 150 பராப்படைத் தொண்டர்கள் பயிற்சியிலீடுபடுகிறார்கள். அவர்களில் ஒரு டசின் பேர்வரையில் கறுப்பினத்தவராவர். 3 நாட்கள் மிகக் கடுமையான பயிற்சி நடைபெறுகிறது. 4. 6 கிலோ மீற்றர் ஒட்டப்பயிற்சியில் கடைசிச் சில மீற்றர்கள் இருக்கின்ற போது 19 வயது நிரம்பிய ஆபிரிக்கரான துப்பாக்கி வீரன் ஜீன் பவுறியை ஜொஹெனஸ் பேக்குக் கணித்தாயுள்ள செபோக்கெங் நகரைச் சேர்ந்த 27 வயதான கோப்றல் பிக்கிலி இம்ரிம் குலு தாண்டி விட்டார். ''நான் எது செய்தாலும் வெற்றி பெறவேண்டும் என்றே செய்கிறேன்'' என்று இம்ரிம்குலு பின்னர் தெரிவித்தார். எட்டி அடி வைப்பதிலுள்ள சவாலைப் பவுறி ஏற்றுக் கொள்கிறார். அவர் சொல்கிறார்: ''யார் முதலில் வருவதென்பதல்ல பிரச்சினை, எனக்கு அந்தச் சிறகுகளை அணிந்து கொள்ள வேண்டும் என்பதே குறிக்கோள்'' என்று.

44 ஆவது பரசூட் அணியின் படைத்தளபதியான 38 வயது நிரம்பிய கேணல் லெஸ் றுத்மனுக்குப் பவுறியின் வார்த்தைகள் இசையாக இனிக்கின்றது. ''என்னிடம் வெள்ளைக்காரப் பராப் படையினர் என்றும், கறுப்பினப் பராப் படையினர் என்றும் பிரிவுகள் இல்லை. என்னிடமுள்ளவர்கள் பராப் படையினர் மட்டுமே. அவர்களுக்குக் காலவரையறையுமுண்டு'' என்கிறார் அவர்.

ஜொகனஸ்பேக்கில்
ஸ்கொட் ஹே லியோட்.

மைல் ஜூலை 26, 1993.

அல்ஜீரியா

இராணுவம் தனதுபிடியை இறுக்குகின்றது

நாட்டின் உண்மையான சக்தியாக விளங்கும் அல்ஜீரிய இராணுவம், ஜூலை மாதம் 10ஆம் திகதி ஒரு புதிய பாதுகாப்பு மந்திரியையும், ஒரு புதிய இராணுவ அதிகாரிகளின் தலைவரையும் பெற்றது. முஸ்லிம் அடிப்படை வாதிகளால் சுற்றி வளைக்கப்பட்ட அரசாங்கம் அவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் போகும் முயற்சியாகவே இம்மாற்றங் காணப்பட்டது. சென்ற வருடம் ஜனவரி மாதம் ஒரு மூடி மறைக்கப்பட்ட இராணுவப் புரட்சியால் அடிப்படை வாதிகளின் எதிர் பார்த்த தேர்தல் வெற்றியைத் தடுத்த நாள் தொடக்கம் அரசை அகற்றும் நோக்குடன் இவர்கள் போராடி வருகின்றார்கள்.

ஜெனரல் காலிட் நெசார் பாதுகாப்பு மந்திரிப் பதவியிலிருந்து வெளியேறினார். ஆனால் தனது உண்மையான பதவியாகிய நாட்டின் சக்தி வாய்ந்த மனிதர் என்ற பதவியிலிருந்து வெளியேற வில்லைப் போல் தோற்றமளிக்கின்றது. அன்றைய ஜனாதிபதி சாட்லி பென்ஜெடிட்ஜ் பதவி கவிழ்த்துப் பதிலாக உயர்மட்ட அரச குழுவை நியமித்த இராணுவப் புரட்சியில் பங்கு பற்றிய இளைப்பாறிய ஜெனரல் லமீன் ஜெரூவல் அவரின் இடத்தில் பதவி ஏற்றார். இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக் கெதிரான கடும் போக்குடையவரும், நெசாரின் ஆதரவாளரும், அல்ஜீரியாவின் பயங்கரவாத எதிர்ப்புப் போரின் முதன்மை நிபுணருமான ஜெனரல் முகம்மது லமாரி இராணுவ அதிகாரிகளின் தலைவராக நியமனம் பெற்றது பொருளுடையதாகக் கணிக்கப்படுகின்றது. ஜூலை மாதம் பத்தாந் திகதியில் தனது பதவி விலகலுக்குச் சுகயீன மேகாரணம் என்று அரசாங்க ரீதியில் கூறப்பட்டாலும் அது உண்மையாகவும் இருக்கலாம்.

ஐந்து பேர் கொண்ட அரச குழுவில் ஜெனரல் நெசார் இடம் பெற்றுச் சக்தி வாய்ந்தவராகத் திகழுகின்றார். மட்டுப்படுத்தப் பட்ட மாற்றங்களுக்கு அவர் ஆதரவுள்ளவராகவும் தமது அதிகாரங்களையும், சலுகைகளையும், களை எடுக்கும் மாற்றங்களைப் பலமாக எதிர்க்கும் பழைமை வாதிகளையும் எதிர்க்கக்கூடியவராகவும் உள்ளார்.

இராணுவமும், ஜெனரல் நெசாரும் இரு முகமான கொள்கையை முன்னெடுத்துச் செல்கிறார்கள் என சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தீவிரவாதிகளைத் தயவு தாட்சண்யமின்றி வேட்டையாடும் போதும் தடுப்புக்காவலில் உள்ள இஸ்லாமியத் தலைவர்களுடன் இரகசியப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுகிறார்கள். கடும் போக்குத்தான் வெளியே காட்டப்படுகின்றது. கண்ணுக்குப் புலப்படாத எதிரியுடன் போரிடுவதற்குப் 15,000 படை வீரர்கள் குவிக்கப்பட்டிருப்பதால் அல்ஜீயர்ஸ் ஓர் ஆயுதப் படை முகாம் போல் தோற்றமளிக்கின்றது. ஒரே நோக்கில் பல நாட்களுக்கு நகரின் பல பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகத் தேடுதல் நடவடிக்கைகள் நடை பெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான பொலிஸ் வீரரும், படை வீரரும் தலைநகரின் எல்லாப் பகுதிகளிலும் நிறுத்தப்பட்டிருந்தாலும் சுடுதலும், குண்டு வெடித்தலும், மறைந்திருந்து தாக்குதலும், கொலைகளும் தினசரி வாழ்க்கையின் சம்பவங்களாகவே இருக்கின்றன.

அண்மைக் காலங்களில் பொது மக்களின் முன்னிலையில் இருக்கும் பல புத்திஜீவிகள் இஸ்லாமியப் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளார்கள். அல்ஜீரியாவிலிருந்து இத்தாலிக்குச் செல்லும் பிரதான வாயு விநியோகக் குழாயை உடைக்க எடுத்த முயற்சி முன்னரே கண்டு பிடிக்கப்பட்டுத் தவிர்க்கப்பட்டதாக அரசு கூறியது. வைத்தியர், ஆசிரியர் உட்பட கௌரவமான நடுத்தர அல்ஜீரிய மக்கள் கைது செய்யப்பட்டனர். இராணுவ முகாங்கள் மீது நடத்திய தாக்குதல்களுக்கு இராணுவத்தில் உள்ள இஸ்லாமியத்தீவிரவாதிகளே உதவினார்கள் என்று கூறப்பட்டது. குற்றஞ் சாட்டப்பட்ட ஐந்நூறு இரகசியக் குழுக்களை விட மேலும் அதிகளவு ஆதரவு, ஆயுதந் தாங்கிய அடிப்படை வாதிகளுக்கு உண்டு என்பதை மேற்கூறியவை காட்டுகின்றன. யார் இட்டிய அடிப்படை வாதிகளென்றும், எங்கே அடுத்ததாக தாக்குவார்களென்றும் இராணுவம் அறியக் கூடிய நிலையில் இல்லை.

சஹாரா முகாங்களில் சென்ற வருடம் 9,000 சந்தேகிக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். அத்துடன் தித்திரவதையும், தூக்குத் தண்டனையும் மீண்டும் கொண்டு வரப்பட்டன. இவற்றி

இரும் கூடுதலாக அடக்குமுறை அடிப்படை வாத உணர்வுகளைத் தடுக்கக் கூடியனவா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இவ்வருடம் குறைந்தது ஆறுபேர் தூக்குத் தண்டனை பெற்றனர். மேலும் 80 பேர் தூக்குத் தண்டனைக்காகக் காத்திருக்கின்றனர்.

ஊழல் மலிந்த பலமற்ற அரசாங்கத்திற்குப் பதிலாக அடிப்படை வாதத்தை வளர்த்த பல மில்லியன் அல்ஜீரியர் வாழும் கேவலமான வாழ்க்கையை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக அரசு அடக்குமுறையில் ஈடுபடுவதைப் பல விமர்சகர்கள் கண்டனஞ் செய்கிறார்கள். மதச்சார்பற்ற எதிர்க்கட்சியான பண்பாட்டுக்கும், ஜனநாயகத்திற்குமான கட்சியின் தலைவர் செய்யது சாடி அறிகுறிகளைக் குணமாக்காமல் காரணிகளைக் குணமாக்கும்வரைக்கும் தீர்வொன்றைப் பெறமுடியாது என்று கூறுகின்றார். மேற்கத்தேய இராஜதந்திரி யொருவரும் இவர் கருத்தை ஆதரித்து; ''உண்மையான மாற்றம் ஏற்படாவிடின் கொல்லப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஒவ்வொரு பயங்கரவாதியின் இடத்தை இன்னொருவர் எடுப்பார்; அவ்வளவு தான்'' என்கிறார். ●

எக்கனமிஸ்ட், ஜூலை 17 1993.

மொசாம்பிக்

பின்நோக்கி செல்லுதலாக இருக்கலாம்

320 மில்லியன் டொலர் பண ஆதரவுடனும், ''ஒனுமொஸ்'' என்றழைக்கப்படும் 7000 பேரைக் கொண்ட குழுவினரையுங் கொண்ட ஐக்கிய நாடுகளின் செயற்பாடு, 62,000 அரசாங்கத்துருப்புக்களும், 20,000 றெனாமோ போராளிகளும் தமது ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய திட்டமிடப்பட்ட கூடுமிடங்களாக ஆறு இடங்களைத் திறந்துள்ளது. அவர்களிடம் ஒருவருமே போகவில்லை. ஆயுதக் களைவு இல்லாமல் சமாதானத் திட்டத்தின் அரசியற் பகுதி நிலையாக நின்று விடும். இரு பக்கத்தினரும் தமது ஆயுதங்களைக் கையளிக்காவிட்டால் தேர்தல்களை முன்னெடுத்துச் செல்வதில்லை என்று ஐ.நா.வின் விசேட பிரதிநிதி இத்தாலிய இராஜதந்திரியாகிய அல்டொ அஜெல்லோ பல முறைகள் வற்புறுத்தி வருகின்றார். அங்கோலாவில் ஐ.நா. ஆணைப்படி ஆயுதக் களைவு கண்காணிக்கப் பட்டதேயன்றி நடைமுறைப் படுத்தாத காரணத்தினால் ஏற்பட்ட தவறுகளைத் தவிர்க்க அவர் முயலுகிறார். யூனிற்றா எதிர்ப்பாளர் எல்லோருக்கும் தெரிந்தது போல, ஆயுதங்களைக் கையளிக்காமல் தேர்தல்கள் அங்கே நடைபெற்றன.

அரசாங்கமோ அல்லது றெனாமோவோ ஆயுதக் கையளிப்பு தமக்கு நன்மை பயக்கும் என்று எண்ணவில்லை. றெனாமோ தனது ஆயுதங்களைக் களைந்தால் அதன் பேரம் பேசும் வலுவில் அதிக அளவை இழந்து விடும். எதிர்ப்பாளரால் ஆளப்படும் பகுதிகளில் கல்வியறிவுள்ள சிறந்த விவேகமான போராளி

மொசாம்பிக்கின் ஃபிறெலிமோ அரசாங்கத் துருப்புகளும் றெனாமோ எதிர்ப்பாளரும் ஆயுதங்களை தற்போது களைந்து கொண்டிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஒன்பது மாதங்களுக்கு முன் மிகவும் சிரமப்பட்டு எட்டப்பட்ட சமாதான ஒப்பந்தம் நீடிக்குமா?

கள், பொது மக்களின் நிர்வாகிகளாகக் கடமையாற்றுகிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகளின் படி றெனாமோவின் பல்லாயிரக் கணக்கான குழந்தை வீரர்கள் தங்கள் குடும்பங்களுக்குச் சாதாரண வாழ்க்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். அதனால் ஆளப்படும் மிகப் பரந்த பிரதேசத்தில் தனது வலுவை நிலை நிறுத்த எஞ்சிய போராளிகள் றெனாமோவிற்குத் தேவைப்படும்.

றெனாமோவிடம் இருந்து ஆயுதங்களைக் களையாமல் தனது இராணுவம் ஆயுதங்கள் இல்லாதிருப்பதை ஜனாதிபதி யோக்கிம் சிசானோ விரும்பவில்லை. எனினும் தமது மீதிச் சம்பளத்தைப் பெறாமல் ஆயுதங்களைக் கையளிப்பதை அவரின் படை வீரர்கள் எதிர்க்கிறார்கள். தலைநகர் மபுட்டோவில் ஜனாதிபதி சிசானோவும், றெனாமோ தலைவர் அஃபொன்சோ தலக்காமாயும் முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்குச் சந்திப்பதாக இருந்தது. இச்சந்திப்பு இவ்வாரம் முறிந்து போய்விட்டது.

சமாதான ஒழுங்குகளை அமுலாக்க உதவக்கூடிய இணைந்த ஃபிறெலிமோ றெனாமோ கூட்டுக் கமிற்றிகளும் றெனாமோ தனது பிரதிநிதிக் குழுவைத் தலைநகருக்கு அனுப்பாத காரணத்தினால் நடைமுறைக்கு வர முடியவில்லை. தனது குழுவினருக்குப் பொருத்தமான ஈருடை இல்லை என்று றெனாமோ கூறியதால் இச் சமாதானமும் உண்மையாக இருக்கலாம். உதவி நல்கும் நிறுவனம் ஒன்றிற்கு விவசாய

உபகரணங்கள் என்று அடையாளமிடப்பட்ட காரணத்தால் இத்தாலிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட சிருடைகள் சுங்கப் பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டன. அது நீடிக்கப்படுமுன் களஞ்சியப்படுத்தப்பட்ட சிருடைகள் களவு போய்விட்டன.

நாட்டில் பரவலாகக் காணப்படும் பல்லாயிரக்கணக்கான வீணாக நேரத்தைக் கழிக்கும் ஆயுதப்படை வீரர் இருந்தும் நிலத்தில் ஒருவித அமைதி நீடிக்கிறது. மொசாம்பிக்கின் கமக்காரர் நல்ல ஓர் அறுவடையைப் பெற்றுள்ளார்கள். உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கூற்றின் படி சென்ற வருடம் 4 மில்லியன் மக்களுக்கு மட்டுமே உணவு உதவி தேவைப்பட்டது. இவ்வருடம் ஒரு மில்லியன் மக்களுக்கு மட்டுமே தேவைப்பட்டது. எல்லைகள் ஊடாகப் பல்லாயிரக்கணக்கான மொசாம்பிக் நாட்டு அகதிகள் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வகையான ஓர் அமைதி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே கேள்வியாகியுள்ளது. நாட்டுப் புறங்களில் ஆயுதக் கொள்ளைகள் நடைபெறுவதாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. மபுட்டோ மாகாணத்தில் உள்ள சலமங்காவில் ஒரு பாதிரியும், பல பொலிஸ் வீரரும் உட்பட 27 பேரை றெனாமோ பிடித்து வைத்துப் பின்பு விடுவித்ததாக இந்த வாரம் செய்திகள் வந்தன. மொசம்பிக்கின் முறிவடையக்கூடிய சமாதானம் தொங்கி ஊசலாடுகின்றது. ●

த எக்கனமிஸ்ட்,
ஜூலை 17, 1993

நைஜீரியா

அமைதியின் ஆற்றல்

(ஒரு பொது வேலை நிறுத்தம் நைஜீரியாவின் தலை நகராகிய லாகோஸில் தெருக்களை வெறிச்சோடச் செய்தது. இந்த வேலை நிறுத்தம் அங்குள்ள இராணுவ ஆட்சிக்கு மக்கள் அடிபணியாது சனநாயக ஆட்சிக்கு கோரிக்கை விடுப்பதாக அமைந்தது)

முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்பு நைஜீரியா சுதந்திரம் பெற்ற காலந் தொடங்கி அங்கு குறுகிய காலக் குடியாட்சியும், அதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சியும் மாறிமாறி இடம் பெற்றுள்ளது. ஜனாதிபதி பபாங்கிடா ஓர் இராணுவ (Major General) அதிகாரியாக இருந்தவர். அவர் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு மொஷூட் அபியோலாவுடைய நிதி உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றினார். அவர் மக்களாட்சியை அமைப்பதாக வாக்குறுதியும் அளித்திருந்தார். இரு அரசியற் கட்சிகளை அமைத்து அவற்றுக்கான கட்டுக் கொள்கையையும் அவர் வகுத்தார். இக் கட்சிகளில் சோஷலிச ஜனநாயகக் கட்சி சிறிதளவு இடதுசாரிக் கொள்கையுடையதாகக் காணப்பட்டது. அதே நேரத்தில் தேசியக் குடியரசுக்கட்சி வலதுசாரிக் கொள்கைக்குச் சாதகமாகவிருந்தது. அதன் பின்னர் அவற்றுக்கான ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது போட்டியிடும் அபேட்சகர்களையும் அவரே தெரிவு செய்தார். ஆனால், அவருக்கு முன்பு நிதி உதவி புரிந்த கோடீஸ்வரரும், தொழிற்சாலை அதிபதியுமான மொஷூட் அபியோலா கடந்த யூன் மாதம் 12 ஆம் திகதி மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது அவருக்குரிய அதிகாரத்தை வழங்க இராணுவ ஆட்சியாளர் மறுத்து விட்டனர். கடந்த முப்பதாண்டு காலத்தில் இடம் பெற்ற தேர்தல்களில் மிகவும் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் வாக்களிப்பு இத் தேர்தலில்தான் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. சோஷலிச ஜனநாயகக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய மொஷூட் அபியோலா ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தன்னை ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணஞ் செய்ய அனுமதிக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். ஆனால், இதற்குப் பபாங்கிடாவின் தேர்தல் வாக்களிப்பின் போது பரந்தளவில் நேர்மையற்ற செயல்கள் இடம் பெற்றதாகவும், அதனால் அந்தத் தேர்தல் வாக்களிப்புச் செல்லுபடியாகாதெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆகவே, யூன் மாதத்து ஜனாதிபதித் தேர்தல் முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்தமையால் தெருக்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். நூற்றுக்கு மேலானவர்கள் இறக்கவும் நேரிட்டது.

அரசாங்கம் இந்த நிலையைப் பயன்படுத்தி இருபது வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற பயங்கரமான இனப் போராட்டம் போல் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கலாமென மக்கள் அஞ்சினர். முன்பு இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான போராட்டத்தில் ஒரு மில்லியன் நைஜீரிய மக்கள் மடிந்துள்ளனர். ஆனால், ஜனநாயகத்திற்காகப் போராடிவரும் தலைவர்கள் இது ஓர் இனக் கலவரமல்ல என்று கூறுகின்றனர். அல்லாமலும்

இப்போராட்டத்தில் ஜனநாயகத்தை ஆதரிப்போர் நீண்ட காலம் தமது ஆதிக்கத்தைச் செலுத்திய இராணுவத் தலைவருடன் போராடுகின்றனர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நைஜீரிய மக்களுக்கிடையில் தாங்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்தின் பயனாக ஒரு நாளைக்குத்தானும் நைஜீரிய சுதந்திர ஜனநாயக அரசாங்கத்தை நிறுவியே தீருவோம் என்ற திடநம்பிக்கை காணப்படுகின்றது. ஆட்சி புரியும் இராணுவத்தினர் யூன் 12, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மொஷூட் அபியோலாவுக்கு அதிகாரத்தை வழங்க மறுத்தமைக்காகச் சென்ற வாரம் அவர்கள் மேற்கொண்ட பொது வேலை நிறுத்தம் அமோக வெற்றி அளித்தது என்றே கூறவேண்டும். ஏனெனில் இதுகாலவரையிலும் பலாத்கார ஆட்சிக்குப் பழக்கப்பட்டவர்களும், அதனால் ஒடுக்கப்பட்டவர்களும் துணிந்து அமைதியான முறையில் இந்தப் பொது வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்துள்ளனர். இந்தப் பொதுவேலை நிறுத்தத்தின்போது விறுவிறுப்பாகச் செயற்படும் லாகோஸ் நகர வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வியாபார நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சாதனங்கள் அனைத்தும் இயங்காதிருந்தன. இராணுவ ஆட்சியாளரின் செயலுக்கு ஆட்சேபந் தெரிவித்து அனைத்துப் பொதுமக்களும் தமது இல்லங்களிலேயே அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்தனர். ஆயிரக்கணக்கான காவற்படையினரும், கலகம் அடக்கும் துருப்பினரும் வீதிகளில் வலம் வந்தனர்.

நைஜீரியாவின் மூன்று முக்கிய இனங்களான யொறூபா (Yoruba), இபோ (Ipo), ஹௌஸா (Hausa) ஆகியோர்களிடையே இனக் கலவரம் ஏற்படும் என்ற எச்சரிக்கை, அநாமதேயச் சுற்றறிக்கை, விளம்பரங்கள் லாகோஸின் சனநெருக்கடியுள்ள சேரிப்புறங்களில் போடப்பட்டமையால் பெருமளவில் அப்பகுதிகளை விட்டு மக்கள் வெளியேறினர். ஓரளவிற்கு வருவாயுள்ளவர்கள் நாட்டை விட்டே வெளியேறினார்கள். பாமரர் தமது பிள்ளைகளை நாட்டுப்புறத்திலுள்ள தமது கிராமங்களுக்கு அனுப்பினார்கள்.

வெறிச்சோடிய லாகோஸ் வீதியில் பாதுகாப்புப் படையினர் பவனி வருகின்றனர். பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் கலவரத்தில் ஈடுபட்டனரா என்பதைப் பார்வையிடுகின்றனர்.

இதேவேளையில் நாட்டின் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தரும், கலவரங்களை அடக்கும் காவலரும் மனித உரிமைத் தலைவர்களைச் சுற்றிவளைத்துப் பிடித்து விசாரணையை மேற்கொண்டனர்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிய தினத்தாள்கள் பபாங்கிடாவைக் குறை கூறுவோர் ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயத்தால் நிதி உதவி அளிக்கப்படுபவர்கள் எனச்செய்தியை வெளியிட்டன.

திரும்பவும் தமது டாங்கிகளைக் கொண்டு வருவதற்காகவே மக்களிடையே புதிய உள்நாட்டுப் போர் ஏற்படப்போகிறதென அச்சத்தை உண்டுபண்ணுகின்றன வென மனித உரிமைச் செயல் வீரர்கள் கூற முற்பட்டனர்.

பபாங்கிடா தனது அதிகாரங்களை ஓர் இடைக்கால ஆட்சிச் சபைக்கு ஒப்படைக்கப்போவதாக அறிவித்த பின்னரே அங்கு சென்ற மாதம் இடம்பெற்ற கலவரம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதற்கிடையில் தனது பதவிக்கு ஆதரவு நிரட்டுமுகமாக இரகசிய மொஷூட் அபியோலா லண்டனுக்கும், பின்னர் அங்கிருந்து அமெரிக்காவுக்கும் விமானத்தில் பயணமானார். ஆனால், அவருடைய முயற்சி பயனளிக்கவில்லை. அமெரிக்கா தனி நபர்கட்கு ஆதரவளிக்க முடியாதெனக் கைவிரித்து விட்டது.

சென்ற வாரம் லாகோஸில் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட பொதுவேலை நிறுத்தம் மக்கள் தாம் விரும்பிய திசையில் நாட்டை எடுத்துச் செல்லப் பூண்டுள்ள திடசங்கற்பத்தைத் தெளிவு படுத்துகின்றது. இது ஓர் ஆரம்ப முயற்சியே. அதிலும் இராணுவத்தின் கடுந்தாக்குதலுக்கு அவர்கள் எந்த நேரத்திலும் ஆளாகலாம். அவர்களது உள்நாட்டு அரசியற் கீழ்ப்படியாமை இயக்கம் எப்படி அமையப் போகின்றது என்பதே முக்கிய பிரச்சினையாகும்.

வாஷிங்டனிலிருந்து மக் அலிஸ்ரர்
காகோசிலிருந்து ஜாக்வைட்.

ஒரு கொலை உருவாக்கம்

நொம்பென்

தென்கிழக்காசியாவைப் பற்றி ஸிசேடமான சில விடயங்களுண்டு. கம்போடியாவின் கசப்பான உள் நாட்டுப் போர் ஒருவாறு முடிந்து விட்டது. இப்போது முதலீட்டாளர் களாக வர முயலுகிறவர்கள் கடந்த ஆண்டில் உடைப் பெட்டி கள் நிரம்ப அமெரிக்க டொலருடன் வந்திறங்கிய வண்ண முள்ளனர், இன்னோர் அதிசயம் நிகழ இட முண்டா?

கம்போடியாவில் முதலீடு செய்ய விரும்பும் அதிக அக்கறை யுள்ளவர்கள் தாய்லாந்து, மலே சியா, சிங்கப்பூர், போன்ற செல் வந்த நாடுகளைச் சேர்ந்தவர்களா வர். சென்ற ஆண்டிலே எவ்வளவு பணம் கம்போடியாவுக்குள் நுழைந்துள்ளது என்பது ஊகித் தறிய வேண்டிய ஒன்றாகும். ஸ்ராண்டர்ட் சாட்டட் வங்கியின் உள்ளூர்ப் பிரதிநிதியான ஜோன் ஜேம்ஸ் ஒரு ''முரட்டுக் கணிப் பில்'' அது 10 கோடி டொலர் அளவில் இருக்கும் எனக் கணிக்கின் றார். எதுவாயினும் இவையெல் லாம் குறுகியகால முதலீடுகளே யாகும். கம்போடியாவிற்குள் வந் துள்ள ஐ.நா. பணம் கடந்த ஆண் டின் நாட்டு முழு வருவாயின் 10 இல் ஒரு பங்காகும். இந்தப் பணத்தால் ஏற்படக்கூடிய வருவா யைத் தமதாக்குவதே இந்த முத லீட்டாளர்களின் திட்டமாகும்.

இப்போது நொம் பென்னின் பலதிறப்பட்ட மதுபான நிலையங் கள், சிற்றுண்டியகங்கள், தேநீர்ச் சாலைகள் இருக்கின்றன. ஐ.நா. கம்போடியாவை விட்டு விலகிச் செல்லும் போது இந்தக் குமிழி வெடித்து விடக்கூடும்.

கம்போடியர் வருகிறார்கள்

பெரிய நகரங்களுக்கு வெளியே அதிக பரபரப்புக் காணப் படவில்லை. கம்போடியாவின் முத லாவது உள்நாட்டுப் 'பியர்' இன் பெயர் 'அங்கோர்' என்பதாகும். ஒரு நவின மதுபான உற்பத்தியகம். கம்பறூ என்ற மலேசிய நிறுவனத் தால் புனரமைக்கப்பட்டு இந்த மது பானம் செய்யப்படுகிறது. அங்கே கிடைப்பதற்கரியது என்ற காரணத் தால் பலரும் இதனைச் சுட்டிக் காட்டுகிறார்கள். தாய்லாந்தின் சினவத்ரா கூட்டு நிறுவனமும் கம் போடியாவில் முதலீடு செய்யும் பெரிய நிறுவனமாகும். நொம் பென்னுக்காகப் புதிய தொலை பேசி வசதியைச் செய்து கொடுப் பதற்கு ஒரு கோடி டொலரை முத லீடும் இந்த நிறுவனம் கம்போடி யாவின் முதலாவது தனியார் தொலைக்காட்சி அலை வரிசைக் காக ஏலவே 20 இலட்சம் டொலர் களை அங்கே செலவிட்டுள்ளது. இந்த நிறுவனம் முந்தைய அரசிற் குக் இலஞ்சம் வழங்கியதான ஒரு குற்றச்சாட்டு நிலவுகின்ற போதி லும் அது மறுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கம்போடிய மக்கள் கட் சியின் வெற்றியை நம்பியே தாய் லாந்து, மலேசிய முதலீட்டாளர் கள் பலர் இருந்தார்கள். சமீபத்திய தேர்தலில் அதன் தோல்வி ஒரு குழப்ப நிலையை உருவாக்கிப் பல வியாபாரத் திட்டங்களைச் சீர் குலைத்து விட்டது. முன்னைய அரசின் முத்த உறுப்பினரும், பல முதலீட்டாளர்களுக்கு அருகடனான தொடர்பாளருமாகிய இளவரசர் நொரோடோம் சக்கரபோங் கடந்த ஜூன் திங்களில் வியட்நாமுக்குத் தப்பியோடிவிட்டு இப்போது நாடு திரும்பிவிட்டார். கிழக்கு கம்போடி யாவில் சுயாதிபத்தியமுள்ள பிர தேசமொன்றை ஏற்படுத்தும் முயற்சி தோல்வி கண்டபோதே அவர் நாட்டை விட்டகன்றார்.

முன்னைய அரசோடு ஒட்டி உற வாடிய முதலீட்டாளர்களுக்கு இப் போதைய அரசுடன் நட்புறவு காண் பதில் சிரமமிருக்குமா? மலேசிய நிதியோடு நடத்தப்படும் கம்போ டிய ரைம்ஸ் பத்திரிகை இளவரசர் சக்கரபோங்குக்கு மிகவும் ஆதர வான ஒன்றாகும். அதன் ஆசிரிய ரான பாலச்சந்திரன் எங்கிருந்து வந்தாலும் வெளிநாட்டு முதலீடுக ளைப் புதிய அரசு ஒதுக்கிவிடப் போவதில்லை என விவாதிக்கி றார். அதிசயங்கள் நிகழாமல் விட லாம். ஆனால் 25 ஆண்டுகளின் பின்னர் முதன் முறையாக உண் மையான நீண்ட கால முதலீடு கம்போடியாவிற்குள் வரும், அது அதன் பயனை அனுபவித்தேயா கும். ●

தலக்கனமில்லட்,
ஜூலை 10, 1993

சைபீரியத் தங்கம்

சைபீரியாவின் தென் கிழக்கிலுள்ள ஏர்குட்ஸ்க் பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய தங்கத்தின் அளவை மொஸ்கோ அதிகாரிகள் இறுதியாக வெளியிட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்காவின் பாரிய தங்க உற்பத்தி நிறுவனமான "பிரீ போர்ட் அமெரிக்கன் பாரிக் நியூ மென்ட்"டில் உள்ள தங்கத்தை விட ஏர்குட்ஸ்கில் உள்ள தங்கம் குறைந்த தல்ல இங்கு 84 மில்லியன் திறோய் அவுன்ஸ் வரை தங்கமிருப்பதாக அளவிடப்பட்டுள்ளது. தென் ஆபிரிக்காவில் உள்ள இரகசியம் பேணும் ஆங்கிலோ அமெரிக்கன் கூட்டுத் தாபனத்துக்குரிய தங்கம் இதன் அளவிற்குச் சமமாகலாம். இந்தளவு வெகுமதியான தங்கத்தைச் செல்வாக்குள்ள அவுஸ்திரேலியா, சுரங்க முக்கியஸ்தர் அயன் மாக்நீயிற்கு அளித்துள்ளது. அவர் இதனை 31 வீதத்திற்கு உலகின் மிகவும் பாரிய தங்கச் சுரங்க முயற்சிகளில் ஒன்றாக விலை கொடுத்து வாங்கியுள்ளார். இதனை வாங்குவதற்கு உலகின் தலையாய தங்கச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டோர் இவருடன் போட்டியிட்டுள்ளனர். மக்நீ ஆங்கிலோ அமெரிக்க மற்றும் பிரித்தானிய (RTZ) போன்ற சுரங்க நிறுவனங்களை இப்போட்டியில் ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

லென்ஸலோட்டோ ருஷ்யாவின் புதிய தங்கச் சுரங்கத் தொழில் நிறுவனமாகும். இது ஒரு பாரிய தனியார் நிறுவனம். இந்த நிறுவனத்தில் அரச சொத்தை நிர்வகிக்கும் அரசுக் குழு 50 வீத பங்குகளைக் கொண்டுள்ளது. எஞ்சிய பங்குகள் தொழிலாளரின் கூட்டுக்கு உடைமையாக உள்ளது. லென்ஸலோட்டோ சபையில் சக்தி அமைச்சும் இடம் பெற்றுள்ளது. இந்த அணுச்சக்தி அமைச்சு உலகில் மிகவும் பெரிய தங்கச் சுரங்கங்களையும், யுரேனியம் சுரங்களையும் விருத்தி பெறச் செய்துள்ளது.. மக்நீ நிறுவனங்களின் (கம்பனிகளின்) மத்திய சுரங்கக் கூட்டுத் தாபனத்தையும், ஸ்டார் தொழில் நுட்ப ஒழுங்கு அமைப்புக்களையும் ஒன்றுபடுத்தி ஸ்டார் சுரங்கக் கூட்டுத்தாபனத்தை உருவாக்க செப்ரெம்பர் முதலாந் திகதி அங்கீகாரம் வழங்கவுள்ளது. இத்தாபனம் லென்ஸலோட்டோப் பங்குகளையும் உடைமையாகக் கொண்டிருக்கும்.

லென்ஸலோட்டோவின் மிகவும் பெறுமதி மிகுந்த சொத்து போடெய்போ (BODAIBO) நகருக்கு ஏறக்குறைய 120 கி.மீ. தொலைவில் உள்ள சுக்கோய்லொக் (SUKHOI LOG) களமாகும். லென்ஸலோட்டோவின் பணிப்பாளரும், பிரதம உலோகத் தொழில் நிபுணருமான யோன் தோமஸ் சுக்கோய் லொக், களம் உலகில் மிகவும் பாரிய விருத்தி செய்யப்படாத பாறைத் தங்கத் தாதுப் படிவுகளைக் கொண்டுள்ளது என்று கூறுகிறார். இன்றைய பெறுமதியின் பிரகாரம் இங்கு பயன்படுத்தக் கூடிய தங்கத் தாது இருபது பில்லியன் டொலராகும் என்பது தோமஸின் கணிப்பாகும். (தற்போது தங்கத்தின் பெறுமதி மின் தள்ளப்பட்டுள்ளது. அதனால் அதன் பழைய பெறுமதியின் உச்ச நிலையை அடைய உள்ளது.) அயலிலுள்ள தங்கத் தாதுப் படிவுகளிலிருந்து மேலும் 4.7 பில்லியன் டொலர் கிடைக்கலாம். இது அளவில் குறைந்த தாதுப் படிவாக இருப்பினும் உயர் தரமான தங்கத் தாதாக உள்ளது. அன்றியும் தற்போதுள்ள தங்கத் தாதுக் களங்களில் லென்ஸலோட்டோவின் முன்னையோர் வருடக் கணக்காகச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். சுக்கோய் லொக்கில் சுரங்க அகழ்வு வேலைகள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும். வெகு விரைவில் தனது சுரங்கத் தொழில் வெகுமதியைப் பெறும் என்ற நம்பிக்கையுடன் மக்நீ உள்ளார்.

ஏசியாவீக், செப்ரெம்பர் 8, 1993.

புளூட்டோனிய மறைவிடம்

யொங்பியொனில் உள்ள தனது அணுக்கரு நிலையங்கள் பேரழிவை ஏறபடுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது என்பதை வடகொரியா நீண்டகாலமாகவே மறுத்து வருகிறது. தற்போது அவ்விடம் கதிரியக்க மாசுறுதலை ஏற்படுத்தக் கூடியது என்ற வெளியாரின் சந்தேகங்களை அது எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. கேள்விக்குரிய வழியில் வடகொரியா திரவப் புளூட்டோனியக் கழிவுகளை அப்புறப்படுத்துவதாக சி.ஐ.ஏ. (அமெரிக்க உளவு நிறுவனம்) சந்தேகிப்பதாக நியூஸ்வீக் அறிகிறது. இக்கழிவுகள் கசிவு ஏற்படமுடியாத கொள்கலங்களில் சீல் இடப்பட்டு அகற்றப்பட வேண்டும். ஆனால் இவை தரங்குறைந்த கொள்கலங்களில் நிலத்துக்குக் கீழ் மறைக்கப்படுவதாக கூறப்படுகிறது. யொங்பியொனில் உள்ள வேலையாட்கள் இக்கழிவுகளைச் சர்வதேச அணுசக்தி ஒன்றியத்தின் சோதனையாளர்களிடமிருந்து அவசர அவசரமாக மறைப்பதற்கு இத்தரங்குறைந்த கொள்கலங்களைப் பயன்படுத்துவதாக சி.ஐ.ஏ. நம்புகிறது. இது பற்றி உத்தியோகபூர்வமாகக் கருத்துத் தெரிவிக்க சி.ஐ.ஏ. மறுக்கிறது.

கட்டுக்கடங்காத யென் நாணயம்

தடுத்து நிறுத்த முடியாத வாறு மேலெழுந்து கொண்டு செல்லும் ஜப்பானிய யென் நாணயம் சென்ற வாரம் அமெரிக்காவின் ஒரு சதத்திற்கு ஒரு யென் சமம் என்ற பெறுமதியை அடைந்துள்ளது. இது ஒரு வெட்கப்பட வேண்டிய விஷயமல்லவா? ஒரு பலம் வாய்ந்த நாணயம் இது போன்ற கேலிக்குரிய ஒப்பீட்டுக்கு வந்துள்ளமை நாட்டின் கௌரவத்தைக் குறைத்துள்ளது. மேலும் அந்த நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் பூஜ்யங்கள் பெரும்பங்கு வகிக்கும் சந்தர்ப்பமும் வந்துவிட்டது எனலாம். ஜப்பானிய மந்திரிசபை இதை எளிதாகச் சமாளிக்கலாம். ஒரு குறிப்பிட்ட நாள் தொடக்கம் 100 யென், ஒரு யென் என்று அவர்கள் தீர்மானிக்கலாம். இதனால் 10,000 யென், 100 யென்னாக மாற்றம் பெறும். இந்தவித மான மாற்றத்தை (Redenomination) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இங்கு நாணயத்தின் பெறுமதி குறைக்கப்படவில்லை. அதன் பொருட்களைக் கொள்வனவு செய்யும் சக்தியில் குறைவு நிகழவில்லை. நடந்த தெல்லாம் ஓர் எழுத்துமாற்றமே, நாணய மாற்று விகிதத்தில் மாற்றம் நடைபெறவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். அப்படி நடந்திருப்பின் அது நிதி நிலையில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவரும். நாணயமாற்று விகித மாற்றத்தை ஆங்கிலத்தில் (Revaluation) என்பார்கள். நாணய எழுத்து மாற்றம் எப்போது செய்யலாம்? விகித மாற்றம் போல் அது புரட்சிகரமானதல்ல. ஆனால் உலக நாணயப் பரிவர்த்தனையில் யென் உச்ச நிலையில் இருக்கும். தற்சமயம் எழுந்த மாற்றத்திற்கு இது மிகவும் உகந்த நேரமாகும். ஜப்பானின் நிதித் துறையினர் இவ்வாறு சிந்திக்கு முன்பே ரோக்கியோ நகரிலுள்ள நாணய வியாபாரிகள் இவ்வருடம் பூராக இதனையே செய்து வருகின்றனர். எழுத்து மாற்றம் செய்தவுடன் ஒரு யென் ஒரு டொலருக்குச் சமமாகிவிடும். இதனால் பொருளாதாரத்திற்குப் பின்னடைவு நிகழும் என்றாலும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்கனவே நிகழும் இக்காலம் இந்த மாற்றம் செய்ய ஏற்ற காலமே. இந்த மாற்றம் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும். புதிய நாணயந் தயாரிக்கும் செலவை அரசுக்கு இந்த நடவடிக்கை குறைக்குந் தன்மை வாய்ந்ததாகும்.

ஜப்பான் தனது நாணயத்தில் இரண்டு பூஜ்யங்களைப் பாவியாது விடவேண்டும்

இந்த விதமாகப் பூஜ்யங்களைத் தள்ளிவைக்கும் செயலைப் பல நாடுகள் செய்துள்ளன. பாய்ந்தோடும் பணவீக்க காலத்தில் சேர்ந்துள்ள பூஜ்யங்கள் விலைகள் நிதானத்திற்கு வந்தவுடன் வெட்டிக் குறைக்கப்படுகின்றன. 1960 ஆம் ஆண்டு பிரான்சு நாடு இரண்டு பூஜ்யங்களையும், மெக்சிக்கோ நாடு இவ்வருடம் மூன்று பூஜ்யங்களையும் வெட்டித் தள்ளியுள்ளன. பெரும் பணவீக்கம் நடக்குங் காலத்தில் இந்த வெட்டு அர்த்தமற்றது. பணவீக்க காலத்தில் கூடுதலான பூஜ்யங்கள் உள்ள நாணய நோட்டுக்கள் அச்சிட வேண்டியுள்ளன. அல்லாவிட்டால் வங்கியிலிருந்து பணம் எடுத்துச் செல்லும் போதும், பொருட்கள் வாங்கக் கடைக்குச் செல்லும் போதும் பெருந் தொகையான பணத்தைத் தள்ளுவண்டியில் தான் எடுத்துச் செல்ல வேண்டும். எழுத்து மாற்றம் செய்வது இத் தருணத்தில் பெருங் குழப்பத்தை உண்டாக்கிவிடும். ஆகையால் இப்போது இதைப் பிரேசில், ருஷ்யா, துருக்கி போன்ற நாடுகள் செய்யத் தேவையில்லை. ஆனால் ஜப்பான் நாணயம் மிகவும் ஸ்திரமானதாகும். அதே சமயத்தில் அவர்களின் மிகக் குறைந்த அடிப்படை நாணயம் பெறுமதி அற்றதாகும். ஜப்பானைப் போல் இத்தாலி, தென்கொரியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் முறையே மூன்று, இரண்டு, இரண்டு என்ற வாறு பூஜ்யங்களைக் குறைக்க வேண்டும்.

1869 ஆம் ஆண்டு யென் முதன் முறையாக உபயோகத்திற்கு வந்த போது அது அமெரிக்க டொலருடன் சமபலமுடையதாக இருந்தது. இருநாடுகளுக்கிடையிலும் நடக்கும் வியாபார உறவுக்காகவே இந்த ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கு முன்பாக ஜப்பானியக் குறுநில மன்னர்கள் தங்கள் தேவைக்கேற்ப நாணயங்களை வெளியிட்டனர். படிப்படியாக இதன் பெறுமதி குறைக்கப்பட்டு 1940 ஆம் ஆண்டளவில் நாலு யென் ஒரு டொலருக்குச் சமமானதாகக் குறைந்துள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தில் தோல்வி அடைந்தபின் ஜப்பான் சிலகாலம் அமெரிக்கரான இராணுவ ஜென

ரல் டக்கிளஸ் மக் ஆர்தர் என்பாரின் ஆட்சியின் கீழ் இருந்தது. இவர் ஆயிரம் யென் ஒரு பிரிட்டிஷ் பவுண்டிற்குச் சமம் என்று நிலை நிறுத்தினார். இதன்படி 360 யென் ஓர் அமெரிக்க டொலருக்குச் சமமாகும். ஜெனரல் மக் ஆர்தரும், அவருடன் உதவியாளர்களாக இருந்த நிபுணர்களும் பெறுமதி குறைந்த யென் நாணயம் அந்த நேர ஜப்பானியத் தேவைக்குகந்தது என்று தீர்மானித்தனர். பெறுமதி குறைந்த யென் ஏற்றுமதிகளுக்கேற்றதென்றும், மெதுவாக ஜப்பான் பொருளாதார நன்னிலைக்கு வர உதவுமென்றும் இவர்கள் வாதிட்டனர். மேற்கூறிய 360 என்ற விகிதம் 23 வருடங்களாக நிலையாக நின்றது. பிரிட்டிஷ் பவுண் தொடர்பற்று வேறு வழியாகச் சென்றது. 1972 ஆம் ஆண்டுப் பரிசீலனைக்குப் பின் இது 300 ஆக மாற்றப்பட்டது. இதன் பின் மாற்று விகிதம் பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்துள்ளது. இதில் ஏமாற்றந் தான் கூடுதலாக உள்ளது. இந்த வருடம் மார்ச் மாதம் வரை மாற்று விகிதம் 125 இல் தங்கிவிட்டதென்றே சொல்லலாம்.

எழுத்து அல்லது எண்தொகை மாற்றம் ஜப்பானில் கூடிக் கொண்டு போகும் வாழ்க்கைச் செலவைக் குறைக்க மாட்டாது. ஆனால் பொருட்களின் விலை கேலிக்குரிய நிலையிலிருந்து உண்மை நிலைக்கு இறங்கிவந்து விடும். ஒரு விடுதியில் ஓர் இரவு தங்க, செலவு ஓர் இலட்சம் லீரா என்றால் பெருந் தொகையாகத் தோற்றலாம். ஆனால் அது உண்மையில் 60 டொலர் தான். ரோக்கியோவிலுள்ள டிஸ்னிலாந்து என்னும் கேளிக்கை அரங்கில் ஒரு நாட் பொழுதைப் போக்க ஒரு ஜப்பானியக் குடும்பத்திற்கு 30,000 யென் செலவாகும். ஒரு நாட்டின் பணத்தைப் பிற நாட்டவர் மதிக்க வேண்டும். அதில் பெருங் கௌரவம் தங்கியுள்ளது. உலகில் மிகவும் பலம்வாய்ந்த நாணயமாயிருந்தாலும் பெருந் தொகையான பூஜ்யங்கள் பண நோட்டிற் காணப்படும் போது தடுக்க முடியாது சிரிப்பு வரத்தான் செய்கிறது.

பூஜ்யங்களைக் குறைத்து எண்தொகை மாற்றம் செய்தல் ஜப்பானின் இன்றைய பொருளாதாரப் பின்னடைவை மாற்றியமைக்க உதவும். வரிகளை உயர்த்தாமல் இந்த மாற்றம் பொருளாதார ஊக்கம் கொடுக்கும். விற்பனை இயந்திரங்களிலும், வியாபார நிலையங்களில் கணக்கிடும் கருவிகளிலும் செய்யப்படும் பூஜ்ய மாற்றத்தால் பில்லியன் டொலருக்கு மேற்பட்ட பொருட்களும், சேவைகளும் தயாராகுமென்று சிலர் கணக்கிடுகின்றனர். புதிய விளம்பரங்கள், உணவு விலைகள் மாற்றம் இத்தியாதியால் சேர்வு நீங்கி நாடு உற்சாகம் பெறும். சுயிங்கம், தீப்பெட்டி போன்றவை மறைந்து போன யென் நாணயத்திற்கு மீண்டும் விற்பனையாகத் தொடங்கிவிடும். யென் நாணயம் 1940 இல் மறைந்துவிட்டது. இது புத்துயிர் பெறும் வாய்ப்பு உண்டு. எழுத்து அல்லது எண் தொகை மாற்றத்தால் பணவீக்கம் வரலாம் என்று சிலர் பயப்படுகின்றனர். சில வியாபாரிகள் 11.46 யென் பெறுமதி உள்ள பொருளை 11.50 யென் என்று கூட்டக்கூடும். ஆக 4 யென் தான் கூட்டப்பட்டது என்று அவர்கள் சொன்னாலும் உண்மையில் பொருளின் விலை 3.5 வீதம் கூடிவிட்டது. மறுபக்கத்தில விற்பனைகள் கூடத்தான் செய்யும். இதனால் பொருளாதார மலர்ச்சியுறும் பெருவாய்ப்புண்டு. ●

ஏசியாவீக், செப்ரெம்பர் 1, 1993

உரிய நேரத்தில் செய்யத் தவறியதை இப்போதாவது செய்தல்

எழுதியவர்: வாஷிங்ரனிலிருந்து
கிறிஸ்தோபர் ஒக்டென்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பதினெட்டு வருடங்களுக்கு முன் அமெரிக்கா வியட்நாம் போரில் தோல்வி கண்டது சரித்திர உண்மை. இன்று இரு நாட்டுறவுகள் சுமுகம் அடையும் வேளையில் வியாபார முன்னெடுப்பில் தோல்வியுறக் கூடாதென்ற வுவலில் சக்தி வாய்ந்த அமெரிக்க வாணிபக் குழுவொன்று வியட்நாம் தலைநகர் ஹனோய் வந்தடைந்துள்ளது. இழந்த சந்தர்ப்பங்களை மீண்டும் உயிர்ப்பிக்க இவர்கள் விரும்புகின்றனர். 1975 ஆம் ஆண்டு அமெரிக்கா வியட்நாமுடன் பொருளாதார வியாபாரத் தொடர்புகள் யாவற்றுக்கும் கடுந் தடை விதித்தது. இப்போது நாடுகளுக்கிடையிலான பூகோள உறவுகளில் பெரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதனால் விதித்த தடையை நீக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது. இது செப்ரெம்பர் மாதம் நடக்கலாமென எண்ணும் அமெரிக்க வியாபார ஸ்தாபனங்கள் தங்கள் குழுவை வியட்நாம் அனுப்பியுள்ளது. காலதாமதம் நஷ்டம் என்பது அவர்களின் கணிப்பு.

தடை நீக்கம் பற்றிப் பரிசீலிக்கும் அமெரிக்க செனற்சபை உப செயற்குழுவில் தோன்றி அலன் பேக்கர் என்பார் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்துள்ளார்: பேக்கர் ரெக்சாஸ் மாகாணத்திலுள்ள கலிபேர்ன் சக்திச் சேவை என்னும் எரிபொருள் சம்பந்தமான ஸ்தாபனத் தலைவராவார். "காலதாமதத்தால் வேலை வாய்ப்புக்களையும், பெரும் ஆயுதங்களையும், போட்டியில் வெற்றி வாய்ப்பையும் இழக்கின்றோம். எம்முடன் கூட்டாகத் தடை விதித்தவர்கள் தடையை நீக்கிவிட்டார்கள். வியட்நாமுடன்

தொடர்புகள் ஏற்படுத்துவதில் அவர்கள் எங்களை முந்தி விட்டார்கள். உலக அரங்கில் மக்கள் மிகவும் நெருங்கி வாழும் பெருவராய்ப்புக்கள் நிறைந்த நாட்டிலிருந்து தூரநிற்பது சரியல்ல'' என்பதாக.

பேக்கரின் கூற்றில் பொதிந்துள்ள உண்மைகளை ஜனாதிபதி பில் கிளின்ரன் நன்றாக உணர்ந்துள்ளார். இதன் பலனாக இரு நாட்டுறவுகள் சீராகும் வேகம் கூடத் தொடங்கியுள்ளது. ஜூலை 2 ஆம் திகதி கிளின்ரன் நிர்வாகம் வியட்நாமுக்கு உதவ வேண்டாமெனச் சர்வதேசக் கடனுதவி நிதியத்திற்குக் கொடுத்த தடை உத்தரவை நீக்கியுள்ளது. அமெரிக்க அரசின் உப-காரியஸ்தர் வின்ஸ்ரன் லோர்ட் தலைமையில் இருபத்திரண்டு பேர் கொண்ட உயர்மட்ட ஜனாதிபதிக் குழுவொன்று வியட்நாம் வந்துள்ளது. இதன் நோக்கம் இரு நாட்டுறவுகளைச் சீராக்குதல். வியட்நாம் தலைநகரில் முதற்கட்டமாக மூன்று சிறிய தர (Consular) தூதுவர்கள் அடங்கிய அமெரிக்க இராஜதந்திர அலுவலகத்தை விரைவில் திறப்பதாக இவர் வாக்களித்துள்ளார். ஜூலை 25 ஆம் திகதி அமெரிக்க அரசுக் காரியஸ்தர் வோறன் கிறிஸ்தோப்பர் வியட்நாம் வெளியுறவு அமைச்சர் நூகுயென் மான் காம் என்பாரைச் சிங்கப்பூரில் நடந்த தென்கிழக்காசிய நாடுகள் சம்மேளனக் கூட்டத்தில் சந்தித்துள்ளார். இருவரும் முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அமெரிக்கத் தலைநகரில் இந்த நிகழ்வுகள் பெரு வரவேற்புப் பெற்றுள்ளன. தடை நீக்கத்திற்கு ஏகோபித்த ஏற்புடைமை உள்ளது என்பது வெளிப்படை. அமெரிக்கக் காங்கிரசில் பேசிய செனற் சபை அங்கத்தவர் பொப் கெரி பெரும் கரகோஷத்தின் மத்தியில் பின்வருமாறு பேசியுள்ளார்: ''நாங்கள் தொடை நடுங்கிகள் அல்ல. நாங்கள் மீண்டும் பெருமையுடன் வியட்நாம் திரும்பவேண்டும்'' என்று. பொப் கெரி வியட்நாம் போரில் தனது வலது காலை இழந்தவர், இப் போரில் வீரத்திற்காகத் தங்கப் பதக்கம் பெற்றவர்.

அமெரிக்க முதலீடுகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீங்குமென எதிர்பார்த்து அமெரிக்க வியாபார ஸ்தாபனங்கள் வியட்நாமுக்குப் படையெடுப்பு

அமெரிக்க – ஆசிய பரிமாற்று மையமொன்றில் நல்லெண்ணத் தூதுவர் வின்ஸ்ரன் லோர்ட் அன்பான வரவேற்புப் பெறுகின்றார்.

இது போன்ற நம்பிக்கையூட்டும் பேச்சுக்களெல்லாம் அமெரிக்காவின் இராட்சத வியாபார ஸ்தாபனங்களை மகிழ்வித்துள்ளன. ஏற்கனவே வியட்நாமில் ஐரோப்பிய, ஜப்பானிய, ஆசிய முதலீட்டாளர்களெல்லாம் செயற்படத் தொடங்கி விட்டார்கள். யுத்தத்தால் சின்னாபின்னமாகிய நாட்டைக் கட்டியெழுப்பும் பணியிலும் அதற்குப் பிரதியுபகாரமாகப் பெரும் ஆதாயம் பெறுவதிலும் அவர்கள் நாடு பட்டுள்ளார்கள். இந்த நாட்டில் கூலிப் பட்டாளம் மிகவும் மலிவாகக் கிடைக்கின்றது. அத்துடன் அந்த நாட்டின் 70 மில்லியன் மக்களும் தயாராகும் பொருட்களை ஆவலுடன் காத்திருக்கிறார்கள். விடுவார்களா அமெரிக்கர்கள்? இவ்வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் 160 மிகப் பெரிய வாணிப ஸ்தாபனங்கள் வியட்நாமில் முதலீடு செய்வது பற்றி அங்கு சென்று பார்வையிட அமெரிக்கத் திறைசேரியிடம் அனுமதி கோரியுள்ளன. இவைகளில் ஒரு சில அமெரிக்காவின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றாகிய பாங்க் ஒவ் அமெரிக்கா Bank of America) இன்னுமொரு வங்கி சிற்றி பாங்க் (Citi-Bank) வேறு கட்டட உபகரணத் தயாரிப்புக் கம்பனிகளும் அடங்கும். திறைசேரியின் அனுமதி அங்கு செல்வதற்கும், அலுவலகம் திறந்து அதிகாரிகளை நியமித்து முதலீடு சம்பந்தமான பேச்சுவார்த்தை தொடங்குவதற்கும் மாத்திரம் இடங்கொடுக்கின்றது. அமெரிக்க அரசு விதித்த தடை நீங்கும்வரை அவை முதலீடு ஒன்றும் செய்ய முடியாது என்பதை நாம்மறக்கக்கூடாது.

இந்த வாரம் இன்னும் சில பிரதானமான ஸ்தாபனங்கள் வியட்நாமுக்கு விஜயம் செய்கின்றன. இதில் கணனித் தயாரிப்புக் கம்பனிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. முக்கியமாக டிஜிற்றல் ஸ்தாபனம், பிலிப்ஸ், ஜெனரல், எலெக்ரிக், மோட்டோறோலா என்பவையடங்கும். வோஷிங்ரன் நகரிலும் அமெரிக்க வியட்நாம் வியாபாரக்கழகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இது தனது பங்கிற்கு வியட்நாம் சம்பந்தமான தகவல்களை வழங்கும். மேற்சொல்லப்பட்ட டிஜிற்றல் கணனிக் கம்பனியின் தலைவர் மார்க் பிடெஸிக்சன் வியட்நாம் நிலைபரத்தையிட்டு மிகவும் திருப்திப்பட்டுள்ளார். ''அது ஓர் உன்னதமான சந்தை'' என்கிறார் அவர். மேலும் அவர் சொல்கிறார்: ''எங்களுடன் சர்வதேச ஒட்டத்தில் போட்டியிடும் தயாரிப்பாளர்கள் அங்கு வந்துவிட்டார்கள். நாம் பின்விழுந்தோம்'' என்று. யுத்தத்தில் தோல்வியடைய முன் அமெரிக்க மென்பானத் தயாரிப்பாளராகிய கொக்கோகோலா வியட்நாமில் முன்னணியில் நின்றுள்ளது. தடை நீங்குவதை எதிர்பார்த்து அது

வியட்நாமிய மென்பானத் தயாரிப் பாளருடன் 25 மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. பதினெட்டு வருடங் களுக்கு முன் வருடமொன்றுக்கு 500 மில்லியன் போத்தல்கள் கொக்கா கோலா விற்பனை ஆகியுள்ளன. மீண்டும் முன்னணிக்கு வர இந்த ஸ்தாபனம் கங்கணங் கட்டியுள்ளது.

வியட்நாமில் எண்ணெய்க் கிணறு தோண்டும் உரிமை பெறுவ தற்காக அமெரிக்க எண்ணெய் தேடும் ஸ்தாபனங்கள் முண்டியடித் துக்கொண்டு நிற்கின்றன. வியற் கடலோரத்தில் எண்ணெய் உண்டு என்ற விபரத்தைப் போருக்கு முன் பாகவே இவர்கள் தான் கண்டுபிடித் தார்கள். ஆனால் இன்று இவர்கள் பின்தங்கியுள்ளனர். ஜப்பானின் சுமிற்றோமோ கூட்டுத்தாபனத்திற் கும், பிரான்சின் ரோட்டால் கொம் பனிக்கும், மலேசிய அரச பெற்றோ லியம் ஸ்தாபனம் போன்றவற்றிற் கும் அமெரிக்காவின் முன்னோடிகள் இளைத்துப் போய் விட்டார்கள். வியட்நாம் - இந்தோனேசிய கூட்டு வங்கி, இந்தோனேசியாக் வின் ஆலோசகர் சுஆன் ஒன் பின் வருமாறு அறைகூவல் விடுத்துள் ளார்: "நீங்கள் விரைவில் வாருங் கள். நாங்கள் உங்களுக்கோர் இடம் வைத்திருக்கிறோம். இங்கு வந்தி ருக்கும் நாடுகள் எங்களை அமுக்க விட மாட்டோம். ஆனால் எச்சரிக் கின்றோம். காலதாமதமின்றிச் சீக்கி ரம் வருக" என்று வியட்நாமைத் தழுவிச் செல்லும் தென் சீனக் கட லோரத்தில் எண்ணெய் முதன் முத லாகக் கண்டுபிடித்த அமெரிக்கக் கம்பனிகளை வருந்தி அழைக்க வேண் டிய அவசியம் இல்லை. அவர்கள் வரக் காத்திருக்கிறார்கள். ஆனால் முன் சொல்லப்பட்ட ஸ்தாபனங் களுக்கு அமெரிக்க அரசின் தடையால் இளைத்துவிட்டார்கள். நாங்கள் காலந் தாழ்த்தி வந்துள்ளோம். பிற நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்குச் சவால் விட முடியுமென்பது சந்தே கம். நாலோடு ஐந்தாவதாக நாங் கள் செயற்படவேண்டியுள்ளது. இது வெல்லாம் அமெரிக்கர்களுடைய கூக்குரல்.

வியட்நாம் பொதுவுடைமையி லிருந்து நீங்கிச் சந்தைப் பொருளா தாரத்திற்கு வந்து கொண்டிருக்கும் நாடு. முன்யோசனை இல்லாமல் ஒரே மூச்சாக முதலீட்டில் இறங்கு வதில் பல தீமைகள் உள்ளன. அவர்களுடைய அதிகாரவர்க்கம் இன்னும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப மாறவில்லை. சட்ட திட்டங்க ளும் அப்படியே. முன்பு முதலீடு செய்து நட்டம் கண்டவர்களின் அனு பவங்களை அமெரிக்கா நன்கு கவ னிக்க வேண்டியுள்ளது. காலந்தாம தித்து வியட்நாமில் முதலீடு செய்ப வர்கள் பக்கம் அதிர்ஷ்டம் இருப்பது போல் தோன்றுகிறது.

ஹனோய் நகரிலிருந்து
புறூஸ் ஸ்ரான்லியும்
செய்தி அனுப்பியுள்ளார்.

ரைம், ஒக்ஸ்ட் 2, 1993

தற்போது நீங்கள் இராணுவத்தில்

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் தன்னுடைய கரங்களை வியாபார முயற்சிகளிலும் வைத்துள்ளது. சீனாவுக்கு வரும் உல்லாசப் பயணிகளை ஒரு நாளைக்குத் தங்களுடன் இணை யும்படி இராணுவத்தினர் வேண்டுகின்றார்கள். இதற்குப் பணம் செலுத்த வேண்டும். அவர்கள் ஏவுகணை செலுத்துவதை, இயந்தி ரத் துப்பாக்கிகளால் சுடுவதை, பெயனைட் சார்ஜ் காட்சிகளைக் கண்டு கழிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இவ் உல்லாசப் பயணிகள் இராணுவ விடுதிகளில் தங்குவதற்கும், அவர்களின் செயற்பாடுகளில் பங்கு பெறுவதற்கும் அவர்கள் மிகவும் விரும்புகின்றார்கள்.

காலையில் உடம்புக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் ஒரு உலா, காலை நாலரை மணிக்கு 25 கிலோ மீற்றர் தூரவேக நடை, தேகாப்பியாசம், பிற்பகலில் 2 மணித்தியாலம் அரசி யல் (வரலாறு) விரிவுரைகள், தலைவர் மாசேதுங் தேசத்தைக் கட்டி எழுப்பும் பங்களிப்புக்கள் யாவும் இதனுள் அடங்கியி ருக்கும், மாலையில் மலசல கூடங்களைச் சுத்தஞ் செய்யும் வேலைகள். இவ் அனுபவத்தை ஒருபோதும் மறக்க முடியாது. உல்லாசப் பயணிகள் ஞாபகச் சின்னமாகத் தோட்டாக்களைக் கொண்டு செல்வதை இராணுவம் கண்காணிக்க வேண்டும். பீஜிங் ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதற்கு வோஷிங்டன் இன்னும் தடைகளை விதிக்கலாம்:

ஏசியாவீக், செப்டெம்பர் 8, 1993.

புகையும் துப்பாக்கிகளும்

கள்ளக்கடத்தல் தொழில் கனடா, ஐக்கிய அமெரிக்கா எல்லையினூடாக இடம்பெறுகின்றது

ஐக்கிய அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் இடையில் உள்ள பாதுகாப்பற்ற சமாதான எல்லைப் புறப் பிரதேசமான சென்ற் லோரன்ஸ் நதியின் இருமருங்கில் துப்பாக்கிச் சண்டைகள் இடம் பெறுவது வழமையாகும். இந்த இருநாடுகளுக்குமிடையே எவ்விதக் குரோதங்களும் இருக்கவில்லை. அவர்கள் நட்புள்ள அயலவர்கள். ஆனால் சில இரவுகளில் மிகவும் வேகமுள்ள படகுகளில் கடத்தற் பேர்வழிகள் இக்கடற் பிராந்தியத்தினூடாகச் செல்லும்போது தமது தன்னியக்கத் துப்பாக்கிகளால் சுட்டுத் தமது வழியில் தடையாக எவரையும் இருக்க வேண்டாமென எச்சரிப்பதுண்டு. இவ்வாறு கனடாவிலேயே உற்பத்தி செய்யப்பட்ட கோடிக்கணக்கான பெறுமதியுள்ள சிகரெட்டுக்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னர் மீண்டும் அவற்றை அங்கிருந்து கனடாவிற்கே, திரும்பவும் கள்ளக் கடத்தற்காரர்கள் கடத்த முற்பட்டனர். இச்செயலைத் தடுப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட கனேடியப்பொலிஸ் குதிரைப் படையினர் எண்ணிக்கையிலும், ஆயுத பலத்திலும் கூடியவர்களாக இருந்தபோதிலும் கடத்தற்காரரைத் திட்டுவதேயன்றி வேறு எதனையும் செய்ய முடியாதவர்களாய்க் காணப்பட்டனர்.

இந்தக் கள்ளக் கடத்தலுக்குக் கோன்வால்ப் பகுதிக்கும், சென்ற் பிரான்சிஸ் ஏரிக்கும் இடைப்பட்ட நாற்பது கிலோ மீற்றர் தூரப் பகுதியைக் கடத்தற்காரர் தமது கடத்தற் பாதையாகப் பயன்படுத்தினர். இங்கு சென்ற் லோறென்ஸ் நதி விரிவடைகின்றது. அங்கு சென்ற் றெஜிஸ் ஆக்வேஸாஸ்னி மொஹவாக் ஒதுக்குப் பிரதேசம் உள்ளது. இந்தப் பிரதேசம் நியூயோர்க் இராச்சியம், ஒன்ராரியோ கியூபெக் மாகாணங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் 10,000 மொஹாக் இனத்தவர் வாழ்கின்றனர். இங்கு கள்ளக் கடத்தல் வியாபாரத்தில் சட்ட பூர்வமாக ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சிகரெட்டுக்கள் கள்ளக் கடத்தற் பொருளாக மீண்டும் கனடாவுக்குக் கடத்தப்பட்டது. 1794 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் படி இப்பகுதியினூடாக வியாபாரத்தை மேற்கொள்ளத் தமக்கு உரிமையுண்டு என்று மொஹாக்கியர் உரிமை கோருகின்றனர். ஆனால் இவ் ஒப்பந்தத்தைக் கனடா மதிக்கவில்லை என்று நோர்மன் தர்பெல் என்னும் மொஹாக் தலைவர் கூறுகிறார்.

நிதிவள வளர்ச்சியுற்ற பாரிய வியாபாரம்:- கள்ளக்கடத்தற் பொருள் ஒன்றாரியோவுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு கள்ளக் கடத்தல் இடம்பெறுவதற்குக் கனடா அரசாங்கம் புகையிலைக்கு விதித்துள்ள உயர்வான வரிவிதிப்புக் காரணமாக இருக்கலாம். இருநூறு (200) சிகரெட்டுக்களை உள்ளடக்கப்பட்ட ஒரு (CARTON) பெட்டி கனடாவில் 35 டொலருக்கு விற்கப்படுகின்றது. அதனையே அமெரிக்காவுக்கு 10.85 டொலருக்குக் கனடா ஏற்றுமதி செய்கின்றது. இருநாடுகளிலும் நிலவும் விலைகளுக்கு இடையில் உள்ள ஏற்றத்தாழ்வு வரி விதிப்பினால் ஏற்பட்டவையாகும். வருமானத்தைக் கூடுதலாகப் பெறுவதற்கு மாத்திரமன்றிப் புகைத்தலுக்கு உற்சாகமளிக்காது தவிர்ப்பதும் இதன் நோக்கமாகும்.

ஆகவே இதன் விளைவுகள் கள்ளக் கடத்தலுக்கு வழிவகுத்து உற்சாகமளித்துள்ளது. கடத்தப்பட்ட சிகரெட்டுக்கள் சட்டரீதியான விலையிலும் அரைப்பங்கு விலைக்குக் கனடா நகரங்களில் விற்பனையாவதால் வரி வருமானத்தில் 1.6மில்லியன் டொலரைக் கனடா இழப்பதாக அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

அதிக அளவில் ஆதாயம் கிடைப்பதால் பண்ட சாலைகட்கும், கடைகளுக்கும், அங்காடிகளுக்கும் கடத்தப்பட்ட சிகரெட்டுக்கள் விற்பனையாகின்றன.

கடத்தல் இடம் பெறும் பகுதிகளில் தமது சட்டத்தைத் தீவிரமாகப் பிரயோகிக்க ஐக்கிய அமெரிக்கா, கனடா அரசுகள் போதிய கவனம் எடுக்கவில்லை. பிரத்தியேகக் காரணங்களின் நிமித்தம் சட்டம் மீறப்படுவதை அவதானித்துப் பார்க்காதவர்கள் போல் நடந்து கொள்கிறார்கள். இரவு நேரத்தில் பொலிஸ் படையினர் கடத்தல் நடைபெறும் நதிப்பகுதிக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டுள்ளார்கள். இந்த ஆண்டில் இன்றுவரை 183 கடத்தற்காரர்களையே குற்றஞ் சாட்டியுள்ளனர். அன்றியும், ஆக்வேஸாஸ்னி ஊடாகக் கடத்தப்பட்டவற்றில் 05 (ஐந்து) வீதத்தினையே கைப்பற்றியுள்ளனர்.

இக்கட்டத்தின் மூலம் சில மோஹாக்கினர் சட்சாதிபதிகளாகத் திகழ்கின்றனர். மற்றும் பல ஒதுக்குப்புறப் பகுதிகளிலும் பார்க்க ஆக்வேஸாஸ்னி சிறந்ததாகும். அது ஒரு மந்த சூழ்நிலையுள்ள பிரதேசமாக இருந்துள்ளது. தற்போது வீடமைப்பாளர் புதிய கட்டடங்களையும், விடுகளையும் அமைக்க முற்பட்டுள்ளனர். அவர்கள் சில ஆடம்பரமான வசதிகளையும் அமைத்துக் கொண்டுள்ளனர். அங்கு இன்று விலைகூடிய கார்களும், படகுகளும் இருப்பதைப் பார்க்கலாம்.

கடத்தல் மூலம் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆவலுடன் பலர் ஆக்வேஸாஸ்னிக்குள் படையெடுத்துள்ளனர். முரண்பாடுடைய கட்சியினருக்கிடையே AK 47 துவக்குகள், (UZI) உப இயந்திரத் துப்பாக்கிகள் கொண்டு சண்டை பிடிப்பதும் உண்டு. அதனால் அங்குள்ள சில கார்களில் குண்டு துளைத்த அடையாளங்கள் தென்படுகின்றன. இக்கலகங்களுக்குக் கள்ளக்கடத்தற் போட்டிகளே காரணமாகும்.

இக்கள்ளக் கடத்தல்கள் மன்னிக்கப்பட வேண்டியவை என வாதிப்போர் கூறுவது என்னவெனில்; இக்கள்ளக்கடத்தல் வியாபாரத்திற்குக் கனடாவே குறைகூறப்பட வேண்டியதென்பதாகும். அவர்களின் பிரகாரம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கனடா சிகரெட் மீது விதிக்கும் வரியைக் குறைக்க வேண்டும் அல்லது ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் புகையிலை உற்பத்திப் பொருட்களுக்கு வரியைக் கூட்ட வேண்டும் என்பதாகும். ஆனால் இதனைச் செய்யக் கனடா அரசாங்கம் முன்வரப் போவதில்லை. ஆகவே கள்ளக் கடத்தல் மேலும் வளர்ச்சி அடைவதோடு அபாயமும் அதிகரிக்கும். ●

கோன்வோல் கோட்டினி டவரினால் அறிக்கை விடுக்கப்பட்டது.

ரைம் ஒகஸ்ட் 23, 1993.

அரும் பொருட் செல்வங்கள்

ஹோமர் தன் காவியத்தில் பகன்ற பிறியம் மன்னனுடைய பொற்குவை

தொல்பொருளியல் ஆர்வலரான ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஹென்றிக்ஸ் சீலிமான், 1873இல் மேற்கு துருக்கியில் கடும் வெய்யிலையும், புழுதியையும் பொருட்படுத்தாது அகழ்வு நடத்திய பொழுது, ஓர் அரும்பெருஞ் செல்வக் குவையைக் கண்டுபிடித்தார். அது, இலியட் காவியத்தில் புலவர் ஹோமர் புகழ்ந்து பாடிய ரோய் நாட்டு மன்னன் பிறியாமின் செல்வ

நிதியாகும் மிகவும் கவனமாகவும், ஆபத்துக்களின் மத்தியிலும் அகழ்வு நடத்தி, ஒவ்வொரு பொருளாக மறைத்து எடுத்து, கிரேக்கத்தில் உள்ள தனது வீட்டிற்குக் கள்ளக் கடத்தலாகக் கொண்டு சென்று, அதன்பின்பு உலகம் வியக்க அது பற்றி அவர் அறிவித்தார். 1922ஆம் ஆண்டில் எகிப்தில் பேரோ மன்னன் துத்தன்-கா-அமூனின் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்ட காலம் வரை, அது தொல்பொருளியலாளர்களிடையே மிகப் பெரியதொரு சேதியாகத் திகழ்ந்தது.

இரண்டாவது உலகப்போரின் போது அது பேர்லினில் உள்ள பதுங்குகுழி ஒன்றினுள் இருந்து எடுக்கப்பட்டு மறைத்து வைக்கப் பட்டிருந்த பின்பு, சுமார் அரை நூற்றாண்டு காலத்தின் பின்பு தற்பொழுது மீண்டும் அம்பலத்திற்கு

இரண்டாம் உலகப் போரின்போது காணாமற் போன அது தற்பொழுது மீண்டும் வெளிப்பட்டு ரோய நாட்டில் புகழ் பாடுகின்றது

வந்துள்ளது. அவற்றைப் பற்றி ருஷ்ய நாட்டுக் கலாசார அமைச்சர் விட்ரோ கூறுகையில், ''இந்தப் பொற்சாடிகளை நான் கையில் எடுத்துப் பார்த்தபொழுது அவை சாதாரணமானவையாகவே தென்பட்டாலும், பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்ற உணர்வு என்னை ஆட்கொண்டு திக்குமுக்காடச் செய்கிறது'' என்றார். அமைச்சர் விட்ரோ அந்தப் பொருட்கள் 1945ஆம் ஆண்டில் செம்படை பேர்

லினைக் கைப்பற்றிய பொழுது கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் அடங்குமென உறுதிப்படுத்தியுள்ளார். வெகுநாளாக அப்படித்தான் உலகம் அதைப் பற்றிச் சந்தேகப் பட்டது. 1991இல் ஆட்நியுஸ் என்ற சஞ்சிகையில் முன்னாள் சோவியத் நாட்டு உளவு நிறுவனமான கேஜீபீயின் ஆவணங்களைப் பார்வையிட அனுமதி பெற்றிருந்த இரண்டு எழுத்தாளர்களான கொன்ஸ்டன்டின் அகின்சாவும், கிரகரி கொஸ்லோவும் ருஷ்யர்களின் இந்தச் செல்வக் குவியலை மறைத்து வைத்திருக்கும் லிடயத்தைக் கூறினர்.

இப்பொழுது ருஷ்யர்கள் அந்தப் பொருட்களைக் காட்சிக்கு வைத்துள்ளார்கள். அவற்றுள் முன்பு, ஒரு வெள்ளியிலான சாடியும், அதனுள் 9,000 பொன்னாலான பொருட்களும், ஆறு இருப்புச் சங்கிலிகளும், ஒரு புட்டியும், பல தங்கக் கிண்ணங்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் மொஸ்கோவில் உள்ள புஸ்கின் அரும் பொருட் காட்சியகத்தின் பணிப்பாளரான, கிர்னா அனடோனோவாவுக்கோ, பிறியும் மன்னனின் செல்வத்தில் எவ்வளவு மொஸ்கோவில் உள்ளது என்று கூறமுடியாமல் உள்ளது. அதற்குக் காரணங் கூறுகையில், அவை கடும் பாதுகாப்புடன் ஒரே ஒரு நபரின் பொறுப்பில் இருந்ததாகக் கூறினார். அதனால் அறிவாய்வாளர்கள் சில நாட்கள் மட்டுமே அவற்றைப் பார்வையிடக் கூடியதாக இருந்ததாம். அந்தப் பொற்குவையில் எவை எவை இருந்தனவென்றோ தற்போது எவையெல்லாம் உள்ளனவென்றோ கூற முடியாமல் இருப்பதாக அவர் சொன்னார்.

முதன் முதலில் அந்தச் செல்வக் குகையைக் கண்டுபிடித்தவரும் அத்தனை தூரம் நேர்மையானவர் அல்ல. அவர் பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற ஒரு துணிகரமான ஆள் என்பதுடன் தனது செயற்றிறனைப் புகழ்ந்து கூறுவதில் சளைத்தவரும் அல்லர். அமெரிக்கக் குடியுரிமையைப் (சிலவேளை அதற்கும் பொய்யான சான்றுகள் முன் வைத்திருக்கக்கூடும் எனச் சந்தே

ஹெகடா காலத்திலிருந்து
கற் கோடரிகள்

கிக்க இடமுள்ளது.) பெற்ற பின்பு அந்தச் சீலிமான் ருஷ்ய இனத்தவரான தனது முதல் மனைவியை விவாகரத்துச் செய்தபின்பு தபால் மூலமான கல்யாணத் தரகு மூலம் ஒரு கிரேக்கப் பெண்ணைப் பேசி முடித்துத் திருமணஞ் செய்து கொண்டார். அதன் பின்பு துருக்கிக்குச் சென்ற அவருக்குப் பெயரளவில் ஓர் அமெரிக்கப் பிரசையாக இருந்த முறையில் வரலாற்றுச் சான்றுகளைத் தேடி அகழ்வு நடத்த அனுமதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

ரோய் பழைய நகரம் இருந்த இடம் என்பதற்குச் சான்றாக ஏழு நகரங்களில் அகழ்வு நடத்திப் புதை பொருள் அகழ்வுகளைச் சான்றாகக் காட்டி நிரூபித்தார். ஹோமரின் காவியத்தை வேதமெனக் கொண்டு ஆவலாகக் கற்ற அவர் இலியட் காப்பியத்தில் கூறப்பட்ட இரண்டாவது அல்லது ''தீயுண்ட'' நகரம் அது தான் என நிறுவி நின்றார். ஆனால் தற்கால அறிஞர்கள் சிலர் சீலிமான் ஹோமர் மீது கொண்ட பக்தியால், ரோய் நகரம் கி.மு. 2500–2200 இடைப்பட்ட காலத்தில் இருந்ததாகக் கூறினாலும் அந்தக் கால எல்லைகள் மிகவும் முந்தியவை என்றும் ஹோமர் காலம் கி.மு. 1250 அளவில் என்றும் கூறுகின்றனர்.

அந்தப் பொற்குவையின் வரலாற்றுப் பின்னணி எது என்பது ஒரு புறமிருக்கச் சென்ற வாரம் மொஸ்கோவில் இருந்து வெளியான செய்தி ஒரு பன்னாட்டுச் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ''சட்டப்படியும், சந்தேகமற்றதும்'' அந்தப் பொற்குவை ருஷ்யாவுக்கு அல்ல ஜேர்மனிக்கே உரியதெனப் பேர்லின் மாநிலத்தின் கலாசார அமைச்சர் ஊல்ரிச் ரொலோப்–மோமிங் கூறினார். மோமிங் தற் சமயம் போர்க் காலத்தில் இரு பக்கத்திலும் இருந்து கைப்பற்றி அபகரித்துச் சென்ற பல ஆயிரக் கணக்கான கலாசாரப் பொருட்களை மீண்டும் உரிய நாடுகளுக்கே கையளிப்பது தொடர்பாக நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகளின் படி ஜேர்மனிக்கே அவை கொண்டு வரப்படும் என்று கூறினார். ஜேர்மனி இவ்விதம் உரிமை கொண்டாடுவது, சீலிமான் அவற்றை ஜேர்மனிய மக்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார் என்ற உரிமை கோரலிலும்; 1881 வரை பேர்லினில் உள்ள ஆதிகால மற்றும் ஆரம்ப கால அரும்பொருட் காட்சிச் சாலையில் அவை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன என்ற முறையிலுமாகும். யுத்தம் முண்ட பின்பு இந்த அரும் பொருட்களும் வேறு பல விலை மதிக்க முடியா கலாசாரச் செல்வங்களும் பேர்லின் மீருக் காட்சிச் சாலைப் புகையிரத நிலையத்தின் நிலத்தடியில் பாதுகாப்பிற்காகப் புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்று அவர் கூறினார். 1990 இல் கைச்சாத்தான ஜேர்மனிய சோவியத் நல்லுறவு ஒப்பந்தத்தின் 16 ஆம் ஏற்பாட்டின் படி ''காணாமற்போன அல்லது சட்ட விரோதமாக இடமாற்றஞ் செய்யப்பட்ட கலைப் பொருட்கள் அவற்றின் உரித்தாளர்களுக்கு அல்லது வாரிசுகளுக்கு மீண்டும் கொடுக்கப்படவேண்டும், ஆனால் இங்கு எழும் முக்கிய கேள்வி யாதெனில், எவருடைய செல்வம் அது? யாருடைய வாரிசுகளுக்கு?'' என்பதாகும்.

துருக்கியும், ஜேர்மனியும் சில சமயம் ருஷ்யாவும் அவற்றைக் கோரக் கூடும். சீலிமானின் முதன்மை உரிமைக் கோரல் துருக்கியால் வழக்காடப்பட்டு; 1880 இல் துருக்கிய நீதிமன்றம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டு அந்தச் செல்வந்தரான கண்டு பிடிப்பாளருக்குப் பெயரளவிலான ஒரு தண்டமும்

விதிக்கப்பட்டது. அப்பொழுது பேர்ளினில் இருந்த அரச அரும் பொருட் காட்சிச்சாலை, 50,000 தங்க மார்க்குகளைத் தண்டமாகத் தானே கட்டித் துருக்கிய அதிகாரிகளுக்குத் தூபங் காட்டிவிட்டது.

அதனால் பேர்ளினில் உள்ள தினசரிச் செய்தித்தாள் ஒன்று, ''கொடுக்கப்பட்டது கொடுக்கப்பட்டது தான்'' என்று இது பற்றிக் கீரிட்டுக் கத்தியுள்ளது.

எது எவ்வாறாயினும் ஒரு பொருளின் ஆட்சி, சட்டத்தின் பத்தில் ஒன்பது பகுதியாகும். அதனால் ருஷ்யர்கள் நற் பண்பாளர்களாக அந்தச் செல்வத்தைத் திருப்பிக் கொடுக்கப் போவதாகத் தெரியவில்லை. ஆகவே பல நாட்டுச் சட்ட வல்லுநர்கள் இந்த விடயம் சம்பந்தமாக ஒரு பெரும் வாதப்போர் நடத்தப் போவது நிச்சயம். அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ரோய் நகரக் கோட்டை வாசலில் அச்சிலஸ் ஹெக்டர் நடத்திய போராட்டம் ஒரு பொழுது போக்குச் சுற்றுலா போலத்தான் தோன்றும். ●

மைக்கேல் வோல்ஸ்

ரைம், செப்ரெம்பர் 6, 1993

300 வருடம் நீடித்த வறட்சி மர்மம்

மறைந்த ஷேக்னா நகரில் மண்ணை அகழ்ந்து மேலுக்கு கொண்டு வரப்பட்ட குடியிருப்புப் பகுதியின் மேல் தோற்றம். 4,000 வருடங்களுக்கு முன்பாக வானம் பொய்த்ததால் இது கைவிடப்பட்டது.

உலகமறிந்த மிகத் தொன்மை வாய்ந்த சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்தியவன் ஆக்காட்டின் சார்கன் மெசப்பெத்தேமியா அரசனாவான். (Sargon of Akkad Ruled in Mesop otamia) இவன் சினாவை ஆண்ட ஹான் ராஜலக்சத்திற்கும், எகிப்தை ஆண்ட ராமேசஸ் பரம்பரைக்கும், மகா அலெக்சாந்தருக்கும் முற்பட்டவன். 4,000 வருடங்களுக்கு முன் பாகத் தைகிறிஸ் யூபிரடீஸ் நதிகள் ஓடிய பள்ளத்தாக்கிலுள்ள பல உன்னத நகரங்களையும், கிராமங்களையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். வெள்ளி, கோதுமை, பார்லி என்பனவற்றை இவர்களிடமிருந்து திறையாகப் பெற்று வந்தான். ஒரு நூற்றாண்டு காலமாக இந்த அரசு நிலைத்தது. பின்பு சடுதியில் யாதொரு வெளிப் படையான காரணமுமின்றி இது மறைந்து விட்டது. சார்கன் ஸ்தாபித்த ஆக்காட் என்ற அவனுடைய தலைநகரம் எங்கென்று இதுவரை தெரியவில்லை. களிமண் கட்டிகளில் சித்திரரூபத்தில் அவர்கள் பதித்து வைத்திருந்த வரலாறு யாவும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

சென்ற வார சயன்ஸ் (Science) இதழில் மர்மம் ஒருவாறு துலக்கப் பட்டுள்ளது. இயற்கையின் சடுதியான மாற்ற விளைவால் அழிவு நிகழ்ந்ததாக அமெரிக்க, பிரான்சு நாட்டு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். முதல் எரிமலையொன்று வெடித்து அப்பிரதேசம் முழுவதும் தனது சாம்பலைப் பரப்பியதாகவும், பின்பு 300 வருடகாலமாக வானம் பொய்த்ததாகவும், இந்த இரண்டு காரணங்களாலும் மக்கள் வாழமுடியாது இடம்பெயர்ந்ததாகவும் அகழ்வாராய்ச்சியாளர்கள் இயம்புகின்றனர். இப்போது ஈராக் என்று சொல்லப்படும் தென் மெசப்பெத்தேமியாவுக்குப் பெருந்தொகையான மக்கள் குடியேற அங்கு குழப்பம் ஏற்பட்டதாகவும், காத்திருந்த எதிரிகள் நாட்டைக் கைப்பற்றியதென்பதும் இவர்களின் முடிவாகும். வரட்சி வடபுலத்தைத் தாக்கி னாலும் தென்புலமும் பாதிப் படைந்து நாடே மறைந்த வரலாறு இதுவென்று சரித்திர நிபுணர்களின் கணிப்பு.

உலகின் முதலாவது சாம்ராஜ்யம் எரிமலைச் சாம்பலாலும் நீடித்த வறட்சியாலும் அழிந்திருக்கலாம்

சார்கன் மன்னரின் பேரன் செய்வ நிந்தனை செய்தபடியால் வானம் பொய்த்தது என்பது கர்ண

பரம்பரைக் கதை. இந்தக் காலகட்டத்தில் பூமியில் ஒரு தட்ப வெப்ப மாற்றம் நிகழ்ந்ததாகவும், இதனால் நீடித்த வரட்சி எகிப்து முதல் இந்தியா வரை தாக்கியதாகவும் விஞ்ஞான ஆய்வுகள் அறிவிக்கின்றன. மழை அருகியது; குளிரும் நிலவியது; நாங்கள் அறிவது மழை குறைய உஷ்ணம் கூடுவதைத் தான்; ஆனால் இரண்டு நிலைகளும் இயற்கையானவை என்கிறார் ஜார்ஜ் குக்ளா. இவர் பூமியும் அதன் உஷ்ணமும் பற்றிய ஆய்வுகள் செய்துள்ள பெருந்தகை.

இப்போது சிரியா என்னும் நாட்டின் எல்லைக்குள் சார்கனின் ஆக்காட் தலைநகரம் அகழ்வின் மூலம் காணப்பட்டுள்ளது. இந்த நகரத்தில் ஒரே சமயத்தில் 10,000 மக்கள் வாழ்ந்ததாக அமெரிக்க நிபுணர் ஹார்வே வைஸ் தெரிவிக்கின்றார். பின்பு 300 வருடங்களாக இந்த மாநகரம் குடிமக்கள் இல்லாது மண்மேடு மண்ணாகியது என்றும் இவர் தெரிவிக்கின்றார். வெட்டியெடுத்த மண்ணை இவர் ஆய்வுக்குட்படுத்திப் பின்வரும் முடிவுக்கு வந்துள்ளார். வரண்ட பூமியில் நாங்கூழ் எனப்படும் மண்புழு (Earthworm) வைக் காண்பதரிது, அத்துடன் வரண்ட பூமிக்கடியில் பெரும்பாலும் உலர்ந்த மண் காணப்படும். பூமிக்கடியிலிருந்து வெளிக்கொணரப்பட்ட கைவிடப்பட்ட வீடுகளின் கூரையில் எரிமலைச் சாம்பல் காணப்பட்டுள்ளது. இந்தச் சாம்பல் ஆறு சென்றி மீற்றர் தடிப்பில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இடத்து மண்ணைச் சோதனை செய்தபோது மண்புழு இல்லாமையும், உலர்ந்த நிலையும் காணப்பட்டுள்ளன. ஆகையால் மர்மத்தைத் துலக்கும் ஆய்வாளர்கள் இங்கு எரிமலைச் சாம்பல் பரவியதாகவும், நெடியதோர் வரட்சி நிலவியதாகவும் தெரிவிக்கின்றனர்.

எங்கு நோக்கினும் இவ்விடத்தில் இதே மாதிரியான காட்சி. அதாவது சாம்பலும் உலர் மண்ணும் தென்பட்டுள்ளது. 300 வருடங்களின் பின் அங்கு மழை பெய்ய ஆரம்பித்ததாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அதன்பின் மக்கள் மீண்டும் இப்பிரதேசத்தில் குடியேறினார்கள். பபிலோன் என்ற நாகரைத் தலைநகராகக் கொண்ட இன்னுமோர் சாம்ராஜ்யம் இவ்விடத்தில் புத்துயிர்பெற்றது. பின்பு அதுவும் வீழ்ச்சி அடைந்தது. இன்று அப்பிரதேசம் செழிப்பான பூமியாகக் காட்சி தருகின்றது. இது தான் இயற்கையின் சுழற்சி முறை.

ஆதியில் நடந்த வரட்சிக்கு எரிமலை காரணமாயிருக்கக் கூடுமா என்ற கேள்விக்கு இல்லை என்று வைஸ் பதில் தருகிறார். எரிமலை தட்ப வெப்ப நிலையை மாற்றும் சக்தி வாய்ந்ததல்ல. ஆனால் மழையின்மையும், அதனால் கொடிய வரட்சியும் 300 வருடங்களுக்கு நிலைத்தமை எப்படியென்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. இப்படியானதொரு நிகழ்வு மீண்டும் பூமியின் எப்பகுதியிலும் தோன்றலாம் என்பது மாத்திரம் நிச்சயம். மனிதகுலம் பூமியினை மாசுபடுத்துவதாலும், இயற்கை அன்னையை அவமதிப்பதாலும் நெடியதோர் வரட்சியைத் தோற்றுவிக்கலாம்.

கிறிஸ்ரி கோர்மன் – ரைம்,

ஒகஸ்ற் 30, 1993.

ஹொங்கொங் அகதிகள் திரும்பினர்

கடந்த ஒருமாத காலப் பகுதியில் ஹொங்கொங்கிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த 2400 இனவழி வியட்னாமியரை அந்த நாடு சீனாவுக்குள் நாடு கடத்த உள்ளது. ஆகஸ்ட், 23 இல் கன்ரன் நகரில் சந்தித்த ஹொங்கொங் சீன அதிகாரிகள் கடல்வழிப் பிரயாணத்திற்கான செலவைக் ஹொங்கொங் கும், தரைவழிப் பயணச் செலவை சீனாவும் ஏற்பதெனத் தீர்மானித்தனர். பல தென் சீன மாநிலங்களைத் தாண்டியே இந்த இனவழி வியட்னாமியர் வந்து சேர்ந்துள்ளனர்.

விற்றமின் புரட்சி

ஜெரோம் கோகென் (எம்.டி.) பிரேமை பிடித்தவரல்ல. சென்ற லூயி பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் உள் மருத்துவத் துறையில் பேராசிரியராக இருக்கும் அவர், வயது வந்த சுகதேகிகள் விற்றமின் குளிகைகளிலிருந்து நன்மை பெறலாம் என்ற கொள்கையை மறுத்து வந்தார். ஆனால் இன்று அவ்வாறல்ல, தனது இருதயத்தைச் சுகமாக வைத்திருப்பதற்குத் தினமும் காலையில் விற்றமின் 'ஈ' 400 சர்வதேச அலகுகள் உட்கொள்கிறார். இது ஏறக்குறைய 25 கோப்பை நிலக்கடலையிலிருந்து பெறும் அளவுக்குச் சமமானது. கலிபோர்னியாவிலுள்ள பீலலி ஹில்ஸ் இல் வைத்தியத்துறையில் ஈடுபட்டிருக்கும் 40 வைத்தியர்களின் தலைவர் கலாநிதி ஸ்ரீபன் டியூஷ்சும் அவ்வாறு மனமாற்றம் அடைந்துள்ளார் ''நான் விற்றமின்களுக்கு எதிராக செயற்பட்டேன். எடுக்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் எடுக்க வேண்டும் என்று நோயாளிகளைக் கட்டாயப் படுத்தவுமில்லை'' என்று கூறி இன்று நோயாளிகளை நன்றாகச் சாப்பிட்டு உடற்பயிற்சி செய்து விற்றமின் சி, 'ஈ' பீற்றாகரோட்டீன்ஆகியவற்றைச் சிறிதளவில் ஒவ்வொரு நாளும் சாப்பிடும்படி கூறுகின்றார்.

> ஒருநற்செய்தி இருதயநோய், புற்றுநோய், மற்றும் நீடித்த காலநோய்கள் வராமல் தடுப்பதற்கு உணவு மற்றும் அவற்றை நிறைவு படுத்தும் உணவு வகைகளிலிருந்து பெறப் படும் ஊட்டச்சத்துக்கள் உதவக் கூடியன.

கோகெனும், டியூஷ்சும் அவர்களுடைய சகபாடிகளிலும் பார்க்க ஓர்அடி முன்னே செயற்படுகின்றார்கள், எனினும் மருத்துவ உலகம் விற்றமின்களை நோக்கும் விதத்தில் ஓர் அடிப்படை மாற்றம் இருப்பதை அவர்களின் நடத்தை காட்டுகிறது.

ஹவாட் (Harvard) பல்கலைக் கழக தொற்றுநோய் வைத்தியர் கலாநிதி வால்டர் வில்லெற், நிறைவுபடுத்தும் உணவு, நீடித்த கால நோய்கள் ஆகியவற்றை ஆராயும் போது, ''இந்நாட்டில் உணவு மூலந் தேவையான விற்றமின்களை மக்கள் பெறுகிறார்கள் என்றும், மேலதிகமாக உண்ணப்படும் விற்றமின்கள் வெறுமனே சிறுநீருடன் வெளியேறுகின்றன என்றும் அண்மைக்காலம் வரை கற்பிக்கப்பட்டது ஆனால் இன்று இது உண்மையல்ல என்பதற்கு ஆதாரம் உண்டு.

அத்துடன் ஆராய்ச்சிக்கு இது ஒரு முக்கிய புலம் எனவும் விஞ்ஞானிகள் உலகம் அறிந்துள்ளது ''என்று கூறுகின்றார்.

சுகவாழ்வு– விற்றமின்கள் உணவல்ல, ஆனால் உண்ணும் உணவில் காணப்படுபவை அவையில் லாமல் உயிர்வாழ முடியாது. உடல் இழையங்களின் அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கும், பேணுவதற்கும், அத்துடன் அழிந்த இழையங்களை மீளப்பெறுவதற்கும் இவை சிறிதளவில் பயன் படுத்தப்படுகின்றன.

———

கடுமையான குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குத் தினமும் உட்கொள்ளப்படும் பழங்கால அளவுகள் ஏற்றவையாக இருப்பினும், அதிகரிக்கும் சான்றுகளின்படி உயர்ந்த அளவு விற்றமின்கள் உட்கொள்ளுதல் எலும்பு இழப்பிலிருந்து புற்றுநோய் வரையான நோய்களை எதிர்க்க உதவுகின்றன என்று தெரியவந்துள்ளது. விலெற்றும், அவரின் உதவியாளர்களும் அமெரிக்காவில் முதலிடம் வகிக்கும் உயிர்கொல்லியான இருதய நோயைத்தடுக்க விற்றமின் 'ஈ' உதவும் என்று இரு புதிய ஆய்வுகளின் மூலம் அறிவித்து உலகத்தின் கவனத்தை இரு வாரங்களுக்கு முன் ஈர்த்தனர். எட்டு வருடங்களாக 120,000 ஆண் பெண்களை ஆய்வுக்கு உட்படுத்தினர் தினமும் குறைந்தது 100 அலகுகள் விற்றமின் 'ஈ' உட்கொள்பவர்கள் இருதய நோய்த் தாக்கத்துக்கு உள்ளாவது 40 வீதம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பிறப்புச்சம்பந்தமான குறைபாடுகளை விற்றமின் 'பி' தடுக்கும் என்று வேறு அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்புப் புற்றுநோயைத் தடுக்க விற்றமின் 'டீ' ஒரு முக்கிய கருவியாக வரலாம் எனச் சில விஞ்ஞானிகள் இப்போது நம்புகிறார்கள்.

விற்றமின்களின் முழுச் சக்தியையும் அறிவதற்கு மிகப்பெரிய ஆராய்ச்சி நிறுவனங்கள் தமது முயற்சிகளை முடுக்கி விட்டுள்ளன

மருத்துவம்

நாடோடிக் - கதை -

விற்றமின் A உங்கள் பார்வல் உறவு வேகத்தைக் காட்டுகிறதா? மயிர் வளர்ச்சிக்கு நாகம் என்ற உலோகம் உதவுகின்றதா? விற்றமின் கனியுப்புக்கள் ஆகியவை பற்றிய எமது அறிவானது விஞ்ஞானத்தினதும், வதந்தியினதும் ஒரு கலப்பு ஆகும்

உடல் இழையங்களின் வளர்ச்சிக்கும், அவற்றைச் சரியாகப் பேணுவதற்கும் நுண்ணிய அளவில் தேவைப்படும் இரசாயனப் பதார்த்தங்களே விற்றமின்கள் ஆகும். தொற்று நோய்களை ஏற்படுத்தக் கூடிய றிக்கெற்ஸ் (என்புருக்கி நோய்) பெலாகிறா, பெரிபெரி போன்ற நோய் உடையவர்கள் சில உணவுகளை உண்பதால், அவர்களை அந்நோய்களிலிருந்து காப்பாற்ற முடியும் என்று ஆய்வாளர்கள் கண்டு பிடித்ததிலிருந்தே சரியான முடிவுகளை உறுதிப்படுத்தப் பல ஆண்டுகள் செல்லலாம். ஆனால் பாவனையாளர்கள் காத்திருக்க விரும்பவில்லை. நியூஸ் வீக் வாக்குக் கணிப்பின்படி பத்தில் ஏழு அமெரிக்கர் சில சமயங்களிலேனும் உணவை நிறைவு படுத்தும் விற்றமின்களை உட்கொள்ளுவதாகவும், தினமும் உபயோகிக்கப்படுபவர்களில் 15 வீதம், சென்ற வருடமே பாவிக்கத்தொடங்கி விட்டதாகவும் அறிய வருகின்றது. விற்றமின்களுக்கும், மற்றும் உணவை நிறைவு படுத்துவனவற்றிற்கும் உரியவர்த்தகம்விரிவடையும் போது சில பொய்யான சுகாதாரத் தகவல்களினால் பாவனையாளர்பாதிக்கப் படக்கூடும் எனச் சுகாதார அலுவலர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆனால் இன்றைய முன்னேற்ற கரமான செயல்கள் தடைப்பட்டாலும், சத்துள்ள உணவுக்குரிய எமது மனப்பாங்கில் அவை மாற்றங்களை ஏற்படுத்தலாம். எனினும் ''ஊட்டமும் வயதாகலும்'' என்னும் ஆய்வின் ரஃபற்ஸ் பல்கலைக் கழக நடுவகத்தின் கலாநிதி ஜெஃப்ரி விளம்பேக் என்பவர் ''நெடுநாள் நீடிக்கும் நோயைத் தடுக்கவும், சுகத்தைப் பேணவும் ஊட்டச்சத்துக்கள் உதவுகின்றன என்பதற்குச் சிறந்த ஆதாரங்கள் உள்ளன.இது ஒரு புதிய மாதிரியாகும்'' என்று கூறுகிறார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் முதலாவது விற்றமின்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இரசாயனவியலாளர் விற்றமின்களைச் செயற்கை முறையாக உருவாக்கத் தொடங்கிய பின்பும், அவற்றைப்பால், மா, அரிசி ஆகியவற்றுக்கு உணவு உற்பத்தியாளர் சேர்க்கத் தொடங்கிய பின்பும் 1930ஆம் ஆண்டுகளில் கடும் குறைபாட்டு நோய்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உட்கொள்ளும் அளவு- சில விற்றமின்களின் உயர்ந்தளவு உபயோகம் நன்மை பயக்கக்கூடியது என அண்மைக்கால ஆய்வுகள் காட்டுகின்றன. ஆனால் நாளொன்றுக்கு உபயோகிக்க வேண்டும் என்று கணிக்கப்பட்ட அளவானது மிகக்குறைவாகவே உள்ளது.

தூய்மை

ஒவ்வொரு வருடமும் விற்றமின்களிலும், அவற்றைச்சார்ந்த உணவுகளிலும் பல கோடி டொலர்களை அமெரிக்க மக்கள் செலவழித்தாலும் பொருட்கள் உண்மையிலேயே விளம்பரப்படுத்தப்பட்டவைதான் என ஒரு நிறுவனமும் உறுதிப்படுத்தவில்லை.

பெரும்பாலும் தீர்க்கப்பட்டன. 1941ஆம் ஆண்டளவில் தேசிய விஞ்ஞானக் கழகத்தின் உணவும் மற்றும் ஊட்டச்சத்துச்சபை 13 விற்றமின்களில் பெரும்பான்மையானவற்றுக்குத் தினமும் உட்கொள்ள வேண்டிய அளவைப் பிரசுரித்து வந்தது.

காலத்துக்குக் காலந் தினமும் உட்கொள்ளவேண்டிய அளவு சரி செய்யப்பட்டது. ஆனால் அவை இன்னமும் பழைய நிலைப்பாட்டிலேயே உள்ளன. போலிக்கமிலத்தைப் பொறுத்தவரை கூறப்படும் அளவு மிகக் குறைவு என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். ஒரு 'பி' விற்றமின் ஆகிய போலிக்கமிலம் ஈற்ஸ், ஈரல், பச்சை இலை மரக்கறி வகைகள் ஆகியவற்றில் காணப்படுகின்றது. டி.என்.ஏ. உருவாக்கலிலும். மற்றும் வேறு பல உடல் அமைப்புப் பணிகளிலும் உதவுகின்றது. உத்தியோகபூர்வ அளவின்படி 180 தொடக்கம் 200 மைக்குரோ கிராம் போலிக்கமிலம் இரத்தச் சோகையைத் தடுப்பதற்குத் தேவைப்படுகின்றது. அத்துடன் அண்மைக் காலத் தரவின்படி கருவுற்ற பெண்கள் அதிகளவில் போலிக்கமிலத்தை உட்கொள்ளும் போது குழந்தைகளில் வரக்கூடிய சில ''பிறப்பில் ஏற்படும் குறைபாடுகள்'' வராமல் தடுக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் கருவுற்ற பெண்கள் முதல் ஆறு

கிழமைக்கு நாளொன்றுக்கு 400–800 மைக்ரோ கிராம் போலிக் கமிலத்தைத் தினமும் உட் கொண்டு வரும்போது மூளை, முண்ணாண் வளர்ச்சி சீராக அமை வதன் காரணமாகப் பிறப்பில் ஏற் படும் மூளைய முண்ணாண் குறை பாட்டு விருத்திகள் முற்றாகத் தடுக்கப்படுகின்றன என்றும் ஆய் வுகள் கூறுகின்றன. இதன் பிரகா ரம் உணவு, மற்றும் ஊட்டச்சத் துச் சபை ''கருத்தரித்த பெண் கள் 400 மைக்குரோ கிராம் போலிக்கமிலத்தைத் தினமும் பாவிக்கவேண்டும்'' என்று அறி வுறுத்துகின்றது. ஆனால் பிரச் சினை யாதெனில், முதல் ஆறு வாரமும் கழிந்த பின்பே அதிக மான பெண்களுக்குத் தாம் கருத் தரித்திருப்பதாகத் தெரிய வரு கின்றது. எனவே தற்போது அமெரிக்கப்பொது சுகாதாரச் சேவையினர் கருத்தரிக்கக்கூடிய வயதுள்ள எல்லாப் பெண்களை யும் தினமும் 400 மைக்குரோ கிராம்கள் உட் கொள்ளும்படி அறி வுறுத்துகிறார்கள்.

பெண்களுக்கு மேலதிமாகப் போலிக்கமிலம் தேவைப்படுவதற் குக் கருவுற்றிருக்கும் நிலை மட் டுமே ஒரே காரணம் அல்ல, மேலும் கருப்பைக் கழுத்துடன் சம்பந்தமான புற்றுநோயை ஏற் படுத்தும் வைரசாகிய ஏச். பி. வி. 16 ஆல் தாக்கப்பட்டிருக்கும். பெண்களின் இரத்தத்தில் உயர் மட்டம் போலிக்கமிலம் உள்ளவர் களுக்குப் புற்று நோயின் அறிகுறி கள் காட்டுவது குறைவாகவே உள்ளது என அலபாமா பல் கலைக்கழக ஆராய்ச்சியாளர் சென்ற வருடம் கண்டுபிடித்த னர். இதற்கு முன்னர் நடத்திய ஆராய்ச்சியில் இதே குழுவினர் 'பி 12' நிறைவு படுத்தும் சத்து டன் 1000 மைக்குரோ கிராம் போலிக்கமிலம் தினமும் உட் கொள்ளும் கடும் புகை பிடிப் போர் விற்றமின் உட்கொள்ளாத புகை பிடிப்போரிலும் பார்க்கப் புற்றுநோய் அறிகுறிகள் தோன்று வது குறைவாகவே உள்ளது என வுங் கண்டுபிடித்தனர். அதிக அள வில் போலிக்கமிலம் உபயோகிப் பது தீங்கற்றதாக இருப்பதனால் புகை பிடிப்போர் தமது பழக்கத் திலிருந்து விடுபடும் வரைக்குமா வது உட்கொள்ளும் போலிக்கமி லத்தின் அளவை உயர்த்துமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் றிக்கெற்ஸ் என்ற என்பு உருக்கி நோயைப் பெரும்பாலும் தீர்க்க விற்றமின் 'டீ' தற்போது மீண் டும் பெருமையடையும் ஓர் ஊட் டச்சத்தாகக் கருதப்படுகின்றது. மீன், நெய்யுள்ள பால் போன்ற வற்றில் இது காணப்பட்டாலும், சூரிய ஒளியில் நிற்கும்போது எமது உடல் விற்றமின் 'டீ' யை உருவாக்கி இரத்தத்திற்கும், எலும்புகளுக்கும் உணவிலிருந்து கல்சியத்தைக் கொண்டு செல்வ தற்குப் பயன்படுத்தப் படுகின்றது. தினமும் உட் கொள்ளவேண்டிய அலகுகள் வளர்ந்தோருக்கு 200 உம் குழந்தைகளுக்கு 400 உம் ஆகும். ஏறக்குறைய ஒரு லீற்றர் பால் குடிப்பவருக்கு அதிக அளவு விற்றமின் 'டீ' கிடைக்கின்றது.

ஆனால் அதிகமான வளர்த் தோருக்குப் பால் குறைவாகவே கிடைக்கின்றது. பல மில்லியன் கணக்கான முதியோரின் எலும் புத் தேய்விற்கு இது காரணமாக லாம்.

கலிபோர்னியப் பல்கலைக்கழ கத் தொற்றுநோய் வைத்தியர்க ளான பிராங்க்கார்ல்ஸ்ட், செட் றிக் கார்ல்ஸ்ட் ஆகியோர், விற்ற மின் 'டீ', குறைபாடு மார்பு, பெருங்குடல், ஆண் சிறுநீர்ப்பை

அன்ரி ஒக்சிடென்ற் வேலை செய்யும் விதம்

ஏற்றமற்ற துணிக்கைகள் என்றழைக்கப்படும் தீங்கு விளைவிக்கும் மூலக் கூறு களை ஒர் ஒழுங்கிற்குள் அடக்கி பல பொது நோய் களைத் தடுப்பதற்கு அன்ரி ஒக்சிடென்ற்ஸ்எனப்படும்விற் றமின் 'ஈ' போன்ற சேர் வைகளை உபயோகிக்க லாம் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

ஏற்றமற்ற துணிக்கைகள்

└── { தனி இலத்திரன் / சோடி இலத்திரன்

ஒரு சாதாரண ஒட்சிசன் அணு நாலுகோடி இலத்தி ரன்களைக் கொண்டுள் ளது. உடலில் இயற்கை யாக ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் அணுவிலி ருந்து ஒர் இலத்திரன் அகற் றப்படலாம். இப்பொழுது அது ஓர் ஏற்றமற்ற துணிக் கையாகி இழந்த இலத்தி ரனை மாற்றீடு செய்வதற்கு வேறு மூலக் கூறுகளைத் தாக்கலாம்.

கலமொன்றின் சுவரி லுள்ள மூலக்கூற்றிலிருந்து ஏற்றமற்ற துணிக்கை இலத் திரன் ஒன்றைக் கவரும் போது புதிய தோர் ஏற்ற மற்ற துணிக்கை உருவாக் கப்பட்டு ஒரு சங்கிலித் தாக் கம் ஆரம்பிக்கின்றது.

இவ்வாறு நடைபெறும் இலத்திரன் களவில் சங்கி லித் தொடர் கலத்தின் சவ்வை அரித்துக் கலத்தின் அழிவுக்கு வழிகோலி புற்று நோய் மற்றும் வேறு நோய்களின் தாக்கத்திற்கு வழிவிடுகின்றது.

அன்ரி ஒக்சிடென்ற்ஸ் ஆனது தனது மூலக்கூறில் ஒரு பிரத்தியேக அமைப் பைக் கொண்டிருப்பதால், எதுவித தீங்கும் ஏற்படாமல் தனது ஒரு இலத்திரன் அணுவை ஏற்றமற்ற துணிக் கைக்கு வழங்குகிறது. இத னால் ஆபத்தான சங்கிலி உருவாக்கம் முறியடிக்கப் படுகின்றது.

மின் கழுத்து ஆகியவற்றில் புற்றுநோய் தோன்றுவதற்கு வழி ஏற்படுத்தலாம் என்று கூறும் விஞ்ஞானிகளில் முதன்மையாக நிற்கிறார்கள். பூமத்திய கோட்டுப் பகுதியில் பெரும்பாலும் காணப்படும் இம் மூன்று புற்றுநோய்களும் உயர்ந்து அகலக்கோட்டு இடங்களில் கூடுதலாகத் தென்படுகின்றன. ஆய்வுகூடப் படிப்புக்களில் இருந்து விற்றமின் 'டீ' பரிசோதனைக் குழாய்களிலும், மிருகங்களிலும் புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியைக் குறைக்கின்றன என்று அறியப்படுகின்றது. சூரிய ஒளிபடுதல், உணவில் விற்றமின் 'டீ' யின் அளவு, இரத்தத்தில் விற்றமின் 'டீ' யின் அளவு ஆகியவற்றில் பெருங் குடலில் புற்றுநோய் தாக்கும் வீதம் தங்கியுள்ளது என்பதைக் காட்ட, கார்லண்ட் என்பவர்கள் அதிக சான்றுகளைப் பெற்றுள்ளார்கள். இதே போலவே மார்புப் புற்றுநோய்க்கும், ஆண் சிறுநீர்ப்பையின் கழுத்துச் சுரப்பிப் புற்றுநோய்க்கும் விற்றமின் 'டீ' யின் அளவுடன் தொடர்புள்ளதை இவர்களும், வேறு ஆராய்ச்சியாளரும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இதற்கான வைத்திய பரிசோதனைகள் தமது பெறுபேறுகளைத் தர இன்னும் பத்து வருடங்கள் எடுக்கலாம். ஆனால் கார்லண்ட் ஆராய்ச்சியாளரின் கூற்றுச் சரியெனின் மார்புப் புற்றுநோய்க்கு எதிரான யுத்தம் லேசர் சிகிச்சையினால் அல்ல. ஐஸ்கிறீம், வீட்டுத் தயிர், வெண்ணெய் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள சிறிதளவு விற்றமின் 'டீ' யினால் இறுதியில் வெல்லப்படலாம்.

வேறு நீண்ட கால நோய்களின் தடுப்பிற்குப் பழவகைகளும், மரக்கறி வகைகளும் நிவாரணிகளாகலாம். இன்று விற்றமின்கள் மீது கவனத்தைத் திருப்புபவை ஒட்சியேற்றத்தைத் தடுப்பவையான 'அன்ரி ஒக்சிடென்ற்ஸ்' என்று அழைக்கப்படும் விற்றமின் 'ஈ' விற்றமின் 'ஈ', மற்றும் விசேட வகை விற்றமின் 'ஏ' ஆகிய பீற்றாகரோட்டீன் ஆகியவையாகும். 1988 ஆம் ஆண்டுக்குப் பின் அமெரிக்கச் சந்தையில் விலைப்பட்ட பீற்றாகரோட்டீனின் பெறுமதி 7 மில்லியன் டொலரிருந்து வருடத்திற்கு 82 மில்லியன் டொலராக உயர்ந்தது. அதேபோல் விற்றமின் 'ஈ' இன் பெறுமதி 260 மில்லியன் டொலரிலிருந்து 338 மில்லியன் டொலராக உயர்ந்தது. இவ்வுயர்வுக்கான காரணத்தை இரு சொற்களில் கூறலாம். அதாவது ஏற்றமற்ற துணிக்கைகள், புற்றுநோய், இருதய நோய் போன்றவற்றை உள்ளடக்கிய வயது சம்பந்தமான நோய்களுடன் தொடர்புற்றிருக்கும் இம் மூலக் கூறுகள் நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு தடவையும் எமது உடலில் தோன்றுகின்றன. ஒவ்வொரு அணுவைச் சுற்றியும் சோடி சோடியாக இலத்திரன்கள் உறுதியான மூலக்கூறு ஒன்றில் இருப்பது போலல்லாமல் வேறு இலத்திரனுடன் விருப்பத்துடன் இணையக்கூடிய தனி இலத்திரனை இவ் ஏற்றமடைந்த துணிக்கைகள் கொண்டிருக்கும். இது தனது அயலில் ஓர் இலத்திரனைக் கவருவதால் ஒரு சங்கிலித் தாக்கத்தை ஏற்படுத்திக் கலங்கள் மீது பாரதூரமான அழிவை ஏற்படுத்தி அவற்றின் சவ்வுகளையும், பரம்பரை அலகுகளையும் பாதிக்கின்றது.

இப் பாதிப்பை உண்டாக்கும் 'ஒட்சியேற்றம்' என்ற தாக்கத்தைக் கட்டுப்படுத்த உடல் பல்விரிவான தந்திரங்களைப் பயன்படுத்தினாலும் இவை போதுமானவையாக இல்லை. புகைப் பிடித்தல் தொடக்கம் வயதாகல் வரையுள்ள பல காரணிகள் இவ் ஒட்சியேற்றத் தாக்கத்தை மேலும் கூட்டுகின்றன. இவ் விடயத்தில்தான் அன்ரி ஒக்சிடன்ற்ஸ் எனப்படும் ஒட்சியேற்றத்தைத் தடுக்கும், விற்றமின்கள் உபயோகத்திற்கு வருகின்றன. ஏற்றமற்ற துணிக்கைகளைத் தனிநிலைப்படுத்தி அவற்றின் தனி இலத்திரன்களைக் கட்டுப்படுத்த விற்றமின் 'ஈ', 'சீ' மற்றும் பீற்றாகரோட்டீன் ஆகியவற்றால் முடியுமென உயிரியல் இரசாயனவியலாளர் பலகாலமாக நம்பியிருந்தனர். 1970 களில் நடாத்தப்பட்ட ஆய்வுகளில் பழவகைகளும், மரக்கறிகளும் அதிகமாக உண்ணும் மக்கள் கூட்டங்களில் புற்றுநோய்த் தாக்கும் குறைவாகக் காணப்பட்டமையால் அன்ரி ஒக்சிடென்ற்ஸ் விற்றமின்கள் புற்றுநோயைத் தடுக்க உதவக் கூடியன என அறியப்பட்டன. கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி கலாநிதி கிளாடிஸ் புளொக் தம் ஆய்வுகளில் வாய், தொண்டை, வயிறு ஆகிய புற்றுநோய்கள் தாக்கும் வீதத்தையும், உட்கொள்ளப்படும் விற்றமின் 'சீ' யின் அளவையும் ஒப்பிட்டார். 20 ஆய்வுகளுள், 18 ஆய்வில் குறைவாக விற்றமின் 'சீ' உட்கொள்வது புற்றுநோய்த் தாக்கத்தைக்

விற்றமின் "டீ"

விற்றமின் டீ யின் மாற்றம் அடையக் கூடிய ஒரு கட்டமைப்பு ஓர் ஓமோன் ஆகும். அட்றென்லீன் சுஸ்ரெஜன் போன்றவை போல் இது உடம்பின் செயற்பாட்டினால் மிகவும் கவனமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது. நிறைவுபடுத்தும் ஊட்டச்சத்துக்கள், உணவு ஆகியவற்றில் இருந்தும் மனித தோலின் மீது சூரிய ஒளி படுவதனாலும் விற்றமின் 'டீ' பெறப்படுகிறது. கோடை காலத்தில் நிலவும் 10 நிமிடங்கள் உடலின் மீது சூரிய ஒளி படும்போது ஒரு வருடத்திற்குத் தேவையான விற்றமின் 'டீ' உண்டாக்கப்படுகின்றது. வயோதிபர், மது தொடர்ச்சியாக உபயோகிப்போர் சூரிய ஒளி குறைவாக உள்ள இடங்களில் உள்ளோர் விற்றமின் 'டீ' குறைபாட்டினால் பாதிக்கப்படலாம். விற்றமின் 'டீ' ஆனது புற்று நோய்க்கு எதிராகப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடியது என ஆய்வுகள் கூறுகின்றன.

கூட்டுகின்றது என்றும் அறிந்தார். சராசரியாக மிகக் குறைவாக விற்றமின் 'சி' உட்கொள்வோர் மிகக் கூடுதலாக உட்கொள்வோரிலும் பார்க்க இருமடங்கு வீதத்தில் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேசியப் புற்றுநோய்க் கழக விஞ்ஞானி றெஜினா ஜீக்கினர் இதேபோல் 20 ஆய்வுகளில் நுரையீரல் மற்றும் வேறு இழையங்களில் ஏற்படும் புற்றுநோய்க்கும், உண்ணப்படும் பீற்றா கரோட்டீனின் அளவுக்கும் உள்ள தொடர்பைக் கண்டு பிடித்தார். ஊட்டச்சத்தின் அளவு உயர்வாக இருக்கும்பொழுது நுரையீரல் மீது புற்றுநோய்த்தாக்கம் குறைவாக இருந்தது. இதேபோல் வாய், தொண்டை, இரைப்பை, சிறுநீர்ப்பை, மலவாசல் ஆகிய இடங்களில் தோன்றும் புற்றுநோய்களுக்கும் ஓரளவு தொடர்பு காட்டின. இவ் ஆய்வுகள் சான்றுப்படுத்தும் வேறுபாடுகளுக்கு விற்றமின் உபயோகம் தவிர்ந்த வேறு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். காரணமும், விளைவும் நிறுவுவதற்குக் குறிப்பிட்ட அளவு விற்றமின்கள் மக்களுக்குக் கொடுக்கப்பட்டு அவற்றின் நீண்ட நாள் விளைவுகள் பதியப்பட்டன. அவ்வாறான 12 இரசாயனத் தடுப்பு முறைகள் தற்போது ஆய்வு நிலையில் உள்ளன. மக்கள் கூட்டங்களில் காணப்படும் புற்றுநோய் சம்பந்தமான வேறுபாடுகளை அன்ரி ஒக்சிடென்ற்ஸ் எனப்படும் ஒட்சியேற்றத்தைத் தடுப்பவை சரியாக விளங்குமானால் சுகாதார அதிகாரிகள் மக்களைக் கூடுதலாக விற்றமின்களை உட்கொள்ளச் செய்து அமெரிக்காவில் புற்றுநோய் இறப்புக்களை மூன்றில் ஒரு பங்காற் குறைக்கலாம் என்று கணிக்கிறார்கள்.

இருதயநோய் வல்லுநர்கள் விற்றமின்கள் சார்பில் கோரப்படுவதில் நம்பிக்கையற்றாலும், நல்ல காரணங்களுக்காக அன்ரிஒக்சிடென்ற்ஸ் என்ற விற்றமினின் புரட்சியை ஏற்கிறார்கள். ஒட்சியேற்றத் தாக்கமே இருதய இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோலினால் ஏற்படும் பாதிப்புக்குக் காரணம் என்று பத்து வருட ஆராய்ச்சிகள் காட்டுவதனால் அன்ரி ஒக்சிடன்ற்ஸ் இப் பாதிப்பைத் தடுக்கக்கூடியவை.

இன்று பல ஆய்வுகள் வெளியிடப்பட்டாலும் அவை அனைத்தும் ஹர்வாட் (Harvard) பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட விற்றமின் 'ஈ' செயற்பாட்டைப் பற்றியே சுட்டிக்காட்டுகின்றன. பத்து வருடச் சுயேச்சையான பகுத்தாய்வின் பின்பு கடந்த வருடம் யூ. சி. எல். ஏ. (UCLA) இல் உள்ள ஆய்வாளர்கள் குறைந்தளவு விற்றமின் 'சி' யின் பாவனை இருதய நோயின் இறப்பினைக் கூட்டுகின்றது என்று அறிவித்தனர். இவ்வாய்வின்படி தினமும் 80 மில்லி கிராம்களுக்குக் குறைவாக உட்கொள்வோரிலும் பார்க்க 300 மில்லி கிராம் உட்கொள்வோரின் இறப்பு வீதம் 40 நூற்று வீதம் குறைவாக உள்ளது. அதே நேரத்தில் ஒன்று விட்ட ஒரு நாளைக்கு 50 மில்லிகிராம் பீற்றா கரோட்டீன் நிறைவு படுத்தும் ஊட்டச்சத்துக்கள் எடுப்பதற்கு வேறு சிறந்த காரணங்கள் இருக்கலாம். இன்றைய எதிர்பார்ப்புக்கள் எட்டப்படுமாயின் விற்றமின்கள் மட்டுமே பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளை அரைவாசியாகக் குறைக்கவும், வயது முதிர்ந்தோரை எலும்பு இழப்பிலிருந்தும், இடுப்பு முறிவிலிருந்தும் பாதுகாத்து இருதய, புற்றுநோய்களின் தாக்கத்தையும் மிகவாகக் குறைக்கவும் உதவும், மிகச் சிறந்த செய்தியாதெனில், இவ்வைத்தியப் புரட்சிக்கு ஒரு புதிய ஆயுதப்பரம்பரை தேவையில்லை. உங்கள் வீதி மூலைக் கடைகளில் இவை நிறைய உள்ளன.

சகல வைத்தியர்களும் உங்களுக்குக் கூறுவது யாதெனில்: தேகப் பயிற்சி, புகைப் பிடித்தலைக் கைவிடல், மற்றும் இலிப்பு மிட்டாய்களுக்குப் பதிலாக கரட்டுகள் உட்கொள்ளல் போன்றவையே சுக வாழ்வின் இரகசியமாகும். பல்லாயிரம் அமெரிக்கரால் விற்றமின் குளிகையில் தேடப்படும் நிவாரணத்தை மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளால் செயற்படுத்த முடியும். ஆனால், நிறைவுபடுத்தும் ஊட்டச்சத்துக்கள் எடுப்பதற்கு வேறு சிறந்த காரணங்கள் இருக்கலாம். இன்றைய எதிர்பார்ப்புக்கள் எட்டப்படுமாயின் விற்றமின்கள் மட்டுமே பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளை அரைவாசியாகக்

அன்ரி ஒக்சிடென்ற்ஸ்:-

இவைதான் இன்று விற்றமின்களில் அதிக விற்பனையில் உள்ளவை. இவற்றில் விற்றமின் 'சி' 'ஈ' மற்று பீற்றா கரோட்டின் ஆகியன அடங்கும். இவை புற்றுநோய், விரைவில் மூப்பெய்துதல் போன்றவற்றின் தாக்கத்தைக் குறைத்துவதுடன் இரத்தக் குழாயில் கொலஸ்ரோல் படிவதைத் தடுத்து இதய நோயிலிருந்தும் காப்பாற்றுகின்றன. மேலும் இவ் அன்ரி ஒக்சிடன்ஸ் உறுதியற்ற, ஏற்றமற்ற துணிக்கைகளை இணைப்பு மூலம் உறுதியுள்ளதாக மாற்றி உடற்கலங்களைச் சிதைவில் இருந்து பாதுகாக்கின்றது. பீற்றாக் கரோட்டின் என்ற விற்றமின் கரட்டில் அதிக அளவில் காணப்படுகின்றது. சித்திரக (தோடை, எலுமிச்சை பழங்களில்) விற்றமின் 'சி' நிறைய உண்டு மரக்கறி எண்ணெய்யில் அன்ரி ஒக்சிடன்ஸ் காணப்படுவதினால் அது அதற்குரிய பண்புகளைக் கொண்டிருக்கின்றது.

மேலதிக விற்றமின் 'சி' யின் உபயோகம் வயிற்றோட்டத்தை ஏற்படுத்தினாலும் உபயோகிக்க முடியாதவற்றை உடல் வெளியேற்றுவதினால் மேலதிக உபயோகம் அபாயகரமானதல்ல. விற்றமின் 'ஈ' உம் பீற்றாகரோட்டீனும் எமது கொழுப்பில் சேர்க்கப்பட

எழுதியவர்கள்:— வோசிங்ரனில் மேரி ஹகர்உடன் ஜொய்ஸ் கௌலி சிக்காகோவில் கரென்ஸ்பிரீன்ஸென் லொஸ்ஏஞ்சலிஸ் இல்ஜீன் கோர்டன் நியூயோர்க்கில் ஜோகவர கூப்பர் ராமோ.

நியூஸ்வீக், ஜூன்,7, 1993

மாய உலகில் வாழ்தல்

மாய உண்மை ஓர் ஆச்சரியமான எண்ணக்கரு. குறிப்பாகக் கூறின் கணனியினால் உருவாக்கப்பட்ட ஒரு மாதிரிச் சூழ்நிலையுடன் உணர்வூட்டி, விளையூட்டி ஆகியனவற்றினூடாக ஏற்படுத்தப்படும் கண்டுணர்தல், இடைவினை ஆகியவற்றினூடாக மனிதன் பெறும் அனுபவமாகும். மாய உலகினுள் பயணஞ் செய்யும் ஒருவர் போலியான சாட்சி, ஒலி ஆகியவற்றில் இலயித்து விடுவார். ஏன் அவற்றைத் தொடுவது போன்ற உணர்வையுமே அவர் பெறுவார். இலட்சிய நிலையில் கூறுவதாயின், அவர் தாம் வாழும் உண்மை உலகையே மறந்து போகுமளவுக்கு மாய உலகுடன் ஒன்றித்து விடுவார். சாதாரண கணனியில் பெறப்படும் விளக்கப் படங்கள் போன்றவை அல்ல இவை. நீங்கள் எங்கே போக வேண்டும் எனப் பார்க்கிறீர்களோ அங்கெல்லாம் மாய உண்மை விம்பங்கள் உருவாக்கப் படுகின்றன. உங்கள் தலையில் பொருத்தப்பட்டுச் காட்சி (HMD-Head Mounted Display) எனப் படும் தலைக் கவசம் நீங்கள் அணியும் தரவு கையுறை (Data Gloves) அல்லது வெளி எலும்புக் கூடு (Exosekeletons) ஆகியவை தரும் தரவுகள் அடிப்படையில் உருவாகும் விம்பங்களைக் கணனி நெறிப்படுத்தும். எனவே மாய உலகினுள் பிரவேசிக்கும் போது உண்மையாகவே ஒர் இடத்தில் நீங்களே நிற்பது போன்ற பிரமை ஏற்படும்.

ஒரு திங்கள் இரவு அமெரிக்காவின் மினசொட்டா மாநிலத்திலுள்ள புளூமிங்ரன் என்ற இடத்தில் ஒரு நடைபாதையில்



நீண்ட மனிதச் சங்கிலி காணப்பட்டது. அது 'மாயம்' என எழுதப்பட்ட ஒரு விளையாட்டுக் கழகத்திற்கு இட்டுச் சென்றது. நானும் அவ்வரிசையில் நின்றேன். அங்கு மூன்று விரல் தீக்கனவு (Daetyl Nightmare) என்ற விளையாட்டில் 5 நிமிடங்களுக்கு ஈடுபட ஒவ்வொருவரும் 5 டொலர் பணம் செலுத்தியிருந்தனர். விளையாட்டு அரங்கில் நான்கு வட்ட மேடைகள் உண்டு. ஒவ்வொரு மேடையிலும் ஒவ்வொருவர் தலைக்கவசத்துடனும் கையில் இரண்டு பொத்தானுள்ள இயக்கியுடனும் காணப்பட்டனர். அவர்கள் மேடையிலிருந்து வீழ்ந்து விடாமல் இருக்க மேடையைச் சுற்றி இடுப்பளவுக்குக் கம்பி வளையம் பொருத்தப்பட்டுள்ளது. அவர்களைப் பார்க்க வித்தையாக, வியப்பாக இருந்தது. யாரோ ஒருவர் அவர்களைத் துரத்துவது போன்று அல்லது அவர்கள் யாரையாவது துரத்துவது போன்ற பிரமிப்பில் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த நான்கு தொலைக்காட்சிகளில் அவர்கள் ஒவ்வொருவரும் காணுங் காட்சியை வெளியில் நிற்பவர்களும் காணக்கூடியதாயிருந்தது.

எனது முறை வந்தது. தலைக் கவசம் கையுறைகளை அணிந்தவண்ணம் எனது விளையாட்டைத் தொடங்கினேன். பயிற்சி பெற ஒரு நிமிடம் தரப்பட்டது. ஒரு பொத்தானை அமுக்குவார்முன்னே செல்ல முடியும். 180 பாகையால் திரும்ப முடியும், நிலத்தில் இருக்க முடியும், பின்னால் திரும்பி பின் பக்கம் யார் வருகிறார்கள் எனப் பார்க்க முடியும். விளையாட்டு ஆரம்பமாகிறது. படிகளில் ஏறுகிறேன். தூண்களைச் சுற்றி வருகிறேன். மற்றவர்கள் ஏவிவிடும் கதாபாத்திரங்களை எதிர் கொள்கிறேன். அவர்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம், அல்லது துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்புவதன் மூலம் வெற்றி பெறலாம். மேலும் பெரிய சிறகுகளையுடைய பிராணிகளிடமிருந்தும் தப்ப வேண்டும். சரியான நேரத்தில் இரண்டாம் பொத்தானை அமுக்கிச் சுடா விட்டால் அது தன் பற்களால் கௌவி மேலே தூக்கிச் சென்று கீழே எறிந்து சென்று விடும். ஆயினும் இங்கு மரணம் தற்காலிகமானதே, திரும்பவும் எழுந்து போராடலாம். கீழே விழும் போது காட்சி தெளிவாயிராது. அத்துடன் சரியாக வியர்க்கும். நான் கண்ணாடி அணிபவன்: அதுவும் ஒரு குறைபாடே. சிறிது நேரத்தில் அது நனைந்து காட்சி

மங்கலாகிவிடும். தலைக் கவசம் அணிந்திருந்தாலும் பார்வையாளர்களின் சத்தமும், பியர் மணமும் சற்றே உணரக் கூடியதாயிருந்தது.

முப்பது வருடங்களுக்கு முன் ஐவன் சதர்லண்டு என்ற கணனி விஞ்ஞானி தமது சொந்த எச்.எம்.டீ.யை அமைத்த பொழுது மாய உண்மை உருவாக்கப்பட்டது. அது படிப்படியாக முன்னேற்ற மடைந்து இன்று மேல் நிலையை அடைந்து விட்டது. 1980 களில் கலிபோர்னியாவின் மொப்பற்பீல்டில் உள்ள நாசாவின் ஆம்ஸ் ஆய்வு மத்திய நிலையத்தினர் செவ்வாய்க் கோளிலிருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு கணனியின் உதவியுடன் முப்பரிமாணமாதிரி அமைப்பை ஏற்படுத்தினர். பூமியிலிருந்து கொண்டே செவ்வாய்க் கோளை ஆராயக் கூடியதாயிருந்தது.

பென்ரகனின் உயர் நிலை ஆய்வுத்திட்ட நிலையம் மாய உண்மையில்பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகின்றது. ஈராக் குடனான யுத்தத்தில் பாலைவனத்தில் போர் புரிய வேண்டும். எனவே பாலைவனம் மாதிரியொன்றைக் கணனியில் உருவாக்கி கவசப் பீரங்கி வண்டிகளை இயக்கும் தளபதிகள் அறைக்குள் இருந்த வாறே போர்ப்பயிற்சிகளில் ஈடுபடுவர். இவ்வருட இறுதிக்குள் வீட்டிலிருந்தபடியே கவசப் பீரங்கி வண்டி விளையாட்டை விளையாட முடியும். அதற்காக சேகா-வீ ஆர் (Sega-VR) என அழைக்கப்படுங் கருவி பயன்படுத்தப்படும். சண்டை நடைபெறும் இடத்தில் நீங்களே நிற்பது போன்ற பிரமை ஏற்படும். அதற்கான முப்பரிமாண ஒலி, ஒளி அமைப்பு ஏற்படுத்தப்படும். கண், காதுகளுக்குப் பொருத்தப்பட்ட கருவி மூலம் எத்திசையிலும் பார்க்க முடியும். பின்னால் எதிரி துரத்துகிறானா எனத் திரும்பியும் பார்க்க முடியும். முன்னோக்கிச் செல்லலாம், பின்னோக்கிச் செல்லலாம், வலது புறமோ, இடது புறமோ நகரவும் முடியும். மேலே பறக்கலாம், கீழே



(வலப்புறம்) ஒட்டோகட்டின் முதல் தயாரிப்பான இணைப்பு

(மேற்புறம்) இம்மூன்று படங்களும் தலைக்கவசத்துடன்பொருத்தப்படும் 'U' இணைப்புக்கருவின் அசைவுத் தொடர்ச்சியைக் காட்டுவன.

மாய ஆராய்ச்சியில் தயாரிக்கப்பட்ட தலைக் கவசத்தை அணிந்து U இணைப்பியின் பகுதியை காற்றின் மூலம் இயக்குகிறார்.

இறங்கலாம்! எறிகணைகளையும் ஏவலாம். ஆயினும் இதன் விலை 200 டொலர் மட்டுமே.

ஒருவகைக் கையுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றை அணிந்து கொண்டால் மாய உலகில் பல காரியங்களைச் செய்யலாம். கையை முன்னோக்கிச் சுட்டிக் காட்டினால் நீங்கள் முன்னே செல்லலாம். மிக நுண்ணிய மூலக்கூறுகளையும் நீங்கள் நசுக்கலாம். இங்கு என்ன விசேடம் எனில் ஒன்றில் நீங்கள் மூலக்கூறின் அறைக்கு சிறியதாகிறீர்கள் அல்லது மூலக்கூறுகள் பெரிதாகின்றன. ஆயினும் நாளடைவில் கையுறைகள் இழுபட்டுப் போகும். இதனால் தரவுகள் தவறாகிவிடும். எனவே வெளி எலும்புத் தொகுதிகளை உருவாக்குகின்றனர். இவை வன்மையானவை எனவே பழுதடைய மாட்டா.

மாய உண்மை என்ற எண்ணக் கருவைப் பயன்படுத்தி ஒரு சத்திர சிகிச்சையாளன் மிகச் சிறிய வீடியோக்கமரா, தலைக்கவசம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சத்திர சிகிச்சையில் ஈடுபடலாம். தொலைதூர வீடியோ அலைகளைப் பயன்படுத்தி ஒருவைத்தியர் வீட்டிலிருந்தபடியே தொலைவில் உள்ள ஒரு நோயாளியைப் பரீட்சித்துப் பார்க்கலாம். சில விசேட அமைப்பு முறைகளைச் செய்வதன் மூலம் ஒரே நேரத்தில் பலரும் ஒரு மாய உலகை அனுபவித்துப் பார்க்கலாம். அங்கு உங்களைப் போன்று மாய உலகில் நடமாடும் மற்றவர்களையும் சந்திக்க முடியும். இன்று மாய உண்மை பற்றிப் பல கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. பல சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஏற்கனவே மாய உலகு பல சேவைகளைச் செய்யத் தொடங்கி விட்டது. உதாரணமாக, உண்மையான டாங்கிகளைப் பயன்படுத்தாமல் மாய டாங்கிகளைப் பயன்படுத்தி எவ்வித செலவுமில்லாமல் போர் உத்திமுறைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

டோக்கியோவின் மட்சுஷிற்றா நிறுவனத்தின் காட்சியறையில் மாயச் சமையலறை ஏற்படுத்தப்பட்டுள்ளது, இங்கேயே மாய உலகு விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இங்கு தம்பதியர் தமக்கு விருப்பமான ஒரு சமையலறையைத் தெரிந்து கொள்ளலாம். அங்கு தமக்கு விருப்பமான முறையில் தளபாடங்களை ஒழுங்குபடுத்தலாம். பாத்திரங்களை லாச்சிகளில் அடுக்கலாம். வசதிக் குறைவு ஏற்பட்டால் அதற்கு ஏற்றவண்ணம் தளபாடங்களை மாற்றி அமைக்கலாம். குழாய்களில் நீர் வருவது போன்றும் பிரமை ஏற்படும் சில திருத்தங்

களைச் செய்வதன் மூலம் எதிர் காலத்தில் தம்பதியர் தம் விருப் பப்படி ஒளியூட்டிகளாயும் அமைத்துக் கொள்ள முடியும் என்கின்றனர் இந் நிறுவனத்தினர்.

மாய உண்மை என்ற எண்ணக் கருவைப் பயன்படுத்திப் பலதுறை களில் மாணவருக்குப் பயிற்சியும் அளிக்கலாம். கலிபோர்னி யாவின் மெல்லெனாபார்க் என்னுமிடத்திலுள்ள SRI இன்ர நாசனல் என்ற ஆய்வுகூடம் கண்டுபிடித்த முறையின்படி தரை ஒரு தளத்திற்குச் செல்லா மலேயே மாய விமானங்களை விமானந்தாங்கியினுள் கொண்டு செல்ல விமானிக்கு வழிகாட்ட லாம். இதில் ஒரு நன்மை யாதெ னில், விமானம், மாய விமான மாகையால் அதன் இறக்கை கலத்தில் மோதினாலும் அது உடையாது. நன்றாகப்பயிற்சி பெற்றபின் இவரால் உண்மை விமானங்களை விமானந் தாங்கியுள் வழிநடத்தலாம்.

மாய உண்மையின் பிறிதொரு நன்மை யாதெனில், விளையாட்டுத் துறையில் பயிற்சியளிப்பது. டோக்கியோவின் என்ஈசி நிறுவ னம் பனிக்கட்டி சறுக்கு விளை யாட்டில் பயிற்சி பெறுபவர்களுக்கு என ஒரு மாய உலகை அமைத் துள்ளது. இதன் நன்மை யாதெ னில், பயிற்சியின் போது விழுந் தால் காயம் ஏற்படாது. ஆனால் அங்கு மேடு பள்ளம் இருப்பது போன்ற அனுபவம் ஏற்படும். தடைகளைச் சுற்றி வர வேண்டும். எனவே கை, கால்களைச் சரியாக இயக்குவதில் பயிற்சி பெறுவர்.

சிக்கலான தரவுகளை ஆராய் வதற்கு மாய உண்மையைப் பயன் படுத்துவது இங்கொரு முக்கிய துறையாகும். பல கிளைகளையு டைய நிறுவன உரிமையாளர், வியாபாரம் எப்படி நடக்கின்றது என ஆராய முடியும். வெறும் அறிக்கைகளையும், வரைவுகளை யும் பயன்படுத்தாமல் முப்பரிமாண அமைப்பில் பரந்து காணப்படும் உலகில் தரவுகளை இயங்குநிலை யிற் காணலாம். உதாரணமாக அறைக்குள் இருந்தபடியே மான் கற்றன் நகர் முழுவதையும் ஒரு உலங்கு வானூர்தியினால் உலா வருவதைக் கற்பனை செய்யவும் மாய உலகில் நீங்களே உலங்கு வானூர்தியை இயக்கி உயர்ந்த கட்டடங்களை அருகில் சென்று பார்க்கவும் முடியும்.

வைத்தியத்துறையிலும் மாய உண்மை பலமாகப் போட்டி போடு கிறது. சப்பல் ஹில் என்ற இடத்தி லுள்ள வடகரோலினா பல்கலைக் கழகத்தில் பல முன்னேற்றங்களைச் செய்துள்ளது. ஏச் எம். டீ HMD அணிந்த வைத்தியர் நோயாளியின் உடலினுள் பார்க்க முடியும். இப் பல்கலைக்கழகத்திலுள்ளகேரிபிஷப் என்ற பேராசிரியர் கூறுகிறார்: தாயின் வயிற்றிலுள்ள கருவை உண்மையிலேயே காணலாம். இது வைத்தியர்களுக்கு ஒரு பேருதவி யாகும். ஊசியைச் சரியாக எங்கே குத்த வேண்டும் என அவர் அறிந்து கொள்வார். நியூரோ சேர்ஜன்களைப்பொறுத்தவரையில் மூளையில் சத்திர சிகிச்சை செய்வ தற்கு முன்பாக எங்கு கட்டி இருக் கிறது என அறிந்து கொள்ளலாம். அதன் மூலம் எக்கோணத்தில் கத் தியை வைக்கவேண்டும் எனப் புரிந்து கொள்வார்.

நாசாவின் ஜேம்ஸ் பி. ஜென் சின்ஸ் என்பவர் சில தவறான கருத்துக்களைத் தெளிவு படுத்தி னார். முதலாவது விண்வெளிப் பயணத்தின் போது ஏற்படும் நோய் போன்றதே மாய உலகில் பயணஞ் செய்யும் போது ஏற்படும் நோய் என்பது தவறு. உண்மையில் கருவிக களின் இயக்கம், காட்சி ஆகிய வற்றைச் சிறந்த முறையில் அமைத் தால் எவ்வித உடற் கோளாறும் ஏற்படாது. இரண்டாவது, மாய உலகப் பயணம் விண்வெளிப் பய ணத்துக்கு இடையூறாக அமையும் என்பதாகும். ஆனால் உண்மையில் இது விண்வெளிப் பயண ஆய்வுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

தொலை இயக்கியைப் பயன் படுத்தி மிகத் தொலைவிலுள்ள கோள்களையும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பூமியிலிருந்த படியே ஆராயலாம். உதரணமாக பூமியிலிருந்தபடியே செவ்வாய்க் கோளில் நடைபெறுவனவற்றை 20 நிமிடத்துள் அறிய முடியும்.

மாய உலக முறையைப் பயன் படுத்திக் கோள்களை மட்டுமன்றி மூலக்கூறுகள் போன்ற நுண் உல கையும் நுணுக்குக் காட்டியூடாகப் பார்க்கும் மிகச்சிறிய பகுதி யையும் ஆராயலாம். இதன் மூலம் உயிரியியல் இரசாயனவியல் புரதம் போன்றவற்றை மிகவும் நுணுக்கமாக ஆராயலாம் என வில்லியம்றைட் என்ற பேராசிரியர் கூறுகிறார்.

மாய உண்மை என்ற தொழில் நுட்பம் நாளாந்தம் முன்னேறுகி றது. மிகவிரைவில் சாட்சிகள் மிக தத்ரூபமாக மாறும். 1979ஆம் ஆண்டு தனிநபர் கணனி இருந்த நிலையில் இன்று மாய உலகம் இருக் கிறது.

—மைக்கல் அன்ரன்நவ்—

பொப்பியுலர் சயன்ஸ், 1993

பட்றியொட்டின் பிள்ளைகள்

பாரசீக வளைகுடா யுத்தமுனையில் மிகத் திறமாகப் பாவிக்கப்பட்ட பட்றியொட் ஏவுகணைகள் அடிக்கடி தாக்குதல் குறியைத் தவறின. இதனால் அமெரிக்கா தற்போது புதிய அமைப்புக்களைக் கொண்ட ஏவுகணைகளை வடிவமைப்புச் செய்யத் திட்டமிடுகிறது.



வானத்தாக்குதல் தொடர்பான எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதும் ஜெருசலம் முழுவதும் அமைதியாகின்றது. அதனையடுத்து இருண்ட ஆகாயத்தில் ஒரு சிறிய சிவப்புப் புள்ளி தென்படுகின்றது. மிக விரைவாக அது பெரிதாகி நகரின் மத்தியை நோக்கி அசைகின்றது. இப்போது இரண்டு பொறிகள் கீழே இருந்து வேகமாக ஒன்றன்பின் ஒன்றாக மேலே செல்கின்றன. இவை முன்பு வானத்தில் வந்து கொண்டிருந்த ஒளிப்பிளம்பை நோக்கிச் செல்கின்றன. வானத்தில் மறைந்த நேரத்தில் தொடரான வெடிப்பொலிகள் கேட்கின்றன. சிறு தாள்களாக நிலத்தில் மெதுவாக விழுகின்றன,

1991 இல் பாரசீக வளைகுடா யுத்தத்தின் தொலைக்காட்சியில் இந்த நிகழ்வுகள் தெளிவாகின. அமெரிக்காவின் பட்றியொட் பல ஸ்கட் ஏவுகணைகளைச் செயலிழக்கச் செய்து இஸ்ரேலையும், சவூதி அரேபியாவையும் பாதுகாத்த பெருமையை மக்களிடம் பெற்றுக்கொண்டது.

ஏவுகணைப் போர் உண்மையில் அவ்வாறானதாக இருக்கவில்லை. மிக அவதானமாகத் தொலைக்காட்சி நாடாவைப் பார்த்தால் 23 வயது நிரம்பிய பட்றியொட் வீடியோ கமராவால் பிடிக்கப்பட்ட 40 ஸ்கட்டில் 2 ஐ மாத்திரமே தாக்கியிருக்கின்றது. அதே நேரத்தில் அமெரிக்க இராணுவம், முதலில் 90 வீதம் ஸ்கட் ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் தற்போது அது 70வீதம் என மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது சவூதி அரேபியாவில் 70 வீதம் எனவும், இஸ்ரேலில் 40 வீதம் எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறான பின்னடைவு நிலையில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா ஐந்திற்கும் குறையாத புதிய ஏவுகணைகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. இவை பட்றியொட்டை விட மிகக் கூடிய தாக்குதல் திறனைக் கொண்டவையாக இருக்கும். இவை குறுகிய இடைத்தூரத் தாக்குதல் திறன் வாய்ந்தவையாகவும், நீண்டதூர நியுச்கிளியர் ஏவுகணைக்கு எதிராக இயங்க முடியாதவையுமாகும். ஆனால் இவை இராணுவத்தை, நகரத்தை, அல்லது ஸ்கட் தாக்குதலில் இருந்து ஒரு சிறிய நகரத்தைக் காப்பாற்ற வல்லவை. இராணுவத் (பிரிகேடியர்) தளபதி டேவிட் கிட்னர் கருத்துப்படி ஆரம்ப பட்றியொட்டின் அமைப்பு ஆகாயத் தாக்குதல் நடத்தும் விமானங்களை எதிர்ப்பது மட்டுமே. இவரே வளைகுடா யுத்தத்தில் பட்றியொட் தாக்குதல் பிரிவுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார். ஆனால் தற்போதைய திட்டத் தயாரிப்பு நீண்ட தாக்குதல் திறன் கொண்ட புதிய ராடர் சாதனத்துடன் அமைக்கப்படும். இதனால் இவை

பட்றியொட் ஏவுகணையை விட மிகப் பயன்பாடு கொண்டவை யாக இருக்கும். இவ்வாறான தயாரிப்புக்களை ஆரம்பிக்க காங்கிரஸ் 1.1 பில்லியன் டொலர் களை ஒதுக்கியுள்ளது. கிளின்ரன் நிர்வாகம் இந்த ஒதுக்கீட்டுத் தொகையைப் படிப்படியாக அதி கரிக்கும். அதிகாரிகள் கருத்துப் படி இவ்வாறான அதி நிவிர ஏவு கணைத் தயாரிப்பின் தேவை தொடர்பாக மாறுபட்ட கருத் துக்கே இடமில்லை.

பென்ரகன் திட்டமிடலாளர் கருத்துப்படி 1950 ஆம் ஆண்டின் பிற் பகுதியில் ஏவுகணைகள் எல்லாவற்றிற்கும் எதிராகச் செயற் படக் கூடிய வைகளாக மேலே கூறப்பட்ட நவீன தயாரிப்புக்கள் விளங்கும் என்று கூறப்படுகின் றது. தாட் அல்லது அரோ ஆகிய இரண்டு ஏவுகணைகள் பாதுகாப் பின் முன்னணியில் நிற்கக்கூடி யவை. இவை தென்கொரியா அல்லது இஸ்ரேல் ஆகிய நாடுக ளின் பரப்பளவு கொண்ட பிர தேசத்தைப் பாதுகாக்கக் கூடி யவை. பாக்-3; எறின்ற்; அல்லது கோப்ஸ் சாம் ஆகியவை அடுத்த தாகப் பாதுகாப்பு வேலைகளைச் செய்யக்கூடியவை. இவைகள் எதி ரியின் ஏவுகணைகள் இராணுவத் தளத்தை அல்லது நகரங்களைத் தாக்கு முன்னர் அவற்றினை அழிக்கவல்லன, கீப்னர் என்பவ ரின் கருத்துப்படி இந்த ஐந்து வகையான ஏவுகணைகளையும் அழிக்க வல்லவை எங்கும் கிடை யாது என்பதாகும். எல்லா ஏவு கணைகளையும் செய்து பாவிக்க வேண்டும் என்பது இல்லை, உதா ரணமாக இராணுவம் எறின்ற் அல்லது பட்றியொட் பாக்-3 ஏவு கணையைத் தெரிவு செய்யலாம். பட்றியொட்டையே தொடர்ந்தும் இராணுவம் பாவிக்கலாம். இதற்கு நிலத்திலேயே ராடர் சாதனம் உள்ளது. ஆனால் மற்றவைகளுக்கு ஏவுகணையிலேயே ராடர் சாத னம் பொருத்தப்பட்டு இருக்கும். தாட் ஏவுகணைகளைப் பொறுத்த வரை ஓர் ஒப்பந்த அடிப்படை யான குறைந்த தொகையே தயா ரிக்கப்படும். வருங்காலத்தில் சில

மற்றது'' என்று பைக் கூறுகின் றார். இவரின் கருத்துப்படி எதிரி கள் இலகுவான எதிர்ச் செயற்பா டுகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பதாகும்; அல்லது எமது கண வித் தொகுதிகள் யுத்த களத்தில் எதிர்பார்த்தளவு திறமையாகச் செயற்படாமல் விடக்கூடும். எதிர் பாராத சில நிழ்வுகள் யுத்த களத்தில் ஏற்படும்போது அதைச் சமாளிக்கும் விதத்தில் கணவித் தொகுதிகள் செயற்படாமல் விடு வது இயல்பு.

மறுபுறத்தில் ''போலிஸ்ரிக்'' (Ballistic) ஏவுகணைகளைப்

1. ''பாக் - 3'' (PAC - 3)	இது பட்றியொட் ஏவுகணையின் மறு வடிவம்.
2. எறின்ற் (ERINT)	பட்றியொட் போன்று குறுந்தூர ஏவுகணை. இது வெடிப்பதற்குப் பதிலாக அடித்து வீழுத்துந் திறனைக் கொண்டது.
3. கோப்ஸ் சாம் (CORPS SAM)	முதலாவது குறுந்தூர ஏவுகணை, முன்னேறும் இராணுவத்துடன் கொண்டு செல்லக்கூடியது.
4. தாட். (THAAD)	ஓர் இடைத்தூர ஏவுகணை. ஆனால் பட்றி யொட் சென்று தாக்கும் உயரத்தை விடக் கூடிய உயரத்தில் எதிரியின் ஏவுகணையைத் தாக்கக் கூடியது.
5. அரோ (ARROW)	இடைத்தூரத் தாக்குதற் திறன் கொண்ட ஏவுகணை. அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாகத் தயாரித்து இஸ்ரேலில் பாவிக்கப் படும்.

வேளை இது முன்னோடியான தாக்குதல் ஏவுகணைப் பிரிவில் அடங்கியிருக்கலாம்.

ஆனால் ஒரு யுத்த களத்தில் இவை எவ்வகையாகச் செயற் படும் என்பது அறியப்படாத விடயமாகும். இராணுவக் கருத் தின்படி இந்த இரண்டு பிரிவுக ளும் 90 வீதம் எதிராகச் செயற் படக்கூடியன என்பதாகும். ஆனால் வெளி அனுபவசாலிகள் கருத்துப்படி இவை நடைமுறைச் சாத்தியம் அற்றவை என்பதாகும். ''உள்ளே வரும் 90 வீதம் எதிரி யின் ஏவுகணைகளை இவை நாசம் செய்யும் என்பது சாத்திய

பொறுத்தவரை எதிர்ச் செயற்பாடு களைக் கொண்டிருந்தாலுங் கூட வெற்றிகரமாக அழிப்பது இலகுவான காரியமல்ல. வானத்தில் ஏவப்ப டும் எல்லா ஏவுகணைகளும் கிட்டத் தட்ட ஒரே மாதிரியாகவே செயற் படுகின்றன. றொக்கட் உந்துசக்தி ஏவுகணைகளை மேலே வளிமண்ட லத்திற்கு அப்பால் ஏவிவிடுகின்றன. பின்னர் இயந்திரத்திற்குச் சக்தி யினை வழங்கும், எரிபொருள் முடிவடைந்தவுடன் புவியீர்ப்பு தனது கட்டுப்பாட்டிற்குள் ஏவு கணையைக் கொண்டு வருகின்றது. இதனால் ஏவுகணை புவிநோக்கிய பாதைக்குள் பிரவேசிக்கின்றது.

அதாவது மேலே எறியப்படும் பந்து எறிந்த வேகங் குறைந்த வுடன் மீண்டும் திரும்பி புவிநோக்கி வருவது போன்ற செயற்பாடு ஆகும். (போலிஸ்ரிக் என்ற சொல் கிரேக்கச் சொல்லில் இருந்துபிறந்த தாகும் – கருத்து எறிதல் - என்ப தாகும்.) மேல் சென்ற பாதை புவி நோக்கி மாறுகையில் எறிகணையா னது 30 பாகை அளவில் சமபோக் கில் இருந்து கீழ்நோக்கிச் சாய்ந்து வரத் தொடங்குகின்றது.

இந்த நேரத்தில் அது ஒரு செக்கனுக்கு ஒரு மைல் என்ற வேகத்திற் புவியை நோக்கிய பாதையில் விழத் தொடங்கு கின்றது. போலிஸ்ரிக் ஏவுகணை களைப் பொறுத்தவரை இவை ஏறத்தாழ 1அடி சுற்றளவைக் கொண்டவையாக இருக்கின்றன. ''பிழை விடுவதற்குச் சாத்தியம் இல்லை. தாக்குதல் இலக்கு 1 அல் லது 2 மில்லி விநாடிக்குப் பிந்தி னாலும் இலக்குத் தவறும்'' இந்தக் கருத்தை ஜோன் சார்வி என்ற ஆயுத நிபுணர் கூறியிருக்கின்றார். இவர் கவிங் நகரைச் சார்ந்த ஸ்ரன்போட் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்.

சதாம் அனுப்பிய ஸ்கட் ஏவு கணைகள் இவை மிகவும் பழைய தயாரிப்புக்கள். எல்லாம்இஸ்ரேலின் குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்க ஏவப்பட்ட போதும் அவ்வாறு நடக்கவில்லை. காரணம் இவற்றில் பல குறிக்கப்பட்ட தூரங்களைச் செல்லு முன்பே வானத்தில் வெடிக் கத் தொடங்கி விட்டன. இந்தக் கருத்தை நியூமெக்சிக்கோ பௌதிகவியலாளர் ஜோஜரி கன வான் தெரிவித்திருக்கின்றார்.

பட்றியொட் தயாரிப்பாள ரான றெய்தியோன் கருத்துப்படி, சில சாதாரண திருத்தங்களைப் பட்றியொட் ஏவுகணைக்குச் செய்து பாக்–3 என வடிவமைக்கும் போது கூடிய செயற்பாடு கொண்டதாக அது அமையும். அதாவது பட்றி யொட் முற்று முழுதாக நிலத்தில் உள்ள ராடர் சாதனத்தினையே நம்பிச் செயற்பட்டது. மாறாக ஏவுகணையின் மூக்குப் பகுதியில் பொருத்தப்படும் ராடர்க் கருவி அதை இலக்குத் தவறாமல்

1. ஆகாய யுத்தப் பாதுகாப்பு
Star wars Surveillance

செயற்கைக் கோள்கள் (satellites) ஏவுகணைப் பாதுகாப்பு முறையில் நன்றாக உதவ முடியும். (இந்த செயற்கைக்கோள்கள் ராடர் சாதனம் இணைக்கப்பட்டே ஏலவே விண்வெளியில் சுற்ற விடப்படுகின்றன.) இவை தமது ராடர் சாதனத்தின் துணையுடன் நாட் டுக்கு உள்ளே வரும் ஏவுகணைகளை நிலத்தில் உள்ள ராடர் சாதனம் திரையில் அது பற்றிய சமிக்ஞை களை அறிவிக்கு முன்னர், அறிவிக்க வல்லன. இத னால் எதிரியின் ஏவுகணை ஏவப்பட்ட சில கணத்தில் அது தொடர்பான தகவலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. 'கோப்ஸ் சாம்'
SAM Surface to Air Missile

இது 2005 ஆம் ஆண்டளவில் உற்பத்தி செய்யப் படும்.
இது எதிரியின் ஏவுகணைகளையும், யுத்தக் களத் தில் தாக்கவரும் போர் விமானங்களையும் தாக்க வல்லது.
இது 10-15 மைல்கள் சென்று எதிரியின் ஏவுகணை களைத் தாக்க வல்லது.
இதன் வடிவம் இன்னும் தெரிவு செய்யப்பட வில்லை.

3. எறினட்'-
இது 1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெறக் கூடியதாக இருக்கும்.
இதன் நீளம் 16 அடி.
அகலம் 9 அங்குலம்.
நிறை 1,200 இறாத்தல்.
உள்நாட்டு பாதுகாப்புச் சாதனம், சிற்றலை ராடர் சாதனம்.
இலக்கு:- குறுந்தூர பொலிஸ்ரிக் ஏவுகணைகள்.
20–30 மைல்களுக்கிடையில் செல்லக்கூடியன.
தாக்குதல் உயரம் 100,000 அடியாகும்.
தாக்குதல் முறை:-தாக்கி அடித்தல்.

4. 'பாக்-3'
- 1990 இன் பிற்பகுதியில் பாவனைக்குக் கிடைக்கும்.
- 18 அடி உயரம், 16 அங்குல அகலம், 2,200 இறாத்தல் நிறை.
- சிற்றலை ராடர் சாதனக் கட்டுப்பாடு.
- இலக்கு–குறுந்தூர ஆகாய ஏவுகணைகள் 'குரூஸ்' ஏவுகணை (இலக்குத் தவறினாலும் திரும்பி வந்து தாக்கவல்லது)

20-30 மைல்கள்.
100,000 அடி மட்டத்தில் எதிர் ஏவுகணையைத் தாக்க வல்லது.
தாக்குதல் முறை:-வெடித்துச் சிதறி இலக்கைத் தாக்குதல்.

5. 'தாட்'
1996 ஆம் ஆண்டளவில் பாவனைக்கு வரும்.
இலக்கு-குறுகிய, இடைத்தூர ஏவுகணைகள்.
100-200 மைல்கள் பறப்பு-
100, 000 அடியில் தாக்குத் திறன்.
முறை : தாக்கி அடித்தல்

6. 'அரோ'
1997 இல் இஸ்ரவேலில் பாவனைக்கு வரும்.
இலக்கு. இஸ்ரவேலுக்கு எதிராக ஏவப்படும் ஏவுகணைகள்.
60 மைல் தூரப் பறப்புத் திறன்.
தாக்குதல் முறை: வெடித்துச் சிதறி இலக்கை அழித்தல்.

கொண்டு செல்லும் இந்த வகை தான் 'பாக்-3' ஏவுகணையாகும். இது தனது மூக்கில் வைக்கப்பட்டு இருக்கும் ராடார் சாதனத்தின் சமிக்ஞையை இறுதிக்கணம் மட்டும் பெற்றுச் செயற்படக் கூடியது. இதன்மூலம் சிற்றலை வரிசையைப் பாவித்து மிகச் சரியான சமிக்ஞைகளை இது பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. இந்த சமிக்ஞை வேகம் நிலத்தில் ராடார் சாதனத்தில் இருந்து பெறுவதிலும் பார்க்க அதிகமானதாகவிருக்கும். ஆனால் பட்றியொட்டில் வெடிக்கும் பகுதியும், இணைப்பும் தனித்தனியாகவே பொருத்தப்பட்டு இருக்கும். அத்துடன் ஒன்று டன் ஒன்று தொடர்புபட்டதாக இருக்காது. ஆனாலும் பட்றியொட் ஸ்கட்டுடன் பறந்து சென்று இறுதிவரை செயற்பட்டுத் தாக்கும் வல்லமை கொண்டது. 'பாக்-3, தனது முனைப்பில் மிக நவீனத்துவம் வாய்ந்த தன்மையைக் கொண்டிருக்கும். பட்றியொட்டும் பாக்-3 உம் தமது முனைப்பில் மிகவும் வன்மையான இரும்புத் துகள்களைத் தம்மகத்தே கொண்டிருக்கும்.

இரண்டிற்குமான வேறுபாடுகள்:

1. பாக்-3

வெடிகருவியைக் கட்டுப்படுத்துந் தன்மை கொண்டது.

உதாரணமாக – பட்றியொட்டின் கணனியில் இடப்பக்கமாக இலக்கு நகர்வதாக உணரப்பட்டால் அது இலத்திரனியல் முறையில் வெடிகருவியைக் கட்டுப்படுத்தி இலக்குச் செல்லுந் திசைக்கு அனுப்ப வல்லது.

2. 'எறின்ற்'-

இதுவும் பட்றியொட்டின் ஏவுகருவி உதவியுடன் ஏவப்படுவதாகும். இது பாக்-3 ஐப் போன்று வேமாகச் செல்லக்கூடியது. இலக்கை அதிவேகத்தில் தாக்குவதன் மூலம் அதை வெடிக்கச் செய்யும் திறன் கொண்டது. இவ்வாறான செயற்பாடு சாதாரணமாக வெடிக்கச் செய்வதிலும் பார்க்க நூறுமடங்கு சக்தியுள்ளதாக அமைவதால் இந்த உத்தி எறின்ற் ஏவுகணையிற் கையாளப்படுகின்றது.

எவ்வகையான ஏவுகணைகளை உருவாக்கும் போதும் நிலத்தின் ராடார் சாதனமும் அதற்கு உகந்ததாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

புதிய கண்டுபிடிப்பில் இரண்டு வகையான மாற்றங்களைச் செய்ய முடியும்.

1. ஆய்வாளர்கள் ராடார் சாதனத்தின் சமிக்ஞைகளைக் கலைக்கிட்டு பொலிஸ்ரிக் ஏவுகணையை எது இலகுவாகக் காணும் சமிக்ஞைகளை வழங்குகின்றதோ அதைத் தெரிவு செய்வர்.

2. அவர்கள் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டுள்ள, கணனிகளுக்குப் புதிய வடிவில் தகவல்களை வழங்கி வைத்திருப்பர். இந்தப் புதிய தகவல் மூலம் கணனிகள் 'ஸ்கட்' ஏவுகணைக்கும், மற்றைய ஆகாயத்தில் இருந்து செலுத்தப்படும் ஏவுகணைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்ளும். (குருஸ் போன்றன.)

பாக்-3 ஆகவிருந்தால் என்ன, 'எறின்ட்' ஆகவிருந்தால் என்ன இவை இயங்கும் பௌதிகவியல் தத்துவம் அடிப்படையில் ஒன்றாகும். அது புவியீர்ப்பு. இவை தனது இலக்குகளைத் தாக்கினாலும் இவற்றின் துகள்கள் கீழே விழத்தான் செய்யும். இவற்றின் தாக்குதல் தூரம் டசின்கணக்கான மைல்கள் ஆகும். அதாவது ஜெருசலம் நகரப்பகுதி வரையிலும் இதன் உலோகப் பகுதி விழுந்து முடிவடைந்து விடும்.

1956 இல் லொக்கீட் என்பவரின் தாட் ஏவுகணை இதை முற்றாக மாற்றும். அதாவது பல நூறு கிலோ மீற்றர் தாக்குதல் அளவைக் கொண்ட இது எந்தவொரு நகரத்தையும் எதிரியின் ஏவுகணை தாக்குமுன்பு அதை அழிக்கவல்லது.

ஒரு ட்ரக்டர்ப் பெட்டியில் அமைக்கப்பட்டுள்ள ராடர் கருவி உள்ளே வரும் எதிரியின் சமிக்ஞை யை நூறு மைல்களுக்கு அப்பா லேயே அறிவித்து விடும். உடனே ஒரு 'தாட்' ஏவப்படும். அது மேலே சென்று 100,000 அடி உயரத்தில் எதிரியின் ஏவுகணையின் திசையை எதிர் நோக்கிச் செல்லும். இந்த உயரத்தில் வளிமண்டல உஷ்ணம் குறைவாக இருக்கும். இதனால் ஏவுகணைக்கு வெப்பம் தொடர்பான பாதிப்பு எதுவும் நிகழாது. இந்த நேரத்தில் தாட் ஏவுகணையின் மூக்குப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள வெப்பத்தை யும் கண்டுபிடிக்கும் கருவி எதிரியின் ஏவுகணையினை அடையாளங் கண்டு கொள்ளும். இந்த உணர்வுச் சமிக்ஞை உள்ளே பொருத்தப்பட் டுள்ள கணனிக்குக் கிடைத்ததும் அது ஏவுகணையின் (தாட்) திசையை ஒழுங்குபடுத்தும். சிறிய உந்து விசைக்கருவிகளை இயக்கக் கட்டளையிடும். இந்தப் பக்கத்தில் பொருத்தப்பட்ட சிறிய உந்து விசைக் கருவிகள் 'தாட்டின்' திசை யை எதிரியின் ஏவுகணைக்கு ஏற்ப நெறிப்படுத்தும். சிலவேளை முதன் முறை 'தாட்' திசை தப்பிவிட் டால் இரண்டாம் முறை முயற்சி செய்யும்.

லொச்சிட்சுவுடைய உதவித் தலைவர் பில்லூ மிஸ் கூறுகின்றார்:–

''வளைகுடா யுத்தத்தில் எம்மிடம் தாட் ஏவுகணைகள் இருந்திருந்தால் டெல் அவிவில்இருந்து பலமைல்கள் தொலைவிலேயே ஸ்கட் ஏவுகணை கள் எல்லாம் விழுத்தப்பட்டிருக் கும். நகரத்தில் எங்கும் துகள்கள் எதுவும் விழுந்திருக்க மாட்டா. அத்துடன் மக்கள் 'ஸ்கட்' ஏவு கணை தம்மீது ஏவப்பட்டது என்றே அறிந்திருக்க மாட்டார்கள்.

மேலும் 'தாட்' ஏவுகணையின் சிறப்புப்பற்றி லூமிஸ் கூறுமிடத்து எதிரியின் ஏவுகணையில் இரசாயன அல்லது உயிரியல் அழிவு மூலகங்கள் ஏதாவது இருப்பின் அவை வளிமண்டலத்திற்கு மேலேயே அதாவது மக்களுக்கு எவ்வித பாதிப்புக்களையும் ஏற் படுத்தாது பிராந்தியத்திலேயே அழிக்கப்பட்டுவிடும்.

பாக்-3 எறிகணை அல்லது 'தாட்' ஆகியன குறுங்கால ஏவுகணைத் தயாரிப்புத் திட்டத்தில் இருக்கும் அதே நேரம், கோப்ஸ் சாம் என்ற ஏவுகணை 21ஆம் நூற்றாண்டுக்குரி யதாக அமையும். இதில் பலவகை யான தயாரிப்புக்கள் பரிசீலனை யில் உள்ளன. இதில் மார்ட்டின் மாறிராவின் கோப்ஸ் சாம் ஏவுக ணையின் திட்டமே முன்னேற்ற கரமானதாக விருக்கின்றது. இது புதியரக உந்துசக்தியுடன் கூடிய இயந்திரத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும். பெதெஸ்டா எம்டி கம்பனி (Bethesda Md. Company) இயந்திரவியலாளர் கருத்தின்படி, இந்த ஏவுகணைச் சாதாரண ஒரு றொக்கட் போலப் பறக்கக்கூடியது. இதன்போது றொக்கட் எரிபொரு ளும், திரவ ஒட்சிசனும் கொண்ட கலவையுதவியுடன் மேலே செல்கின் றது. பின்னர் இது இரண்டாவது தொகுதியை அடைந்ததும் ராம்ஜ்

ஸ்கட் தயாரிப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல் மூலம் மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்

1. ஸ்கட் ஏரியலின் இலக்கை அடையும் போது சுழன்று சுற்றி விழுமாயின் அதனை மேலே கூறிய புதிய ஏவுகணைகள் தாக்க மாட்டா. ஆனால் ''தாட்'' மிக உயரச் சென்று தாக்குந் திறன் கொண்டதுமையால் இந்த மாதிரியான ஸ்கட் ஏவு கணையைத் தாக்க முடியும்.

2. ஸ்கட் வெடிக்கும்போது அதில் இருந்து பல சிறு தாக்குதற் குண்டுகள் இணைக்கப்படும். அது வெற்றியான தாக்குதலுக்கு உதவும். (100 உட்பட்ட சிறிய குண்டுகளை இது கொண்டிருக்கலாம். இவை பிரிந்து சென்று தனியாகத் தாக்கவல்லன) இவ்வா றான ஸ்கட்டை 'தாட்' கூடத்தாக்கியழிக்க முடியாது,

3. ஏவுகணை ஒன்று பறக்கும்போது அதே அள வான போலி வெப்பமான பலூன்களை வெளியே விட்டுக்கொண்டு செல்ல முடியும். இவ்வாறான சந்தர்ப் பத்தில் உண்மையான ஏவுகணையைக் கண்டு பிடித்து தாக்குதல் கஷ்டமாகிவிடும். அத்துடன் இந்தப் போலி ஏவுகணையை, பலூன்கள் வழிமண்டலத்தினுள் உண் மையான ஏவுகணை வந்த வழியே வந்து மிக மெது வாக விழுந்து கொண்டு இருப்பதால் தாக்கியழிக்கும் ஏவுகணைக்கு மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தும்.

4. குரூஸ் ஏவுகணை (இவை இலக்குத் தவறினாலும் திரும்பச் சென்று இலக்கைத் தாக்கும் திறன் கொண் டவை) இவை நிலத்தில் ஏழிய இடத்தில் இருந்து பறக் கக்கூடியன. மிகத் தாழ்வாகவே பறக்கும் இவை ஏதோ ஒரு இடத்தில் ஏவிவிட சுற்றிவளைந்து தாக்கு தல் இலக்கை அடையும் திறன் கொண்டவை. இவற் றின் வருகை தொடர்பான செய்தி ராடர் சாதனத் திற்குக் கிடைப்பதில்லை; காரணம்?

மிகப் பதிவாகப் பறத்தல்.

ராடர் அலைக்கு உட்படாது பறத்தல்.

ஜெட் அமைப்புக்கு இயந்திரம் மாறிவிடும். அது காற்றில் எரியக் கூடிய எரிபொருளாகும். ஏவுகணையின் மூக்குப் பகுதியில் காணப்படும் காற்றுப்புகுந்துவாரம் வழியாக உள்ளே உறிஞ்சப்படும் காற்று எரிபொருளை எரிய வைக்கும். ஏனெனில் இந்த ஏவுகணையில் பெரிய தாங்கிகளை அமைத்துத் திரவ ஒக்சினை நிரப்ப முடியாது. ராம்ஸ்ஜெட் ஏவுகணை மிகவும் சிறியது. இதனால் தரையில் அதை நகர்த்துவது மிகவும் இலகுவானது. மனிதன் அற்ற ஓர் உலங்கு வானூர்தியில் ராடர் கருவியைப் பொருத்திவிடுவதால் மிகப் பதிவாக வரும்; அதாவது, ராடர் கருவியின் சமிக்ஞைக்குட்படாது வரும் எதிரியின் குரூஸ் ஏவுகணைகளைக் கூட இது தாக்கவல்லது.

இவற்றின் வெற்றி தோல்வி எதிரியின் உத்தி முறைகளிலேயே தங்கியுள்ளது. பழைய ஸ்கட் ஏவுகணைகள் எதிரிகளால் பாவிக்கப்பட்டால் பற்றியொட்டைவிட இவை நன்றாகச் செயற்படும். ஆனால் 3ஆம்உலக நாடுகள்திறமை வாய்ந்த ஏவுகணைகளை உற்பத்தி செய்யுமளவிற்கு வல்லமை கொண்டிருக்குமாயிருந்தால் இந்த நவீன உத்திகளை முறியடிக்க முடியும். உதாரணமாக ஸ்கட் நவீன தயாரிப்பு ஏவுகணை அது செல்லும் வழியில் பல போலி உருவ பலூன்களை விட்டுச் செல்லும். இவை வெப்ப பலூன்களாக இருக்கும். இவ்வாறாயின் உண்மையான ஸ்கட் ஏவுகணை தப்பிவிடுவதற்குச்சாத்தியம்உண்டு. அடுத்து ஸ்கட்டின் மூக்கில் பல சிறிய ஏவுகணைகளைப் பொருத்தினால் வெடிக்கும்போது பல சிறிய ஏவுகணைகள் தொடர்ந்து பல்வேறு திசைகளில் சென்று இலக்கைத் தாக்கவல்லன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு நவீன பட்றியொட் எதுவும் செய்யமுடியாது என்பது ஆய்வாளர்கள் கருத்து.

— றொபேட் லான்கிரேத்

பொப்பியூலர் சயன்ஸ், ஜூன் 1993

இலத்திரனியல் புரட்சி

எதிர்கால அலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருபது வருடங்களுக்கு முன்பு ஒரு தொழில்நுட்பப் பிரியர் தனது இலக்கம் மாற்றி நேரத்தைக் காட்டும் மணிக்கூட்டைக் காட்டிப் பெருமைப் பட்டிருக்கலாம். அதே காலத்தில் கசியோ நிறுவனத்தால் உலகம் ஆவலுடன் பார்ப்பதற்கு ஒரு புதுமையான ''சட்டைப் பைக்குள் அடங்கும்'' அளவு கணனியை வெளிக் கொணர்ந்தனர். அப்பொழுது சிலர், ''நெடும் பிரித்தல் முறைதான் நமக்குச் சிறந்தது; இது என்ன இழவடிப்பு இனிமேல் நம்மை இதைக் கையாண்டு கணக்குப் போடச் சொல்லப் போகிறார்களே!'' என்று அங்கலாய்த்ததும் உண்டு. இருபது வருடங்களுக்கு முன்பு மேசைக் கணனி என்று ஒன்று இருக்கவில்லை என்றால் கையடக்கக் கணனிகளும், தானே குறிப்பு எழுதிவைக்கும் கணனிப் பொறியும் எப்படி இருந்திருக்க முடியும்? அப்பொழுதுசொனி கோப்பரேஷன் தனது வோக்மனை இன்னும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. வானூர்தி ஏறும் பொழுது கொடுக்கும் அனுமதிச் சீட்டுக்கள் கையாலேயே எழுதப்படுவனவாக இருந்தன. எவருமே ஒரு படப்பிரதியை வாடகைக்கு எடுக்கவென்று வீடியோக் கடைகளுக்குப் போகும் வழக்கம் ஏதும் இருக்கவில்லை. பக்ஸ் தொடர்பு முறை பற்றிய எண்ணம் எதுவுமே இருக்கவில்லை. 1980இல் தான் செல்லுலர் டெலிபோனைக் கையில் எடுத்துக்கொண்டு திரிந்தவர்கள் மற்றவர்களுக்குத் தொல்லைதரும் விதமாகப் பெருமை காட்டக் கதைத்துக் காட்டினர். பிள்ளைகளைக் கிறங்கவைக்கும் இலத்திரன் விளையாட்டுச் சாதனங்கள் எதுவும் இருக்கவில்லை. பீத்தவுனின் ஒன்பதாம் சிம்பனி ஒகெஸ்ராவை முழங்கவைக்கும் கஸட் டெக்குகள் எதுவும் இருக்கவில்லை.

முன்பு கடுமையாக வெறுத்தவர்கள் கூடத் தற்பொழுது தொழில்நுட்பத்தைப் போற்றுகின்றனர்

ஒவ்வொரு புதிய சாதனமும் வந்த பொழுது ''இதுவெல்லாம் எதற்கு? யாருக்குத் தேவை?'' என்று கிண்டலாகப் பேசியவர்களும் இருந்தனர். தொலைபேசிப் பொறி உற்பத்தியாளர்கள் எல்லைகளைச் சுழற்றும் தொலைபேசிப் பொறிகளை உற்பத்தி செய்வதை நிறுத்தும் வரை நம்மிற் சிலர் அந்த இலக்கத்தைச் சுழற்றும் முறையைக் கைவிடவில்லை. அலுவலகக் கணனிகள் பாவனைக்கு வந்த பொழுது அவற்றிற்கு எதிராக மூக்கால் அழுதவர்களும் உள்ளனர்.

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

''இது என் கண்ணைக் கெடுக்கப் போகிறது'' என்றவர்களும் ''பயிற்சிக்குப் போய் மீனக்கெட எனக்கு நேரம் இல்லை'' என்றவர்களும் ஏராளம். தானாகப் பங்குச் சந்தை நிலைபரங்கள் கணனியை இயக்கி அறிந்து பங்கு கொள்வனவு செய்யும் முறைகள் எல்லாம் அப்பொழுது இருக்கவில்லை. அவை அன்றாடப் பாவனைச் சாதனங்களாகப் பழக்கத்திற்கு வந்த சுற்றுவட்டத்தில் முதலில் உணர்ச்சிவசப்பட்ட ஏளனமும், அதன்பின்பு சத்தமில்லாமல் அவற்றைக் கையாளத் தொடங்கியதும், இறுதியில் அவற்றைக் கையாளவோ அவற்றின் செயற்பாட்டுக்கு ஈடுகொடுத்து நிற்கவோ முடியாதவர்களை முட்டாள் பட்டம் கட்டுவதுமாகத் தொடர்ந்து வந்தன.

நாங்கள் எல்லோரும் தற்பொழுது தொழில் நுட்பத்தை விரும்புகிறோம். மாதாந்த அறிக்கைகளை நோக்குவதோ செவி மடுப்பதோ மிக இலகுவாகி விட்டது. சுப்பர் மார்க்கட்டில் சாமான்கள் வாங்கிக் கொண்டு வெளிவரும் பொழுது லேசர் கதிர் சரிபார்த்துச் சொல்வதை ஏற்கப் பழகிவிட்டோம். கிறடிட் காட்டைக் காட்டியதும் உடனடியாக பில் போடப் படுவதும், கணனி மூலம் சினிமாக் காட்சி அரங்கில் இடவசதி ஒதுக்கீடு செய்து கொள்வதும், தானியங்கிச் சாதனம் அடிக்கடி வாகனம் எத்தனை மைல்கல் சென்று விட்டது என்பதைக் காட்டுவதும், தானியங்கி இயந்திரம் மூலம் பில்களுக்குப் பணம் செலுத்துவதும். இலத்திரன் சாதனத்தால் வாக்குகள் எண்ணப்படுவதும், அசைவைக் கொண்டு உணர்ந்து செயற்படும் மின்னொளி அமுக்கிகளும், கருப்பையினுள் வளரும் சிசுவிற்கு ஏதும் குறைபாடுகள் உள்ளதோ என்று அறிய வயிற்றின் மேற் பாகத்தைக் குத்தி ஊடுருவிச் சென்று கருப்பையினுள் இருந்து திரவம் வெளியே எடுக்க உதவும் வளைந்ததும் தன்னுள் அதற்கான இடம் கொண்டதுமான மிக மெல்லிய ஊசியைச் செலுத்தும் சாதனத்தைப் பயன்படுத்துவதும்' ஆகிய வற்றுடன் நாம் வாழப் பழகிவிட்டோம். சிறிதளவு விசை அமுக்கத்தால் தொலைபேசிகளை இயக்க வைப்பதும், காரியாலயத்தின் உள்ளே இடத்திற்கு இடம் செய்தி பரிமாறுவதும், குரல் மூலம் செய்தி அனுப்புவதும், கண்ணாடி மூலம் முகவரிகள் பேறுவதும், இலத்திரனியல் இயக்கங் கொண்ட ஹோட்டல் அறைச் சாவிகளும், காசுத் தாள்களைக் கள்ளம் அற்றவையா என்று பரிசோதிக்கும் இயந்திரமும், நிலத்தடிப் பயண வண்டிகளில் ஒவ்வொரு முறையும் பயணம் செய்யும் பொழுது அதற்கான கட்டணத்தைக் கையில் உள்ள அனுமதி அட்டையில் இருந்து கழித்து விடும் சாதனமும், ஒலி அலைமூலம் மூக்குக் கண்ணாடிகளைச் சுத்தப் படுத்தும் சாதனமும், வீட்டிலேயே குருதி அமுக்கத்தைக் கணிக்கும் பொறியும், நாம் நாடுபவையாகிவிட்டன. காலத்தையும் சிரமத்தையும் மிச்சப்படுத்தும், வங்கிக் கணக்கை மாற்றும் பொறி, ரோபோ மூலம் இயங்கும் உற்பத்தித் தொழிற்சாலை, பெரும் களஞ்சியத்தில் கையிருப்பைச் சரிவரக் காட்டிப் பரிபாலிக்கும் சாதனம் என்பவற்றை எல்லாம் நாம் கண்ணால் காணாது விட்டாலும் விரும்புகிறோம்.

இவை எல்லாம் இப்பொழுது காலங் கடந்த பழசுகள் ஆகிவிட்டன. 1980 களின் பொருள்களாகி விட்டன. எத்தனையோ காலங்கடந்து போன தொழில் நுட்பச் சாதனங்கள் விளம்பரத் தொழிற் துறையினரால் அவற்றின் பாவனை பழக்கப் பட்டுக்கொள்வனவாளர்கள் பெருக்கப்பட்டதும் உற்பத்திச் சாலைகளில் இருந்து உற்பத்தி செய்து வெளியே கிளம்பக் காத்திருக்கின்றன. ஒரு இயந்திர வீட்டுத்துடைப்பம், மின்சார இணைப்புக் கம்பி இல்லாததாகவும், தானாக இயங்கிக் குறிப்பிட்ட நேரத்தை நினைவு வைத்து அறைத் தரையில் உள்ள புழுதி ஊத்தை அனைத்தையும் தன்னுள் கவர்ந்து அமுக்கிக் கொள்ளக் கூடியதாகவும், தான் செயற்படும் பொழுது அறையில் உள்ள தளபாடம் எதையும் முட்டாமலும், ஒரு குழந்தை தரையில் இருந்தால் அதன் விரல்களைத் தொடாமலும் இயங்கும் உணர்வுத் திறனுடன் ஆக்கப்பட்டுள்ளது மட்டும் அல்லாமல்; அது தனது வேலை முடிந்ததும் சேர்த்தெடுத்த ஊத்தை முழுவதையும் ஒரு பைக்குள் அடைத்து ஒதுக்கில் வைக்கவும், அதன் பின்பு தானாகச் சுவரில் உள்ள பிளக்கில் மாட்டுப்பட்டு மின்சாரத் தொடர்புற்றுத் தனது மின்கலனின் மின்னைச் சேர்த்து வைக்கவும் அது வல்லதாகும். இவ்வாண்டு வந்துள்ள துணி துவைக்கும் இயந்திரம், பாத்திரங்கள் கழுவும் இயந்திரம், மைக்ரோ அலை சமையல் இயந்திரம் என்பவற்றிற்கு சுழற்றிகளோ கைபிடிகளோ, இயக்க விசைகளோ இல்லை, அமுக்கத்தை உணரும் தொடும் இடங்கள் மட்டுமே அவற்றில் உள்ளன. தற்பொழுது உற்பத்தியாகிக் கொண்டிருக்

கும் செல்லுலர் தொலைபேசி பேனையின் அளவுக்குச் சுருங்குகின்றது. மேலும் உயர்ந்த வசதிகளும் அமைப்புக்களுங் கொண்ட தொலைபேசிப் பெட்டிகள் விரைவில் சந்தைக்கு வந்ததும் தங்கள் பழைய தொலைபேசிப் பெட்டிகளைப் பாவனையாளர்கள் வெறுக்கவைக்கப் போகின்றனர். இந்தத் தசாப்தம் ஒரு பல செயற்றிறன் உள்ள தசாப்தமாக இருக்கப் போகிறது. அதற்கான அபிவிருத்தி ஆய்வுகள் வெகு காலத்திற்கு முன்பே செய்து முடிக்கப்பட்டு விட்டன. செல்வந்த நாடுகளில் பெருஞ் செலவு செய்ய வசதி உள்ளவர்கள் வாழும் பகுதிகளில் மின்சாரம் முதலிய சேவைகள் உற்பத்தியாக்கி விநியோகிக்கும் நிறுவனங்கள் ஊடு தெரியும் இழையத் தினாலான கம்பிகளை நிலத்தில் புதைப்பதில் விரைவாக ஈடுபட்டுள்ளனர்.

ஒருவர் தனது வீட்டுக்குள் ளிருந்து கொண்டே பல செயற்றிறனுள்ள தொலைக்காட்சி மூலம், தனது வங்கி நிலையை அறியவும், பணத்தை வங்கிக் கணக்கிலிருந்து வேறு இடங்களுக்கு மாற்றவும், காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்ளவும், பங்குச்சந்தையில் முதலீடு செய்யவும், பற்சிகிச்சை வைத்தியருக்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தவும் முடியும். ஒரு குடும்பப் பெண் வீட்டில் இருந்து கொண்டே ஒரு கடையில் விற்பனைக்கு உள்ள பொருட்களைப் பார்த்துத் தனக்கு தேவையான வற்றை விசையை அமுக்குவதன் முலம் அறிவித்துப் பெறலாம். அவை பற்பசையோ, தக்காளிப்பழமோ, ஆட்டிறைச்சித்துண்டுகளோ எதுவாக வேண்டும் என்றாலும் இயலும். இதன் பலனாகப் புதிய இயந்திரமயமாக்கப்பட்ட களஞ்சியசாலைகள், சாமான்கள் சுற்றிகள், சாமான்களை எடுத்துச் சென்று விநியோகிப்போர் என்று பல புதிய தொழிற்றுறைகளையும், தொழிலாளர்களையும் உண்டாக்கப் போகின்றன. ஒரு புதிய உடுப்பு வாங்குவதற்கு; இடை, கழுத்து அளவுகளையும், மாதிரியையும், நிறத்தையும் மட்டும் இயந்திரத்தில் குறிப்பிட்டால் போதும், "எனக்கு அதுவெல்லாம் விருப்பமில்லை, நான் வாங்கும் பொருளைத் தொட்டுப் பார்த்துக் கையில் எடுத்துத்தான் வாங்குவேன். பழக்கத்தில் உள்ள தானியங்கி இயந்திரங்கள் போதும், அத்துடன் எனக்கு உடற்பயிற்சி வேண்டும்" என்று சிலர் குசுகுசுப்பது கேட்கிறது. ஆனால் இதுவரை காலமும் தயாரிக்கப்பட்ட அனைத்துத் திரைப்படங்களையும் வீட்டில் உள்ள திரையில் விருப்பப்படி விசையை அமுக்கிப் பார்க்க முடியுமானால் யார் தான் வீடியோக் கடையை நாடப்போகிறார்கள். மிகவாக எதிர்பார்க்கப்படும் இலத்திரனியல் பெருந்தெருவில் வாகனப் புழக்கம் அற்றுப்போனால், உலகில் உள்ள அனைத்து இலத்திரனியல் தொடர்புசாதன நிறுவனங்களும் வங்குரோத்து அடைந்து விடும். ஆனால் அதற்குச் சந்தர்ப்பமே இல்லை போல் தெரிகிறது.

குணச்சித்திர நடிகர்களான மர்லின் மன்றோவும், எல்விஸ் பிறீஸ்லியும் நடித்த புதிய படங்கள் வருவதற்கு வெகு காலஞ் செல்லுமா? ஆம் அப்பொழுது தத்ரூபம் சந்தைக்கு வந்துவிடும். இன்னும் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் அதன் ஆய்வு விரைவாக நடந்து கொண்டு வருகிறது. தத்ரூபம் ஒருவர்க்குப்பொழுது போக்கிற்கோ வருகிற கல்வி அறிவிற்கோ மனக்கற்பனைப் படி அல்லாது உண்மையில் உள்ளபடி பார்க்க இடம் அளிக்கிறது. வீட்டில் இருந்து பார்த்துக் கொண்டு இருப்பவருக்கு இமயமலையின் உச்சியைப் பார்க்கவோ அல்லது கலிபாவின் அந்தப் புரத்து உள் அறையை நோக்கவோ முடியும். உங்கள் அம்மம்மா சோபாவில் சாய்ந்திருந்து தேநீர் அருந்தும் காட்சியை மும்மடிப் பரிமாணத் தத்ரூப ஒளியில் நீங்கள் பார்த்து விட்டு உண்மையில் அம்மம்மாவே வந்துள்ளதாக எண்ணிக் கொண்டு தொட்டுப் பார்க்க விளையலாம். தொடர்பு சாதனத் தொழிற்றுறை எல்லா வகையான செய்திகளையும் திரட்டாக்க முயல்கின்றது. ஒரு நாள் காட்சித்திரை, சுருட்டி வைக்கக்கூடியதாகவும், சஞ்சிகை அளவினதாகவும், கம்பித் தொடர்பு அற்றும், அசையும் படங்களும் பேசும் படங்களும் அடிக்குறிப்புகளும் உடையதாகவும் அமைந்து, எழுத்தில் வெளிவந்த அனைத்தையுமே பார்க்கக் கூடியதாக இருக்கும்.

புதிய அறிவித்தல் யுகத்தில் அதனால் செழுமையும் உண்டாக்கப்படும். புதிய மோட்டார் வண்டி அல்லது உருக்குத் தொழிற்சாலைகள் கட்டச் செலவிடும் முதலீடுகள் போல் அல்லாமல், புதிய அறிவித்தல் யுகத்தைக் கட்டி எழுப்பு மில்லியன் கணக்கில் செலவிடப்படும் முதலீடு நிலையானதாகும். இலத்திரனியல் பெருந்தெரு, வனாந்தரங்களின், பாலைவனங்களின், சேரிகளின் ஊடாகவெல்லாம் ஊடறுத்துப் போவது போலவே செல்வச் செழிப்பான இடங்களின் ஊடாகவும் செல்லும். அதனால் பின்தங்கிய தொலைத் தொடர்பு வசதிகள் கொண்ட நாடுகள் கூட நன்மை அடையுட்.

பல மில்லியன் கிலோ மீற்றர்கள் நீளமான செப்புக் கம்பிகளை அப்புறப்படுத்திப் புதியவை இணைப்பதையும் பார்க்கப் புதிதாகக் கான்கள் வெட்டி இழையத் தொடர் இணைப்புகள் புதைப்பது மலிவான தாகும். செய்மதிச் சமிக்ஞைகளைக் கவர்ந்து இழுக்க முதலீடு ஏதும் செய்ய வேண்டியதில்லை. மைக்ரோ அலைத் தொடர்புப் பாதை அமைக்கக் கட்டுமான வேலைகள் ஏதும் செய்யவேண்டியதில்லை. பல தொழில் மையப்படுத்தல் திட்டங்களை விட்டுத் தாவி ஏக இயலும் என்பது சாத்தியமான உண்மையாகும். அப்படி முதலில் விட்டுத் தாவும் நாடுகள் போட்டியாளர்களை முந்திச் சென்று அதன் அடுத்த கட்டத்தை அடைய முனையும். இது தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் உற்பத்தித் தொழில் விரைவாக வளர்ந்ததால் பாவனைப் பொருள் உற்பத்தித் துறையில் முதலீடு செய்ய நிதி உடையவர்களாக இருக்கும் உற்பத்தித் தொழிற்றுறை முதலீட்டாளர்களுக்குச் செலவிடக்கூடிய வருவாய் கூடிக்கொண்டு செல்லும். நுகர்வோரின் தேவைகளைத் திருப்திப் படுத்தும் முதலீடுகளில் முனையவும் இடந் தரும்.

ஏசியாவீக், ஒகஸ்ட் 25, 1993

முன்னறிவிப்பு:

எரிகல் வெள்ளம்

லியோனிட் எரிகற் பொழிவு
1966 ஆம் ஆண்டில்

அரிசோனாவின் கிற் சிகரத்தில் நள்ளிரவுக்குப் பின் வானை அவதானிப்பதில் ஒரு மணி நேரத்தைச் செலவிட்டபின் அரிசோனா பல்கலைக்கழக மாணவர் தாங்கள் நிலமட்டத்திலிருந்து 2100 மீற்றர் உயரத்துக்கு ஏறி வந்தது வீணாகப் போய்விடவில்லை என உணர்ந்தனர். வருடாந்த லியோனிட் எரிகற் பொழிவை முன்னறிவிக்கும் (Advance Guard) 33 எரிகற்களை அவர்கள் அதுவரை அவதானித்து விட்டார்கள். ஆனால் இவ் அவதானிகளில் எவரும் 1966 நவம்பர் 17 அன்று அதிகாலைப் பொழுதில் இனிமேல், தாம் காணப்போகும் அற்புதத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தமது முகங்களைக் கரங்களால் மூடிக் கொண்டனர். ஒளிக்கீற்றுக்களுக்கிடையே ஓரிரு நெருப்புப் பந்துகளுந் தோன்றி மறைந்தமை இந்நிகழ்வை ஒரு வாணவேடிக்கைப்பண்டிகை போலாக்கியது. இவ்வெரிகல் வீச்சுப் படிப்படியாகக் குறையும் முன்னர் நம்ப முடியாத ஓர் அதியுச்ச அளவாக ஒரு செக்கனுக்கு 40 எரிகல் என்ற வீதத்தை அடைந்தது. உதிக்கும் சூரியனின் ஒளியால் மறைக்கப்படும் வரை ஓரிரு எரிகற்களாவது தொடர்ந்து வீழ்ந்து கொண்டேயிருந்தன.

ஆண்டு தோறும் மெல்லிய எரிகற் பொழிவுகள் 15 தொடக்கம் 20 தடவை வரையில் பூமியில்

Tamilnadu Archive

விண்ணியலாளர் இரவு வானில் அற்புதமான காட்சியை எதிர்பார்க்கின்றனர்

நேரத்தில் விண்ணில் ஒளிக்கீற்றுக்களைத் தோற்றுவித்து வீழ்ந்து மறைந்து கொண்டிருந்த எரிகற்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் கொண்டே சென்றது. ஒரு கட்டத்தில் ஸ்கை அண்ட் டெலஸ்கோப் என்ற பத்திரிகை தெரிவித்ததைப் போல் வானிலிருந்து எரிகற்கள் மழையாய்ப் பொழியத் தொடங்கின.

அதிகாலை 5 மணியளவில் இம்மழை பெரும் புயலாய் உருவெடுத்தது. இக்காட்சியை அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியின் பெரும்பாலான இடங்களில் அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த மக்களிற் பலர் பயத்தில் பரவலாக ஏற்படுவது வழக்கம். இப்பொழிவுகள் குறைந்தளவு எரிகற்களுடன் நின்று விடும். 1966 இன் லியோனிட் பொழிவு போன்றவை ஒரு நூற்றாண்டில் ஓரிரு தடவையே ஏற்படுகின்றன. ஆனால் விண்ணியலாளர்களின் எதிர்வுகூறல் சரியாயின் 20 ஆம் நூற்றாண்டின் அடுத்த மிகப் பெரிய எரிகற்புயல் 93 ஆகஸ்ட் இரண்டாம் வாரத்தில் ஏற்படக் கூடும். வருடாந்தம் ஏற்படும் பேர்சீட் எரிகற் பொழிவு இம்முறை ஓர் அதிபிரகாசமான அற்புதக் காட்சியாக மாறுவதற்கு நிலைமை சாதகமாக இருக்கிறது எனவும், இக்காட்சி ஆகஸ்ட் 11-12 இரவில் வட அரைக் கோளத்தில் பலபாகங்களில் தென்படக் கூடியதாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்காலத்திலேயே பூமி ஸ்விஃப்ற் ரட்டில் (Swift-Tuttle) என்ற வால் நட்சத்திரத்தின் சுற்றுப்பாதைக்கு மிக அருகாகப் பிரயாணஞ் செய்யும். இவ்வால் நட்சத்திரம் 1862 இற்குப் பின் முதற் தடவையாகச் சென்ற ஆண்டு பூமிக்குத் தென்பட்டது. 92 டிசம்பர் 12 இல் சூரியனுக்கு மிகு அருகாகச் சுற்றிச் சென்ற இவ்வால் நட்சத்திரம் பின்னர் சூரிய குடும்பத்தின் வெளிப் பகுதியை நோக்கி திரும்பிச் சென்றது. எல்லா வால் நட்சத்திரங்களையும் போலவே இதுவும் பெருமளவில் பனியையும், தூசியையுங் கொண்ட எச்சத்தை உதிர்க்கிறது. இவ் வெளிச்சத்தின் பெரும்பகுதி சூரியனுக்கு அருகிற் செல்லுகையில் வால் நட்சத்திரத்திலிருந்து கொதித்து வெளியேறுபவையாகும். இப்பதார்த்தங்கள் வால் நட்சத்திரம் சென்ற பாதையில் தங்கி, படிப்படியாக வால் நட்சத்திரத்தின் சுற்றுப்பாதை முழுவதிலும் பரவுகின்றன. இதனால் விண்வெளியில் ஒரு பிரமாண்டமான எச்சங்களைக் கொண்ட, குழாய் உருவாகிறது. ஒவ்வொரு தடவையும் பூமி இக்குழாயினை ஊடறுத்துச் செல்கையில் எச்சங்களின் சிறு பகுதிகளை அது சந்திக்க நேரிடுகிறது. இவை 210,000 மைலோ மீற்றர் அளவிற்கு அருகில் வந்தால் வளிமண்டலத்தைக் கிழித்தவாறு எரிகற்களாக வீழ்ந்து ஒளிக்கீற்றுக்களாக மறைகின்றன.

லியோனிட்ஸ் எனப்படும் விண்கற்கள் வேறோர் வால் நட்சத்திரத்தின் எச்சங்களாகும். லியோ எனப்படும் உடுத்தொகுதியிலிருந்து வீழ்வது போல் தோற்றுவதால் இவற்றுக்கு லியோனிட்ஸ் என்று பெயர் ஏற்பட்டது. அதே போல் பேர்சிட் எனும் உடுத்தொகுதியிலிருந்து வீழ்வது போல் தோன்றுவதால் பேர்சிட் விண்கற்களுக்கு அப்பெயர் ஏற்பட்டது. பெரும்பாலான வால் நட்சத்திர எச்சங்கள் சிறிய துணிக்கைகளாலேயே ஆக்கப்பட்டிருந்தாலும் அவை மிக உயர் வேகத்தில் பிரயாணஞ் செய்வதால் தாம் மோதும் எந்தப் பொருளிலும் பெருஞ் சேதத்தை ஏற்படுத்தக் கூடியவை. இதனால் பாதுகாப்புக் கவசமான வளிமண்டலத்துக்கு மேலே சுற்றிவரும் செயற்கைக் கோள்கள் கடும் எரிகற் பொழிவின் போது அழிந்து போக வாய்ப்பு உண்டு. இவ் வாபத்தைக் கருத்திற் கொண்டே அமெரிக்காவின் நாசா நிறுவனம் சென்றவாரம் விண்ணிற் செலுத்தப்பட இருந்த டிஸ்கவரி எனும் விண்கலத்தின் செலுத்து கையை முன்னெச்சரிக்கையாகப் பிற்போட்டது. இக்கலம் திட்டமிட்டபடி செலுத்தப்பட்டிருந்தால் எரிகற் பொழிவின் உச்சக் கட்டத்தில் தனது சுற்றுப்பாதையில் இருந்திருக்கும். விண்ணியலாளர்கள் தற்போது பூமியைச் சுற்றிவரும் ஹபிள் (Hubble) விண்தொலைக் காட்டியை எரிகற் களிலிருந்து பாதுகாக்க எதுவும் செய்ய முடியாதுள்ளனர்.

இம்முறை க்பார்சிட் எரிகல் வீச்சு வழமைக்கு மாறாக அற்புதமாக இருக்கும் என்ற எதிர்வு கூறல் சில நம்பவைக்கும் சகுனங்களை அடிப்படையாகக் கொண்டது. ஹார்வாட்டில் இருக்கும் விண் பௌதிகவியல் மையத்தைச் சேர்ந்த விண்ணியலாளர் பிறையன் மார்ஸ்டன் என்பவர் கி.மு.69 இற்கும் கி.பி.3302 இற்கும் இடையில் ஒவ்வொரு முறையும் (Swift Tuttle) சூரியனுக்கு அருகாகச் சுற்றிச் செல்லும் போதும் அவ்வால் நட்சத்திரத்தின் சுற்றுப் பாதைக்கும், பூமியின் சுற்றுப் பாதைக்கு மிடையில் ஏற்படும் மிகக்குறுகிய தூரங்களைக் கணித்துள்ளார். ''இம்முறை'' நாம் முன்னர் கணித்த எல்லாத் தூரங்களையும் விட மிகக் குறைந்த தூரமாக 145,000 கிலோ மீற்றர் கணிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

விண்வெளி வான வேடிக்கையை எதிர்பார்ப்பதற்கான இன்னோர் காரணம், (Swift Tuttle) வால் நட்சத்திரம் அருகில் இருத்தலாகும். சூரியத் தொகுதியினைச் சுற்றும் தனது 130 வருடகாலப் பிரயாணத்தில் இது பூமிக்கு மிக அருகாகப் பறந்து சென்று 8 மாதங்கள் தான் ஆகின்றது. இம்முறை சூரியனின் அருகாகச் சுற்றிச் செல்லும் போது கொதித்து வெளியேறிய பதார்த்தங்கள் இன்னும் இவ்வால் நட்சத்திரத்தின் அருகில் அதை இறுகப்பற்றியவாறு தான் காணப்படுகின்றன. எனவே இவ் வெச்சங்கள் வால் நட்சத்திரத்துடன் சேர்ந்து பூமியின் சுற்றுப் பாதைக்கு வெகு தொலைவில் சென்று விட்டன. ஆனால் 1862 இல் வெளியேற்றப்பட்ட எச்சங்கள் ஒப்பீட்டளவில் இன்னும் வால் நட்சத்திரத்திற்கு அருகிலேயே காணப்படுவதுடன் வால் நட்சத்திரத்தின் சுற்றுப் பாதையில் அதிகம் பரவச் சந்தர்ப்பத்தைப் பெறவில்லை. இவ்வாரம் பூமி சென்ற முறையின் எச்சங்களை ஊடறுத்துச் செல்லக் கூடும். எனவே விண்கற்கள் கூடுதல் செறிவில் காணப்படுதல் சாத்தியம் என மார்ஸ்டன் நம்புகிறார்.

விண்ணில் சாதகமான நிலைமைகள் இருப்பினும் மேகமூட்டம் பலருக்கு இக்காட்சியை மறைத்து விடலாம். (விமானத்தில் பயணஞ் செய்பவர்கள் மாத்திரம் மேகங்களுக்கு மேல் அமர்ந்து பார்க்க முடியும்) வானம் தெளிவாக இருந்தாற்கூட இக்காட்சி தெரிவதற்கான நிச்சயமற்ற தன்மை பற்றி நாசூக்காகச் சில கருத்துக்களை மார்ஸ்டனும், அவருடைய சகாக்களும் வெளியிட்டுள்ளனர். எரிகற் பொழிவுகளை எதிர்வு கூறுவது காலநிலையை முன்னறிவிப்பதற்கு ஒப்பானது என அவர்கள் தெரிவித்துள்ளனர். மார்ஸ்டன் இதனை விளக்குகையில், ''எச்சங்கள் வால் நட்சத்திரத்தின் சுற்றுப் பாதையில் சிரின்றிப் பரம்பியுள்ளன. அங்கே தான் நிச்சயமற்ற தன்மை இருக்கிறது'' எனக் கூறினார். அத்துடன் வியாழனின் ஈர்ப்புச் சக்தியும், சூரியக் கதிர் வீச்சும் வால்நட்சத்திர எச்சங்களின் பாதையை எதிர்வு கூற முடியாத படி மாற்றி விடுகின்றன.

ஐரோப்பாவிலே தான் இக் காட்சி சிறப்பாகத் தெரியும். அங்கு ஒகஸ்ட் 12இல், நள்ளிரவுக்கு ஓரிரு மணித்தியாலம் பிந்தி (பூமியின் கிழக்குப் பிரதேசத்தில் சூரிய ஒளி இருக்கும் நேரமான பி.ப. 9மணி) எரிகற்கள் விண்ணில் ஓர் உயரப் புள்ளியிலிருந்து சிதறி வீழ்வது போல் தென்படும். அத்துடன் இவ் எரிகற் பொழிவும் அல்லது புயலும் முன்பாகவும் பின்பாகவும் ஓரிரு எரிகற்கள் வீழ்ந்தவாறு இருக்கும்.

அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு அப்பால் ஐக்கிய அமெரிக்காவினதும், கனடாவினதும் கிழக்குப் பகுதிகள் இக் காட்சியைப் பார்க்கச் சிறந்த இடங்களாகும். அங்கு பேர்சிட்கள் அந்திப் பொழுதுக்குச் சற்றுப் பின்னர் உச்ச நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்காட்சியைக் காண ஆர்வமுள்ளவர்கள் வடமீன் அடிவானம் வெளியாக உள்ள ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில் எரிகற்களின் சிதறற் புள்ளி கசியோப்பியா என்னும் உடுத்தொகுதிக்கு இடது கீழ்ப்பகுதியில் விண்ணில் தாழ்ந்த ஓர் இடத்தில் காணப்படும். கசியோப்பியா எனும் உடுத்தொகுதி டபிள்யூ. டபிள்யூ உடுவைக் கொண்டதுடன் 5 உடுக்களைக் கொண்டது. எனவே இலகுவில் அடையாளங் காணப்படக் கூடியது. துரதிர்ஷ்டவசமாக மேற்கிலும், மத்திய மேற்குப் பகுதியி

விண்வெளிக்குள் முயற் பாய்ச்சல்

அமெரிக்க இராணுவ வெண் மணல் எரிகணை வீச்சுத் திடலில் நின்ற பார்வையாளர்கள் அக்காட் சியைப் போல் எவற்றையும் இது வரை கண்டதில்லை. 12 மீற்றர் உயரமான மேலே குறுகிக் கொண்டு செல்லும் கோபுரம் போன்ற வெண் ணிற றொக்கட் சிறிது நடுங்கி புகையைக் கக்கியவாறு ஓர் ஒளி வீச்சுடன் எறிமேடையை விட்டு 46 மீற்றர் உயரத்திற்கு நியூ மெக்சிக்கோ, பாலைவனத்திற்கு மேல் எழும்பியது. பின்பு நடுக்காற் றில் சடுதியாக நின்று, ஒரு பக்க மாக 107 மீற்றர் நகர்ந்து சென்று மீண்டும் கீழ் இறங்கியது. இறுதிக் கணத்தில் வாற் பக்கமாக நான்கு கால்கள் வெளியேறி துவக்குக் குண்டு வடிவான றொக்கற்றை மெதுவாக நிலத்தில் நிறுத்தின.

செவ்வாய்க் கிரகத்திலும், சந்தி ரனிலும் இவ்வாறு முன்னே இறங்கி யிருந்தாலும், வாற்பக்கம் கீழ் முக மாகப் பூமியில் ஒரு விண்வெளிக் கலம் இறங்கியது இதுவே முதற் றடவையாகும். இந்த றொக்கட்டை வடிவமைத்த பாதுகாப்பு வேலை ஒப்பந்தக்காரர் மக்டொனல் டக்ளஸ் நிறுவனத்தில் தொடர்புப் பணிப் பாளராகக் கடமையாற்றும் ரொம் வில்லியம்ஸ் கூறுகிறார்: ''எனது வாய் ஆச்சரியத்தில் திறந்த படியே நின்றுவிட்டது. ஒரு விண்வெளிக் கலம் அவ்வாறு இடைவெளியில் நின்று மீண்டும் இறங்கியதை நான் ஒருபோதும் காணவில்லை. திரைப் படங்களில் பயங்கரக் காட்சி யொன்றைப் பார்ப்பது போல் இருந்தது'' என்று.

விண்வெளி ஷற்றில் றொக்கட்டை (Suttle Rocket போய்த் திரும்பி வரும் வாணம்) உபயோகத்தில் இருந்து அகற்றக்கூடிய புதிய மலிவான பாரங்குறைந்த றொக்கட்டின் உபயோகம்.

ஆனால் டெல்ரா கிளிப்பர்-எக்ஸ்பெரிமென்ரல் (DC-X) உண்மையானதுதான். விண்வெளிப் பொறியியலாளரால் ''முயற் பாய்ச்சல்'' என்று அழைக்கப்பட்ட அதன் முதற் பிரயாணம், விண்வெளிப் பிரயாணத்தில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கும் ஓர் அறிகுறியாகும். முன்னர் எண்ணக்கருவில் தோன்றிய நட்சத்திரப் போர்கள் ஆம் மாலை நேர வானம் எரிகற்களைக் காணமுடியாத அளவுக்குப் பிரகாசமாக இருக்குமெனினும் பொழிவிற்குப் பிந்திய சில எரிகற்களை (Rear guard) இருட்டிய பின்பு காணக் கூடியதாயிருக்கும். பேர்சீட்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக அதாவது கிழக்குக் கரையின் அந்திப் பொழுதுக்கு முன் தோன்றுமாயின் லண்டனிலுள்ள விண்ணியலாளர்களின் எதிர்பார்ப்பின்படி வட அமெரிக் காவில் எவரும் இவ் எரிகற் புயலைக் காணமுடியாது.

''ஐரோப்பா எரிகற் பொழிவைக் காண்பதற்குச் சிறந்த இடமாக இருப்பினும் எரிகற் பொழிவைக் காண்பதற்காக ஐரோப்பாவுக்கு ஒரு விசேடப் பிரயாணத்தை மேற்கொள்ள மாட்டேன்'' என்று மார்ஸ்டன் கூறினார். ''1992 இன் பேர்சீட் பொழிவுகள் (இது ஐரோப்பாவில் அவதானிக்கக் கூடியதாயிருந்தது.) எதிர்வு கூறப்பட்ட நேரத்தில் சிறிது நேரம்கூட பிசகாமல், நிகழ்ந்தது எனினும் 1991 இன் பேர்சீட் பொழிவுகள் விளங்கப்படுத்த முடியாதபடி 3 மணிநேரம் பிந்தியே ஏற்பட்டது என அவர் விளக்கினார். இம்முறை எரிகற் பொழிவு இவ்வளவு பிந்தி ஏற்படுமாயின் ஐரோப்பாவில் அந்நேரம் பகலாயிருக்கும். எனினும் ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும் இரவு வானில் ஓர் அற்புதக் காட்சியை ஏற்படுத்தக் கூடும்.

லியோன் ஜாரூவ்.

ரைம், ஒகஸ்ட் 16, 1993

திட்டத்தின் பேரப்பிள்ளைதான் டெல்ரா கிளிப்ரர் திட்டம். விண்வெளிக்குச் செல்ல மலிவான—நம்பகரமான, ஷற்றில் றொக்கட்டால் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத திட்டமே இத் திட்டமாகும்.

DC–X இன் அடிப்படை உறுப்புகளும், அதன் வடிவமைப்புப் படங்களும் மிக விரைவாக உருவாக்கப்பட்டு அதன் ஆரம்ப வளர்ச்சி 18 மாதங்கள் மட்டுமே எடுத்தது. கடந்த இருபது வருடங்களில் அமெரிக்க விண்வெளித் திட்டம் எவ்வாறு தடைப்பட்டு எவ்வளவு இழக்கப்பட்டுள்ளது என்பதை இது காட்டுகின்றது. தற்போதுள்ள அமெரிக்க எறியும் வாகனங்களாகிய, ஒகஸ்ட் நடுப் பகுதியில் தடைப்பட்ட ஷற்றில் றொக்கற்றும், அதற்கு 11 நாட்கள் முன் வளியில் வெடித்த ரைற்றன் IV ம், 1960, 1970 ஆண்டுகளில் வரையப்பட்ட படங்களில் இருந்தே செய்யப் பட்டன. பதார்த்தங்கள், அரைக் கடத்திகள், மற்றும் கணனி அமைப்புக்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சிக் காலத்தை நோக்குமிடத்து, இக்காலப்பகுதி ஒரு மனித வாழ்க்கைக் காலத்திற்கு முந்தியதாகும்.

எப்பொக்சி (Epoxy) பிசினாலும், பென்சிற் கரி, தும்பு இவற்றின் சேர்க்கையாலும் அமைக்கப்பட்டு உயர் இலத்திரனியற் கருவிகளால் நிரப்பப்பட்ட DC–X ஆனது தொழில்நுட்ப முன்னேற்றத்தை நன்றாகப் பயன்படுத்தியுள்ளது. அதன் வெளி ஓடு வழமையான விண்வெளிக்கலத்தின் பாரங்கூடிய அலுமினிய ஓடு போலல்லாது மிக மெல்லியதாகும். கட்டங்கட்டமாக எரிந்து வாணத்தை மேலே தள்ளியபின் வீண் செலவை ஏற்படுத்திக் கீழே விழும் றொக்கற் பகுதிகளைத் தவிர்க்கும் முகமாக ஒரே பாய்ச்சலில் ஒழுகுப் பாதையில் செல்லக்

DC - X புறப்பட்டது. அது மீண்டும் செங்குத்தாக இறங்கும் என்று காட்டுவதற்காக.

கூடிய வண்ணம் கையாளப்பட்ட றொக்கட் மிகவும் இலேசானதாகும். முற்றாக மீண்டும் மீண்டும் உபயோகிக்கக் கூடிய உலகத்தின் முதலாவது விண்கலம் DC–X ஆகும். இதை இலகுவாகச் செலுத்தவும், திருத்தவும் இதன் எண்ணற்ற கணனித் தொகுதிகள் உதவுகின்றன. ஷற்றில் றொக்கட்டை செலுத்த 1700 பேர் கொண்ட ஒரு படை தேவைப்படும். DC–X ஐச் செலுத்த மூன்று பேர் போதுமானது. ஒரு கிலோ கிராமுக்கு 1,100 தொடக்கம் 2,700 டொலர் செலவில் விமானிகளோடு அல்லது விமானிகள் இல்லாமல் 9 தொன் சுமையைப் பூமியைச் சுற்றும் பாதையில் டெல்ரா–கிளிப்ரர் கொண்டு செல்லக்கூடியது. ஒரு கிலோ கிராமுக்கு 22,000 டொலர் செலவில் 25 தொன் சுமையைக் கொண்டு செல்லும் விண்வெளி ஷற்றில் றொக்கட்டுடன் இதை ஒப்பிடுக.

ஆனால் இன்னும் சில தடைகள் உள்ளன. திட்டமிடப்பட்ட வாகனத்தின் முன்றில் ஒரு பங்கு பருமனுடைய முன்னோடி மாதிரிதான் சென்ற வாரம் செலுத்தப்பட்ட றொக்கட்டாகும். DC–X தொடர்ந்தும் சிறப்பாக இயங்கினாலும் ஒரு முழு அளவு டெல்ரா கிளிப்பர் சேவையில் ஈடுபடுவதற்கு ஐந்து வருடங்களும் 2 மில்லியன் டொலரும் தேவைப்படும். அட்லான்ரிக் சமுத்திரத்தை ஆகாய விமானத்தில் கடக்கும் செலவில் பூமியைச் சுற்றிப் பறப்பதை விண்வெளி அதிகாரிகள் கனவு காணத் தொடங்கி விட்டார்கள். அணுக்கரு தொழிற் சாலைகளில் ஏற்படும் கழிவுகளை அகற்றல், வெளியைத் தளமாகக் கொண்ட விளம்பரங்கள், பூமியை அண்டிய சுற்றுப்பாதை, சுற்றுலா ஆகியன அவர்களின் எண்ணங்களில் தோன்றியுள்ளன. வார இறுதி நாட்களைக் கழிக்க ஒரு விண்வெளி நிலையத்திற்கு யாரும் போக விரும்புகிறீர்களா?

பிலிப் எல்மர் டிவிற்

ரைம், ஒகஸ்ட் 30, 1993.

வானத்தில் காணாமற் போய்விட்டது

செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அனுப்பிய ஒப்சேவர் என்ற விண் வெளி ஆய்வுக் கலனைப் பற்றிய செய்திகளை அறிவிக்க உள்ள சாதனம் மேலும் பேசக் கூடியதாக இருப்பின், அது சென்ற செப்ரெம் பர் 1 ஆம் திகதி அமெரிக்க பசுபிக் நேரம் 2.56 மணிக்கு மைகன் மனுடன் பேசியிருக்க வேண்டும். கலிபோர்னியாவில் பஸடானா நகரத்தில் உள்ள ஜெட் செலுத்தி ஆய்வு கூடம், அந்த 24 ஆண்டு கால வயதுள்ள சாதனத்தைச் செயற்படுத்த ஒரு வாரகாலமாக முயன்று பார்த்தது. ஆனால் அந்தச் சாதனமோ அமைதி குலைய வில்லை. இப்பொழுது அந்தச் சாதனம் தானாகச் செயற்பட்டால் ஒழிய வேறு நம்பிக்கைக்கே இடமில்லை. அந்த விண் வெளிக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ள கணனித்தொலைபேசி மூலம் பூமிக்குச் செய்திகூற வடிவமைத்துப் பொருத்தப்பட்டதாகும். அது ஐந்து நாட்களாகச் செயலற்றுக் கிடக்கின் றது. அது செயற்பட்டால் இலத்திரன் துண்டொன்று இயங்கி மனுடைய தொலைக்காட்சிச் சாதனத்தில் சங்கேதக் குறிகள் காட்டும். அப்பொழுது விஞ்ஞானிகள் சமிக்ஞையை மீண்டும் செயற்பட வைக்கலாம். ஆனால் அது இப் பொழுது முடியாமல் உள்ளது.

இப்படியாக அந்த செவ்வாய்க் கிரக நோட்ட விண் வெளிக்கலன் செயலிழந்த காரணத்தை இன்னும் உணரமுடியாமல் உள்ளது. பொறி யியலாளர்கள் அது ரான்சிஸ்டர் கள் பழுதுற்றதால் நிகழ்ந்திருக் கலாம் என்று நினைக்கின்றனர், அதனால் விண்வெளிக் கலன் எங்கே உள்ளது என்பதையும் அறிய முடியாமல் உள்ளது. அது செவ் வாய்க்கிரகத்தைச் சுற்றிக்கொண்டி ருக்கலாம் அல்லது அண்டவெளி யில் எங்கோ திசைமாறி ஏகிக் கொண்டு இருக்கலாம் அன்றேல் வெடித்துச் சிதறியிருக்கலாம். ஒருசிலர் நாஸா நிறுவனம் செவ் வாய்க்கிரகத்தில் நாகரிகம் நிலவு வதைக் கண்டு அதனை வேண்டு மென்றே செயலிழக்கச் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகித்துக் கூறுகின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1 பில்லியன் டொலர் பெறுமதியான செய்மதியும் அத்துடன் அமெரிக்க தேசிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (நாஸா) மதிப்பும் போயின.

காரணம் எதுவானாலும் சுமார் 20 வருடமாக முயன்று 980 மில்லியன் டொலர் செலவிட்டுச் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அனுப்பிய விண் வெளிக்கலன் விண் வெளியிற் காணாமற் போய் விட்டது தான், அது செவ்வாய்த் தரையினையும், அதன் பருவநிலைகளையும் கண்டு பூமிக்குச் செய்தி சொல்ல அனுப்பப் பட்டதாகும். அப்பொழுது பின்பு அங்கு மனிதர் வாழ்வது பற்றி அறிய வேறு கலன்கள் அனுப்பக் கூடியவிதமாக அது செய்திக் தரவு களைத் தந்திருக்கும். விண்வெளிக் கலனுடன் நாஸா நிறுவனத்தின் நன்மதிப்பில் ஒரு பகுதியும் தற் பொழுது போய்விட்டது.

இந்த ஆண்டில் மட்டும் நாஸா தான் செலுத்தத் திட்டமிட்டிருந்த 13 விண்வெளிக் கலன் திட்டங் களைச் செயற்படுத்தத் தவறி விட்டது. அது பலமுறை முயன்ற பின்பும் வியாழனை நோக்கி அனுப் பிய கலிலியோக்கலனில் பொறுத்துப் போய் மாட்டியுள்ள அன்டனாவைச் சரிப்படுத்த முடியாது போய்விட்டது. அதே நாளில் செவ்வாய் ஆய்வாளர்கள் செவ் வாயை நோக்கி அனுப்பிய கலனு டன் தொலைத் தொடர்பை இழந்து விட்டனர். அத்துடன் புதிதாக வானில் அனுப்பப்பட்ட பருவநிலை அவதானத்திற்கான 67 மில்லியன் டொலர் பெறுமதியான செய்மதி யுடன் தொடர்பும் அற்றுப் போய் விட்டது.

இந்த வீழ்ச்சி ஒரு முக்கிய காலகட்டத்தில் நாஸாவுக்கு ஏற்பட் டுள்ளது. அந்த நிறுவனம் பிறீடம் என்ற வான்வெளி நிலையத்தைக் கட்ட நிதி கேட்டிருந்தது. ஒருவாறாக பாராளுமன்ற மக்கள் சபையால் இவ்வாண்டு பிரேரிக்கப்பட்டு அதற்கான 22 மில்லியன் டொலர்த் திட்டம் செனெட் சபையால் அது மதிக்கப்பட்டு இருக்கையில் இந்த வீழ்ச்சி வந்தது பெரும் பாதிப்பாகும்.

இன்னும் பல இடைஞ்சல்கள் காத்துள்ளன. டிசம்பர் மாதத்தில் விஞ்ஞானிகள் விண் வெளிக்குள் ஏகி நட்சத்திரங்களை அவதானிக்க அனுப்பிய ஹபுள் வான் வெளித் தொலைநோக்கியைப் பழுது பார்க்கச் செல்லுந் திட்டம் ஒன்று இருந்தது. முன்பு எப்பொழு தும் நிகழாதவிதமான திட்டம் திட்ட மிட்டபடி நடந்திருந்தால் நாஸா

வுக்கு சிறிது மதிப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் அதுவும் நடக்காதுபோல் உள்ளது. விண்வெளி கடுமையான மன்னிக்கும் குணமற்ற ஓர் இடமாகும். அதனால் நாஸாவிற்கு மக்களிடம் மதிப்புப் பெறத்தக்க திட்டங்கள் பல தோல்வி கண்டுள்ளன. பொறியியலாளர்கள் கலிலியோ விண்வெளித் தொலை நோக்கியின் செயற்பாடுகளில் 70 வீதத்தைச் சரி செய்தனர். விண்வெளியாளர்கள் இன்டெலிசாட்-6 என்ற செய்மதியை விண்வெளியில் சென்று கையாற் கூடத் தொட்டுச் செயற்பட்டனர். அப்பொழுது தொழில்நுட்ப முறையொன்று பிழைப்பட்டதால் முடியாமற் போய்விட்டது. அப்பலோ-13 இல் ஒரு வெடிப்பு ஏற்பட்ட பொழுது விண்வெளியாளர்கள் அதில் அகப்பட்டு உயிரிழக்காமற் கூடத் தப்பினர்.

கடைசி நிமிடம் வரை ஜெட் செலுத்திய ஆய்வுகூடக் கட்டுப்பாட்டாளர்கள் செவ்வாயை நோக்கிச் சென்ற ஒப்சேவர் கலனிலும் அப்படி ஏதும் செய்யலாம் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டனர். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. இவர்கள் கூற்றுப்படி விண்வெளி ஆய்வுகூடக் கலங்கள் அனைத்தும் மிகவும் சிக்கலான முறையில் ஆனவை என்பதனால் பிழையின்றிச் செயற்படவைப்பது முடியாத ஒரு செயல் என்பதாகும். நாஸா இத்தகைய ஆய்வு கூடக் கலங்களை சிறிய அளவில் அடிக்கடி அனுப்பி ஆய்வு செய்திருந்தால் நல்லதென்றும், அப்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குறிக்கோள்களுடன் செயற்பட்டுப் பயன் அடைந்திருக்கலாம் என்றும் ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழக விண்வெளிக் கொள்கை நிலையத்தின் இயக்குனர் ஜோன் லொக்ஸ்டன் கூறுகிறார். அப்பொழுது ஒன்று பிழைப்பட்டால் அனைத்தையும் இழக்க நேராது என்றும் அவர் கூறுகிறார். அத்தகைய திட்டங்கள் நாஸாவிடம் ஏற்கனவே இருக்கக்கூடும். அவர்கள் ஜனாதிபதியின் செயலகத்திற்கு ஏற்கனவே நடசத்திர யுத்தத்தில் பயன்படுத்தச் செயற்பட்ட கிளெமன்டேன் செய்மதிகளைச் செவ்வாய் ஆய்வுகளுக்குப் பயன்படுத்துவது பற்றி அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. செய்மதிகள் பற்றிய



காணாமல் போன ஒப்சேவர்

செய்திகள் அறிந்த விஞ்ஞானிகள் ஒவ்வொன்றும் 225 கிலோகிராம் எடை உள்ளதும் 75 மில்லியன் டொலர் செலவிலானதுமான நான்கு கிளெமன்டேன் செய்மதிகள் 1994 நவம்பரில் அனுப்பக்கூடியதாகத் தயாராகிவிடும் என்று கூறுகின்றனர்.

ஆனால் லொக்ஸ்டன் நாஸாவின் இயக்கம் பற்றிக்குறை கூறுகையில், அந்த நிறுவனம் தனது தொழில் நுட்பச் செயற்பாட்டில் அவ்வளவு வீரியமாக இல்லை. பல ஆண்டுகாலமாக அதற்குள் இளைய தலைமுறை விஞ்ஞானிகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை'' என்று அவர் குறிப்பிடுகிறார். அதனால்தான் 1970 களில் அதற்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. தற்பொழுது நாஸாவின் தலைவராக உள்ள டானியல் கோர்டின் அதனை மாற்ற எண்ணியுள்ளார் என்றும் லொக்ஸ்டன் கூறினார். ஆனால் ''ஒரு நடுவயதுப் பருவம் வந்த அதிகாரிகள் ஆட்சி நிலையத்தை உள்ளிருந்து மாற்றுவது கடினம்'' என்றும் மேலும் அவர் கூறினார்.

இருந்தும் எத்தனை சிறந்த தொழிற் பதவியாளர்கள் இருந்தாலும், 1960 களில் நாஸா தன் விருப்பப்படி செலவு செய்யக்கூடிய காலத்தில் இருக்காத பிரச்சினைகளுக்கு முகங் காட்டத்தான் வேண்டும். இப்பொழுது கையை இறுக்கிக் கொண்டிருக்கும் நம்பிக்கையற்ற சட்டசபையான காங்கிரஸுக்கு ஒவ்வொரு செயற்திட்டத்தையும் விலைபேசி விற்க வேண்டியுள்ளது. சட்டமியற்றுவோரும், அவர்களிடம் செல்வாக்குச் செலுத்தும் விண்வெளித் தொழில் நுட்பச் சாதனங்கள் வழங்கும் ஒப்பந்தக்காரர்களும் புதுமையான வெற்றிகளைக் காட்டக்கூடிய பெரிய சிக்கலான திட்டங்களையே விரும்புகின்றனர். இவற்றில் பெருமளவு ஆபத்துக்களும் உள்ளன. சில வேளை காலஞ் செல்லச் செல்ல அமெரிக்காவின் விண்வெளித் திட்டங்களை நடத்தும் ஆண்களும் பெண்களும் அரசியல் வாதிகளிடம் எதிர்பார்ப்புக்களைக் குறைக்கும் கவின் கலையைப் பாடமாகக் கற்கலாம்.

மைக்கல் டீ லிமோனிக்

ரைம், செப்ரெம்பர் 10, 1993

அந்த வேட்டை, அந்தக் கூக்குரல்

நோர்வேயினர் கயிற்றால் இணைக்கப்பட்ட ஈட்டி போன்ற ஹார்பூன்களைக் கொண்டு திமிங்கிலங்களை வேட்டையாட முற்பட்டபோது, மீண்டும் திமிங்கிலங்களைக் காப்பாற்றுங்கள் என்ற ஓலம் கடல்களினூடாக எதிரொலித்தது.

மாரிகாலத்தில் இடைவெப்ப வலயத்தில் தற்காலிகமாகத் தங்கிவிட்டுக் கோடையில் வடக்கு நோக்கி மின்கி திமிங்கிலங்கள் குளிர்ந்த ஆக்டிக் பகுதிக்குச் செல்வது வழக்கம். மின்கி திமிங்கிலங்கள் இவ்வாறு நகர்ந்து கொண்டிருக்கும் போது நேரத்திற்கு நேரம் கடலினுள் மூழ்கி இரையாக மீன்களைப் பிடித்து விழுங்குவதுண்டு. திரும்பவும் அவை கடலின் வெளித் தளத்திற்கு வந்து தமது பெரிய நீண்ட மூக்குத் துவாரங்களினூடாகச் சுவாசிக்கும். ஏனெனில் அவை காற்றைச் சுவாசிக்கும் பாலூட்டிகளாகும். அது மட்டுமல்ல காலங் காலமாக மனிதருக்குத் துலங்காத தாம் நகர்ந்து செல்லும் கடற் பாதையையும் அவை பின்பற்றின. இவை திமிங்கிலங்களின் பிரதான கடல் மார்க்கமாகக் கணிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டில் ஜூன் மாத ஆரம்பப்பகுதியில் நான்கு தொன் பாரமும், ஒன்பது மீற்றர் நீளமுமுள்ள பெண் மின்கி திமிங்கிலம் தனது சகாக்களுடன் வடக்கு நோக்கிப் பிரயாணத்தை ஆரம்பித்தது. துரதிர்ஷ்டவசமாக அந்தக் குறிக்கப்பட்ட மின்கி திமிங்கிலம் அதனுடைய மார்க்கத்தில் நோர்வேயின் கரையை ஜூன் மாதம் 17ஆம் திகதி சென்றடைய நேரிட்டது. அதன் மார்க்கத்திலிருந்து ஆன் பிரிட்டா அதன் தலைவிதியை மாற்றிவிட்டது. ஹார்பூனால் வேட்டையாடப்பட்ட மின்கி திமிங்கிலம் நோர்வேத் துறைமுகப் பட்டினமான சுவோலேயரில் உள்ள ஓர் ஏல விற்பனை நிலையத்தில் அதன் கதையை முடித்துக் கொண்டது. அங்கு அதன் மாமிசம் ஒரு கிலோ 5.50 டொலராக விற்பனையாகியது. இந்தப் பருவகாலத்தில் நோர்வேயில் பிடிக்கப்பட்ட 160 மின்கி திமிங்கிலங்களில் இதுவே முதலாவதாகும். இவற்றை அவர்கள் வியாபாரத்திற்காகவே பிடித்தனர். இவ்வாறு மின்கி திமிங்கிலங்கள் பிடிக்கப்பட்டமைக்கு அவர்கள் 1986 இல் அமைக்கப்பட்ட சர்வதேச திமிங்கில ஆணைக் குழுவின் வர்த்தக நோக்கத்திற்கு அவற்றைப் பிடிக்கக் கூடாதென்ற உலகளாவிய தடையை மீறியவர்களாவர். ஆனால், இவர்களுடைய செயலுக்கு நோர்வே அரசாங்கம் பூரண சம்மதத்தை அளித்து ஏற்றுக் கொண்டுள்ளது.

அன்றியும் இச் செயலுக்கு ஆட்சேபனைக் கடிதங்கள் வாஷிங்டனிலுள்ள நோர்வேத் தூதுவரகத்திற்கு வந்து குவிந்துள்ளன. சூழற் பாதுகாப்பில் அக்கறைகொண்ட தொகுப்புக்கள் நோர்வேயின் ஏற்றுமதிகளைப் பகிஷ்கரிப்பதோடு விசேடமாக அடுத்த ஆண்டில் நோர்வேயில் உள்ள லில்லிஹாமரில் நடைபெறும் மாரிகால ஒலிம்பிக் போட்டியின்போது பிரயாணிகள் நோர்வேக்குப் போக வேண்டாம் எனக் கேட்டுள்ளனர். மேலும் ஜேர்மன், பிரித்தானிய வர்த்தக ஸ்தாபனங்களும் நோர்வேயுடன் முன்னர் செய்து கொண்ட பலகோடி டொலர் பெறுமதியுள்ள உணவு சம்பந்தமான ஒப்பந்தங்களையும் இரத்துச் செய்து விட்டன. ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக இலாகாவும் ஒவ்வொரு வருடமும் நோர்வேயிலிருந்து தாம் இறக்குமதி செய்யும் கோடிக்கணக்கான டொலர் பெறுதியுள்ள உணவு சம்பந்தமாகக் கட்டுப்பாடு விதிப்பது என்பதனை ஓரிரு வாரங்களுக்குள் முடிவு செய்யவுள்ளன.

இவ்வாறு பல்வேறு சர்வதேசக் கண்டனங்களுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் நோர்வே ஆளானபோதிலும் திமிங்கிலம் பிடித்தல் தொடரும் என நோர்வே விடாப்பிடியாக உள்ளது. இவ்வாறு நோர்வேயின் முடிவு வலுப்பெறுவதற்குக் காரணம், ஐஸ்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் திமிங்கில வேட்டையைத் தொடருவார்கள் என்பதனாலாகும். "கட்டுப்பாட்டுக்கமைய இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதை மூட உணர்வுகள் பாதிக்கக் கூடாது" தென நோர்வேயின் பிரதமர் ஹார்லம் பிரண்ட்லண்ட் கூறியுள்ளார்.

பிரதமரின் கூற்றுப் பலசகாப் தங்களாக விவாதிக்கப்பட்டு வந்த இப் பிரச்சினையின் இதயத்தை ஊடறுத்துச் செல்கின்றது. திமிங்கிலங்கள் அழிந்தொழிவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவை பிறிதொரு வகையான மிருகங்களா என்ற வினா எழுப்பப் படுகின்றது. அல்லது ஏதோ ஒரு விதத்தில் வேறுபட்ட மதிநுட்பமுள்ள பாலூட்டி இனமாக இருப்பதால் பாதுகாக்கப்படுவதற்கு அருகதை உடையனவா? என்ற வினாவும் எழுப்பப் படுகின்றது.

உயிர் அங்கிகள் சம்பந்தமான பல விவாதங்களைப் போலன்றித் திமிங்



ஒருபோது முற்றாக அழிவுற்றிருந்த இராட்சத 'ஹம்பாக்' திமிங்கில இனம் தற்போது மீண்டும் படிப்படியாக பெருகிக்கொண்டிருக்கின்றது.

கிலம் பாதுகாக்கப்பட வேண்டுமா என்ற விவாதம் மாறுபட்ட கொள்கைக் கட்சிகளாகப் பிரியவில்லை. திமிங்கிலம் பிடிப்போரிற் பலர் சில இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு இணக்கந் தெரிவிக்கின்றனர். பல சூழற் பாதுகாப்பு வாதிகள் கவனமாக ஒழுங்கு படுத்தப்பட்ட திமிங்கில வேட்டை இடம் பெற வேண்டுமென்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். இயற்கையும், இளைஞரும் என்ற நோர்வேச் சூழல் அமைப்பின் தலைவர் ஹெய்டி சொரென்சன் கூறுவது யாதெனில்:'நாங்கள் றெயின்டியர், எல்க் போன்ற மான் இனங்களை நேசிப்பதைப்போலவே மின்கி திமிங்கிலங்களையும் நேசிக்கின்றோம். இந்த மிருகங்கள் அழிந்தொழிந்து போய்விடும் என்ற அச்சமில்லாத படியால் அவற்றை வேட்டையாடுகிறோம்' என்பதாகும்.

மேலே தரப்பட்ட கூற்று நியாயமான கூற்றாக இருந்தபோதிலும் மனித வர்க்கத்தினருக்கும், திமிங்கிலத்திற்குமிடையில் உள்ள தொடர்பு ஒருபோதும் நியாயத்தினால் கட்டுப்படுத்தப்படவில்லை. திமிங்கிலங்கள் எப்போதும் மிகவும் அற்புதமானவை; — மர்மமானவையுங் கூட, இயற்கையாயமைந்தவை, சந்தோஷமானவை, அவை மீன் போன்றவையாக இருந்தபோதிலும் பாலூட்டிகளாகவும் உள்ளன. அவை புத்தியுள்ளவை, ஒழுங்கான தொடர்பான வினோதமான சத்தத்தின் மூலம் தொடர்பு கொள்ளக் கூடியவை. ஆனால் அவற்றில் மிகவும் சிறியவை பார்ப்பதற்குப் பாரியதோற்றமுடையவை. டைனோசர்களுடைய அழிவுக்குப் பின்னர் நாங்கள் பார்க்கக்கூடிய மிகவும் பெரிய பிராணிகள் திமிங்கிலங்களாகும். பெலூகாத் திமிங்கில இனங்களும், கொலையாளித் திமிங்கிலங்களும் மீன்காட்சிச் சாலைகளிலும், வனங்களிலும் கோடிக் கணக்காகக் கூடி இருப்பதை மக்கள் பார்க்க முடியும். ஆயிரக்கணக்கானோர் கடல் வியாதியைக் கூடக் கவனியாமல் திமிங்கிலங்களைப் பார்ப்பதற்குக் கடற் பிரயாணம் செய்வார்கள்.

ஆனால் ஒருவருடைய பாராட்டுக்கும், கணிப்புக்குமுரிய திமிங்கிலங்கள் மற்றவருக்கு உணவாகவும் அமைகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே திமிங்கில வேட்டை ஆரம்பமானது. அதற்கு முக்கிய காரணம், அதன் மாமிசமும் எண்ணெயும் தேவைப்பட்ட படியால் திமிங்கில வேட்டையில் மிகவாக ஈடுபட மக்கள் தூண்டப்பட்டனர். 1920 இல் ''ஆலைக் கப்பல்கள்'' விருத்தி அடைந்தமையால் பாரிய திமிங்கில இனங்கள் முற்றாக அழிய நேரிட்டன. இதன் காரணமாக 1946 இல் சர்வதேசத் திமிங்கில ஆணைக்குழு அமைக்கப்படலாயிற்று அக்குழு தெரிவு செய்யப்பட்டுத் திமிங்கில இனங்களைப் பாதுகாக்க மூன்று தசாப்தங்களாக முயன்று வந்துள்ளது. இறுதியில் வர்த்தக நோக்குடன் மேற் கொள்ளப்படும் திமிங்கில வேட்டையை முழுமையாகத் தடை செய்யும் தேவை அதற்கு ஏற்பட்டது.

பொதுவாக இத் தற்காலிகத் தடை செயற்படுவதாகவே தோன்றுகின்றது. அநேகமான திமிங்கிலப் பரம்பரை நிலையாகவாவது இருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அன்றியும் சில வகைத் திமிங்கிலங்கள் பழைய நிலைக்குத் திரும்புவதை ஆரம்பித்துள்ளன. உதாரணமாகத் தென்ஆபிரிக்காவுக்கு அப்பால் உள்ள கடற் பிரதேசத்தில் 'ஹம்பாக்' (Humpback) என்னும் திமிங்கில இனம் குறிப்பிடத்தக்க அளவுக்கு பெருகியுள்ளது. ஐக்கிய அமெரிக்கத் தேசியக் கடல் மீன்பிடிச் சேவையின் கூற்றின்படி 1980இல் கலிபோர்னியாவுக்கு அப்பால் பல நூற்றுக் கணக்கிலிருந்த நீலத் திமிங்கிலங்களின் எண்ணிக்கை 1990 இல் இரண்டாயிரத்து ஐம்பதாகப் பெருகியுள்ளன. கலிபோர்னிய நரைத் திமிங்கிலங்கள் ஆண்டு தோறும் 21,000 கி.மீ தூரத்திற்குப் பாஜா கலிபோர்னியாவுக்கும், பேரிங்கிற்கும் சுக்கிகடற் பிரதேசங்களுக்குமிடையில் நகர்ந்த வண்ணமுள்ளன. இவற்றின் எண்ணிக்கை 1940ஆம் ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கிலிருந்து இன்று வரை 25,000 மாகப் பெருகியுள்ளன.

ஆனால் சர்வதேசத் திமிங்கிலக் குழுவின் தடை திமிங்கிலத்தினை அச்சுறுத்தக்கூடிய மனித நடவடிக்கைகளை நீக்கவில்லை. வர்த்தக ரீதியாக மீன்பிடித்தல் திமிங்கிலங்கள் வளரும் கடற்பண்ணைப் பிரதேசங்களை நாசமாக்கியுள்ளன. அன்றியும் நச்சுத் தன்மையுள்ள இரசாயனப் பொருட்களும், பூச்சிக் கொல்லிகளும் ஆறுகளினூடாகக் கடலை அடைவதால் திமிங்கிலத்தின் நோய் எதிர்ப்புச் சக்தி பாதிக்கப்பட்டதோடு அவற்றின் பிறப்பு வீதமும் குறைந்துள்ளது என்பது விஞ்ஞானத்தின் சந்தேகத்துக்குரிய விடயமாகும். நியூ இங்கிலாந்து கடல் உயிரியல் விஞ்ஞானி ஸ்கொட் குரோல் அங்குள்ள மீன் காட்சிச் சாலைக்குப் பொறுப்புடையவர். அவருடைய கூற்றின்படி, ''பொதுமக்கள் திமிங்கில வேட்டையைப்பற்றித் தேவையற்ற முறையில் அலட்டிக் கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் கூடுதலான பாரதூரமானது நாங்கள் மலச ல

கூடத்தில் எதனைக் கழுவிப் பாய்ச்சுகின்றோம் என்பதாகும்.''

சென் லோறன்ஸ் நதியின் கனேடியப் பகுதியின் இரு மருங்கும் விவசாயமும், தொழிற்சாலைகளும் பக்கவாட்டில் அமைந்துள்ளன. இங்கு 1940 ஆம் ஆண்டுகளில் திமிங்கில வேட்டை நிறுத்தப்பட்டது. ஆனால் இங்கு பெலுகாஸ் திமிங்கிலங்கள் 500 வரையில் அன்று தொட்டுத்தொடர்ந்து தங்கியுள்ளன. அன்டார்ட்டிக்காவில் 1966 இலிருந்து நீலத் திமிங்கிலங்கள் வேட்டையாடப் படவில்லை. 500 வரையில் தங்கிக் காணப்படுகின்றன. ஆனால் அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஐந்து மடங்கு எண்ணிக்கையான நீலத் திமிங்கிலங்கள் இருந்துள்ளன.

எல்லாவற்றிலுங் கூடுதலாக அபாயத்துக்குள்ளான திமிங்கிலங்கள் வடக்கிலுள்ள றைட் திமிங்கிலங்கள். அந்த இனத் திமிங்கிலங்களை வேட்டையாடுவதிலிருந்து தடை உத்தரவைத் தேசங்களின் கூட்டவை அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறப்பித்திருந்தது. ஆனால் ஆகக் கூடுதலாக 350 திமிங்கிலங்கள் வரையிலேயே இன்று அத்திலாந்திக் சமுத்திரத்தில் நீந்தித் திரிகின்றன. 1970 ஆம் ஆண்டிலிருந்து 1/3 பங்கு றைட் திமிங்கிலங்கள் கப்பல்களால் மோதுண்டமையாலும், மீன் பிடி வலைகளிற் சிக்குண்டமையாலும் மடிந்துள்ளன.

றைட் திமிங்கிலங்களையோ, அல்லது ஸ்பேர்ம் திமிங்கிலங்களையோ அன்றேல் நீலத் திமிங்கிலங்களையோ கொல்வதைப் பற்றி எவராலும் பேசப்படவில்லை. உண்மையில் நோர்வே, ஐஸ்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் சில வர்க்கத் திமிங்கிலங்களை வேட்டையாடுவதைத் தடை செய்வதற்கு ஆதரவு அளிக்கின்றன. ஆனால் பாதிக்கப்படாத திமிங்கில இனங்களை வேட்டையாட அனுமதிக்கப்பட வேண்டுமென்பதாகும். நோர்வேயின் உயர் வடக்குச் சங்கம் (High North Association) இக்கொள்கைக்கு ஆதரவு பெறப் பேசும் ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பின் ஜேஜோர்ஜ் பிளிக் வெல்ட் கூற்றுப்படி:

''எவராவது இனிமேல் அந்தப் பெரிய திமிங்கிலங்களை வேட்டையாட விரும்பவில்லை; ஏனெனில் அது பாதிப்புக்குள்ளான இனமாகும். அதே நேரத்தில் முற்றாகத் திமிங்கிலங்கள் வேட்டையாடப்படக் கூடாது என்று விவாதிப்பது ஒரு வர்க்கப் பன்றிகள் இறந்துபட இருப்பதால் எவரும் பன்றி இறைச்சியே சாப்பிடக் கூடாது என்பதனைப் போன்றதாகும்.

திமிங்கில வேட்டைக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளில் ஒன்றான ஜப்பானில் நினைவுச் சின்னங்கள் இறந்த திமிங்கிலங்களுடைய ஆவித்தாக ஒரு காலத்தில் அர்ப்பணஞ் செய்யப்பட்டன. அந்த நாட்டில் 45 ஆண்டுகள் திமிங்கிலங்கள் பிடிப்பதில் ஈடுபட்டு இன்று இளைப்பாறியுள்ள 69 வயதான ஷிமாலாபூரோ ஹயாய் என்பவரின் கூற்றுப்படி ''இனி வரப்போகும் சந்ததியினருக்குத் திமிங்கிலம் பிடிக்கும் பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக அளிக்க நான் விரும்புகின்றேன்'' என்பதாகும். நோர்வேயின் திமிங்கிலம் பிடிக்கும் கலம் 'நிப்பி ரேய்னா' (Nybraena) உடைய ஏவலாளர் நோர்டின் ஓலாவ்ஸன் (Nordin Olafsson) கூற்றுப்படி ''திமிங்கில வேட்டை எமது கலாசாரத்தின் முக்கிய அங்கமாகும், அது எமது வரவு செலவுத் திட்டத்தின் பிரதான பகுதியாக இல்லாவிடினும் அது தேவைப்படும் மீன் பிடிப் போர்க்கு ஓர் இன்றியமையாத வருவாய் வளமாகும்''.

மற்றொரு விவாதம் என்னவெனில், ஏனைய பாரிய திமிங்கில இனங்களைப் போலன்றி மின்கி திமிங்கிலங்கள் அதி அளவில் காணப்படுகின்றன. நோர்வேக் கடற் கரைக்கப்பால் 86,700 மின்கி நிமிங்கிலங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. உலகளாவிய அளவில் 900,000 மின்கி திமிங்கிலங்கள் உள்ளன. ஆகவே கட்டுப்பாட்டுடன் திமிங்கில வேட்டை மேற்கொள்ளப்பட்டால் மின்கி திமிங்கில இனத்திற்குத் தீங்கு விளையாது. சர்வதேச திமிங்கிலக் குழுவின் விஞ்ஞான சபை ''கட்டுப்பாட்டுடன் ஒரு வரம்பினுள் மின்கி திமிங்கில வேட்டைக்கு இடமளிக்கலாம்'' எனச் சிபார்சு செய்துள்ளது.

கடந்த மே மாதத்தில் ஜப்பானில் இடம் பெற்ற சர்வதேச திமிங்கிலக் குழுவின் வருடாந்தக் கூட்டத்தில், அத் தொகுப்பினர் விஞ்ஞான சபைக்குக் கோபத்தை உண்டுபண்ணும் வகையில் அச் சபையின் பிரேரணையை நிராகரித்து விட்டனர். பிரித்தானியாவின் கடற் பாலூட்டிகள் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வரும், விஞ்ஞான சபையின் தலைவருமான பிலிப் ஹமண்ட் உடனே தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். ஹமண்ட் எழுதியது என்னவெனில், விஞ்ஞான சபை அருன் கருமங்களுக்கு எந்தக் குழுவிற்குப் பொறுப்பாக இருந்ததோ, அந்தக் குழு அச் சபையை அவமதித்த படியால், தான் அதனுடைய அமைப்பாளராகவும், பேச்சாளனாகவும் இருப்பதில் அர்த்தமில்லை'' என்பதாகும்.

ஆகவே திமிங்கில வேட்டையில் ஈடுபடுவோரும், அவர்களுடைய ஆதரவாளர்களும் மேலே கூறப்பட்ட காரணங்களில் நிமித்தம் சர்வதேசத் திமிங்கிலக் குழுவின் தடையை மீறினால் என்ன? என்று வாதிடுகின்றனர். இதனைத் தொடர்ந்து ஐஸ்லாந்து போன்ற நாடுகளும் நோர்வேயைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன.

ஐக்கிய அமெரிக்கா கடுமையான தடைகளை விதிக்க முற்பட்டால் நோர்வேயின் எதிர்ப்பு நீடிக்க முடியாது. ஏனெனில் ஐக்கிய அமெரிக்காவின் தடையால் நோர்வேயில் உள்ள பல வர்த்தக ஸ்தாபனங்கள் பாதிப்புக்குள்ளாகும்.

இத் தடைகள் உரிய பயனைச் சர்வதேசத் திமிங்கில குழுவிற்கு அளிக்காவிடில் ஐஸ்லாந்தும், ஜப்பானும் நோர்வேயுடன் இணைந்து

வர்த்தகத் திமிங்கில வேட்டையில் ஈடுபடலாம். அவ்வாறு அவர்கள் செயற்பட்டால் சர்வதேசத் திமிங்கிலக் குழு அவர்களுடைய வேண்டுகோளுக்கு விட்டுக் கொடுக்க நேரிடும். அல்லது அந்த அமைப்பே அழிந்து விடவுங்கூடும். இந்த இரு முடிவுகளும் சூழல் வாதிகளுக்கு அச்சத்தை உண்டுபண்ணியுள்ளன. சர்வதேசத் திமிங்கிலக் குழு அழிவுற்றால் வர்த்தகத் திமிங்கிலம் பிடித்தலை யார் ஒழுங்கு படுத்துவது என்பது தெளிவற்றதாக உள்ளது. மின்கி திமிங்கிலங்கள் பாதிப்படைவதோடு அந்த மிகவும் பாதிப்புக்குள்ளான திமிங்கில வர்க்கமே அபாயத்துக்குள்ளாகும்.

சர்வதேசத் திமிங்கிலக் குழு மின்கி திமிங்கில வேட்டைக்கு அனுமதி அளித்தாலும் ஏனைய இனத்திமிங்கில வேட்டைக்கு மற்றையோர் அனுமதி கேட்கலாம். ஆகவே திமிங்கில வேட்டையை எதிர்ப்போர் மின்கி திமிங்கிலங்களை முற்றாக அழிந்து போகாது கட்டுப்பாட்டுடன் வேட்டையாடலாம் என்ற நிலைப்பாட்டை அர்த்தமற்றதெனக் கூறுகின்றனர். வோஷிங்டனில் உள்ள கடல் வளப் பாதுகாப்பு மையத்தின் உயிரியல் விஞ்ஞானி நீனாயங் என்பவருடைய, கருத்துப்படி ''எவ்வளவு திமிங்கிலங்களை அவற்றின் முழுத் தொகையையும் அழிக்காது எம்மாற் பிடிக்க முடியும் என்பதைக் கணிப்பதில் வரலாற்று ரீதியாகத் தோல்விகளைக் கண்டுள்ளோம். இதனை விடக் கட்டுப்படுத்தப்பட்ட தந்த வியாபாரம் காட்டியது போல் மின்கி திமிங்கில வேட்டையிலும் பங்கினைத் தீர்மானித்தல் ஏமாற்று வஞ்சகச் செயல்களின் காரணமாக அர்த்தமற்றதாகி விடும்.''

அப்படிப்பட்ட விடய அடிப்படை விவாதங்கள் மறுபுறத்தில் ஒப்பிடக்கூடிய விவாதங்களுடன் அடிக்கடி திமிங்கில வேட்டை விவாதத்தைக் கெடுக்கும் உணர்ச்சியிலிருந்து ஒரு வரவேற்கக்கூடிய மாற்றமாகும். திமிங்கிலங்களைச் சாதாரண மிருகங்களின் அந்தஸ்திலிருந்து உயர்த்தப்படவேண்டுமென்ற மன உணர்வு மாற்றமடைந்தவர்களையே ஏற்றுக் கொள்ளச் செய்யும். திமிங்கில வேட்டைக்கு ஒரு கலாசார பாரம்பரியம் என்ற ஏணைக் கருத்துப்படி எவ்வளவு செலவிவென்றாலும் பேணப்பட வேண்டுமென்பது விவாவுக்குரியதாகும். (இதே விவாதம் சேவற் சண்டைக்குப் பொருத்தமுடையதாகுமா?) நியூயோர்க் ஹாம்டன் குடாவில் உள்ள ஒக்கியானொஸ் சமுத்திர ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஸாஸடோவ் பின்வரும் முடிவை வெளியிடுகின்றார்.

''மிகவும் முக்கியமான பிரச்சினைகள் திமிங்கில வேட்டையுடன் திமிங்கில இனமும் இணைந்திருக்க முடியுமா? என்பதும், திமிங்கிலங்கள் அறுவடைக்குரிய உணவு வளமா?'' என்பதுவுமாகும். இப் பிரச்சினைகட்கு விடை நிச்சயமாகப் பகர்வதற்கு முன் பெருமளவில் விஞ்ஞான ஆராய்ச்சிகள் செய்யப்படல் வேண்டும்.

இந்த அறிக்கையை
அளித்தவர்கள்:-
நியூயோர்க்கைச் சேர்ந்த
அன்டிரியாடோவ்மனும்

ஒஸ்லோவைச் சேர்ந்த
ஜூலியன் இஷ்ர்லூட்டும்

போர்ட்ஸ்மவுத்தைச் சேர்ந்த
ஜொட்போலுமாவர்

ரைம், ஒகஸ்ட், 1993

ரெனிஸ்:-

இரட்டைத் தவறு

வசைமாரி பொழிவதில் வல்லவர் எனக் குற்றஞ்சாட்டப்படும் தந்தையாருடனான தொடர்பைப் பற்றி வெகுசனத் தொடர்புச் சாதனங்கள், ரெனிஸ் ஸ்ரார் மேரி முயேசியை வட்டமிட்டு வெளியிடும் தகவல்களைத்தவிர்க்கும்நோக்கமாக அவர் நியூயோர்க்கில் இந்தக்கிழமை தொடங்கிய அமெரிக்க ரெனிஸ் போட்டியிற் பங்கு பற்றுமுன் பத்திரிகையாளரிடமிருந்து விலகிக் கொண்டார். ஆனால் மேரி முயேசியின் தந்தையார் வெகுசனத் தொடர்புச் சாதனத்தினூடாகப் பணம் சம்பாதிக்கிறார். மேரி முயேசியுடன் நியூஸ்வீக் தொடர்பு கொண்டபொழுது அவர் பேசத் தயங்கினார். சி. வி. பேட்டிக்குத் தான் ஏற்கனவே பணம் பெற்றுக்கொண்டதைத் தன் தயக்கத்துக்குக் காரணமாகக் கூறினார். தான் ஒருமுறைதான் மேரியின் கன்னத்தில் அறைந்ததாகவும் அது மேரிக்குத் தெரியும் என்றும் கொன்னார். அது பற்றிய விபரங்களைத் தருமாறு நெருக்கியதும் அப்படியானால் நான் உங்களுக்குப் பேட்டி அளிப்பதாயின் சி. வி. க்கு முதற் பேட்டிகொடுக்க முடியாமற்போய் விடும்'' என்று கூறி மேலே எதுவும் கூற மறுத்து விட்டார்.

சிறுபான்மையினர்

நல்லது எதுவெனத் தாய்மார் அறிவர்

பெண்களே முக்கிய பங்காற்றும் கம்போடிய மலைநாட்டுக் குடிகளில்

லாவோஸுடனும், வியட்நாமுடனும் எல்லைகள் கொண்டுள்ள கம்போடியாவின் வடகிழக்கு மாகாணத்தில் அடர்ந்த காடுகள் சூழ்ந்தரட்னாகிரிமலைப்பிரதேசத்தில், பெருந் திட்டங்களுடன் முதலீடு செய்ய நொம்பென்னில் உள்ள முதலாளிகள் குழுவொன்று எண்ணங்கொண்டிருந்தது. அந்த முதலீட்டாளர்களில் மன்னர் நொரடொம் சிகானூக்கின் மகனும், முன்னாள் துணைப்பிரதமருமான இளவரசர் நொரடொம் சக்ரபொங்கும் ஒருவராவார். அவர்கள் அந்த மாகாணத் தலைநகரான பான்லுங்கிற்கு அண்மையில் உள்ள மலைப்பகுதி ஒன்றில் உல்லாசப் பொழுதுபோக்கு இடம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டனர். அது பணக்கார வர்த்தகர்களுக்கும், அரசாங்க உயர் அதிகாரிகளுக்கும் ஓர் உல்லாசம் நாடிச் செல்லும் இடமாயிருக்கும். அங்குள்ள முக்கிய கவர்ச்சியாக உல்லாச விடுதிகளில் தங்க வருபவர்கள் அந்த ஊர்ப்பகுதியில் வாழும் உடலில் மேலாடை அணியாத கமர் லொயூ (Chamer Loeu) இனச் சாதிப் பெண்களைக் கண்டு களித்திருக்கலாம். அந்தச் சாதியாரின் பெயரை மொழிபெயர்த்தால் 'மலைச்சாதியினர்' என்று கருதப்படும். அந்தப் பெயர் அந்தச்சாதியினருக்கு 1940 ஆம் ஆண்டில் இளவரசர் சிகானூக்கினால் தான் சூட்டப்பட்டது.

கமர் லொயூப் பெண்களின் சுதந்திரமான வாழ்க்கை முறை பிரபல்யமானது என்பதுடன், கம்போடியர்களால் சில வேளை ஏளனப்படுத்தப்படுவதும் உண்டு. நிச்சயமாக அந்த முதலீட்டாளர்களின் நோக்கம், நகர்ப்புறத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் காமக்கிளர்ச்சிக் கிளுகிளுப்பைக் கொண்டு இலாபம் ஈட்டுவதாகும். ஆனால் தற்பொழுது, நொம்பென்னில் புதிய அரசாங்கம் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளும் விடயத்தில் கவனஞ் செலுத்துவதாய் உள்ளதால், அந்தத்திட்டம் சிறிது காலம் பின்போடப்படுகின்றது என்பதுடன் அண்மைக் காலத்தில் கொடூரமான ஆக்கிரமிப்புக்களுக்குட்பட்ட அந்தச் சாதியினருக்கும் சிறிது ஆறுதல் கொடுக்கின்றதாகவும் உள்ளது.

கமர்ரூச் இயக்கம் ரட்னாகிரியைத் தனது நடவடிக்கைகளுக்குத் தளமாகக் கொண்டிருந்தது. பின்பு கமர்ரூச் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு அந்த மலைச்சாதி மக்களின் சனத்தொகையில் அரைவாசிப் பேரைக் கொன்றொழித்து விட்டதாக நம்பப்படுகிறது. ஐந்து பிள்ளைகளுக்குத் தாயான 30 வயதுப் பெண் சாவாச்: ''பொல் பொட் எங்களை மற்ற எல்லாக் கம்போடியர்களையும் போல் வாழச் சொல்லி விட்டுப் பின்பு பட்டினி போட்டு எங்களைக் கொன்று விட்டார்' என்று கூறினாள். ''ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் தான் அதிகம் சாகாமற் தப்பினர். ஏனெனில் பிள்ளைகளைப் பராமரிக்க யாராவது வேண்டும் தானே'' என்றும் அவள் மேலும் தெரிவித்தாள்.

இந்த மலைச்சாதி மக்கள் நகரப்புறத்தார் பார்வையில் ஆதிவாசிகள் போல் பட்டாலும், திருமணம், பாலியல் நடைமுறைகள், கருத்தரித்தலைக் கட்டுப்படுத்தல், கரு அழிப்பு முதலிய விடயங்களில் நாகரிகமடைந்த மேற்குலகப் பெண் நிலைவாதிகளின் கொள்கையின் வெளிப்பாடு ஒத்தவர்களாக உள்ளனர்.

கடந்த அண்மைக் காலத்தில் கூட, ஒரு குடும்பம் வாழும் வீட்டை ஒட்டினாற் போல் ஒரு சிறு வீடும் அமைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிறு வீட்டில், அந்தக் குடும்பத்தின் திருமணமாகாத பெண் பிள்ளைகள், தங்கள் எதிர்காலத்தில் அமையப் போகும் இல்லத் துணைவனுடன் வாழ்க்கைக்கு ஏற்புடைமையைப் பரிசோதிக்கலாம். அந்த வழக்கம் இப்பொழுது அருகி விட்டது. அதற்கு காரணங் கூறி அது அற்றுப்போனமைக்கு வருத்தப்பட்ட ஒரு பெண்ணான 29 வயதுடைய ஹகாநாக், ''அதிகமான பெண்கள் கல்யாணத்துக்கு முன்பே கர்ப்பந் தரித்ததினாலும், அதிலும் அதிகமாக ஏற்கனவே கல்யாணம் முடிந்த ஆண்கள் மூலமாக அப்படி நேர்ந்துள்ளதாலும் அந்த முறை கைவிடப்பட நேர்ந்தது. ஆனால் அந்தப் பழைய முறைப்படி அதிகமான கதந்தீரம் எமக்கு இருந்திருக்கிறது'' என்று கூறினாள்.

அந்த வழக்கம் இப்பொழுது அற்றுப்போனாலுங் கூட இளைஞர்களுக்கு உள்ள அதே சுதந்திரம் இளம் பெண்களுக்கும் உண்டு என்பதுடன், அதனால் அவர்களுக்குப்

பாதுகாப்பும் கிடைக்கிறது. திருமணமாகாத ஒரு கமர் லொயூப் பெண் கர்ப்பந் தரிக்க நேர்ந்தால், அதற்காக அவள் அவமானப்படுத்தப்படுவதோ, தண்டிக்கப்படுவதோ கிடையாது. அந்தக் கிராமத்தவர்கள் அத்தகைய செயல்களை யதார்த்தமான முறையில் அணுகுவர். திருமணமான ஓர் ஆண் அதற்குப் பொறுப்பானவன் என்றால் அவன் அந்தப் பெண்ணின் குடும்பத்தாருக்கு நட்டஈடு கொடுக்க வேண்டும். தற்போதைய விகிதத்தில் அந்த நட்டஈடு 4 எருமை மாடுகள், சில பன்றிகள், சில கோழிகள் என்பவற்றுடன் அரிசியில் இருந்து வடிக்கப்படும் சாராயமும் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பொறுப்பானவன் திருமணமாகாத ஆணாக இருந்தால் அந்த இளைஞன் நட்டஈடு கொடுத்துக் கர்ப்ப காலம் முழுவதும் அந்தப் பெண்ணைப் பராமரிக்க வாக்களிக்கவும் வேண்டும். அந்தப் பெண், மகவு ஈன்ற பின்பு அவனுடைய கடமையும் முடிந்து விடும்.

''கொடுமைப்படுத்தும் அல்லது கேவலமாக நடக்கும் கணவனை விவாகரத்துச் செய்யும் உரிமை ஒரு பெண்ணுக்கு உண்டு''. என்று ஒரு கமர் லொயூத் தாய் கூறினாள். அதனால் அங்கு பாலியல் வன்முறைகள் மிக அரிதாகவே நிகழ்கின்றன என்பதுடன் உறவு கொள்வதோ இல்லையோ என்ற விருப்பத் தெரிவு எப்பொழுதும் பெண்ணிடமே உள்ளது என்று விளக்கிய அவள், ''அதனால் பாலுறவு அவள் மீது திணிக்கப்படுவதில்லை'' என்றும் கூறினாள். தனது மனைவிக்கு அல்லது துணையாளிக்கு உடல் உபாதை உண்டுபண்ணும் கணவனுக்கு அல்லது துணையாளிக்குக் கடுந் தண்டனை கொடுக்கப்படுகிறது. அந்த நபரைச் சுட்டுக்கொல்லக் கூடத் தாக்குண்ட பகுதியின் உறவினர்களுக்கு உரிமை உண்டு.

பிள்ளைகள் பெறுவது பற்றிய முடிவெடுப்பது பெண்களின் விருப்பப்படிதான். நான்கு அல்லது ஐந்து குழந்தைகள் பெற்றபின்பு கருச்

சினதவு செய்து கொள்வது பொதுவான வழக்கமாகும். விருப்பமில்லாத கர்ப்பத்தைச் சிதைக்க அனேகமாக மூலிகை மருந்துகளையே பயன்படுத்துகின்றனர். பன்டல் என்ற நிலத்தில் வளரும் ஒருவகை ஓகிட் பூ மரத்தின் மேலால நடந்து போனால் கூடக் கருச்சிதைவு உண்டாகலாம் எனக் கமர் லொயூ மக்கள் நம்புகின்றனர். சிலவேளை அந்தப் பூண்டின் வேரைப் பொடியாக்கி நீரில் கரைத்து உள் மருந்தாகப் பிரயோகிப்பர். அது எப்படியாயினும் ''பெண்தான் அதனைத் தீர்மானிப்பாள். ஏனெனில் அந்த உடல் அவளுடையதே'' என்று நகாக் கூறினாள்.

அவர்களுடைய பாரம்பரிய மாந்திரீக வைத்திய முறைகள் மாறிக் கொண்டு வருகின்றன. அந்த முறையில் மாந்திரீகத்தின் மூலம் நோய்களைக் குணப்படுத்துவதில் பெண்களே ஈடுபட்டனர். அத்தகைய பெண்கள் மட்டுமே சமயக் கிரியைகள் செய்யும் பூசாரிகள் ஆகலாம். இந்த மலைச்சாதி மக்களின் வாழ்க்கையை நோக்கிற் பலமும், தீடகாத்திரமும் முக்கியமான சமூக நோக்கங்களாகும். அவர்கள் தங்கள் மூதாதையரின் ஆவிகள் வந்து தங்களை உருவேற வைத்து ஆசி கூறுவதாகவும், ஆரூடம் சொல்வதாகவும் கூறுகின்றனர் அந்த அருவல்களையும் கனவுகளுக்குப் பலன் சொல்லுதல் போன்றவற்றையும் பெண் பூசாரிகளே நடத்துகின்றனர். அந்தச் சக்தி அந்தச் சாதியாரின் ஆண்களுக்கும், பெண்களுக்குமான உறவு முறையில் ஆண்களின் மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்துகிறது.

கமர் லொயூப் பெண்களின் வாழ்க்கை நிலைமை கடினமானது. அவர்கள் அதிகாலை 4.00 மணிக்கே எழுந்து, நீர் மொள்ளவும் சமைக்கவும், பன்றிகளுக்குத் தீவி போடவும் வேண்டும். ''நாங்கள், ஆண்களிலும் பார்க்க அதிகமாக வேலை செய்வதால் அதிகம் களைப்பாக உள்ளோம்'' என்று நகாக் கூறினாள். பெண்கள் காலையில் எழுந்து வீட்டுக்காரியங்கள் பல முடித்து விட்டபின்புங் கூட ஆண்கள் இன்னும் உறக்கத்தில் கிடப்பதுண்டு என்று 15 வயதிலேயே திருமணமாகி விட்ட தற்பொழுது 18 வயதில் தாயாக உள்ள ஒரு பெண் கூறினாள். அவளுடைய கருத்துப்படி ஒரு கணவனுக்கு உரிய இலட்சணம் அவன் கடுமையாக வேலை செய்து பணம் சம்பாதிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும் என்பதாகும்.

ஆண்களுக்கும் சில பிரத்தியேகக் கடமைகள் உண்டு. அவர்கள் மட்டுந்தான் வீடு கட்டுதல், விறகு கொத்துதல் போன்ற கடுமையான வேலைகளைச் செய்ய வேண்டும். பொருத்த விகிதத்தில் ஆண்கள் பெண்களிலும் பார்க்கக் குறைந்த தொகையினரே என்பதால் அவர்களுக்கு மதிப்பு அதிகமாகக் கொடுக்கப்பட்டுச் செல்லமாகப் பேணப்படுவதும் உண்டு. கமர்ரூச் இயக்கம் 1970 களில் நடத்திய படுகொலைகளால் கம்போடியா எங்கும் எனத் தொகையில் ஆண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது ஓர் அம்சமாகும்.

கமர் லொயூச் சாதியாரின் பாரம்பரியப் பழக்க வழக்கங்கள் அருகிக் கொண்டு இருக்கையில்

உலகம் அவர்கள் மீது மோதிப் பார்க்கிறது. ஹகாக் நகரில், நொம்பென் நகரில் வைத்தியத் தாதிப்பயிற்சி பெற்றபின்பு பூசாரிப் பெண்களின் செயற்பாடுகள் பற்றிச் சந்தேகப் படுகிறது. ''அந்த வழக்கங்கள் அருகி வருகின்றன. சில சமயங்களில் பலிகொடுத்தல் போன்ற பரிகாரங்களிலும் கமர் லொயூ மக்கள் ஈடுபடுகின்றனர்'' என்றும் அந்தப் பெண் கூறினாள்.

சில மலைப்பிரதேச சாதிப் பெண்கள் தாங்களும் ஏனைய கம்போடியப் பெண்களைப் போல் வாழ விரும்புவதாகக் கூறுகின்றனர். ''நாங்களும் கமர் மொழியில் பேசவும், உதட்டுச்சாயம் போடவும், அலங்காரம் செய்து கொள்ளவும், நாகரிகமான உடைகள் அணியவும் விரும்புகின்றோம்'' என்று சாவாச் கூறினாள்.

தாங்களும் கம்போடியப் பெண்களைப்போல் தோன்றுவதற்காக மேற்சட்டை அணியவும், நாகரிகமாகத் தோன்றவும் அந்தப் பெண்கள் விரும்புகின்றனர். ஆனால் மலைச்சாதியாரின் அத்தகைய மனோநிலை — கலாசாரம் கமர்ரூச் கொடுமைப் படுத்தல்களால் தற்போது மாற்றமடைந்திலும் பார்க்க, மேலும் விரைவாக மாற்றமடையவைக்கும்.

ஏசியாவீக்,
செப்ரெம்பர் 22, 1993.

ஸ்ரீபன் கோக்கிங்

ஒரு கேட்போர் கூடத்தில் பல இளம் பிராயத்தினர் சக்கர நாற்காலிகளில் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் எல்லோருடைய கவனமும் தமக்கு முன்னே இருக்கும் மனிதரில் பதிகின்றது. இவ்வாறான ஒரு பொறுமையான செயற்பாடு இளம் வயதினரிடையே இருப்பது வழமைக்கு மாறானது. அங்கு பேச அமர்ந்திருப்பவர் ஒரு வானசாஸ்திர பௌதிகவியலாளர். அவரின் பெயர் ஸ்ரீபன் கோக்கிங் என்பதாகும். இவர் ஐம்பத்தியொரு வயதுடைய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆவர். அத்துடன் சர்வதேச ரீதியாக நன்கு அறியப்பட்ட விஞ்ஞானியுமாவார். இவர் சக்கர நாற்காலியிலேயே அமர்ந்திருந்து தனது ஆய்வுகளை மேற்கொள்ளுபவர். இவர் நரம்பு மண்டலத் தொகுதியில் ஏற்பட்ட ஒரு வகையான வருத்தத்தினால் இளம்பிராயத்திலேயே கை, கால் செயற்பாட்டை இழந்தவராவர்.

இவர் இவ்வாறு கௌரவ விருந்தினராக வரவழைக்கப்பட்டமைக்கு என்ன காரணம்? இவரின் 'அடுத்த வாரிசுகள்' என்ற நிகழ்ச்சியே ஆகும். இவரின் ''காலத்தின் சுருக்கமான சரித்திரம்'' என்ற கதை 1988 ஆம் ஆண்டின் சிறந்த விற்பனை நிலையை எட்டியிருந்தது. இது நியூயோர்க் 'ரைம்ஸ்சில் 53 வாரங்களாக வெளி வந்தது. உலகெங்கும் 55 மில்லியன் புத்தகப் பிரதிகள் விற்பனையாகின்றன. பின்னர் இந்தக்கதை திரைப்படமாக்கப்பட்டுச் சர்வதேச விருதையும் பெற்றுக் கொண்டது. கோக்கிங் தற்போது 'இருண்ட துவாரங்களும் குழந்தை உலகமும் என்ற கதையை எழுதியுள்ளார். இதுவும் ஏறத்தாழ ஜோன் கிறிஸ்ரம் என்பவரின் மர்மக்கதையை ஒத்தது. ஏன் மற்றுமொரு புத்தகத்தை எழுதுகின்றீர்கள் என்ற கேள்விக்கு அவர், 'நான் என்னைப் பராமரிக்கும் தாதிகளுக்குச் சம்பளம் வழங்க வேண்டும் அல்லவா?'' என்று சொல்லுகிறார். (அவரால் பேச முடிவதில்லை, ஆனால் அவரிடம் உள்ள சுணவியால் இயக்கப்படும் குரல் லோரன்ஸ் வெல்க்மாதிரிப் பதில் கூறுகின்றது.)

கோக்கிங்கைப் பொறுத்தவரை அவரை 24 மணி நேரமும் பராமரிக்க ஆட்கள் தேவை. இவர் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக கணித பேராசிரியராக, சேர் ஐசக் நியூட்டன் இருந்த பதவியில் இருந்தபோதும் அந்த வருமானம் அவரைப் பராமரிக்கப் போதுமானதாக இருக்கவில்லை. ஏ எல் எஸ் என்ற இந்த நரம்பு வருத்தத்தால் பாதிக்கப்பட்டு இருக்கும் இவரால் ஒரு சில முகத்தசைகளையே அசைக்க முடியும். அத்துடன் தனது இடக்கையில் ஒரு விரலை மட்டுமே அசைக்கமுடியும். இந்த விரலையே இவர் கணனியை இயக்கப் பயன் படுத்துகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் இவர் சொற்களை அடையாளம் கண்டு எழுதுகின்றார்.

கோக்கிங்கின் கருத்துப்படி தனது புத்தகத்தில் உட்கருத்துக்கள் பல செறிந்திருப்பதால் தான் அதனை மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள் என்கிறார். ஒருவருடைய கருவின் தோற்றத்தை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்கிறார். இருண்ட துவாரங்கள் எனனும் கதை நோபல் பரிசைப் பெறும் தகுதி கொண்டிருந்தது. ஆனால் நோபல் பரிசு வழங்கும் குழுவின் கருத்துப்படி ஒரு கோட்பாட்டுக் கருத்தைக் கொள்கையளவில் மட்டும் ஏற்பது முடியாது. அந்தக் கருத்தை நடைமுறைப் படுத்தி அதனைச் செயல் வடிவமாக நிரூபிக்க வேண்டும் என்றனர். இவரின் கோட்பாட்டுக் கருத்து அந்தளவில்தான் ஏற்றுக் கொள்ளப் பட்டது. அவரின் கருத்துப்படி, ''பரிசுக்காகக் காத்திருப்பதை விட வேறு புதிய கண்டுபிடிப்புக்களைச்

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

செய்வதில் பயன் உண்டு'' என் கிறார். இவருடைய தற்போதைய ஆர்வம் தற்போது காணப்படும் மேலும் அடிப்படைக் கோள்கள் சிறுசிறு உலகங்களாகப் பிரி கின்ற தன்மை ஏற்படுமா என்ப தைத் திட்ட வட்டமாகக் கூறுதல் ஆகும்.

'' ஒரு சுருக்கமான வரலாறு '' போல் அல்லது புதிய வெளியீடு (இது பல கட்டுரைகளையும், இவ ரின் பேச்சுக்களின் எழுத்து வடிவங் களையும் அத்துடன் புதிய வெளி யீடுகளையும் கொண்டதாகும்.) அநேகமான கோக்கிங்கின் பற்றிய சொந்த விபரங்களைக் கொண்டி ருக்கும், அதில் அதிகளவு கதிரியக் கத்தில் விகிதப் பொருத்தமாக (ஏலக்ட்ரான்கள்) இலத்திரன்கள் வெளியாகப் படுகின்றன என்ற பௌதிகக் கொள்கையும், பிர பஞ்சவியலும் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் இதில் கோக்கிங்கின் இளம்பராய வாழ்வும் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஜேன்வில் டேயை அவர் திருமணஞ் செய்து வாழ்ந்தமை, நரம்பு மண்டலப் பாதிப்பால் (ஏ. எல். எஸ்) ஏற் பட்ட அனுபவம் போன்றமையும் கூறப்பட்டுள்ளன.

இவரின் தகப்பனார் ஒரு மருத் துவர் ஆவர். அவர் சிதோஷ்ண வலய வியாதிகள் பற்றிய ஆய் வினை மேற்கொண்டார். அவருக் குத் துணையாக இவரின் தாயார் செயற்பட்டுள்ளார். இவர்கள் குடும் பம் ஒரு வித்தியாசமான போக்கி னைக் கொண்டது. இவர்கள் ஒரு பழைய வாடகைக் காரிலேயே பிரயாணம் செய்வர். கார் வைத்திருக்கக் கூடிய நிலை யில் இவர்கள் குடும்பம் இருக்க வில்லை. பாடசாலைக் காலத்தில் கோக்கிங் அதிகம் கல்வியில் நாட் டங் கொண்டிருக்க வில்லை. நரம்பு மண்டலத் தொகுதியில் ஏற்பட்ட வருத்தம் அறியப்பட்டதும் பாட சாலைக்கு முற்றாக முழுக்குப் போட்டிருந்தார். ஆனால், அவரது திருமணமும், குடும்பத்தைக் காப் பாற்ற வேண்டும் என்ற அவாவும், அவரை வேகமாகச் செயற்பட வைத்தன. தானே ஆச்சரியப்படத் தக்க விதத்தில் அச் செயற்பாட்டை தான் விரும்பியதாக அவரே கூறு கின்றார்.

கோக்கிங்கின் உடல் பாரிசவாத நோயினால் செயலிழந்து விட்டது. அவருடைய சிந்தனையோ பிரபஞ்சமெங்கும் அலைகின்றது.

புதிய புத்தகமும் இவரின் '' ஒரு சுருக்கமான வரலாறு '' போன்றுவிமர்சனத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. புதிய வெளியீட் டின்பலபகுதிகளில் கடவுள் இல்லை என, இவர் நிரூபிக்கப் பார்க் கின்றார் என்று கருதப்படுகின்றது. ஆனால் கோக்கிங்கின் கருத்துப்படி உலகத் தோற்றம், பரிமாணத்து டன் கடவுளைத் தொடர்புபடுத்த வேண்டிய தேவையில்லை. '' இது கடவுள் இல்லை என்பதை நிரூபிக்க வில்லை ' என்று மேலும் அவர் கூறுகின்றார். இவர் பௌதிகவியல் தத்துவங்களுடன் செயற்படுகின் றார். மூன்று வருடங்களின் முன்பு இவர் தனது மனைவியை விட்டுச் சென்றுள்ளார். அத்துடன் எலைன் மாசன் என்பவருடன் வேறு இடத் திற்குச் சென்றுவிட்டார். அவர் இவரைப் பராமரிக்கும் தாதிகளில் ஒருவராவர். அவர், ' எனது தனிப் பட்ட வாழ்வை அதிகம் விபரித்துக் கூறுவதற்கில்லை ' என்று கூறுகின் றார். இவரின் முன்னால் இருக் கும் பிள்ளைகள் மத்தியில் இருண்ட துவாரம், முறிந்த திருமணம் ஆகியவற்றிற்கும் மேலாகச் சிந்திக் கும் வேகத்தில் இருக்கிறார்கள். இவர்கள் அவரைச் சுற்றி அரை வட்டமாகக் குழுமின்றனர். பல கேள்விகளை இவர்கள் கேட்கின்ற னர். ' உங்களால் எழுத முடியுமா னால் எவ்வாறு கையெழுத்து வைப் பீர்கள் ? ', ' குறைபாடு உள்ளவர் களுடன் அமெரிக்கர்களின் உறவு எப்படியுள்ளது? ', ' கிலிங்கொன்ஸ் உண்மையில் எவ்வாறு இருக்கும் ' இவ்வாறான கேள்விகளைக் கேட்டு விட்டு எவ்வாறு பதிலளிப்பார் என எதிர்பார்த்து இருக்கின்ற னர். இவர்கள் உள்ளத்தில் பிரபல விஞ்ஞானி பிரபல எழுத்தாளர் ஆனால் எம்மைப்போல் உடல் ஊனமுற்றவர் என்ற நினைவு வெற்றியலைகளாகத் தென்படு கின்றன.

— மைக்கல் டீ லிமோனிக்

ரைம், செப்ரெம்பர் 20, 1993

வாசகர் கடிதம்

நேசப்பூக்கள்

'உலக உலா' சஞ்சிகைக்கு எனது கருத்தினை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஒகஸ்ட் 1993 இறுதியில் வெளிவந்த 'உலக உலா' சஞ்சிகையின் முதலாவது இதழையும், செப்ரெம்பர் 1993 இறுதியில் வெளிவந்த இரண்டாவது இதழையும் வாசித்துப் பயன் பெற்றேன். 'உலக உலா'வைப் படிக்கும் போது தான் உலக விவகாரங்களில் எவ்வளவற்றை நாம் அறியாமல் இருக்கிறோம் என்பது தெரிகிறது. உலக உலா முதலாவது இதழ் எதுவித விளம்பரமுமின்றி உலா வந்ததால் பார்த்தவுடன் வெளிநாட்டுச்சஞ்சிகை என்று தான் நினைத்தேன் பின்னர் தான் இது ஒரு தமிழிழச் சஞ்சிகை என்று தெரிந்து கொண்டேன். உண்மைதான், அச்சுக்கலை பெரும் வளர்ச்சியடைந்து விட்ட இன்றைய உலகில், இங்கு அத்தகைய வசதிகள் இல்லாத நிலையில் கூட 'உலக உலா' சஞ்சிகை சர்வதேச சஞ்சிகைகளுக்கு நிகராகச் சிறந்த அச்சமைப்புடன் வெளிவருவது பாராட்டத்தக்கதே. இதனை உருவாக்க நீங்கள் எவ்வளவு முயற்சி எடுத்துள்ளீர்கள் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

பெறுமதி மிக்க சஞ்சிகையான 'உலக உலா' வை வாசிக்கும் பொழுது உலக சஞ்சிகை ஒன்றை வாசிப்பது போல் உள்ளது

இரண்டாவது இதழில் பெட்டிச் செய்திகளுக்கு கலர் இடப்பட்டிருப்பது உலக உலாவின் சிறப்பை இன்னும் உயர்த்திக் காட்டுகிறது.

உலக நிகழ்வுகளை அருமையாக தொகுத்துத் தந்துள்ள சமூக அரசியல், விஞ்ஞான தொழில் நுட்ப

மாதஇதழான 'உலக உலா' தொடர்ந்தும் உலா வர எனது இதயம் நிறைந்த நல் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையாவது இதழ் என்பதை அறிய உதவும் இதழ் இலக்கத்தை 'உலக உலா' வில் காணவில்லையே! வெளியிட்டால் நல்லது

உலக உலா வின் சேவை – இம் மண்ணிற்குத் தேவை.

சி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை.

★ ★ ★

முதலாவது இதழை விட இரண்டாவது இதழ் சிறப்பாகவும், மொழி [illegible] நேர்த்தியாகவும் உள்ளது. புதிதாக வாசிப்போரும் விளங்கும் வகையில் முடியுமானால் சில செய்திகளிற்குப் பின்னிணைப்புக் கொடுத்தால் வாசகர்கள் தொடர்ந்து வாசிக்கப் பழகி விடுவர். சில முக்கிய அரசியல் விவகாரங்களைத் (பொஸ்னியா, சோமாலியா, பாலஸ்தீனம்) தொடர்ந்து வெளியிட்டால் பயன் தரும். நல்ல தரமான நூல்கள், திரைப் படங்களில் வெளி வரும் கலைத்துறை, இசைத்துறை பற்றிய தகவல்களையும் எமக்குத் தரலாம். உலக உலாவின் வெற்றியானது ஒரிரண்டு இதழ்களுடன் எட்டப் படக்கூடியது என்பதை உலக உலாவின் 2 ஆவது இதழ் உறுதி செய்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

வே. பாலகுமாரன்

★ ★ ★

வளர்பிறை போல் திங்கள் தோறும் வளர்ச்சி அடைந்து முன்னேற்றகரமாக வீறு நடை போட்டு வரும் உலக உலா தரும் செய்திகள் இக்காலச் சூழ்நிலைக்கு உகந்த ஒப்பற்ற கருவூலமாக அமைந்துள்ளன என்பது அங்கை நெல்லிக்கனி. இது காலவரை நாம் அறியாத எத்தனையோ புதிர்களை - நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவது போல் எமக்குத் தந்து கொண்டிருக்கும் உலக உலாவின் முயற்சி வெல்க! வளர்க! என வரவேற்பதில் பெருமை அடைகிறோம்.

மடம் வீதி, ம. மறைவேந்தன்
யாழ்ப்பாணம்.

★ ★ ★

தமிழீழத்தின்
தரமான சஞ்சிகை
"உலக உலா"
அழகுற அச்சிலே
பதிப்பவர்கள்
இராசன் அச்சகம்,
141, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive